# செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன்




பேராசிரியர்

தமிழ்க் குடிமகன்

# செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன்

(மதுரை - திருச்சி 'மாலைமுரசு' இதழ்களில் வந்த தொடர் கட்டுரைகளின் தொகுப்பு)

★

பேராசிரியர்

**மு. தமிழ்க் குடிமகன்**, எம்.ஏ.,

இந்த நூலின் வருவாய்
ஈழத் தமிழர்க்கு அளிக்கப்படும்.

அறிவொளி பதிப்பகம்

338, வடக்கு மாசி வீதி ● மதுரை-1.

முதற்பதிப்பு : 20—9—1983
உரிமைப் பதிப்பு

விலை உருபா ஐந்து (5-00)

கோனார் அச்சகம், மதுரை-625 001.

## புகு முன்......

இலங்கைக் கலவரங்கள் நாளுக்கு நாள் வேகமாகித் தமிழர்கள் மேலும் மேலும் சாவைச் சந்தித்துக் கொண்டிருந்த நேரம்; தமிழ் நாட்டில் இதுவரை கண்டிராத அளவு கொந்தளிப்பு ஏற்பட்ட நேரம்; 'மாலை முரசு' செய்தியாளர் நண்பர் செங்குட்டுவன் என்னைச் சந்தித்து ஈழச் சிக்கல் குறித்தும், அதற்கான தீர்வு குறித்தும் விரிவா-கச் செய்திகள் வெளிவிடவேண்டும் என்று கூறினார். செய்திகளாக வெளியிடுவதைவிட, முழுவடிவில் கட்டு-ரையாக வடித்தால் பயன்படும் என்று நான் கருதினேன். அதன்படியே 11-8-83 தொடங்கி 4-9-83 வரை கட்டுரை-கள் தொடர்ந்து வெளிவந்தன. தானே முன் நின்று கட்டுரைகளை வெளியிட்ட நண்பர் செங்குட்டுவனுக்கும், எல்லாவகையிலும் ஒத்துழைத்த 'மாலைமுரசு' ஆசிரியர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது. ஓரினத்தின் முழு வாழ்வையும் வெளிக்கொணர்வதில் அவர்கள் காட்டிய அக்கறை வரலாற்றில் என்றும் நிற்கும்.

கட்டுரைகளை எழுதி முடிப்பதற்குள் நான் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமன்று; கல்லூரிக் கடமையையும் விடாமல் செய்து கொண்டு காலை, மாலை, இரவு வேளைகளில் கடுமையாக உழைத்து எழுத வேண்டி-யிருந்தது, ஒரே நாளில் 305 பக்கங்கள் கொண்ட நூல்களைப் படிக்க வேண்டியிருந்தது. எனினும் ஒரு நாள் கூட இடைவெளியின்றி எழுதி முடித்து விட்டேன். என் துணைவியார் (இலங்கை நாட்டில் பிறந்து வளர்ந்தவர்) தந்த ஊக்கமும், என் மகன் த. மெய்ம்மொழி தந்த ஒத்துழைப்பும் அளவிடற்கரியவை.

கட்டுரைகளை வெளியிடுவதற்காகப் பலர் எழுதிய நூல்களைப் படித்திருக்கிறேன். அவ்வப்போது வெளி வந்து, பலசெய்திகளைத் தாங்கி நின்ற அறிக்கைகளைப் படித்தேன்; தொடர்புடைய சிலரை நேரில் கண்டும் செய்திகளைத்திரட்டினேன். கட்டுரையில் வெளிவந்த சில படங்கள் அளவு காரணமாக நூலில் இடம் பெறவில்லை. நூலில் பல புதிய படங்கள் இடம் பெற்றுள்ளன. நூல் அமைப்புக்காகச் சில தலைப்புகள் மாற்றித் தரப்பட்டுள்ளன

கட்டுரை வெளிவந்த போதும தற்போது தொலைம ப்பசி வாயிலாகவும் மடல்வழியிலும் பாராட்டுத் தெரி வித்த அனைவர்க்கும் நன்றி. மதுரை ஆதீனகர்த்தர், பல்கலைக்கழக அரசியல், அறிவியல் (pol. sc) பேராசிரியர் ஆகியோர் உணர்ந்து பாராட்டியதை எடுத்துக்காட்-டாகக் கொள்வேன்.

இந்த நூல் தமிழன் என்று சொல்லிக் கொள்பவன் ஒவ்வொருவன் கையிலும் இருக்கவேண்டும் ஏதேதோ பேசி வெறும் வாயை மெல்லுவதை விட்டு, உருப்படி-யாகச் சிந்திக்க இந்த நூல் உதவும். தீர்வு கருதி நாம் திரளும் போது உண்மையான ஆர்வத்துடன் நாம் ஒன்று கூட இந்த நூல் துணை செய்யும். மற்றொன்று; இந்த நூலின் வருவாய் இன்னல் உற்றிருக்கும் ஈழத் தமிழர்க்கு உதவியாகத் தரப்படுகிறது. ஒரு புறம் கருத்துக்காக, மறுபுறம் தமிழர்க்கான உதவிக்காக–இந்த நூல் நிமிர்ந்து நிற்கட்டும்

இந்தநூலில் எனக்குத் தெரிந்ததை எழுதியுள்ளேன் நடுவண் அரசும், தமிழக அரசும் செயற்பட்ட வகைகள், செயற்பட வேண்டிய முறைகள் ஆகியவற்றை ஒரு குடி மகன் என்ற முறையில் திறனாய்வு செய்துள்ளேன். அணுகு முறையில் கருத்து வேறுபாடுகள் எழலாம். எனினும் என் நோக்கம் உண்மையானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நூலை மிக விரைவில் அச்சிட்டு வழங்கிய கோனார் அச்சகத்தார் தந்த ஒத்துழைப்பு மறக்க முடியாதது. என் நிழலாக நின்று தொடர்ந்து உழைத்து வரும் அசோகன், எம்.ஏ., எம்.பில். என் நன்றிக்குரியவர்.

இன்றும் பல தமிழர்கள் இலங்கைச் சிறையில் வாடு கின்றனர். பல தமிழர்கள் அகதிகள் முகாம்களில் நாளொரு பாதிப்புக்கு ஆளாகி உயிரைக் குறைத்துக் கொண்டுள்ளனர். தமிழகத்துக்கு வந்துசேர்ந்தஇலங்கைத் தமிழர்களோ தடுமாறித் தவித்து நிற்கின்றனர்.

தாயகத் தமிழர்களே! உங்கள் உணர்ச்சி பொங்-கட்டும்! செயல்திறம் விளங்கட்டும்! அதற்கு என் பணி தினையளவாவது பயன்படட்டும்!


# "செந்நீர்க் கடலில் ஈழத்தமிழன்!"

## 1. அமைப்பும் ஆட்சிமுறைகளும்

எரிந்து கொண்டிருக்கிறது இலங்கை; ஓடிக் கொண்டிருக்கின்றன குருதி ஆறுகள் – உருண்டு கொண்டிருக்கின்றன தமிழ்த் தலைகள் — அங்குள்ள தமிழர்களின் அலறல் இங்குக் கேட்கிறது! எனினும் இதயம் துடிக்க, கவலை வளர, கண்ணீர் பெருக, நாம் இலங்கையை நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்! அந்தப் பெருமூச்சோடு கனத்த நெஞ்சுடன் கண்ணீரை மையாக்கி இலங்கையின் கதையை எழுதுகிறேன்! தரப்படும் செய்திகள் அனைத்தும சான்றுகளோடு கூடியவை; மிகப் பெரிய வரலாற்றறிஞர்கள் தந்தவை.

முதலாவதாக இலங்கை நாட்டின் அமைப்பும் ஆட்சிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. தமிழர்கள் எத்தனை ஆண்டுப் பழமை உடையவர்கள் என்பதனை இதன் மூலம் தெளியலாம்.

உலகச் சுற்றுலாப் பயணியாக விளங்கிய மார்க்கோ போலோ கி.பி 1292இல் தந்த கருத்தின்படி இலங்கைநாடு 2400 கல் சுற்றளவு உடையது. வடக்குத் தெற்காக இதன் நீளம் 271 கல்; கிழக்கு மேற்காக இதன் அகலம் 140 கல் மொத்தத்தில் 25332 சதுரக்கல் பரப்புள்ளது இந்நாடு. ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் 'வேல்சு' பகுதி நீங்கிய இங்கிலாந்தில் பாதி அளவு எனலாம். இன்னும் நெருக்கமாக உணர்த்த வேண்டுமென்றால்,




இலங்கைத் தீவை 13-ஆம நூற்றாண்டில் தமிழர், சிங்களர் ஆண்ட வரைபடம். யாழ்ப்பாண அரசு, சிங்களக் கோட்டை அரசு, மலைநாட்டுச் சிங்கள அரசான கண்டி அரசு ஆகியவற்றைக் காட்டும் வரைபடம்.

அளவில் ஏறத்தாழ நமது கர்நாடக மாநிலத்தை ஒத்தது தான் இலங்கை நாடு. இந்நாடு ஒரு தீவாக அமைவதால் சுற்றிலும் துறைமுகங்கள் பல உள்ளன.

தலைமன்னார், சிலாபம், நீர்க்கொழும்பு, கொழும்பு, காலி(Galle), மட்டக்களப்பு, திரிகோணமலை, முல்லைத் தீவு, பருத்தித்துறை, காங்கேசன் துறை ஆகியவை குறிப்பிடத்தக்க துறைமுகங்கள் ஆகும்.

இவற்றுள் தலைமன்னார், கொழும்பு, திரிகோணமலை ஆகியவை இன்று உச்சம் பெற்று விளங்குகின்றன. மாதோட்டம் எனும் துறைமுகம் பல ஆண்டுகளுக்கு முன்பே மண்மேடிட்டுச் செயலற்றுப் போய் விட்டது! சுற்றிலும் கடற்கரையாயினும் உள்நாட்டில் மலைகள் உள்ளன. ஆறுகளும் ஓடைகளும் பல உள்ளன. தென்னிந்திய விளிம்பிலிருந்து 22 கல் தொலைவில் அமைந்துள்ளது இத்தீவு.

**மக்கள் தொகை :**

இலங்கையில் மக்கள் தொகை ஒரு கோடியே 48 இலட்சத்து எண்பதாயிரம். இதில் சிங்கள மக்கள் 1, 09, 80,000. (74%). தமிழ்மக்கள் 37, 50, 000 (25.3%).

தமிழ்மக்களின் எண்ணிக்கையைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.

ஈழத் தமிழர் 18, 71, 535 (12. 6%)

இந்தியத் தமிழர் 8, 25, 233 (5. 6%)

இசுலாமியத் தமிழர் 10, 56, 972 (7%)

(1981 ஆம் ஆண்டு நிலவரப்படி)

1942 — இல் கொழும்பில் மட்டுமே 3½ இலட்சம் மக்கள் இருந்தனர் என்பது செய்தி.

**மொழிநிலை :**

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் தாம் நாடு முழுவதும் பேசப்படும் பெரும்பான்மை மொழிகள். கிறித்து பிறப்புக்கு முன்னாலிருந்தே இந்த இருமொழிகளும் வழக்கில் உள்ளன. இப்போது உலகத் தொடர்பு, ஆட்சி முறை காரணமாக ஆங்கிலம் அனைவரும் அறிந்த மொழியாக உள்ளது.

**சமயம் :**

சிங்களர்களின் பெரும்பான்மைச் சமயமாகப் பவுத்தம் விளங்குகின்றது. சிறுபான்மை கிறித்தவமும் உள்ளது. தமிழர்கள் மற்றும் பிறரின் சமயங்களாக இந்து சமயம், (குறிப்பாகச் சைவம்) கிறித்தவ சமயம், இசுலாமிய சமயம் ஆகியவை திகழ்கின்றன பவுத்த சமயம் அரசின் அதிகாரபூர்வமான சமயமாக இருப்பதால் மற்ற சமயத்தார் அனைவரும் சமய வேறுபாடின்றி மொழியால் ஒன்றுபட்டு நிற்கும் நிலை உள்ளது.

**விளைச்சல்:**

பெரும்பாலும் வறட்சிப் பகுதிகளில் (**Dry Zone**) எல்லாம் தமிழர்களும் வளப்பகுதிகளில் (**Wet Zone**) எல்லாம் சிங்களர்களும் வாழும் நிலை உள்ளது. வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பான்மையினர் தமிழர்களே. வளப்பகுதியில் வேளாண்மை செய்பவர்கள் சிங்களர்களாக இருப்பார்கள்.

வளப்பகுதியிலும் தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்களின் உரிமை சிங்களர்க்கும் உழைப்பு, தமிழர்களுக்கும் உள்ளது. வணிகத்தில் பெரும்பாலான முதலீடுகள் வெளிநாட்டுக்காரர்களால் செய்யப்பட்டனவே. சிங்களர்களால் பெரும் தொழில்கள் நிறுவப்பட்டதாகச் சொல்ல முடியாது. இறக்குமதி அதிகம். எனினும் எதையும் இலங்கை நாடு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் எண்ணம் கிடையாது. மிக அண்மையிலுள்ள

இந்தியாவை விட இலண்டனில் தான் இவர்களது கல்வித் தொடர்பு இருக்கிறது. ஓடுகின்ற சரக்குந்துகள் (Lorries) எல்லாம் சப்பானிலிருந்து வரவழைக்கப் பட்டவை யாகவே இருக்கும்.

உழைப்பையும், முதலீட்டையும், வணிகத்தையும் பிறரிடம் ஒப்படைத்து விட்டு வாழ்ந்து வரும் சிங்களர்கள் முறையாகத் தங்கள் கல்வியால், உழைப்பால், முதலீட்டால் வளர்வதை விட்டு உழைத்தவர்களை உதைத்து விரட்டியும் வணிக நிறுவனங்களைத் தரை மட்டமாக்கியும் மேலோங்கி நிற்கவேண்டுமென நினைத்து, அவர்கள் கையாளும் போக்கு முரட்டுத்தன மான தாகவே தோன்றுகிறது. அதிலும் தொல்குடிக ளிடமே இத்தகைய அணுகு முறை காட்டுவது சிந்தித் தற்குரியது.

**ஆட்சி முறைகள்:**

விசயன் எனும் சிங்கள மன்னன். கி. மு. 483 – இல் இலங்கைக்கு வந்த போது நாகர்கள் இலங்கைக் கரை யோரங்களில் வாழ்ந்தனர். நாகர்களின் மறுபெயரான திராவிடர்கள் — தமிழர்கள்—இலங்கை முழுவதும் பரவி இருந்தனர். கி. மு. 200 – இல் தோன்றிய கடைச் சங்கத்தி லிருந்து திரட்டப்பட்ட சங்கப் பாடல்களில் ஈழத்துப் பூதந்தேவனார் பாடல்கள் 7 உள்ளன. இந்தக்கால கட்டத் தில் தமிழ் இலங்கையில் தழைத்து நின்றமையை அறிய லாம்.

அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு 2100 ஆண்டுகட்கு முன் இலங்கையை ஆட்சி செய்தவன் எல்லாளன் எனும் தமிழ் மன்னன். கி.மு. 161–117 இவனது காலம் ஆகும்

இக்காலத்தில் இலங்கைத் தீவின் மேற்கு, வடக்கு, கிழக்கு, கரையோரப் பகுதிகளும் அனுராத புரத்தை மையமாகக் கொண்ட வன்னிப்பகுதியும் தமிழரின் வாழ்

விடங்களாக இருந்தன. சிங்களர்கள் தெற்குப் பகுதியி லும் மதன் மேற்குப் பகுதியிலும் செறிந்து வாழ்ந்தனர்.

இதனை உறுதிப்படுத்த மற்றொரு சான்றைக் குறிப் பிடலாம் கி.பி. 140இல் கிரேக்க நாட்டில் வாழ்ந்த புவி யியல் அறிஞர் தாலமி (Ptolemy) என்பவர். இவர் தயா ரித்த உலக வரை படந்தான் இன்றுள்ள மிகப் பழைய படம். அவர் காட்டியுள்ள இலங்கைப் படத்தில் உள்ள பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருப்பதைக் கண்டால் தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக்குடிகள் என்பதை உறுதிப்படுத்திவிடலாம்.

தீவின் நடுப்பகுதியில் உள்ள மலைப்பகுதி மலை (MALAE) என்றே குறிக்கப்படுகிறது.

இம்மலைத் தொடரின் தெற்கு எல்லை 'ஒளிபாதம்' (Ouli Pada) எனக் குறிப்பிடப்படுகிறது. இன்று உள்ள சிவனொளிபாத மலையே இது என்பதை நினைத்து வியக்கிறோம்! கரையோர நகரங்களை அவர் ஸ்பட்டனா (Spatana) என்று குறிப்பிடுகிறார்; நாமும் அவற்றைப் 'பட்டினம்' என்றுதானே குறிப்பிடுகிறோம்?

சிவனொளிபாத மலையில் சிவனாலயம் உள்ளது. அனுராதபுரத்தில் முன்பு மாபெரும் 'ஈஸ்வரம்' ஒன்று இருந்தது. இன்றுள்ள அபயகிரி விகாரம் எனும் பவுத்த கோவில் ஈஸ்வரன் கோவிலை அழித்து, அதன் மேல் எழுப்பப்பட்டதாகும்.

கி. பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இருண்டகாலத்தில் ஏற்றம் பெற்றிருந்த சமணமும், பவுத்தமும் தாழ்ச்சி பெற்றன. இதில் முன்னின்ற சைவ நாயன்மார்கள் இலங்கைக்கும் வந்து தேவாரப் பதிகங்களைப் பாடி-னார்கள். திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றின் மீது பாடப்பெற்ற பதிகங்கள் இன்றும் உள்ளன. இன்றும் இலங்கையில் தமிழரிடையே சைவம் மேலோங்கி நிற்கிறது.

**சோழர் ஆட்சி:**

கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் சோழராட்சி இலங்கையில் நிலை நிறுத்தப் பட்டது. கி பி. 993இல் இருந்து கி பி. 1070 வரை 'மும்முடிச் சோழ மண்டலம்' எனும் பெயரில் சோழராட்சி நீடித்தது. சிங்களர்கள் உரோகணக் காட்டுப் பகுதிகளிலும் தென்மேற்குப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். இலங்கையை வெளிநாட்டுக்காரர்கள் கைப்பற்றி ஆண்டார்கள் எனும் முதல் வரலாற்றை உருவாக்கியவர்கள் சோழர்கள்—தமிழர்கள் அவர்கள் இன்று வதைபடுகிற தமிழர்களின் மூதாதையர் என்பதை ஹுலுகாலி (Hulugalle) எனும் வரலாற்றறிஞர் குறிப்பிடுகிறார்.

**(Ceylon first came under the direct rule of a foreign power when the Chola King Rajendra I (A D. 1014-43) brought the whole island under his rule. There was also a Tamil Kingdom in the north of Ceylon, with its capital at Jaffna, in the thirteenth century and later)**

பதின் மூன்றாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் கூட யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ் அரசு இருந்தமையை வரலாற்றறிஞர்கள் மறைக்கவில்லை.

சோழராட்சிக்குப்பின் சிங்களர் ஆட்சி வந்தது. பொலன்னறுவை தலைநகரானது. கி.பி 1215 முதல் 1255 முடிய மகானின் ஆட்சி நடைபெற்றது. ஆனால், அது பாண்டியப் படைகளின் உதவியுடன் தான் நடைபெற்றது. 1255 முதல் 1262 வரை சந்திரபானு ஆண்டான். எனினும், இந்த இருவர் காலத்திலும் தமிழரின் நிலப்பகுதி தனியாகவும் சிங்களர்களின் நிலப்பகுதி தனியாகவும் ஆட்சி செய்யப்பட்டன.

**தமிழர் ஆட்சி :**

கி.பி. 1282இல் இலங்கையில் தமிழரின் தனியாட்சி மீண்டும எழுந்தது. யாழப்பாண நல்லூரைத் தலைநகராகக் கொண்டு எழுந்த மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் முத்துக்குளிப்பில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதனையொட்டித் தூத்துக்குடியிலிருந்து குருகுலச் சாதியைச் சேர்ந்த தமிழாகள் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் குடியேறினர். நீர்க் கொழும்பில் இருப்பவர்கள் இவர்களின் வழித்தோன்றல்களே. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கொள்கையுடைய தமிழன் தொழில் கருதி, உழைப்பை முதலாக வைத்து அங்குச் சென்றானே தவிர மண்ணை நினைத்தோ, ஆட்சி ஆசையாலோ அல்ல என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

போர்த்துக்கீசியர் இலங்கைக்கு வந்த பின்பு தான் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி குன்றியது. ஐந்து நூற்றாண்டுகள் தொடர்ந்த தமிழராட்சி சரியத் தொடங்கியது. இவர்கள் வந்தபோது தமிழ் அரசு, கீழ் நாட்டுச் சிங்கள அரசு, மலை நாட்டுச் சிங்கள அரசு ஆகிய மூன்று இருந்தன. போர்த்துக்கீசியர் படிப்படியாக மூன்றையும் கைப்பற்றினர்.

கி. பி. 1619 - இல் தான் தமிழ் அரசின் கடைசி மன்னனான சங்கிலியன் போர்த்துக்கீசியரால் சிறைப் பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுத் தூக்கிலிடப் பட்டான்!

இந்நிலையிலும் வன்னிப்பகுதி மட்டும் (இன்றைய வவுனியா மாவட்டம்) எவர்க்கும் கட்டுப்படாமல் தன்னாட்சி செலுத்தி வந்தது. போர்த்துக்கீசியரிடமிருந்து ஒல்லாந்தர்கள் 1638 - இல் மட்டக் களப்பையும், 1656-இல் கொழும்பையும், 1658 - இல் யாழ்ப் பாணத்தையும் கைப் பற்றினர். இவர்களது ஆட்சி கி.பி. 1795 வரைநீடித்தது.

இந்த இடைக் காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள் நம் கவனத்துக்குரியவை. 1679 - இல் கைது செய்யப்பட்டுப் பின் தப்பியோடிய ராபர்ட் நாக்ஸ் (ROBERT KNOX) எனும் ஆங்கிலேயர் சிங்கள இனத்தாரை விடத் தமிழ் இனத்தார் சிறிது நாகரிகம் உடையவர்கள் என்றும் தமிழர்கள் தனிநாட்டினமாகவே வாழ்ந்தனர் என்றும் குறிப்பிடுகிறார்.

தப்பியோடும் வழியில் அனுராதபுரத்தை அடைந்த நாக்ஸ் அங்கு சிங்கள மொழி தெரிந்தவர்கள் இல்லாததையும் சந்தை, கடை மற்றும் ஊர்களில் தமிழர்களே வாழ்ந்ததையும் சுட்டுகிறார்.

17 - ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து சென்ற அட்ரியன்ரேலண்ட் என்பவர் சில செய்திகளைக் குறிப்பிடுகிறார். இவை நம் பழமையைத் தெளிவுபடுத்தும் சரியான சான்றுகள் ஆகும்.

"இந்தத்தீவின் பெரும்பகுதி தமிழர்களின் வாழ் விடமாக உள்ளது. இந்தப் பகுதி கைலாயவன்னியனால் ஆட்சி செய்யப்படுவது. இவர்கள் சிங்களர்களின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்கள் அல்லர். எங்கள் (ஒல்லாந்தர்) ஆட்சிக்கு உட்பட்டவரும் அல்லர்.

கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் தமிழ்மொழியைப் பேசுகின்றனர். நீர்க்கொழும்பிலிருந்து தெற்கே தேவேந்திர முனைவரை உள்ள கரையோரப் பகுதியில் சிங்களம் பேசப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதியிலும் துணைக் கண்டத்தை ஒட்டிய ஏனைய மாவட்டங்களிலும் தமிழ்மொழி,பேச்சு வழக்கில் உள்ளது" என்று அவர் கூறுகிறார்.

தமிழின் செல்வாக்கிற்கு இதைவிட வேறு சான்று இருக்க முடியாது.

**பிரிட்டிஷ்சார் ஆட்சி:**

கி பி.1796-இல் இலங்கை பிரிட்டிஷ்சார் வசம் வந்தது. ஆனால், சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் ஆளுநர் மூலமாகத் தான் ஆட்சி செலுத்தப்பட்டது! இப்போதுள்ள நம்முடைய தமிழக அரசுச் செயலகந்தான் இலங்கையை ஆளும் ஆணை பிறப்பிக்கும் உரிமை பெற்றிருந்தது.

இதை நினைவிற் கொண்டு நம் இப்போதைய நிலையினையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு உமிழ்நீரை விழுங்கிக் கொள்ள வேண்டும்.

1802-இல் தான் இலங்கை ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. இலங்கையில் முதல் ஆளுநராக நோர்த் என்பவர் இருந்தார். அவரது செயலாளா கிளேக் கோர்ண். அவர் 1799 சூன் மாதம் எழுதிய குறிப்பு இது.

''இலங்கைத் தீவானது மிகப்பழங்காலந் தொட்டே இரு வெவ்வேறு நாட்டினங்களால் வெவ்வேறு பகுதிகளாக உடைமை கொண்டாடப்பட்டது. இத்தீவின் நடு - தெற்குப் பகுதி வளவை ஆறு முதல் சிலாபம் வரை உள்ள மேற்குப் பகுதிகள் சிங்கள நாட்டினத்தால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர்களால் ஆட்சிச் செய்யப்பட்ட பகுதியாகும்.

இலங்கையின் இனவாழ்வுக்கு இதுவே பட்டயமாகும். 1946-இல் இலங்கை நில அளவைத் திணைக்களம் (துறை) வெளியிட்ட இலங்கை வரை படத்தில் தமிழ் ஈழ அரசு, கீழ் நாட்டுச் சிங்கள அரசு, கண்டி அரசு ஆகிய மூன்றும் தக்க எல்லைகளுடன் காட்டப்பட்டுள்ளன.

1829இல் கோல்புறுக் ஆணைக்குழு ஒன்று ஆட்சி முறைச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகளை அளித்தது. அதன் பரிந்துரைகள்தாம் தமிழ் இனத்துக்குப் பாதகமாக அமைந்தன. தொன்று தொட்டுத் தனி இனமாகவே

விளங்கித் தனி அரசும் ஓச்சிவந்த தமிழ்நாட்டினம் 1833இல் சிங்கள நிலப்பகுதிகளுடன் பலவந்தமாக இணைக்கப்பட்டது. அன்று இழந்த தனித் தன்மை 1948- பிப்ரவரி 4 – ஆம் நாள் இலங்கை விடுதலை பெறும் காலம் வரை நீடித்தது.

1948-இல் ஒற்றையாட்சி அமைப்பு உருவானது. விடுதலை கொடுத்த ஆங்கிலேயர் சிங்களர்க்கும், தமிழர்களுக்கும் சேர்த்துத்தான் கொடுத்துச் சென்றனர். ஆனால், தமிழனுக்கு மட்டும் 4-2-1948 ஒரு விடுதலை நாளாக அமையாமல் நிலையான அடிமைத் தனத்துக்கு அழைத்துச் செல்லும் நாளாக அமைந்து விட்டது! அதன் பிறகு தான் அவலக் கதைகள் தொடங்குகின்றன!

## 2. இன ஒடுக்கல் - அன்றே தொடங்கியசதி!

மொழி, சமயம், நிலம் ஆகியவற்றால் இனங்கள் பாகுபடுத்தப்பட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் கலந்து வாழும் சூழ்நிலை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. பெரும்பான்மை இனத்தின் மனப்பக்குவத்துக்கு ஏற்பவே சிறுபான்மை இனங்கள் வாழ்வமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது!

ஒரு காலத்தில் சப்பானிய இனம் பல குழுக்களாகப் பிரிந்து பிளவுபட்டுக் கிடந்தது. உழைப்பும் ஒருங்கிணைப்பும் வளர்ந்து பல தீவுகள், பல அரசுகள் ஒன்றாகி ஒரே இனமாக, ஒரே அரசாக உருவாகியுள்ளது.

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் பிரெஞ்சுநாட்டினம் ஒரு முகமாக வளர்ந்து விட்டது! சில நாடுகளில் பல இனங்கள் இருக்கும். அவை தமக்குள் போரிடாமல் தமக்குள் ஒருங்கிணைந்து நாட்டை ஆள்வதும் உண்டு. மலேசியாவில் உள்ள மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள் (பெரும்பான்மை—தமிழர்கள்) மூன்று வெவ்வேறு இனங்களாகத் தங்கள் இனப்பண்பாடுகளைப்

பேணி வந்தாலும் மூவரும் ஒருங்கிணைந்துதான் ஆட்சி செலுத்தி வருகின்றனர். சிங்கப்பூரிலும் இதே நிலைதான்.

ஆனால் இலங்கையில் மட்டும் இரு இனங்களும் தொன்று தொட்டே வெவ்வேறாக வளர்ந்து வந்து உள்ளன. ஒரே ஆட்சியின் கீழ் யாராவது கொண்டு வந்தாலும் அந்த ஆட்சி முடிவின் பின் தாங்கள் ஒன்றுபட்டு ஆட்சி அமைத்துக்கொண்டதில்லை; உடனே தனித்தனி ஆட்சி - தனித்தனி அமைப்பு என்பது தான் வரலாறு. ஆங்கிலேயர்கள் சிங்களர்களையும், தமிழர்களையும் ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள் என்றாலும் இரு இனத்தையும் ஒருங்கிணைத்து வைத்துவிடவில்லை.

மேலும் ஆங்கிலேயர்கள் வெளியேற வேண்டும் என்று எவரும் மிகப்பெரும் போராட்டங்களையோ, பெரும் தியாகங்களையோ செய்துவிடவில்லை. இந்தியாவை விட்டு வெளியேறிய ஆங்கிலேயர்கள் இயல்பாகவே இலங்கையையும் விட்டுவிட எண்ணினர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியே இலங்கை விடுதலை அடைந்தது.

விடுதலை பெற்ற பின் சிங்களர்கள் மக்களாட்சி உணர்வுடன் தமிழ் மக்களுடன் கலந்து பேசித் தெளிவான வரையறைகளைச் செய்துகொண்டிருந்தால், இந்த இரு இனங்களும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் எதையும் பங்கிட்டுக் கொண்டிருக்கலாம்; ஆனால், சிங்களர்கள் சுதந்தரம் குறித்துப் பேச்சு நடந்த போதே தந்திரத்தில் ஈடுபட்டனர். அவ்வப்போது சில உறுதிகளைக் கொடுப்பது; ஒப்பந்தம் செய்து கொள்வது—தக்க நேரத்தில் அதை மறுப்பது அல்லது செயல் படுத்தாமல் வைத்துக் கொள்வது என்ற நரித் தந்திரப் போக்கிலேயே நடந்து கொண்டார்கள். 109 இலட்சம் சிங்களர்கள், 38 இலட்சம் தமிழர்கள் என்ற கணக்கை மனத்தில் வைத்துக்கொண்டு 1948 - ஆம் ஆண்டிலிருந்தே தமிழினம் எப்படி ஒடுக்கப்பட்டு வருகிறது என்பதைக் காணவேண்டும்.

**பிரதிநிதித்துவம்:**

1948 - இல் இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள 95 உறுப்பினர்களில் 29 பேர் தமிழர்களாக இருப்பார்கள் என்று கூறப்பட்டது. ஆனால், 1935இல்—20; 1956இல்–19; 1960 இல்—18—என்று தமிழர்கள் எண்ணிக்கை குறைக்கப் பட்டும் சிங்களர்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டும் வந்துள்ளது.

1971 இல் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை-யில் பொது மாற்றங்கள் செய்தனர். இப்போது சிங்களர்-கள் 134 பேரும், தமிழர்கள் 29 பேரும் என மாற்றப்-பட்டது. 66க்கு- 29 என்றிருந்த தமிழர் வாய்ப்பு 134-க்கு 29 என்று ஆனது.

இடம் குறைந்தது மட்டுமில்லை; கடந்த ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது!

பொதுவாக ஆளுங்கட்சியின் குறைகளைப் பரவலாக விவாதிப்பதற்காக எதிர்க் கட்சிகள் தாம் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவரும், தோற்கும் என்று தெரிந்திருந்தும் தங்கள் கருத்துகளை வலியுறுத்த, எதிர்க் கட்சி கடமையைச் செய்ய இதுவும் ஒரு வாய்ப்பு இது மக்கள் ஆட்சியின் ஒரு மரபும் கூட.

ஆனால், 'உலக மக்களாட்சி வரலாற்றின் அசிங்கம்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் - எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்த பின்னும் ஆளுங்கட்சியின் விடாப் பிடியான தீர்மானம் - இது இலங்கை அரசின் செய்கை! தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு ஏற்படும் இழி நிலைக்கு இது எடுத்துக்காட்டு.

இப்போது பிரிவினை கேட்கும் கட்சிகள் தடை செய்யப்படவும், பாராளுமன்ற உறுப்பினர் பதவி

பறிக்கப்படவுமான சட்டம் நிறைவேறியிருக்கிறது! 'விடுதலையை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்றால் அதையே தேர்தல் கொள்கையாக வைத்து வெற்றி பெற்று வாருங்கள்!' என்று அறை கூவல் விடுத்த இலங்கை அரசு- தமிழர் விடுதலைக் கூட்டணி - அதே போலத் தேர்தலில் நின்று வென்று வந்த பிறகு இப்போது புதிய சட்டம் பாய்கிறது!

**மாயாஜாலப் பொம்மைகள்!**

மொத்தத்தில் தமிழர் பிரதிநிதி என்று எவரும் இலங்கை அரசாட்சியில் இருக்கக் கூடாது என்பதே சிங்களர் நோக்கம். நீங்கள் இப்போது கேட்கலாம்: தமிழ் அமைச்சர்களே மூன்று பேர்கள் இருக்கிறார்களே, போதாதா ... ? என்று. அவர்கள் தமிழர்களின் பெயரால் தங்கள் வசதி வாய்ப்புகளுக்காக இருப்பவர்கள்; தமிழர் களை ஏமாற்றுவதற்குச் சிங்களர்கள் தங்கள் பையில் வைத்திருக்கும் மாயாஜாலப் பொம்மைகள்!

எப்படி என்று கேட்பீர்கள். நாட்டில் இவ்வளவு அமளி துமளி நடக்கிறது. "இந்திய அரசு இராணு- வத்தை உடனே அனுப்பிவிட வேண்டும்" எனும் கோரிக்கை உச்சக்குரலில் கேட்கிறது. இதையெல்லாம் தமிழ் மக்கள் சொல்லித்தான் ஆக வேண்டுமா? கேட்டுத் தான் ஆக வேண்டுமா? இந்திய இராணுவ அமைச்சரே பட்டுக்கோட்டைத் தமிழர்தாமே! இதிலிருந்தே தமிழன் பதவியில் இருப்பதாலேயே அது தமிழர்க்கான பிரதி நிதித்துவம் என்று சொல்லிவிட முடியாது என்பதை உணரலாம். ஒரே கட்சி ஆட்சி, ஒரே இன ஆட்சி - இலங்கை யில் இருந்தாக வேண்டும் எனும், 'இட்லரிசம்' இன்று கொடிகட்டிப் பறக்கிறது!

**வாக்காளர் குறைப்பு:**

1948-ஆம் ஆண்டில் இலங்கை அரசு கொண்டு வந்த தேர்தல் சட்டப்படி 10 இலட்சம் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அதனால் இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்த 7 தமிழப் பிரதிநிதிகளின் இடங்கள் காலியாயின. இந்த 7 இடத்தையும் சிங்களர் கள் நிரப்பினர். 1964 ... சிரிமாவோ – சாஸ்திரி ஒப்பந்தத் தாலும் பலர் குடியுரிமை இழந்து, அதனால் பல தமிழ் வாக்காளர்கள் குறைக்கப்பட்டனர்!

**வாக்களிக்க விடாமல் செய்வது!**

மாவட்டக் கவுன்சில் தேர்தல்கள் நடக்கும் போது தமிழர் பிரதிநிதிகள் வெற்றி பெற வாய்ப்புள்ள தொகுதிகளில் வாக்குச் சாவடிகளில் சிங்களர்கள், போலீசார், இராணுவம் ஆகிய மூவருமாகச் சேர்ந்து ஏதாவதொரு கலவரத்தைப் பீதியை எழுப்பி வரிசையில் நிற்கும் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமலும் நேரத்திற்குள் வரமுடியாமலும் செய்து இயன்ற வரை தமிழ்ப்பிரதி நிதிகளின் வெற்றி வாய்ப்பைத் தடுப்பார்கள்!

**படைபலம்:**

இராணுவத்திலும் போலீசிலும் ஆள் சேர்க்கும் போதே தமிழர்களைச் சேர்க்காமல்விட்டுச் சிங்களர்களைப் படை பலப் பின்னணி உடையவர்களாக மாற்றி வந்துள்ளது இலங்கை அரசு. கண் துடைப்புக்காகச் சில தமிழர்களுக்கு வாய்ப்பளித்தாலும் அவர்கள் தக்க நேரத்தில் தமிழர்களுக்குச் சார்பாக உதவிட முடியாமலும், தமிழினப் படுகொலைகளைக் கண்டும்தடுக்க முடியாமலும் இக்கட்டான நிலையில் நிற்கவேண்டி வரும்!

எண்ணிக்கையைப் பார்த்தால் இந்த உண்மை தெரிந்து விடும்.

| | | தமிழர் | |
|---|---|---|---|
| | மொத்தம் | எண்ணிக்கை | சதவீதம் : |
| போலீஸ் | 17,000 | 475 | 2.8 |
| தரைப்படை | 11,000 | 220 | 2 |
| கடற்படை | 2,000 | 20 | 1 |
| விமானப்படை | 600 | 16 | 2.7. |

நியாயமாக 20சதவீத இடம் பெற வேண்டிய தமிழர்கள் இரண்டும் ஒன்றுமாக இடம் பெற்றால் அவர்கள் இராணுவத்திலும், போலீசிலும் இருந்து தான் என்ன பயன்? தமிழர்கள் தாக்கப்படும் போது இவர்கள் அந்த இடத்தில் வரக்கூட வாய்ப்பில்லாமல் யாரையாவது காவல் காத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்!

**வளர்ச்சித் திட்டங்கள் :**

வளர்ச்சித் திட்டங்கள் தீட்டும் பொழுது தமிழர்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப் படுவார்கள். தமிழர் பகுதிகளில் விவசாயக் குளங்கள் மராமத்துச் செய்யப் படுவதில்லை. தமிழ் விவசாயிகள உற்பத்தி செய்யும் அதே பொருளை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துப் போட்டியை உண்டாக்கித் தமிழர் முன்னேறாமல் தடுத்து வருகின்றனர். நிதி ஒதுக்கீடு செய்யும் போது கூடத் தமிழர்கள் ஒடுக்கப்படுவதைக் காணலாம்.

1979–க்கு முன்னால் மட்டக்களப்புப் பகுதி புயலால் பாதிக்கப்பட்டது. தமிழர்களின் இந்தப் பகுதியில் 95% பாதிப்புஎன்றால், சிங்கள மாவட்டமான பொலன்னருவா 5% பாதிப்புத்தான் அடைந்தது ஆனால், புயல் நிவாரண நிதியாக வெளி நாடுகள் கொடுத்த தொகையில் 20% மட்டக் களப்புக்கும், 80% பொலன்னருவாவுக்கும் ஒதுக்கப்பட்டது. இப்படி அநியாயங்கள் எத்தனையோ நடந்து வருகின்றன!

முதலீடு

தனியார் சிலர் வெளி நாட்டு உதவியுடன் தொழில் தொடங்க நினைத்து அதற்குத் தமிழர் பகுதியைத் தேர்ந்தெடுத்தால் அதற்கு இலங்கை அரசு அனுமதிப்பது இல்லை. இந்நிலையில் ஏற்கனவே இயங்கிய தொழிற்சாலைகளையும் சிங்களப் பகுதிக்கு மாற்றி விடுகின்றனர். யாழ்ப்பாணப் பகுதியில் நார்வே உதவியுடன் இயங்கிய மீன்பிடித் திட்டம் (சி— நோர்திட்டம்) சிங்களப்பகுதிக்கு மாற்றப்படும் நிலை உள்ளது.

இபபோது ஏற்பட்ட கலவரங்களைப் பார்த்தால் தமிழர் பகுதுயில் எவனும் தொழில் தொடங்க மாட்டான். கட்டிடத்தைக் கட்டி எரித்துச் சாம்பலாக்கிய பின் சாவிக் கொத்தைச் சிங்களர்களிடம கொடுத்து விட்டுப் போகவா ஒருவன் கொழில் தொடங்குவான்?



தந்தை செல்வா



திரு. அமிர்தலிங்கம்

கல்வி

பொதுவாகவே எல்லாத் துறைகளிலும் தமிழ மாணவர்களுக்கு வாய்ப்புக் குறைவு தமிழ் நாடடில் பிற்படுத்தப்

பட்டவா 50% வாய்ப்பும், தாழ்த்தப்பட்டவர் 18 % வாய்ப்பும் பெறமுடியும். சமய, மொழிச் சிறுபான்மையினர் சட்டபூர்வமாக 50 % இடங்களைத் தாங்களே நிரப்பிக் கொள்ளலாம். ஆனால், இலங்கையிலோ, நிலைமை தலைகீழாக உள்ளது. 'தரப்படுத்துதல்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மாணவர்களை ஒடுக்குகின்றனர்!

அதாவது, ஒரு சிங்கள மாணவர் 220 மதிப்பெண் பெற்றால் கிடைக்கும் இடம் தமிழ் மாணவர் 250 பெற்றால் தான் கிடைக்கும். ஓட முடியாதவனைக் கொஞ்சம் முன்னால் நிறுத்துவது தான் ஓட்டப்பந்தயம். ஆனால் இலங்கை அரசு நொண்டியைப் பின்னால் நிறுத்திவிட்டுப் பந்தய வீரனை முன்னே தள்ளி ஓடச் சொல்கிறது!

**வேலை வாய்ப்பு :**

16 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து 16000 விண்ணப்பங்களை நிரப்பிக் கொடுக்கச் சொல்லி இவர்களிலிருந்து தேர்ந்தெடுத்து வேலை கொடுப்பதாகச் சொல்லி விட்டு அத்தனையும் உடைப்பில் போடப்பட்டு உள்ளன. சிங்களப் பகுதியில் ஒரு தொகுதிக்கு 5,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றால் தமிழர் தொகுதியில் 200 பேர் கூட வேலை வாய்ப்புப் பெறுவதில்லை! அரசு அலுவல்களில் தமிழர்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வருவதைக் கீழ வரும் புள்ளி விவரம் காட்டும்

ஒரு வேலைக்கு அமர்ந்தவர்களில் தமிழர்கள் மட்டும் :

| | 1956 | 1965 | 1970 |
|---|---|---|---|
| நிர்வாகத்துறை | 30% | 20% | 5% |
| அஞ்சல், ரெயில்வே, மருத்துவம் | 50% | 30% | 5% |
| மருத்துவர், பொறியாளர், ஆசிரியர்கள் | 60% | 30% | 10% |
| இராணுவப் பிரிவு | 40% | 20% | 1% |
| தொழிலாளர் துறை | 45% | 25% | 5% |

1971 — 74க் கிடையில் 73000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் 4734 பேர் மட்டுமே தமிழர்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் 3500 தமிழராகிய ஆசிரியர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் இந்தக் காலத்தில் தான். அப்படியானால் தமிழர்கள் பெற்ற வேலை வாய்ப்புத்தான் என்ன?

1980 - ஆம் ஆண்டில் அரசுப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட தமிழர்களின் நிலையைப் பார்ப்போம்.

| பதவி | மொத்தம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் | தமிழர்கள் |
|---|---|---|
| சி.ஏ. எஸ்(நம் I.A.S. போல) | 140 | — |
| உதவிநிலைப் பொறுப்பாளர்கள் | 93 | 4 |
| ஆய்வு நடத்தப் பயிற்சி பெறுபவர்கள் | 318 | 5 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 1000 | — |
| பொதுத்துறை எழுத்தர்கள் | 1000 | 2 |
| ஆசிரியர்கள் | 17000 | 700 |

ஏதோ கடனுக்கு ஒன்றிரண்டு எலும்புத் துண்டுகளைப் போலத் தமிழருக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதே தவிர அவர்களுக்குரிய பங்கினைத்தந்து சமாதான சக வாழ்வு காணவேண்டும் எனும் எண்ணம் இலங்கை அரசுக்கு இல்லை.

**சட்டங்கள்**

இலங்கை அரசு சட்டங்கள் பலவற்றைத் தம் போக்கில் நிறைவேற்றிக் கொண்டதையும் தமிழர்களை ஒடுக்கும் சட்டங்கள் விடாப்பிடியாகச் செயல்பட்ட விதத்தையும் பார்க்கும் போது நெஞ்சு கொதிக்கிறது. விடுதலை பெற்ற 1948-ஆம் ஆண்டிலேயே ஒரு தேர்தல் சட்டம் வந்தது. 10 இலட்சம் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. இலங்கை நாடாளுமன்றத்தின் 7 தமிழ்ப் பிரதிநிதிகளின் இடம் காலியாகி அந்த இடத்தில் 7 சிங்களர் வந்தனர். குடியுரிமைச் சட்டத்தின்

மூலம் இந்தியத்தமிழர் அனைவரும் நாடற்றவர் ஆனார்கள்.

1956இல் சிங்களமொழி மட்டும் ஆட்சிமொழி(Official Language) எனும் சட்டத்தால் தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் பின் தள்ளப்பட்டனர். சிங்களம் கற்காத ஆசிரியர்களைப் பதவி நீக்கம் செய்தும், மிகப்பல தமிழர்களின் பதவி உயர்வுகள் பறிக்கப்பட்டும் பாதகம் விளைவிக்கப்பட்டது! தமிழ் மக்களின் கிளர்ச்சியின் காரணமாகப் பிரதமர் பண்டாரநாயகா - தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வ நாயகம், ஒப்பந்தம் ஒன்று 1957இல் ஏற்பட்டது.

தமிழுக்குத் தேசியமொழி எனும் மதிப்பும் வடக்குகிழக்கு மாகாணங்களில் ஆட்சிமொழி தமிழதான் எனும் வாய்ப்பும் தரப்படும் என உறுதி செய்யப்பட்டது. ஆனால், 1958இல் இந்த ஒப்பந்தம் ரத்தாகி விட்டது. சிங்களர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தால் உடனே தமிழர்களின் நியாயமான எந்தக் கோரிக்கையும் உடைப்பில் போடப்படும் என்பதற்கு இது ஒரு சான்று.

1958இல் தமிழ்மொழிச் சிறப்பு உபயோகச்சட்டம் வந்தது நிர்வாகத்தில் நியாயமான அளவுக்குத் தமிழ் பயன்படுத்தப்படும் எனும் நம்பிக்கை பிறந்தது. ஆனால், இந்தச்சட்டம் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

1960 ஆம் ஆண்டில்நாடெங்கிலும் உள்ள நீதி மன்றங்களிலும் சிங்களமே ஆட்சிமொழி எனும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

தமிழுக்கு ஒரு சட்டம் போட்டு அதைவெறுங் காகிதமாகவே வைத்திருந்த அரசு 1961இல் சிங்களம் மட்டுமே ஒரே ஆட்சிமொழி எனும சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தியது. கல்வி நிலையங்கள் தேசியமயமாக்கப்பட்டன. தமிழ்ப்பகுதியில் உள்ள சில கல்வி நிலையங்-

கள் மூடப்பட்டு மறுபடியும் சிங்களப்பள்ளிகளாகத் திறக்கப்பட்டன. தமிழ்ப்பள்ளிகள் நிதி உதவியை இழந்தன! இது தொடர்பாகத் தமிழரசுக்கட்சியினர் செய்த சத்தியாக்கிரகம் 57 நாள் சென்றபின் ஆயுதப் படைகளினால் முறியடிக்கப்பட்டது.

1964இல் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் மென்னியை முறிக்கும் சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுபற்றிப்பின்னர் விரிவாகப் பேசுவோம். 1965-இல் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கும், தமிழரசுக் கட்சித்தலைவர் செல்வநாயகத்துக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழப்பேசும் ஒவ்வொருவரும் தீவு முழுவதும் எந்தத் தொடர்பையும் தமிழிலேயே மேற் கொள்ள வேண்டும் என்றும். வடக்கு — கிழக்கு மாகாணங்களில் -நீதிமன்றங்களில் தமிழிலேயே நடவடிக்-கைகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அதுவே தமது ஐக்கியதேசிய (UNP ) கட்சியின் கொள்கை என்றும் சேனநாயகா தெளிவுபடுத்தினார். ஒப்பந்தங்கள் என்ன-வோ, இனிப்பாகவும் சமரசமாகவும் தான் இருக்கின்றன.

ஆனால், நடைமுறை என்று வரும்போது தான்ஒப்பந்தங்கள் உயிரைவிட்டு விடுகின்றன! இந்த ஒப்பந்தமும் சிங்களவெறியர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. 1971 - இல் தரப்படுத்துதல் சட்டம் வந்துதான் தமிழ் மாணவர்களைக் கீழே தள்ளியது. இந்தச் சட்டங்கள் போக அண்மையில் (1983) வந்த விடுதலை மறுப்புச் சட்டம் வரை எல்லாமே தமிழினத்தை அழிக்க இடைவிடாத முயற்சி மேற்கொள்ளப் பட்ட அவல வரலாற்றையே நமக்குக் காட்டுவதை உணரலாம்.

**ஊரடங்கு அவசரச்சட்டம் :**

பொதுவான சட்டம் போக அவ்வப்போது ஊரடங்கு என்றும் அவசரச் சட்டம் என்றும பிறப்பித்துப் பல தமிழர்களை ஒழிக்கவும் உயிர் குடிக்கவும், பழிதீர்க்க

வும் வாய்ப்பேற்படுத்திக்கொள்வது உண்டு. தமிழர்களைக் கைதுசெய்து எப்படிக் கொடுமைப் படுத்துபவார்கள் என்பதை நன்றாகக் கவனித்து இலங்கை அரசுக்கே ஒரு மனுவுடன் அறிக்கையும் தந்தது அனைத்துலகப் பொது மன்னிப்பு நிறுவனம் (Amnesty International) அதன் விவரங்கள்: "சீருடையில் இல்லாத போலீசார் மற்றும் இராணுவத்தினரால் பொது மக்கள் கைது செய்யப்பட்டது- கைதுக்கான காரணம் எதுவும் தெரிவிக்க மறுப்பது-எந்தச் சட்டத்தின் கீழ் கைது என்றோ, எங்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றோ, யாருக்கும் தெரிவிக்காமல் இருப்பது-ஒருவார காலத்திற்கும் மேலாக வழக்கறிஞர் உதவி மறுக்கப்பட்டது காவல் சிறையில் இருந்தாலும், உறவினர்கள் பார்க்க அனுமதிக்காதது -கைது செய்யப்பட்ட 24 மணிநேரத்துக்குள் குற்றநடுவர் முன் கொண்டு வராமலிருந்தது" என இப்படியெல்லாம் அடக்கு முறைகள் கட்ட விழ்த்து விடப்பட்டு அதன்படி எத்தனையோ தமிழர்கள் உயிரை இழக்கச்செய்துள்ளனர்!

**பாரபட்சம்:**

பயங்கர ஆயுதம் வைத்திருந்தால் அவருக்கு மரண தண்டனை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசரிதானே என்று கேட்கலாம்; இந்த அறிவிப்புத் தமிழர் பகுதியில் மட்டுமே தவிர சிங்களப் பகுதிகளில் இந்தச்சட்டம் அமுலாக்கப்படவில்லை என்பதை அறிந்தால் உண்மை விளங்கும்.

**ஊடுருவல் :**

தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்களர்களை வலுக்கட்டாயமாகக் குடியேற்றித் தமிழர் அதிகச் செல்வாக்குப் பெற்றுவிடாதபடி ஊடுருவலும், குடியேற்றமும் நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றன. தமிழர்கள் நெடுங்காலமாகப் பயன்படுத்தி வரும் நிலப்பகுதிகளில்

திடீரென்று சிங்களர்கள் அரசு உதவியுடன் ஆக்கிரமிப்பார்கள். அம்பாறை, வவுனியா தலைமன்னார், திரிகோணமலை மாவட்டங்களில் இந்த ஊடுருவல் அதிகம். இதே பகுதிகளில் இந்தியத்தமிழர்கள் குடியேற நினைத்தால் போலீசார் தடுத்து விடுவார்கள். 1953 முதல் 1971 வரை சிங்களர்கள் எப்படி ஊடுருவியுள்ளார்கள் என்பதைப் பார்க்கலாம்.

| | சிங்களர்கள் | அதிகரித்த சிங்களர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 6183 - 20, 402 | 14210 |
| மட்டக்களப்பு | 31, 174 - 94, 150 | 62, 976 |
| திரிகோணமலை | 15, 290 - 55, 308 | 40, 196 |
| புத்தளம் | 31, 587 - 3, 09298 | 2,77,711 |

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்வதைமாற்றி விட்டால் தங்கள் நிலம், தங்கள் நாடு. தனிநாடு என்று கேட்பதற்கு வாய்ப்பில்லாமலே செய்து விடலாம் என்ற சூழ்ச்சியும் இதில் அடங்கியுள்ளது.

**பண்பாட்டு அழிப்பு:**

தமிழர்கள் அறிவு பெறுவதற்கான வாய்ப்புகளை அழித்துவிட்டால் இனத்தை ஒழித்து விடலாம் என்ற திட்டத்தின் அடிப்படையில் தான் யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டது. 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது. பூபாலசிங்கம் என்பவர் வைத்திருந்த புத்தகக்கடைகள் எல்லாம்நெருப்புக்கிரையாயின! தமிழர்களின் பண்பாட்டை அடையாளம் காட்டும் சின்னங்களை இயன்றவரை அழித்துவிட்டால் அவர்களது பூர்வீகத்தையே மறைத்து விடலாம் என்பது சிங்கள வெறியர் அடங்கிய இலங்கை அரசின் திட்டம்.

**புறக்காவலும் துணையும்**

இலங்கை அரசு அமெரிக்காவின் கூட்டுறவை வளர்த்துக்கொண்டு தமிழர்களை அச்சுறுத்தவும் அடக்கவும் இந்தியாவையே மிரட்டவும் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. திரிகோணமலை அருமையான இயற்கைத் துறைமுகம். எந்தக்கடற் படையும் பாதுகாப்பாகத்தங்கவும் இயங்கவும் வாய்ப்பான துறைமுகம். இங்குத் தமிழர்களே அதிகம். ஊடுருவல் செய்து இப்போது பலசிங்களர்கள் குடியேறி வருகிறார்கள். அமெரிக்கக்கடற்படைத்தளம் அமைக்க அனுமதி தந்து ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. போர்க்கப்பல்கள் வந்து தங்கிச் செல்ல வாய்ப்புகள் உருவாகியுள்ளன; வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலி நிலையம் அமைக்கவும் ஏற்பாடு நடந்து வருகிறது. பிறநாட்டின் வலுவான கப்பற்படையை இங்கு வைத்துக் கொண்டால் வெளிநாட்டினர். குறிப்பாக இந்தியத்தாக்குதல் எதையும் தகர்க்கவும், உள்நாட்டுத் தமிழர்களை ஒடுக்கும் போது இந்தியா போன்ற எவரும் தலையிடத் தயங்கும் சூழநிலையை உருவாக்கவும் இந்தத் திட்டம் செயல் பட்டு வருகிறது.

**வெறியேற்றுதல்**

பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது திரு. அமிர்தலிங்கம் அவர்களைத் தலை கீழாகக் கட்டித்தொங்க விட்டுக் கவட்டைப் பிளந்து எறியவேண்டும் என்று ஆளுங்கட்சி அமைச்சர்களே வெறியெடுத்துப் பேசினார்கள். நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரை என்ன செய்வோம் என்று சொல்லி விட்டால், சிங்கள வெறியர்கள் சாதாரணத் தமிழர்களை என்ன செய்ய வேண்டும் என்று பாடம் சொல்வது போல அமையும் என்பது அவர்கள் நோக்கம். காயகறி விற்றுக் கொண்டிருக்கிற பெண் கூட அவள் தமிழச்சியாக இருக்கும் ஒரே காரணத்தால் நிர்

வானமாக்கப்பட்டு, மார்பகம் அறுக்கப்பட்டுச் சூடான தாரால் முதுகிலும் மார்பிலும் 'ஸ்ரீ' பொறிக்கப்பட்டுத் துடிதுடித்துச் சாக விட்டுப்பார்ப்பதில் சிங்களர்க்கு ஆசை பிறந்தது என்றால், தமிழினத்தை ஒடுக்குவதற்குச் சிங்களருக்கு எவ்வளவு வெறியூட்டப்பட்டிருக்கவேண்டும் என்பதை உணரமுடியும்.

இவ்வாறாகத் தமிழினத்தை ஒடுக்கும் முயற்சி என்பது 1948-ஆம் ஆண்டிலிருந்தே சிங்கள வெறியர்களின் திட்டமாகவே இருந்து வருகிறது. தமிழ் ஈழம் கேட்டார்கள்; விடுதலைப்புலிகள் அட்டகாசம் தாங்கவில்லை; அதனால் சிங்களர்களுக்கு ஆத்திரம் வந்து விட்டது-என்பதெல்லாம் சரடுகள் நாகரிக ஒடுக்கு முறை இப்படியிருக்க, இனி அநாகரிக, காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளைக் காண்போம்.

## 3. பச்சைப் படுகொலைகள்!

கொலைகள் எல்லா நாட்டிலும் ஏதாவதொரு வகையில் நடந்து கொண்டு வருகின்றன. அவற்றைக் கேள்விப் படும்போது பொதுவாக வருத்தப் படுவோமே தவிரப் பதைபதைத்துப் போய் விடுவதில்லை. சிலசெய்திகளைப் படித்து விட்டு மேற் போக்காகத் தள்ளி விடுகிறோம். தலையை வெட்டிச் சாலையில் வைத்து விட்டுப்போனது-நகையையும் பறித்துக் கொண்டு தடுக்க வந்ததால் கத்தியாலும் குத்தியது-கொலை செய்து பிணத்தை ஆற்றிலே எறிந்து விடுவதுபோன்றதனி மனிதச்சாவுகள் பல நமக்குத் தெரியும். விபத்துகள் நேர்ந்து மிக முக்கியமானவர்கள் கூட அதில் பலியான நிகழ்ச்சிகள் உண்டு. சில பேர் அப்படிப் பலியானது கேட்டு மகிழ்ந்ததும் உண்டு.

தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் அல்லவா?

ஆனால், ஒரு பாவமும் அறியாத நாட்டு-நிகழ்ச்சிகள் என்னவென்று கூடத் தெரியாத அப்பாவி மக்கள்

யாருக்கோ ஏற்பட்ட வெறியால் படுகொலை செய்யப் படுகிறார்கள். அதுவும் வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு பழி தீர்க்கிறார்கள் என்பதைக் கேள்விப் படும் போது இனத்துக்குச் சொந்தக் காரர்கள் இடியுண்ட நாகம் போல் நடுநடுங்கிப் போகிறார்கள். 'தான் ஆடா விட்டாலும் தசை ஆடும்' என்பார்களே, அதுபோல இதயம் துடித்துச் செய்திகள் வரவரச் சிந்தை நொந்து தவிக்கிறார்கள்!

யாருக்கோ வந்த சாவு என்று நினைக்காமல் தங்களுக்கே நேர்ந்ததாக நினைக்கிறார்களே, அதுதான் இன உணர்வு. அதே நேரத்தில் ஒரு மனிதன் தன் போக்கில் ஒரு நாட்டுச் சட்டத்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வீடுகட்டி, வாணிகம் செய்து வயிற்றைக் கழுவி, மனைவி மக்களைக் காப்பாற்றி வாழலாம் என்பது தான் பொதுநீதி. இப்படி வாழும் உரிமைகூட இல்லாமல் மனித உரிமை களை மீறும் வகையில் படுகொலைகளைச் செய்வதும, சுற்றுலாப் பயணிகள் கூடச் சுகமாகப் போய்த் திரும்பு வார்கள் என்ற நம்பிக்கையில்லாத நிலைகளை ஏற்படுத்து வதும் ஒரு நாட்டின் தன்மை என்றால் அந்த நாட்டை உலக நாடுகள் ஒதுக்க வேண்டும. இல்லா விட்டால் ஒரே குண்டில் ஒரேயடியாக மண்ணாக்கி விட வேண்டும்.

**நரிகளின் காடு :**

ஓர் இனம் வெகுண்டெழுந்து பச்சைப் படுகொலை-களைச் செய்வதும் இரத்தத்தை உறிஞ்சிக்குடிப்பதும், சிறுபான்மை இனம் செய்வதறியாது சிதறி ஓடுவதும், மனைவி, பிள்ளைகள் எல்லாம் வகை தொகை தெரியாத அளவில் பிரிந்து போவதும் நாகரிகமான ஒரு நாட்டில் நடக்கா. அநாகரிகமும் காட்டுமிராண்டித் தனமும் தலைவிரித்தாடும் நாட்டுக்கு 'நாடு' என்று பெயரில்லை. நரிகளின் காடு என்று பெயர்! இந்த 'நல்ல' பெயரை எடுத்துக்கொண்டிருக்கும் இலங்கை, இனப்படு கொலை-

களைச் (GENOCIDE) செய்வதன் மூலமாக 'இழிவின்' இமயம் எனும் பெயரைப் பெற்றிருக்கிறது. இலங்கை அரசு தமிழினத்தை முற்றாக அழித்து விடுவது என்று முடிவு கட்டி எவ்வளவோ நாளாகிவிட்டது. இன ஒடுக்கல் எப்படி நடக்கிறது என்று கண்டோம். இனி இன ஒழிப்பு எப்படி நடக்கிறது என்று கண்டறிய வேண்டும்.

**மூன்று முகக்கொடுமை!**

படுகொலைகளை உண்டாக்கும் வன்முறைகளை மூன்று வகைப்படுத்தலாம்.

1. இனத்துவச வன்முறை (Communal Violence).
2. அரசியல் அல்லது பயங்கரவாத வன்முறை (Political or terrorist Violence)
3. பாதுகாப்புப் படைகளின் வன்முறை (Violence by Security forces)

இலங்கையில் ஏற்பட்ட இனக் குழப்பத்தில் இந்த மூன்று வகை வன்முறைகளும் தாராளமாகக் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன என்பது தான் உண்மை. அதிலும் 1981 கலவரத்தின் போது இந்த மூன்று வகை யுமே கைகோத்துக் கொண்டு உலாவந்தன எனலாம். தமிழர்களை முற்றாக ஒழிப்பதற்குச் சிங்கள அரசும், இராணுவமும், சிங்களக் காடையர்களும் (ரவுடிகள்) சேர்ந்துசெய்த கூட்டுமுயற்சிகளால் விளைந்த கலவரங் களையும், அவற்றிற்கான காரணங்களையும் கொடுமை யான விளைவுகளையும் கண்டால் தான் தமிழினத்தின் இழப்பு என்னவென்பது தெரியும். அப்போதுதான் 5 கோடித் தமிழர்கள் நாம் என்று இறுமாந்து கிடைக்கும் தமிழ் நாட்டுக்காரர்களுக்கும் கொஞ்சம் இனஉணர்வு வரும்

**ஐந்து கோடிச் சொந்தக்காரர்கள்**

உலக அரங்கில் தமிழர்களோடு ஒப்பிடும்போது சிங் களர்கள் மிகமிகச் சிறுபான்மையினர் தான். 109 இலட்சம்

பேராக இலங்கையில் வாழும் சிங்களர் தவிரக் குறிப்-பிட்டுச் சொல்லும்படி இவர்களுக்கு வெளிநாட்டில் எந்த வக்கும் இல்லை. ஆனால் தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இலங்கை,இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற வெளிநாடுகளிலும் சேர்த்து ஆறுகோடித் தமிழர்கள் இருக்கிறோம். இருந்து என்ன பயன்? ஒரு கோடியில் நிற்கும் சிங்களர்கள் உள்ளத்தில் அச்சம் இல்லையே? 22 கல் அருகில் 5 கோடிச்சொந்தக் காரர்கள் இருக்கிறார்களே என்ற நினைப்பு இருந்தால் சிங்களர்கள் இந்தப் படுகொலைகளைச் செய்திருப்பார் களா?

''தந்தை-தாய் இருந்தால் உலகத்தில் எனக்கு இந்தத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா!'' என்பது பழைய பாட்டு.

**கல்தோன்றி! மண்தோன்றாக் காலத்துக்கு ...**

தமிழர்கள்-தமிழ்நாட்டுத் தமிழர்கள், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த தமிழர்கள், தட்டுக்கெட்டவர்களாகத்தட்டிக் கேட் கும் திராணியற்றவர்களாகக் கையாலாகாதவர்களாக இருக்கிறார்கள் என்பதால் அல்லவா சிங்களர்கள் இந்த ஆட்டம் ஆடுகிறார்கள்? என்றாலும் கொலை செயயப் பட்ட 4000 - க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழருக்காக இன்று கூட்டாகக் குரல் கொடுக்கும் என் சொந்தக் காரர்களே! சொரணை வந்து விட்டது உங்களுக்கு! தூக்-கம் கலைகிறது, உங்களிடத்தில்! தொடைதட்டி ஆர்ப்பரிக் கத் தொடங்கிவிட்டீர்கள்! அதற்குமுன் நம் பச்சைத் தமிழர்களைப் பதைக்க உயிர் வாங்கிய பழைய கதை களைக் கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள்!

**தொடர்ந்து வந்த சோதனைகள்!**

1948 — 49, 1950 — 52ஆம் ஆண்டுகளிலும் சில கல-வரங்கள், உயிர்ச் சேதங்கள் நடந்திருக்கின்றன, இலங்கை யில். ஆனால் அவை நமக்கு நினைவில்லை மறந்து போய்விட்டன. தமிழர்களை ஒடுக்குவதில் ஐக்கிய தேசிய

கட்சியும் (UNP), சிறீலங்கா சுதந்தரக் கட்சியும் (SLFP) உனக்கு நான் இளைத்தவனில்லை! என்ற முறையிலேயே செயற்பட்டு வந்ததோடு சேனநாயகா, பண்டாரநாயகா, சிரிமாவோ, செயவர்த்தனே என்று எவர் வந்தாலும் தமிழின ஒழிப்புத் தவறாமலும் சரியாகவும் வரவர வேகமாகவும் முறையாகவே நடந்து வந்திருக்கிறது. சிங்கள அரசின் திட்டமிட்ட சதி என்பது எந்தக் கட்சி ஆட்சியிலும் மாறவில்லை. 1948இல் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி. அதில் அமைச்சராக இருந்த பண்டாரநாயகா அக்கட்சியிலிருந்து விலகி சிறீலங்கா சுதந்தரக் கட்சியைத் தொடங்கினார்.

**சிங்களமே ஆட்சி மொழி**

1955 சிறீலங்கா சுதந்தரக் கட்சி மாநாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்படவேண்டும் எனத் தீர்மானம் போட்டு விட்டு ஒப்புக்காகத் தமிழின் நியாயமான புழக்கத்துக்கு இடமளிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். இந்தக் கட்சி இவ்வளவு சொல்லிவிட்டால் ஐக்கிய தேசிய கட்சி பொறுக்க முடியுமா? களனி எனும் இடத்தில் நடை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

1956—பொதுத் தேர்தலில் பண்டாரநாயகா பிரதமரானார். வந்தவுடன் தன் கட்சிக் கொள்கையை, மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சியில் சிங்களம் மட்டும்' எனும் சட்டம் 1956ல் நிறைவேற்றப்பட்டது. தமிழரசுக் கட்சியினரும்,இடதுசாரிகளும் எதிர்த்தும் பயனில்லை. தமிழ்த் தலைவர்கள மொழி உரிமைக்காக அகிம்சை வழிகளில் போராடினார்கள். ஆனால் சிங்களக்குண்டர்கள் தலைவர்களையும், தமிழ்மக்களையும் தாக்கத் தொடங்கினார்கள். நேரே நடந்ததைப்பார்த்துக் கொண்டு மவுனம் சாதித்தார் பண்டாரநாயகா. 'தமிழினத்தின் மீது தாக்குதல்' எனும் தொடர் நாடகத்தை இயக்குநர் பண்டாரநாயகா ரசிக்கத் தொடங்கினார்.

**சிங்களர் வெறித்தனம் தொடங்கியது!**

இதன்பின் 1957-இல் பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1958 ஏப்ரலில் சிங்கள வெறியர்-களின் எதிர்ப்பால் ஒப்பந்தம் ரத்தானது. 1958 மே மாதம்



**பச்சைப் படுகொலைகள்!**

நாடுதழுவிய முறையில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்தன. இதற்குத் தூண்டுதலாக அமைந்தது பண்டாரநாயகாவின் வானொலிப் பேச்சு. தமிழினத்துக்கு எதிரான—துவேசமான பேச்சுகளை இலங்கை வானொலி (பாட்டுப் போட்டே நம்மை மடையர்களாக்கி வைத்திருக்கும் அதே இலங்கை வானொலி தான்). ஒலி பரப்பியதால் சிங்கள வெறியர்கள் தமிழர்களுக்கு எதிராகச் சீற்றங் கொண்டு எழுந்து தாக்கினர். நூற்றுக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டனர்! இலட்சக் கணக்கில் தமிழர் சொத்துகள் சேதமாயின!



'ஸ்ரீ' குழப்பம்

இந்தக் கலவரத்தினை 'ஸ்ரீகுழப்பம்' என்றும் சொல்வதுண்டு. சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்பதைச் செயற்படுத்த 1958ஆம் ஆண்டு சிங்கள ''சறீ'' என்னும் எழுத்தை மோட்டார் வாகனங்களின் இயக்கத் தகடு

களுக்கு முன் பொறிக்க வேண்டும் எனும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த போது அதைத்தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்து அரசாங்கப் பேருந்து வண்டிகளின் இயக்கத் தகட்டில் உள்ள சிங்கள எழுத்தை மறைத்துத் தமிழ் எழுத்தைப் பொறிக்கும போராட்-டத்தை மேற் கொண்டனர். அதனால் சினம் கொண்ட சிங்கள அரசு தமிழ் மக்கள் மேல் சிங்கள வெறியர்-களைத் தூண்டி விட்டது. சிங்களக் குண்டர்கள் நாடு முழுவதிலும் உள்ள தமிழர்களை நூற்றுக்கணக்கில் வெட்டிக் குவித்தனர்! அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது அன்றைய அரசு. அந்தத் தாக்குதலின் போது ஆயிரத்துக்கு அதிகமான தமிழமக்கள் இறந்த-துடன் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்புச் சூறையாடப்பட்டது! தமிழப் பெண்களை மானபங்கப் படுத்தி விட்டு அவர்களது மார்பில் பழுக்கக் காய்ச்சிய இரும்-புக் கம்பிகளினால் சிங்கள "சிறீ" எழுத்துகளைத் துடிக்கத் துடிக்க எழுதினார்கள்! வெறி பிடித்த சிங்களக் குண்டர்களின் வெறியாட்டத்திலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் கூடத் தப்பவில்லை! ஓரிடத்தில் ஒரு நிறை மாதக் கர்ப்பிணிப் பெண்ணை நிர்வாண மாக்கி அவள் வயிற்றைக் கீறி வயிற்றிலிருந்து குழந்-தையை வெளியே இழுத்தெடுத்து அது ஆண் குழந்தை யாக இருக்கக் கண்டு வளர்ந்தால் நீயும் தமிழுரிமை கேட்பாய்! என்று கூறி அக்குழந்தையையும், இரண்டு துண்டாக வெட்டி வீசி விட்டுச் சென்றனர்! வெறி பிடித்த சிங்களக் குண்டர்கள். பாணந்துறை எனும் இடத்தில் கோயில் ஐயரைக்கோயிலுக்குள் பூட்டிவைத்துப் பெற்றோலை ஊற்றிக் கொளுத்தினர். ஏராளமான தமிழர்கள உற்றார் உறவினரை இழந்து அநாதைக-ளாயினர் அந்தத்தாக்குதலின்போது ஏராளமான தமிழர் சொத்துகள் சூறையாடப்பட்டன! வீடுகள் தீக்கிரை யாக்கப்பட்டன!

தாய்க்குலமே! உடலையும் மானத்தையும்காக்க உயிரை விடவும் துணியும் அன்னையரே! கேளுங்கள்! சிங்கள வெறியர்கள் அத்தோடு நிற்கவில்லை. தமிழ்ப் பெண்களின் மார்பகங்களை அறுத்து அவற்றை ரப்பர் மரங்களில் ஆணி வைத்து அறைந்து வரிசை பார்த்தனர் அந்த மாபாவிகள்! கல்முனை எனும் ஊரில் குழந்தைகளின் கால்களைப் பிடித்துப் பாறைகளில் துணி துவைப்பது போல் அடித்துத்தூக்கி எறிந்தனர் அந்த வெறியர்கள்! அன்றைக்கு விட்டு விட்டோம். இது இன்றைக்குப்பேய் பிடித்து ஆடுகிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடல் தொடர்ந்தன. அதிலும் யாழ்ப்பாணம் நாவலப்பட்டி, கல்முனை போன்ற இடங்களில் மட்டும் இந்த நிகழ்ச்சிகள் அதிகமாக இருந்தன. 'வீரகேசரி' அலுவலகம் தாக்கப்பட்டது. ஸ்ரீயோடு நிற்காமல் விளம் பரப் பலகைகளிலும் உள்ள தமிழ்ப் பெயர்கள் அழிக்கப் பட்டன.

**நெருக்கடி நிலை**

பல தமிழ்க் குருமார்களையும் இந்து, இசுலாமிய. கிறித்துவ தொழிலாளர்களையும் உயிருடன் எண்ணெய் ஊற்றிக்கொளுத்தினர். காட்டுத் தீபோலப் பரவிய இந்தக் கலவரங்களை உடனே தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை. அழிவுகள் நேரட்டும் என்று ஆசைப் படுகிற பிரதமர் அக்கறையோடு எப்படி நடவடிக்கை எடுத்து விடுவார்? எல்லாம் முடிந்த பிறகு வேண்டு மென்றேகாலந்தாழ்த்தி நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார் பிரதமர்!

ஏவி விட்ட காரியம் முடிந்து போன பிறகு ஆளோடு ஆளாக வந்து நின்று நீலிக்கண்ணீர் விடும் போலிக் கும்பலைப் போல அந்தக் கொடுங்கோலன் நடந்து கொண்டான். அதனால் தானோ என்னவோ ஒரு புத்த பிட்சுவினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டு அந்தக் கொடுங்கோலன் அலறிவீழ்ந்தான் போலும்! இதில் ஒரு

வேடிக்கை என்ன வென்றால் இந்தக் கலவரத்தில் யாழ்ப்பாணத் தமிழர் கடைகளாகப் பார்த்துப் பார்த்து நொறுக்கினார்கள். இந்தியத் தமிழருக்கு ஏதும் நிகழவில்லை. விடுதலை அடைந்து பத்து ஆண்டுகளுக்குப்பின் பெரிய அளவில் இலங்கையில் நடந்த முதல் இனக்கலவரம் இதுதான். இலங்கையின் முன்னைய வரலாறுகள் எல்லாம் சிங்கள அரசுக்கும், தமிழ் அரசுக்கும் இடையில் நடந்த போர்களைப் பற்றித் தான் பேசுகின்றன.

**முதல் போர் :**

1958-இல் தான் ஓரின மக்கள் மற்றோர் இன மக்களைத் தாக்கும் முதல் போர் தொடங்கியது என அனைத்துலக நீதிமான்கள் குழுகருதுகிறது. (The 1958 conflict was the first in which individuals of one ethnic group attacked members of the other group - Report of the International commission of Jurists)

இதன் விளைவாக 25,000 தமிழ் அகதிகள் சிங்களப் பகுதிகளிலிருந்து வடக்கில் உள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களும் தரை வழியாக வருவ தற்குப் பாதுகாப்பு இல்லாததால் கடல் வழியாக வந்து சேரவேண்டிய நிலை.

இனி, காவல் துறையினரே கட்டவிழ்த்து விட்ட வன்முறையின் முதல் கட்டத்தைப் பார்க்கலாம். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி எனும் சட்டத்தை எதிர்த்தும், அதையொட்டி ஏற்பட்ட சிங்களத் திணிப்பினை எதிர்த்தும் (1965 இந்தித் திணிப்பு எதிர்ப்பு உங்கள் நினைவுக்கு வரக் கூடும்) தமிழ்த் தலைவர்கள் 'காந்திய' முறையில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசு அலுவலகங் களின்முன் சத்தியாக்கிரகம் செய்தனர். (Civil disobedience Campaign) போலீசும், இராணுவமும் வன்முறைத் தாக்குதலில் இறங்கித் தமிழ்த் தலைவர்களை மிருகத் தனமாகத் தாக்கியும் நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்தும் 57 நாட்களுக்குப் பின் போராட்டத்தை முறி யடித்தனர்.

**ஓநாய்களுக்கு இரத்த வாடை**

இலங்கையின் காவல்துறை இப்போது தமிழர்களைக் கவனிக்கத்(?) தொடங்கிவிட்டது. ஓநாய்களுக்கு இரத்த வாடை காட்டி விட்டது அரசு. இனி அரசு ஏவா விட்டாலும் பசி எடுத்த போதெல்லாம் யார் கழுத்தை-யாவது நெரிப்பது தானே ஓநாய்களுக்கு வேலை. இந்தக் கதை தொடர்ந்தது. 1956—1964 வரை சிறீலங்கா சுதந்தரக் கட்சி ஆட்சியிலிருந்தது. முதலில் பண்டார நாயகாவும் அவர் கொல்லப்பட்ட பின் அவர் மனைவி சிரிமாவோவும் பிரதமராக இருந்தனர். 1964இல் சிரிமா-வோ — சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது. 1965 — 1970 வரை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி இருந்தது. இது தமிழர்களின் கட்சியாகிய தமிழரசுக்கட்சியின் ஆதரவு டன் ஆட்சிக்கு வந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. 1965-இல் டட்லிசேனநாயகாவும், செல்வ நாயகமும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இது பற்றி முந்தைய கட்டுரையிலேயே குறிப்பிட்டுள்ளேன். 1965- 66 வாக்கில் சிங்கள வெறியர்கள் எழுப்பிய எதிர்ப்புக் காரணமாக ஒப்பந்தம் பயனற்றுப் போனது. இந்த வேளையிலும் சிங்களர்கள் தமிழர்களை அங்கும் இங்குமாகத் தாக்கிச் சேதப்படுத்தினர்.

**பயங்கர வாதம்**

1970 இல் சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்டு கட்சி கூட்டு டன் சிறீலங்கா சுதந்தரக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இனி, பயங்கர வாதத்தால் ஏற்பட்ட கலவரம் என்பது 1971 ஆம் ஆண்டில் வருகிறது. இதில் வேடிக்கை என்ன என்றால் இந்த எழுச்சி சிங்கள இளைஞர்களால் உருவாக்கப்பட்டது. இன்றைய தமிழ் இளைஞர்கள் பயங்கர வாதப் போக்கில் ஈடுபடுவதாகவும் அதிகாரிகளைக் கொல்வதாகவும் கூறும் அனைவரும் சிங்கள இளைஞர்கள் இலங்கை நாட்டில் செய்த செயல் களை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும். சிங்கள

இளைஞர்கள் 92 போலீஸ் நிலையங்களைத் தாக்கினர். 36 போலீசாரும் 26 இராணுவ வீரர்களும் கொல்லப் பட்டனர். வழிப்பறிகளாலும் பாங்கிக் கொள்ளைகளா-லும் இந்த இளைஞர்கள் தங்கள் செலவுக்கான நிதியை, ஏற்படுத்திக் கொண்டனர். இதனாலும் நாட்டில் அமளி ஏற்பட்டது என்றாலும் இதில் தமிழர்க்குப் பங்கோ பாதிப்போ இல்லையென்பதையும் குறிப்பிட வேண்டும்.

## தமிழர் கூட்டணி தோற்றம்

1972 மே 14 இல் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (CWC — எஸ். தொண்டமான் கட்சி) ஆகியவை இணைந்து தமிழர் கூட்டணி தோன்றியது. 1972 மே 22-இல் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. தமிழ் ஈழப்பகுதி முழுவதும் கடை அடைப்பு-களும், கண்டனங்களும் எழுந்தன. 1956-இல் தொடங்கி 1972 வரை சிங்கள – தமிழ்இனப்பகை தோன்றி வளர்ந்து பெரிதாகி விட்டது. இவ்வளவு நடந்தும் தமிழ் இளைஞர் கள் கொதிப் படையவில்லை. தமிழர் கூட்டணி இலங்கை அரசிலிருந்து பிரிந்து தமிழ் ஈழ விடுதலை காண வேண்டும் என்று எண்ணவோ செயற்படவோ இல்லை.

## அடக்குமுறை

தமிழர்கள் தங்கள் கல்விக்கும், வேலை வாய்ப்புக்கும் வாழ்வுக்கும் போதுமான வாய்ப்புகளை அரசுகொடுத்து விடாதா என்றே ஏங்கிக்கிடந்தனர். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று கொக்கரித்த இலங்கை அரசு, தமிழ் மொழியும் தக்கவாறு பயன்படுத்தப்படும் என்று ஒப்புக்கு உறுதிமொழி கொடுத்த அரசு, தமிழர்கள் தங்கள் மொழியின் பெருமையைப் பேச முற்பட்ட போது பயங்-கர அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

# 4. உலகத் தமிழ் மாநாடும் ஒன்பது உயிர்களும்

தமிழர்கள் உலகமெல்லாம் பரவிக்கிடக்கிறார்கள். எனவே உலகத்தமிழரை ஒருங்கிணைக்கவும், கலை, பண்பாட்டு, அறிவியல் புதுமைகளையும், உறவுகளையும் பரிமாறிக்கொள்ளவும், இறுக்கமும், நெருக்கமும் கொள்ளவும் உலகத்தமிழ் மாநாடுகள் தொடங்கப்பட்டன. இதற்கு வித்திட்டவரும், கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியவருமான வண. தனிநாயக அடிகள் யர்ழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

1966-இல் கோலாலம்பூரில் தமிழ் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கருத்தரங்காக முதல் மாநாடு நடந்தது. மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தொடங்கி வைத்தார். தமிழக முதல்வர் திரு. பக்தவச்சலம் முதலியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர். மலேசியச் சூழல் இதற்கு மதிப்பு அளித்துச் சிறப்பித்தது. இரண்டாம் மாநாடு 1968இல் சென்னையில் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் தொடங்கி வைக்க, தமிழக அரசே அறிஞர் அண்ணா தலைமையில் முன்னின்று நடத்த மாநாடு ஆராய்ச்சிக் கருத்தரங்காகவும் பொதுமக்களும் பார்த்து, கேட்டுமகிழும் பொது அரங்காகவும் நடந்தது, தமிழகத்தில்இப்படி நடத்துவதில் தொல்லையும் இல்லை. தவறும் இல்லை.

இந்திய அரசு நமக்கு ஒத்துழைப்பதிலும் எந்தக் குறையும் நேரவில்லை அடுத்து 1970இல்மூன்றாம் மாநாடு பாரீசு நகரில் நடைபெற்றது, அந்த நகரில் எத்தனையோ நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று எனும்படி அடக்கமாக அமைதியாக இந்த மாநாடு நடந்தது. அந்நேரத் தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். நான்காம் மாநாடு இலங்கையில் நடைபெறுவதாக ஏற்பாடானது. 1974 சனவரி மாதம்

மாநாடு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் மாநாடு என்ற பேச்சுத் தொடங்கிய காலத்தில் இருந்தே பல்வேறுவகையான கருத்து வேறுபாடுகளும், தடை-களும், குழப்பங்களும் நிலவி வந்தன. இப்போதைய கட்டுரைக்கு அவற்றைப் பற்றிய விரிவு தேவையில்லை, எனினும் ஏற்பட்ட பின் விளைவுகளுக்குக் காரணமாக அமைந்த சூழலை ஓரளவாவது பார்க்க வேண்டும். மாநாட்டைக் கொழும்பில் நடத்த வற்புறுத்தியது அரசு, தமிழர்களை அப்போதுதான் கட்டுக்குள் வைத்திருக்க-லாம் என்பது அவர்கள் நோக்கம். மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்பது தமிழர்கள் விருப்-பம், அரசு சார்ந்த சில தமிழர்கள் குழப்பம் செய்தனர், பதவி எதிர்பார்த்த சில தமிழறிஞர்கள் ஒதுங்கி நின்-றனர்-எனினும் இறுதியாக யாழ்ப்பாணமே என்று முடிவாயிற்று. அடுத்து பிரதமர் சிரிமாவோவை அழைப்-பதா-வேண்டாமா என்றவாதம். சிங்களமே ஆட்சி மொழி என்றும் சட்டம் கொண்டு வந்து அதைக் கடு-மையாகச் செயல்படுத்தி, தமிழுக்கு நன்மை செய்வதாகப் பாசாங்கு செய்து, 1964 - இல் பல இலட்சம் தமிழர்களை இந்தியாவிற்குள் அனுப்ப ஒப்பந்தம் செய்த பிரதமரை அழைக்க விரும்பவில்லை.

குமார சூரியர் எனும் தமிழ் அமைச்சர் இருந்தார். அவரையாவது அழைக்கலாமா என்றால்நியமன அமைச்சராக-தமிழர்களின் நம்பிக்கையைப்பெறாதவராக இருந்த அவரையும் அழைக்க விரும்பவில்லை. இந்நிலையில் அரசு ஒத்துழைப்பு மாநாட்டுக்கு இல்லை. யாழ்ப்பாணம் மாநகராட்சி முரண்டு பிடித்தது. அதிகாரிகள் ஒத்-துழைக்க மறுத்தனர்.

அதை விட முக்கியம் மாநாட்டுக்கென்று முன் கூட்டியே விமானத்தில் வந்திறங்கிய வெளிநாட்டுக்காரர்கள் 2,3பேர் உட்புகல் அனுமதி (விசா) மறுக்கப்பட்டு வந்த விமானத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டனர். இலங்கை

வானொலி வாயை இறுக்க மூடிக்கொண்டிருந்தது. இலண்டன் பி.பி.சி. இதை விரிவாக எடுத்துச் சொல்லி உலகின் கவனத்தை ஈர்த்தது. பிறகு சிறீலங்கா சுதந்தரக் கட்சி உறுப்பினராக இருந்தவரும், தமிழ் மாநாடு நடத்துவதில் தீவிரம் காட்டி உழைத்தவருமான ஒருவர் பிரதமரைச் சந்தித்த பின் சில நிபந்தனைகளுடன் மாநாடு அனுமதிக்கப்பட்டது. மாநாட்டில் அரசியல் கலக்கக்கூடாது என்பது தான் முக்கிய நிபந்தனை. பிரதமர் போன்றவர்கள் வாராததால் தமிழ்க் கூட்டணித் தலைவர்கள் எங்கும் மேடையில் ஏறக்கூடாது என்ற நிலை. அது மட்டுமல்ல-தமிழகமுதல்வர் திரு.மு. கருணாநிதியும் அழைக்கப்படவில்லை. வெளிநாட்டி-லிருந்து வரும் அறிஞர்கள் மட்டுமே பங்கு பெறும் மாநாடாக அதுநிகழ்ந்தது. மாநகராட்சிமேயர் அடித்த குட்டிக் கரணங்கள், இன்னும் சில அதிகாரிகள் மறைமுகமாகத் தந்த தொல்லைகள் எல்லாம் கடந்து மாநாடு 3-1-74 முதல் 9-1-74 வரை சிறப்பாக நடந்தது. மாநாட்டு அமைப்பாளர்கள் வெற்றியடைந்தனர்.

10-1-74 இல் மாநாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்குப் பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப் பட்டது. இதில் 50000 தமிழர்கள் கலந்து கொண்டனர். வெளிநாட்டில் இருந்து வந்த தமிழறிஞர்கள் சிலர் பேசப் போகிறார்கள் என்ற வதந்தியே இவ்-வளவு கூட்டத்துக்குக் காரணம். இலங்கை அரசு அதி-காரிகள் இதற்கு அனுமதி வழங்கினாலும் தமிழ் இளைஞர் தலைவர் டாக்டர் இரா.சனார்த்தனம் மேடையில் பேசக் கூடாது என்பது அரசின் நிபந்தனை. அவர் இலங்கையில் பல இடங்களில் இளைஞர் கூட்டங்களில் பேசியிருந்ததும் அரசின் ஆத்திரத்தை வளர்த்திருந்தது. கடைசியில் அவர் பேசவில்லை. அனுமதிக்கப் படவேஇல்லை. சில இளைஞர்கள் வற்புறுத்தியும் அமைப்பாளர்கள் அரசின் நிபந்தனையின்படியே செய்தனர். காவல் துறையும் பார்த்துக்

கொண்டுதான் இருந்தது. இந்த அளவோடு கூட்டம் ஒழுங்காகவே நடந்திருக்கும். இவ்வளவு கூட்டத்தைக் களங்கப்படுத்த எண்ணியதால் தவறான செய்திகளைப் போலீஸ் மா அதிபருக்குத் தெரிவித்ததை அவர் உறுதிப் படுத்திக் கொள்ளாமல் தன் போலீஸ் படையை ஏவி விட்டவகையில் குழப்பம் உருவானது.

அன்று கூடிய கூட்டமும் அவ்வளவுபெரிது;
போலீசாரின் ஆட்டமோ இன்னும் பெரிது;

கூட்டத்தவரின் ஓட்டமோ மிகவும் பரிதாபத்திற்குரியது.

துப்பாக்கி வெடித்தது. குண்டுகள் சீறிப்பாய்ந்தன. தெருவோரத்தில் உள்ள மின்சாரக் கம்பங்களை இணைக்கும் மின்கம்பிகளில் குண்டுகள் பட்டன. கம்பிகள் அறுந்து விழுந்தும். தொங்கிய நிலையிலும் காணப்பட்டன. கீழே குழாய்க் கம்பிவேலி, அவை இரும்புக் கம்பிகள்; அவற்றின் மீது அறுந்த மின்கம்பிகள் விழுந்தன- வேலியாக இருந்த இரும்புக் குழாய்களைத் தொட்டுக்கொண்டு மக்கள் கூட்டமாக இருந்தனர். அவர்களை மின்சாரம் தாக்கியது; உடலெங்கும் விறுவிறுப்பு; உயிர் காக்கும் பதைபதைப்பு! ஓராயிரம் வேல்கள் ஒரே நேரத்தில் உடலில் பாய்ச்சப்பட்டது போல குத்தல் குடைசல்; நமைச்சல்;எதிர்பாராத தாக்குதலால் பலர் தூக்கியெறியப்பட்டனர். இப்படித் தூக்கி எறியப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின் உயிர் பிழைத்த பத்திநாதர் நேரில் கண்ட நிகழ்ச்சிகளைக் கூறினார்.

**மின்சாரத் தாக்குதல்**

“மின்கம்பிகளை நோக்கி ஒருபோலீஸ்காரர்சுட்டார். ஐந்து அல்லது ஆறு முறை சுட்டார். சுட்ட உடனேயே எரிசுருள் கம்பி ஒன்று என் மீது விழுந்தது. மின்சாரம் தாக்கியதை உணர்ந்தேன். அதிர்ச்சியுற்றுத் துடிதுடித்து ஏசுவையும், மேரியையும் இறைஞ்சினேன். ஏனைய பலர் மீது மின்கம்பிச் சுருள்கள் வீழக்கண்டேன்.

தூக்கியெறியப்பட்டது போல உணர்ந்தேன். சில மாத்திரி (மீட்டர்) தொலைவில் விழுந்து நினைவிழந்து

கொண்டிருந்தேன். போலீஸ் காரர் ஒருவர் தன் சப்பாத்துக்காலினால்என்னை உதைத்தது தெரிந்தது. தொடந்து நான் நினைவிழந்தேன்".

இந்த மின் தாக்குதலாலும் போலீசாரின் பின் தாக்குதலாலும் கீழ்க்கண்ட ஏழு பேரும் உயிரிழந்தனர்.

1. வேலுப்பிள்ளை கேசவராஜ்
2. வைத்தியநாதன் யோகநாதன்
3. சின்னத்தம்பி நந்தகுமார்
4. சின்னத்துரை பொன்னுத்துரை
5. சிதம்பர ஆறுமுகம்
6. இராசதுரை சிவானந்தன்
7. பரஞ்சோதி சரவணபவன்.

போலீசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசினர்.மேடையிலிருந்தபேராசிரியர் வித்தியானந்தனும் மயங்கி விழுந்து விட்டார். போலீசாரோ தமிழ்ப் பேச்சுக் கேட்க வந்த தமிழர்களைக் குண்டாந்தடிகளால் தாக்கினர்; சப்பாத்துக்கால்களால் உதைத்துப் பந்தாடினர்.


## நிர்வாணமாக ஓட்டம்

கூட்டத்தில் அமளி; அல்லோலகல்லோலம்; அடுக்கி வைக்கப்பட்டிருந்த மிதிவண்டிகளுக்கு ஊடே 56 வயதான முருகேசு சின்னையா குப்புற விழுந்தார்.

அவர் மீது பலர் ஏறி ஓடினர். சின்னையாவும் தத்தளித்துத் தடுமாறி நொண்டி, நொண்டி கண்ணீர்ப்புகை இல்லாத தூரத்துக்கு வந்தார். இரத்தம் பெருகி வேட்டி நனைந்திருந்தது. இரத்தத்தைத் துடைத்து விட்டு நிமிர்ந்தார். ஆடை எதுவுமின்றி ஒருவர் அம்மணமாக ஓடிவருவதைக் கண்டு நெகிழ்ந்து சட்டையைக்கழற்றி அவருக்குக் கொடுத்தார்.

## பெண்களின் ஆடைகளை உரிந்த போலீசார்

போலீசார் பெண்களின் ஆடைகளை உரிந்தனர். பெண்கள் மானம் காக்கவேண்டி, உள்ளாடைகளுடன் தலைவிரி கோலமாகத் தெருவிலும் சந்து பொந்துகளிலும் ஓடினர்.



உயிர் விட்டுத் தமிழ் வளர்த்த
ஒன்பது செல்வங்கள் !

யாழ்ப்பாண வரலாற்றில் இதுபோன்ற மோசமான நிகழச்சி இதுவரை நடந்ததில்லை என்று முதியவர்கள் கருதினார்கள். தமிழர் கூட்டம் போலீசாரால் வேண்டுமென்றே கலைக்கப் பட்டது. அன்று இரவு முழுவதும் மக்களெல்லாம் வெவ்வேறு பகுதிகளில் ஒளிந்து கிடந்தனர். நிகழ்ச்சி முடிந்த அடுத்தநாள் நிகழ்ச்சிநடந்த வீரசிங்கம் மண்டபத்தின் இருபுறத்திலும் ஆயிரத்துக்கு மேற்பட்டமிதிவண்டிகள் நொறுங்கிக்கிடந்தன. ஆயிரக் கணக்கான செருப்புகள். சப்பாத்துகள், கைப்பைகள் இங்குமங்குமாகக் கிடந்தன. இந்தச் சூழ்நிலையில் நெஞ்சுவலி கண்டு 60 வயதான சிங்க மரிங்கம் உயிர்துறந்தார். மற்றொருவரின் உடல் அகழிக்குள் இருந்து எடுக்கப்பட்டது. அவர் தேவரத்தினம் எனும் 27 வயது இளைஞர். இந்த ஒன்பது பேரின்பிண ஊர்வலங்களும் அவரவர் ஊர்களில் அழுகையும். கண்ணீருமாக நடந்தன.

ஏழுநாள் தமிழுக்குவிழவு-எட்டாம் நாள் தமிழனுக்கு இழவு எனும்படி உலகத்தமிழ் மாநாடு முடிந்தது. காவல் துறையின் கட்டுப்பாடற்ற வன்முறைக்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு.

''1974இல் உலகத் தமிழ் மாநாட்டின் கடைசி நாளில் போலீசார் நடந்து கொண்ட விதத்தால் 9பேர் உயிரிழந்த நிகழ்ச்சி தமிழ்இளைஞர்கள் மத்தியில் கடும் கோபத்தையும் கசப்பான உணர்வுகளையும் எழுப்பியது''

(The high handed action of the police on the final day, when nine lives were lost, has left bitter memories among the tamil youth) என்று, SRILANKAN Movement for Inter — Racial Justice andEquality (MIRJE) எனும் அமைப்பு அறிவித்தது.

**நீதி விசாரணைக்கு மறுப்பு**

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த நிகழ்ச்சி தொடர்பாக நீதி விசாரணை வேண்டும் என்று வலியுறுத்

தப்பட்டும் சிரிமாவோவின் ஆட்சி நீதிவிசாரணைக்காக ஒரு குழுவை நியமிக்க மறுத்து விட்டது. அரசே போலீ சாருக்குப் பின்பலமாக இருந்து கொண்டு பழிவாங்கும் நடவடிக்கைகளைப் பாராட்டிப் பதவி உயர்வு அளித்தது. மரண விசாரணை செய்த நீதிபதி தந்த சில செய்திகள் தான் போலீசாரின் அட்டூழியங்களை வெளி உலகுக்குக் காட்டின. தமிழ் மக்களே தக்க ஒரு சிலரைக் குழுவாக அமைத்து நீதி விசாரணை செய்தனர். அவர்கள் தந்த அறிக்கையில் உள்ள செய்திகள் போலீசாரின் அத்து மீறல்களைத் தெளிவாகக் காட்டுவன.

அவை :-

"மிகப்பெரிய தமிழ்க்கூட்டத்தைக் கலைக்க எடுத்த முடிவு — விளைவைப் பற்றிச் சிந்திக்காமல் முரட்டுத்தனமாகச் செய்யப்பட்டதென்று கருதுகிறோம். கூட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட அனுமதியில் கண்டு உள்ள கட்டுப்பாட்டை மீறியதாக அமைப்பாளர்கள் மீது பிறகு வழக்குத் தொடர்ந்து இருக்கலாம்.

**போலீசாரே குற்றவாளிகள்**

நிராயுதபாணிகளான மக்களின் மீது அன்று இரவு எந்த விதத்திலும் அவசியமற்ற பலாத்காரத்தைப்பிரயோகித்ததற்காகப் போலீசாரே குற்றவாளியாகின்றனர். பொதுத்துறையைச் சார்ந்த போலீசார் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் சாமர்த்தியமாக நடந்து கொள்ளவேண்டிய கடமையில் அவர்கள் பின் தங்கியவர்களாக இருப்பதையிட்டு நாங்கள் கவலை கொள்ளுகின்றோம்."

அதுமட்டுமின்றி போலீசார் தங்கள் ஆயுதபலத்தோடு நகரைச் சுற்றி அலைந்து, கண்டவர்களையெல்லாம், தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்களையெல்லாம் திடீரென்று தாக்கி இருக்கின்றனர். தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காகப் பஸ் நிலையத்தில் காத்து நின்ற மக்களின் மேல் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

**''முட்டாள்களே வேனுக்குள் ஏறுங்கள்''**

பத்து அல்லது பதினைந்து போலீஸ்காரார்கள் ஒரு டிரக் பின் தொடர, குறுந்தடி. துப்பாக்கி, கேடயங் களோடு போய் யாழ்ப்பாணப் பிரதான வீதியில் ஒரு வரது மோட்டார் சைக்கிளைச் சேதப்படுத்தினர். ஒரு சவ அடக்க நிலையக் கண்ணாடி சன்னல்களை உடைத் தனர். தெருவிலிருந்த அலங்கார விளக்குகளையும், தெரு விளக்குகளையும் சேதப்படுத்தினர். இதைக் கண்ட ஓர் அதிகாரி, ''முட்டாள்களே வேனுக்குள் ஏறுங்கள்'' என்று உத்தர விட்ட பிறகும் போலீசார் கட்டுப்படவில்லை.

'தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'!

என்று பாடும் போது நெஞ்செல்லாம் பூரிக்கிறது, ஆனால் யாழ்ப்பாணத் தமிழர் அந்த அமுதத் தமிழை ஆர அமர இருந்து கேட்கக் கூட இலங்கை நாட்டில் உரிமையில்லையே! இரண்டாயிரம் ஆண்டுகளாக அங்கு நிலை பெற்ற தமிழினம் தங்கள் மொழிப் பெருமையை விளக்க ஒரு மாநாடு நடத்தினால் அதில் எவ்வளவு உயிரிழப்பு; எவ்வளவு பொருட்சேதம்!

**தாயகத் தமிழர்களே !**

தமிழுக்கு உயிரைக் கொடுப்போம் என்று முழங்-கும் தாயகத் தமிழர்களே! ஒன்பது பேர் உயிரை விட்-டார்களே ! இது நடந்து ஒன்பது ஆண்டுகளாகி விட் டனவே! நாம் என்ன செய்கிறோம்? என்ன கிழித்து விட்டோம்? வெளி நாட்டில் — இலங்கையில் தமிழர் படுகிற அவதிகளைத் தடுக்க நம்மால் முடியவில்லை. ஆனால் இந்த அவதியும், உயிரிழப்பும் 1974—ஆம் ஆண்-டோடு முடிந்து விட்டதா? இல்லையே! 1977-இல் இன்-னும் பெரிதாகி அல்லவா வெடித்தது!

# 5. 77இல் நடந்த இனப்படுகொலைகள்

**1974** உலகத் தமிழ் மாநாட்டில் 9 பேர் உயிரிழந்த நிகழ்ச்சிக்குப் பின் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத் தக்க திருப்பங்கள் சில நிகழ்ந்தன. 1977 கலவரத்துக்கு முன் அவற்றை ஒருபார்வை பார்த்துக்கொள்வது நல்லது.

சிறிமாவோ ஆட்சி, சிங்கள வெறியர்களை முன்னி-றுத்தித் தமிழர்களை ஒடுக்கிய ஆட்சி — தமிழர்களை வெளியேற்றிய ஆட்சி அவரது ஆட்சிக் காலத்தில் 1976இல் புத்தளம் எனும் இடத்தில் மிகப்பெரிய சிங்கள-முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன். சிறிமாவோ ஆட்சி பவுத்தர்களைத்தவிர வேறு எந்த மதத்தினரையும் இலங்கையில் இருந்தே ஒழித்து விடுவது என்று கொண்ட கொள்கையின் வெளிப்பாடு இந்தக் கலவரம்.




இசுலாமிய மதவழிபாட்டுக்காகப் புத்தளம் பள்ளிவாசலில் கூடிய தமிழர்களின்மீது போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி 7பேரைப் பலி கொண்டனர். அதையொட்டி வெளிப் பகுதிகளில் சிங்கள வெறியர்களின் தாக்குதலில் 7பேர் உயிரிழந்தனர்.

1976–ஆம் ஆண்டு வாக்கில் தான் தமிழர் ஐக்கிய முன்னணி இதுவரை தமிழர்களுக்கான உரிமைகளைக் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய், தொடர்ந்து சாவுகளை யும், மீள முடியாத வேதனைகளையும் சந்தித்து விட்டு முதன் முதலாக, தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணி (Tulf - Tamil United Liberation Front) என்று பெயர் பெற்றது. இது தந்தை செல்வா எனும் தமிழ்ப் பெரியார் காலத்திலேயே தொடங்கப் பெற்றது.

எதிர்பாராத வகையில் தமிழர் வாழ்வில் ஒருபேரிடி வந்தது. அது 1977இல் தந்தை செல்வா மறைந்ததாகும். 3-6-1977 இல் தந்தை செல்வாவின் சாம்பல் திருமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது ஏற்பட்ட மோதலே சிங்கள-தமிழ்க் கலவரமாகியது.

இந்நிலையில் 21–7-1977 இல் பொதுத்தேர்தல் நடந்தது. இதுவரை ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்தரக் கட்சி-சிரிமாவோ கட்சி–படுமோசமாகத்தோற்றது மட்டுமின்றி 8 இடத்தை மட்டுமே பெற்றதால் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும் இழந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ விடுதலையைத் தேர்தல் கோரிக்கையாக வைத்துப்போட்டியிட்டு 18 இடங்களைக் கைப்பற்றியது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் ஈழ விடுதலைக்கு ஒப்புதல் அளித்தன. செயவர்த்தனேயின் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது.

இந்தப் பின்னணியை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் முடிந்து ஒரே மாதந்தான் - இனக்கலவரம் வெடித்தது 1958க்குப்பின் மிகப் பெரிய இனக்கலவரம் 1977இல் நடந்தது தான்.(1983 இனிமேல்தானே வருகிறது) இனத்துவேசம் வெகுவாகக் கிளப்பப்பட்டு வன்முறை நாலெங்கும் தலைதூக்கியது.தோற்றுப்போன சிரிமாவோ கட்சியிலிருந்த வெறியர்களுக்கு ஆத்திரம் தோன்றி விட்டது. வெற்றி பெற்ற ஐக்கியதேசியக் கட்சியைக் கலங்க அடிக்க வேண்டும் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும்

# 5. 77இல் நடந்த இனப்படுகொலைகள்

**1974** உலகத் தமிழ் மாநாட்டில் 9 பேர் உயிரிழந்த நிகழ்ச்சிக்குப் பின் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத் தக்க திருப்பங்கள் சில நிகழ்ந்தன. 1977 கலவரத்துக்கு முன் அவற்றை ஒருபார்வை பார்த்துக்கொள்வது நல்லது.

சிரிமாவோ ஆட்சி, சிங்கள வெறியர்களை முன்னிறுத்தித் தமிழர்களை ஒடுக்கிய ஆட்சி — தமிழர்களை வெளியேற்றிய ஆட்சி அவரது ஆட்சிக் காலத்தில் 1976இல் புத்தளம் எனும் இடத்தில் மிகப்பெரிய சிங்கள-முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன். சிரிமாவோ ஆட்சி பவுத்தர்களைத்தவிர வேறு எந்த மதத்தினரையும் இலங்கையில் இருந்தே ஒழித்து விடுவது என்று கொண்ட கொள்கையின் வெளிப்பாடு இந்தக் கலவரம்.




இசுலாமிய மதவழிபாட்டுக்காகப் புத்தளம் பள்ளிவாசலில் கூடிய தமிழர்களின்மீது போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி 7பேரைப் பலி கொண்டனர். அதையொட்டி வெளிப் பகுதிகளில் சிங்கள வெறியர்களின் தாக்குதலில் 7பேர் உயிரிழந்தனர்.

1976–ஆம் ஆண்டு வாக்கில் தான் தமிழர் ஐக்கிய முன்னணி இதுவரை தமிழர்களுக்கான உரிமைகளைக் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய், தொடர்ந்து சாவுகளை யும், மீள முடியாத வேதனைகளையும் சந்தித்து விட்டு முதன் முதலாக, தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணி (Tulf - Tamil United Liberation Front) என்று பெயர் பெற்றது. இது தந்தை செல்வா எனும் தமிழ்ப் பெரியார் காலத்திலேயே தொடங்கப் பெற்றது.

எதிர்பாராத வகையில் தமிழர் வாழ்வில் ஒருபேரிடி வந்தது. அது 1977இல் தந்தை செல்வா மறைந்ததாகும். 3-6-1977 இல் தந்தை செல்வாவின் சாம்பல் திருமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது ஏற்பட்ட மோதலே சிங்கள-தமிழ்க் கலவரமாகியது.

இந்நிலையில் 21-7-1977 இல் பொதுத்தேர்தல் நடந்தது. இதுவரை ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்தரக் கட்சி-சிரிமாவோ கட்சி–படுமோசமாகத்தோற்றது மட்டுமின்றி 8 இடத்தை மட்டுமே பெற்றதால் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும் இழந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ விடுதலையைத் தேர்தல் கோரிக்கையாக வைத்துப்போட்டியிட்டு 18 இடங்களைக் கைப்பற்றியது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் ஈழ விடுதலைக்கு ஒப்புதல் அளித்தன. செயவர்த்தனேயின் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது.

இந்தப் பின்னணியை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் முடிந்து ஒரே மாதந்தான் - இனக்கலவரம் வெடித்தது 1958க்குப்பின் மிகப் பெரிய இனக்கலவரம் 1977இல் நடந்தது தான். (1983 இனிமேல்தானே வருகிறது) இனத்துவேசம் வெகுவாகக் கிளப்பப்பட்டு வன்முறை நாடெங்கும் தலைதூக்கியது. தோற்றுப்போன சிரிமாவோ கட்சியிலிருந்த வெறியர்களுக்கு ஆத்திரம் தோன்றி விட்டது. வெற்றி பெற்ற ஐக்கியதேசியக் கட்சியைக் கலங்க அடிக்க வேண்டும் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும்

பறித்து அந்த இடத்தில் அமர்ந்த தமிழர் கட்சிக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும். ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிக அளவில் வாக்களித்த தமிழர்களுக்குத் தங்கள் கோபத்தை உணர்த்த வேண்டும்.

இது தான் இனக்கலவரத்துக்கு அடிப்படையாக இருந்தது. நல்ல பாம்பு கடித்தால் என்ன, சாரைப் பாம்பு கடித்தால் என்ன — கடி வாங்கியவன், மண்டையைப் போட வேண்டியவன் தமிழன் தானே! சிங்கள வெறியன் சிரிமாவோவுக்கு வேண்டியவனாக இருந்தால் என்ன — செயவர்த்தனேவுக்கு வேண்டியவனாக இருந்தால் என்ன — இழப்பும், துயரும் தமிழனுக்குத் தானே?

செயவர்த்தனே ஆணவத்தோடு பேசியபேச்சும், சிங்கள வெறியர்களைக் கிளப்பி விட்டது. ஆனால் தமிழர் தலைவர் பேசிய பேச்சும், தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கையும் தான் சிங்களர்களை உசுப்பி விட்டன என்று செயவர்த்தனே கலவரத்தைத் திசை திருப்பினார். இந்தக் கலவரத்தில் ஏற்பட்ட கொலைகள், கத்திக் குத்துகள், கற்பழிப்புகள், இந்துக் கோவில் இடிக்கப்பட்டது ஆகியவற்றை அரசு அமைத்தசன்சோனி (Sansoni குழு பட்டியலிட்டுக் காட்டி உள்ளது.

போலீசார் அத்து மீறல்கள் இதில் அதிகமாகவே இருந்தன. 1974 உலகத் தமிழ்மாநாட்டில் போலீசார் வரம்பின்றி நடந்ததை விசாரிப்பதற்குக் கூட ஒரு குழுவை நியமிக்க அரசு மறுத்துவிட்டது. இதனால் போலீசாருக்குக் குளிர்விட்டுப் போய்விட்டது. ஏன் சிரிமாவோ ஒரு குழு அமைக்கவில்லை என்பதைப் பின்னர் பேசுவோம், 1976-இல் வங்கி ஊழியர் பரராசா போலீசார் சுட்டதால் இறந்தார். மரண விசாரணை செய்த நீதிபதி தொடர்புடைய போலீசாரை நீக்கி வைக்க உத்தரவிட்டார். ஆனால் அரசு அவர்களை விடுதலை செய்தது. போலீசாருக்குத் தெம்பு கூடிவிட்டது. அரசே மறைமுக ஊக்கம் தரும் போது ஆட வேண்டியது தானே?

இந்த இனக் கலவரத்தில் 300 பேர்வரை உயிரிழந்தனர். 10.000 பேருக்கு மேல் காயமடைந்தும், கால், கை இழந்தும் அரை குறையாயினா். சொத்துகளை இழந்து பாதிக்கப்பட்டோர் 80,000 தமிழர்கள் என்று மதிப்பிடப் பட்டது. தமிழ் மக்கள் இழந்த சொத்துகளின் மதிப்பு 70 கோடி வரையில் இருக்கும்.

இனி; கலவரத்துக்கு உள்ளே புகுந்து நிகழ்ச்சிகளை அலசுவோம்! சிவில் உடையில் இருந்த போலீசார் கண்டக்டர் யேசுதாசனைப் பிடரியில் அடித்து. மயக்கமடைந்த பின் ஒருகுளத்தில் தூக்கிவீசினர். யாழ நகரின், புதிய சந்தை உலக நாகரிகப் பொருள்களின் கிடங்கு என்பார்கள். அங்கிருந்த பாய்க் கடையில் போலீசார் வைத்த தீ தான் இலங்கை எங்கணும் இனக்கலவரம் நடப்பதற்கு ஏற்றி வைத்த முதல் தீ. ஆகஸ்டு 15,1977 இரவு 1-40 மணி (நம் இந்தியா சுதந்தரக் கொண்டாட்டம் போட்ட அதே நாளில் இலங்கையில், யாழ்ப்பாணத்தில் தீவைப்புத் திருப்பணி தொடங்கியது) கையில்கம்பித் தடிகளுடன் வந்த அந்தக் குண்டர்கள் பாய்க்கடைக்கு நெருப்பு வைத்தால் சந்தை அழியும் என்ற சிநதையோடு செயலாற்றினர். இன்னும் பல கடைகள் கொளுத்தப்பட்டன.

சோமசுந்தரப் புலவர், திருவள்ளுவர், அவ்வையார் சிலைகள் அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தப்பட்டன. ஒரு முதியோரை அடித்து அவரின் கையை ஈவிரக்கமின்றி உடைத்திருந்தார்கள். தள்ளாடும் அந்தப் பெரியவரைத் தாக்கஎந்தக் கல் நெஞ்சக்காரனுக்கும் மனம் வராது. காவலர்கள் என்று பெயர் வைத்திருந்தும மக்களைக் காக்கா விட்டாலும் குற்றமில்லை - தாக்காமலாவது இருக்கலாமே என நாம் கருதுகின்றோம். ஆனால் அவர்கள் காவலர்கள் அல்ல, காக்கி உடையில் இருந்த சிங்களக் கயவர்கள்

இனவெறி பிடித்து ரவுடிகள் என்பதை நினைவில் கொள்கிறோம்.

குண்டாந்தடிகளோடு அவர்கள் நிற்கவில்லை. துப்பாக்கிகளையும் தூக்கிப் பிடித்தனர். நல்லூர் வடக்கைச் சேர்ந்த பாக்கியராசா சுடப்பட்டார். இரண்டு நாள் கழித்துத்தான் உறவினர்கள் பிணக்கிடங்கில் அவரது உடலைப் பார்த்துக் கதற முடிந்தது. போலீஸ் டிரக்கில் வந்த போலீசார் சுட்டதால் வண்ணார்பண்ணை ஆனந்தவேல் கொல்லப்பட்டார். போலீசார் தாக்குதலால் வெருண்டோடிய முதியவர் அந்தோணி பிள்ளை என்பவர் வீதியில் விழுந்து உருண்டார். அதன்பின் அவர் எழவில்லை.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிகள் இந்த அளவோடு ஓய்ந்திருககும். ஆனால் தென்னிலங்கையில் உள்ள சிங்கள வெறியர்கள் மிகத் தவறான வதந்திகளைக் கிளப்பி விட்டு இனக் கலவரத்தை வெடிக்க வைத்தனர். ஆகஸ்டு 17 நள்ளிரவில் அனுராதபுரம் புகைவண்டி நிலையத்தில் கொழும்பு — யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்—கொழும்பு, கொழும்பு - தலைமன்னார் விரைவு வண்டிகள் மூன்றும் சந்திக்கும் நேரம். கையில் போத்தல்கள், தடிகளுடன் குண்டர்கள் பலர் கத்திக் கொண்டே ஓடிவந்தனர்.

'தெமளு அப்பிட்ட காவா' (தமிழன் எங்களை அடித்து விட்டான்) யாபானே தெமளு அப்பிட்டகாவா' (யாழப்பாணத் தமிழன் அடித்துவிட்டான்) என்ற கூச்சலோடு ஒரு கும்பல் ஓடிவந்து, வெறியோடு தாக்கியது வண்டியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் ஆண்கள் பெண்கள், குழந்தைகள் அனைவரும் அலறினர். இரத்தம் சொட்டச் சொட்ட ஆண்கள் அடிவாங்க, தாலிகொடியிலிருந்து தாங்கள் அணிந்திருந்த நகை அனைத்தையும் பெண்கள் கழற்றிக் கொடுக்க, சிலர் பெட்டியை எடுத்

தும் எடுக்காமலும் விழுந்தடித்து இறங்கி இருளில், ஓடி மறைய போலீசார் வந்து துரத்தியும் கலவரம ஓயாத நிலையில் அனுராதபுரம் அல்லோலகல்லோலப்பட்டது.

பிறகு இலங்கை முழுவதும் கலவரம் பரவியது. தமிழர் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன, கண்ணில் பட்ட தமிழர்கள் அனைவரும் காடையர்களால் தாக்கப்பட்டனர், உயிரிழந்தோர் காடுகளில் ஓடி ஒளிந்தோர் அதிகம். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆண்கள் சுடப்பட்டும் வெட்டப்பட்டும் வீழ்ந்தனர். வன்செயல்கள் உச்சமடைந்ததால் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

திரிகோண மலையில் 22 - 8 – 77, 23 - 8 – 77 ஆகிய இரண்டு நாட்களிலும் 19 தமிழர் பிணங்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டன. அதுமட்டு மின்றி 28.8.77 இல் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்த பசுபதி இராசதுரை.மார்க்கண்டு, சித்திரவேலு ஆகிய இளைஞர்கள் வீட்டுக்குவரும் வழியில்சம்பளத்தையும் பறிகொடுத்து உயிரையும் பறிகொடுத்தனர். கண்டக்டர் கணபதிப் பிள்ளை சீவரத்தனம்குத்திக் கொலை செய்யப்பட்டு வீதி ஓரத்தில் கிடந்தார். இப்படியாகக் கலவரங்கள் பலர் உயிரையும். உடமையையும் காலி செய்து கொண்டிருந்தன.

## 6. செயவர்த்தனேயின் ஒப்புதலும் உறுமலும்

பிரதமர் செயவர்த்தனே கலவரம் எதையும் கட்டுப் படுத்த முடியவில்லை என அலறினார். (அவர் இப்போது தான் அலறுகிறார் என்றில்லை. 77இல் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே இந்த அலறல் தான்)

பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சிலிருந்து சில பகுதிகளைப் பார்ப்போம். அவர்—
பிரதமர் பேசுகிறார்.

"பொல்லாங்கு விளைவிக்கக் கூடிய எந்தவொரு சூழ்நிலையையும் கொள்ளையடிப்பதற்கும். கொலை செய்வதற்கும் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளும் தீயோர் ஒருசிலர் உளர். இத்தகைய போக்கானது இந்த நாட்டில் கடந்த அண்மைக் காலங்களில் வளர்ந்து கொண்டு வந்திருப்பது போலத் தோன்றுகிறது. இதை நாம் உறுதியாகத் தடுத்து நிறுத்தாவிடில் எவ்வகையிலும் முன்னேற்றம் காண்பது எமக்கு கஷ்டமாக இருக்குமென நான் கருதுகிறேன்'. (தடுத்து நிறுத்திய இலட்சணம் தெரிகிறதா? இந்த நிலையில் இன்னும் 6 ஆண்டுகள் இவர் குப்பை கொட்ட வேண்டும்)

அவரே பாராளுமன்றத்தில் சில புள்ளி விவரங்களைத் தருகிறார்:—

" மாத்தளையில் தமிழர் ஒருவரின் மதுபானக்கடையொன்றும் தமிழ்க் கடையொன்றும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அனுராத புரத்தில் பட்டினப்பகுதியில் ஏறத்தாழ 100 தமிழர் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. தமிழர் மூவர் கொலை செய்யப்பட்டு உள்ளனர். கெக்கிராவையில் 3 கடைகளும், நொச்சியாகமவில் 10 கடைகளும் எரிக்கப்பட்டிருக்கின்றன. குளியாப்பிட்டியில் 5 தமிழ்க்கடைகள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. மகோவில் 18 தமிழ்க் கடைகளும் 5 முஸ்லீம் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. கல்க முவவில் தமிழ்த் திரைப்பட மாளிகையொன்று தீயிடப்பட்டுள்ளது. மீரிகமவில் 7 தமிழ்க் கடைகள். பாணந்துறையில் 17 தமிழ்க் கடைகள் கொள்ளை யடிக்கப்பட்டன''.

(பிரதமர் தந்த புள்ளி விவரத்தில் நானே பலவற்றை விட்டிருக்கிறேன் கட்டுரை நீளுமே என்றஞ்சி)

பிரதமர் தொடர்ந்து பேசுகிறார்;

''எனவே நாம் வெளியிடும் இவ்விவரங்கள் எவ்வகை-யிலும் மகிழ்ச்சி தருவன அல்ல. அப்பாவி மக்கள் கொல்-லப் பட்டு வருகின்றனர். அவர்களின் சொத்துகள கொள்ளையடிக்கப் படுகின்றன என்பது எம் எல்லோருக்-கும் துன்பம் தருகின்றது. இவ்விவரங்களில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டன வெல்லாம் தமிழ் மக்களது கடைகள் என்பதையும் காயமடைந்தவர்கள் எல்லாம் தமிழ்மக்கள் என்பதையும் நீங்கள் காண்கிறீர்கள். இவர் களில் ஒருவர் முஸ்லிம் ஆவார் என நான் நினைக்கி றேன். ஆயினும் மற்றைய எல்லோரும் தமிழ் மக்களாக வே இருந்திருக்கின்றனர்''.

பிரதமர் இப்படித் தெளிவுபடுத்தினார். தமிழர்கள் தாக்கப்பட்டனர் என்பதைப் பகிரங்கரமாக ஒப்புக் கொண்டார் ஆனால் தமிழர்களைப் பாதுகாக்கவும் கலவரங்கள் நடக்காமல் தடுக்கவும், வன்முறையில் ஈடு படுபவர்களை ஒடுக்கவும் எந்த நடவடிக்கையும் அன்றும் எடுக்கவில்லை – இன்றும் எடுக்கவில்லை என்பதைத்தான் 83–கலவரம் காட்டுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் வன்முறையை எழுப்பும் விதத்தில் பேசினார் என்றும் பிரதமர் குற்றம் சாட்டி-னார். பிறகுதான் செயவர்த்தனே தான் ஒரு சிங்களன் என்பதைக் காட்டினார்.

'நீங்கள் சண்டையிட விரும்பினால் நாங்களும் சண்டையிடத்தயார். சமாதானம்மே' என்றால் சமா தானமே. போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம், என்று உறுமினார். தான் பேசுவது தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாக, சிங்களர்-களுக்கு மேலும் தூண்டுதலாக அமையும்படியே அவர் பேசினார். அவரது பேச்சு மூன்று மொழிகளிலும் ஒலி பரப்பப்பட்ட அதேவேளையில் நகரங்கள் கிராமங்கள்

எங்கும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். பதினைந்து நாட்கள் தொடர்ந்து கலவரம் நடந்தது. செயவர்த்தனே யின் ஆணவப் பேச்சு தமிழ் மக்களின் அழிவுக்கு வித்திட்டது.

(இந்த முறையும் அப்படித்தானே)

இதன் விளைவாக 800 தமிழர்கள் அனுராதபுரத்திலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனர். தென்னிலங்கையிலிருந்து மேலும் 1200 பேர் அகதிகளாக வட பகுதிக்கு வந்தனர். கண்டியில் 3500 தமிழர்கள் அகதி முகாம்களில் தள்ளப்பட்டனர். கொழும்பிலிருந்து 1900 அகதிகள் மூன்று கப்பல்களில் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தனர்.

## திட்டமிட்ட சதி

இந்தக் கலவரம் சிங்களப் போலீசாரும், சிங்களக் காடையரும் சேர்ந்து திட்டமிட்ட சதியின் விளைவே ஆகும். வவுனியாவில் பொறியியல் பிரிவில் உதவி மேற்பார்வையாளராகப் பணியாற்றியவர் மங்களேசுவரன் என்பவர். அவருடைய கிராமம் வவுனியா அருகில் உள்ள கூலாங்குளம். அதற்குப் பக்கத்து ஊர் கொக்குவெளி. இதில் சிங்களர் அதிகம். இவரிடம் நீண்ட காலம் வேலை செய்த இரு சிங்களர்கள் ஒரு நாள் இரவில் இவரைச் சந்தித்துக் கூறிய செய்தி இதோ:-

இன்று மாலை 4-30 மணிக்கு வவுனியா போலீசார் எமது கிராமத்திற்கு (கொககுவெளி) வந்து பல இளம் வாலிபர்களை அழைத்து நாம் இன்று இரவு வவுனியா நகரத்தில் உள்ள கடை, வீடு எல்லாம் எரித்து உடைத்து கொள்ளையடித்துத் தமழர்களை விரட்டப் போகிறோம். நீங்களும் உங்கள பக்கததுக் கிராமங்களைக் கொள்ளையடிதது வீடுகளை எரிததுத் தமிழர்களை விரட்டுங்கோ என்று கூறி விட்டுச் சென்றார்கள்.

ஆகவே நீங்கள் தயவுசெய்து இங்கு இருக்காதீர்கள்''

இவ்வாறாக அவர்கள் இரகசியமாகத் தெரிவித்தனர். மங்களேசுவரனும் தன் குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டு போய் விட்டு விட்டு ஊர் திரும்பினார். துப்பாக்கியோடு தற்காப்புடன் இருந்தார். அவர் எதிர் பார்த்தபடியே அன்று இரவு கொள்ளை தீவைப்பு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. இவைவிட அங்கு தமிழர்களுக்கு எதிரானசதிக்கு வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

**கலவரத்தின் காரணங்கள்**

இந்த இனக்கலவரத்துக்கும் போலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கும் பலகாரணங்கள் உள்ளன. அவை தமிழர் பிரச்சனை என்ன என்பதை,தெளிவாகக் காட்டக் கூடியவை.

1. ஐக்கியதேசியக்கட்சியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள் தமிழர்கள். அதனால் அவர்களை ஒழிக்க சிறீலங்கா சுதந்தரக் கட்சி வெறியர்கள் எண்ணினர். கண்டி பாராளுமன்ற உறுப்பினர் (M.P.) சேனநாயகா ''கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த தமிழர்களின் வீடுகளும்கடைகளுமே உடைக்கப்பட்டுள்ளன. தேர்தலில் தோல்வி கண்ட சுதந்தரக்கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இங்கு குழப்பம் புரிந்ததற்கு என்னிடம் படமூலமான ஆதாரம் உள்ளது. இதனால் என் தொகுதியில் 6ஆயிரம் தமிழர்கள் பாதிக்கப் பட்டார்கள்'' என்று குறிப்பிட்டார். 'இது இனக்கலவரம் என்ற போர்வையில் நடந்த அரசியல் சதி' என்று அரசு அறிக்கை விட்டது.

**சிறீலங்கா கட்சியின் தோல்வியும் வெறுப்பும்**

2. செயவர்த்தனே அரசே சிறீலங்கா கட்சியைச் சேர்ந்த சிலரைக் கைது செய்து விசாரித்தது. தோல்வியைச் சகித்துக் கொள்ள முடியாத சிறீலங்கா கட்சி-

யின் ஒரு பிரிவினரே நாட்டைப் பற்றிக் கவலைப் படாமல் கலவரத்துக்குத் தூபமிட்டனர்'' என்று செயவர்த்தனே அரசின் பொறுப்பான ஒருவரே அறிக்கை விட்டார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி

3. ஆளுங்கட்சி ஒரேயடியாகக் கவிழ்ந்து எதிர்க் கட்சியாகவும் ஆகமுடியாமல் போன நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) எதிர்க்கட்சியாகவும் 18 பேராகவும் அமர்ந்ததை இன வெறிச் சிங்களர்களால் சகிக்க முடியவில்லை. யாழ்ப் பாணம் போலீஸ் வடிவில் தீ மூட்டடப்பட்டதற்கும், கலவரம் யாழ்ப்பாணப் பகுதியில் தொடங்கியதற்கும் இதுவே காரணம்.

## பொறுப்பற்ற போலிப் போலீசார்

4. கலவரங்களை உருவாக்கித் திட்டமிட்டு, ரவுடிகளை ஏவிவிட்டுப் பெருமளவில் நாடு முழுதும் அமளியை உண்டாக்கியவர்கள் சாக்கி உடை அணிந்தும் கடமை. கண்ணியம் உணராமல் சிங்கள வெறியராகவே இயங்கிய போலீசார்தான். இவ்வளவு தூரம் நிலைமை மோசமடைந்ததற்குக் காரணம் யாழ்ப்பாணம் போலீஸ் உயர் அதிகாரிகள் தமது கடமையிலிருந்து முழுமையாகத் தவறி விட்டது தான் என்றும், யாழ்ப்பாணத்தில் முதல் நாள் இரவும். மறுநாளும் நடந்த தீ எரிப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் தான் சொல்லித்தான் போலீஸ் அதிகாரிக்கே தெரியும் என்றும் அமிர்தலிங்கம் பாராளு மன்றத்தில் குறிப்பிட்டார். உயர் போலீஸ் அதிகாரிகள் கண் முன்பாகவே சீருடையில் இருந்த போலீசார் சட்டையில் போலீஸ் இலக்கங்கள் இல்லாமல் செயலாற்றினர். அப்போதுதானே யாரையும் அடையாளம் காட்டமுடியாது என்பது அவர்கள் சூழ்ச்சி. பாராளுமன்ற உறுப்பினர் (M P.) மூன்று பேர் சென்ற காரைப் போலீசார் மறித்துப் திருப்பி அனுப்பியதுடன் ஒரு பேருந்து வண்டியைக்

கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு ஒரு நகைக் கடையை உடைத்து அதில் இருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி பேருந்துகளில் ஏற்றிக்கொண்டு போனார்கள்.

சிங்களர்களை எதிர்த்து எந்தச் சமயத்திலும் தமிழர்கள் தாக்குதல் நடத்தவில்லை, தற்பாதுகாப்புக்காகக் கூடச் செய்யவில்லை,தமிழர்கள் உரிமம் (Licence) பெற்று வைத்து இருந்த துப்பாக்கிகளைக் கூடப் போலீசார் பறிமுதல் செய்து விட்டனர். போலீசார் காவலுக்கு நின்ற நேரத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்திலேயே யாழ்ப்பாணம் 'கோணேஸ்வரா கபேயும் 'பிள்ளையார் ஸ்டோரும்' தீ மூட்டப்பட்டுத் தரை மட்ட மாக்கப்பட்டன, 1983-இல் போலீசாரே முன் நின்று தமிழர்களைவதைத்தார்கள் என்றால் அவர்கள் 1977-ஆம் ஆண்டிலேயே அதற்கு ஒத்திகை பார்த்தார்கள் என்பதை உங்களுக்கு உணர்த்ததான் இவ்வளவு விரிவாக எழுத வேண்டியுள்ளது.

வவுனியாவில் போலீஸ் நிலையத்துக்குஅருகில் இருந்த வர்த்தக நிலையங்கள் பட்டப் பகலில் தீக்கிரையாக்கப் பட்டன.கடந்த ஆண்டு சூன்மாதம் பண்டார வன்னியன் சிலை திறப்பு விழாவில் பேச சபாநாயகர் இராசாராம் நான், டாக்டர் அவ்வை நடராசன், நடிகர் வ்சயகுமார், நடிகை மஞ்சுளா ஆகியோர் சென்றிருந்தபோது 1977ல் பாதிக்கப்பட்ட அந்த இடங்களைப் பார்த்து மனத்துக்குள் வெதும்பியிருக்கிறேன்.இதுபற்றிய மரண விசாரணை செய்த யாழ்மாவட்ட நீதிபதி கே. வி. நவரத்தனம் ''கலவரத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் போலீசார் தான்'' என்று தீர்ப்பளித்தார்

பிரதமர் செயவர்த்தனேயே 1977 ஆம் ஆண்டின் போலீசாரைப் பற்றிப் பாராளுமன்றத்தில் சொன்ன செய்திகளை ஒவ்வொரு தமிழனும் நெஞ்சில் பதித்துக் கொள்ள வேணடும. அப்போது தான் பின்னைய (81,83) கலவரங்களில் அவர்களது பங்கு என்ன என்பது விளங்கும்.

அவர் கூறியதன் சாரம் பின்வருமாறு :—

"போலீஸ் படையில் அரசியல் ரீதியான நியமனங்களே (அதாவது கட்சிக்காரர்களே — அதுவும் சிறீலங்கா சுதந்தரக் கட்சிக்காரர்களே) அதிகம் இடம் பெற்றுள்ளனர். இதனால் அப்படையின் ஒழுக்கம் சீர் கேடடைந்து உள்ளது. போலீஸ் நிலையத்துக்குப் புகார் செய்யச் சென்றவரையே போலீசார் லாக்கப்பில் அடைத்துள்ளனர். போலீசாரின் கட்டு மீறிய செயல்களுக்கு இனவாதம் காரணமல்ல, சிரிமாவோ அம்மையார் அவர்களுக்கு அளித்துள்ள பயிற்சியே அதற்கு அடிப் படையாகும். (செய்திகள் வாசிப்பவர் செயவர்த்தனே) போலீஸ் படையில் அவர்கள் காலத்தில் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரையில் ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோனோர் போலீஸ் படையில் இருந்து கொண்டே சுதந்தரக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்துள்ளனர்.இவர்களே வன்செயலுக்குத் துணையாக நின்றுள்ளனர். இந்த வியாதிக்கு வைத்தியம் கண்டாக வேண்டும். அவர்கள் அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி வைக்கவே நான் விரும்புகிறேன்".

செயவர்த்தனேயா இப்படிப் பேசியவர் என்று நமக்கு வியப்பாக இருக்கும். அன்று சுதந்தரக் கட்சி உறுப்பினர்கள் போலீஸ் வேலை பார்த்தார்களாம். இன்று ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் போலீஸ் வேலை பார்க்கிறார்களா ?

நரி வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? மேலே விழுந்து கடிக்காமல் போனால் நல்லது! சிங்கள நரி—அது சிரிமாவோ நரியாக இருந்தாலும். செயவர்த்தனே நரியாக இருந்தாலும்—தமிழன் இரத்தத்தை, தொடர்ந்து குடித்துக் கொண்டு தானே இருக்கிறது? சிங்கள இதழான 'நம் தேசம்' கூறியசெய்தி இன்னும் பயங்கரமானது. 'சிரிமாவோ ஆட்சிக் காலத்தில்

'போலீஸ் படையில் சேர்க்கப் பட்ட போலீசார் பலர் அடிப்படைத் தகுதி தராதரம் இன்றி நியமிக்கப்பட்ட-தாகவும், 'குற்றவாளிகள் என நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்களும் போலீஸ் வேலைக்குச் சேர்க்கப் பட்ட-வர் என்றும் கூறுகிறது. இவ்வளவு போதாதாவேலி பயிரை மேய்வகற்கு?

**அதிபரின் அசட்டை**

5. தமிழர்கள் தாக்கப்பட்டபோது யாழ் அரசாங்க அதிபர் விசபாலா செய்தி தெரிந்தும் நேரில் வராமலும் தக்கமுறையில் செயலாற்றாமலும் முழங்காவில் எனும் ஊருக்கு முகாம் புறப்பட்டுப் போய் விட்டார். இவரது அசட்டையே மூலகாரணமாக அமைந்தது.

**வதந்திகள்**

6. சிங்களவெறியர்கள் பரப்பியவதந்திகள் மேலும் பலரை வெறி கொள்ளச் செய்தன 'உண்மைக்குப் புறம் பாகத் தீய சக்திகள் பரப்பும் எந்த வதந்தியையும் நமப வேண்டாம்' என்று அரசே அறிக்கை விட்டது. எல்லாம் முடிந்த பிறகு அறிக்கை விட்டு என்ன செய்ய?

7. அகலவத்தை உறுப்பினர் மெரில் காரியவாசம் "துட்ட கமனு (சிங்கள முரட்டுத் தலைவன்) இறந்து விட வில்லை. ஒவ்வொரு சிங்களன் இதயத்திலும் வாழ்கிறான். சிங்கள இளைஞர்கள் இன உணர்ச்சி பெற்றால்துட்டக முனுர்கள் – செயற்படுவார்கள்" என்று பேசிய பேச்சு வெறியை மூட்டி விட்டது. செயவர்த்தனேயின் ஆணவப் பேச்சும் இந்த வெறிக்குக்காரணம்.

இவ்வாறாக 1977 இனக்கலவரங்கள் இரத்தம் தோய்ந்த தன் அடிகளை ஆழப் பதித்து விட்டு ஓய்ந்தன. ஆனால் அவற்றின் ஈரம் இன்னும் காயவில்லை. இன்று வரை காயவில்லை. 1981இல் மேலும் அதற்கு இரத்தம் தேவைப்பட்டது. இனக்கலவரச் சுவடுகள் தமிழ்க்குருதி-யால் நனைக்கப்பட்டன.

## 7. தமிழர்கள் அனுபவித்த பயங்கர சித்திரவதைகள்

**1977** இல் நடந்த பயங்கர இனக்கலவரத்தின் பின் 1979இல் புதிய கலவரங்கள் தோன்றின. தமிழ் இளைஞர் களில் தீவிரவாதியான சிலர் சிங்களப் போலீசாரையும் இராணுவத்தினரையும் தாக்குகிறார்கள் என்று காரணம் சாட்டி யாழ்ப்பாணப்பகுதியில் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தினார் செயவர்த்தனே.

**கொடுமையிலும் கொடுமை**

இந்த நிலையைச் சாக்காக வைத்துக் கொண்டு அங்கு மிங்குமாக நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் விசாரணை என்ற பெய ரில் ஈவிரக்கமற்ற முறையில் மனிதத் தன்மையே இல்லாத வகையில் சித்திரவதைக்கு ஆளாயினர். அனைத் துலகப் பொது மன்னிப்பு நிறுவனம்(Amnesty International Report) இந்தச் சித்திரவதைகள்எப்படி நடந்தன என் பதைக் கீழ்க்கண்டவாறு விரிவாகக் கூறுகிறது.

தலைகீழாகத் தொங்கச் செய்தல் — அப்போது எரி மிளகாய் வெளியிடும் மூச்சுமுட்டக் கூடிய புகை கொண்ட பையில் தலையை வைத்தல் — கடுமையான உதைகள்— விரல்நுனியில் ஊசி ஏற்றுதல் —உடம்பின் நுண்ணுணர்ச் சிப் பகுதியில் மிளகாய்த் தூளையும் கடிக்கும் எறும்பு களையும் வைத்தல் — தூக்கிலிடுவோம் என்று மிரட்டல் —இவை போன்ற சித்திரவதை முறைகளைக் கையாண்ட பிறகு வாக்குமூலங்கள் வலிந்து பெறப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன,"

**7 தமிழ் இளைஞர்கள் கொலை**

இராணுவத்தின் கெடுபிடிகளாலும் சித்திரவதை- களாலும் 7 தமிழ் இளைஞர் கொல்லப்பட்டனர். கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் பிணங்கள் சாலையோ-

ரங்களில் வீசியெறியப்பட்டன. 1—8—1979 இல் சிறீலங்கா சிவில் உரிமை இயக்கம் (civil rights movement of Srilanka) அவசர கால நிலைமை எனும் போர்வையில் நடைபெற்ற சித்திரவதைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.



**துப்பாக்கி முனையால் குத்தித் தமிழனின் இரத்தத்தை ருசிபார்க்கும் இரத்த வெறிபிடித்த சிங்கள இராணுவம்**

**(1979ஆம் ஆண்டு கலவரத்தின் போது எடுக்கப்பட்ட படம்)**

"வடக்கு மாநிலத்தில் கடந்த மாதத்தில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதற்குப் பின்னால், காவல் துறையினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பலர் உயிரிழந்துள்ளனர் எனும் செய்திகளை அறிய எங்கள் சிவில் உரிமை இயக்கம் ஆழந்த கவலை அடைகின்றது. எங்களுக்குக் கிடைத்த நம்பகமான தகவலின்படி இவர்களில் சிலர் சாவதற்கு முன்னால் பயங்கரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கின்றனர்." என்கிறது அந்த அறிக்கை.

**நீதி விசாரணை என்ற பெயரில் ...**

இலங்கையில் உள்ள மனிதாபிமானம் கொண்ட எவரும், எந்த இயக்கமும் இலங்கை அரசின் கொடூரமான நடவடிக்கைகள் குறித்துக் கவலைப்படாமலோ, கண்டிக்காமலோ இல்லை. அரசாங்கம் இதன்பின் அமைத்த விசாரணைக்குழு கூட நடத்தப்பட்ட அட்டூழியங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளது. பயங்கரவாத அடக்குமுறைகளை ஈவிரக்கமின்றிச் செய்வது; பின்னர் அதற்கு எதிர்ப்புகள் கிளம்பும் போது அதற்கொரு நீதி விசாரணைக்குழு அமைப்பது. அவர்கள் தருகின்ற அறிக்கைகளை வெளியிட்டு அந்த அளவோடு பலர் அதை மறந்து விடும்படியான ஒரு சூழலை உருவாக்குவது; தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாகப் பக்குவமாகப் பதவி உயர்வுகள் தந்து கொடுமைகளுக்கு அங்கீகாரமும் தொடர்ந்து அவற்றைச் செய்வதற்காக மறைமுகமான அனுமதியும் ஊக்கமும் வழங்குவது என்ற போக்கில் செயவர்த்தனேயை விஞ்ச இந்த உலகில் எவரும் பிறக்கமுடியாது. அப்படியொரு மெதளிவு! அவர்கள் இழைத்த கொடுமைகள் குறித்து சன்சோனி குழு அறிக்கை (1980) தரும் சிலவற்றைப் பட்டியலிட்டுச் காணலாம்.

**கொலை**

1. காந்தனை எனும் இடத்தில் 4 வயதுக் குழந்தை உட்பட ஒரு குடும்பத்தின் மூன்று உறுப்பினர்கள் கொடூர

மாகக் கொலைசெய்யப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. தந்தையின் கையிலிருந்து குழந்தையைப் பறித்து ஒரு கத்தியால் முதுகில் குத்திப் பிளந்து எரிகின்ற வீட்டில் தூக்கி எறிந்துள்ளனர்.

2. அளவை எனுமிடத்தில் கடந்த இரண்டு தலை முறைகளாக இக்னேசியசு என்பவராலும் அவரது குடும்பத்தாராலும் ஒரு மிகப்பெரிய கடை நடத்தப்பட்டு வந்தது. இந்தத்தாக்குதலினால் அவர் கொல்லப்பட்டார். அடித்து வதைக்கப்பட்டு, உயிருடன் அவர் மீது தேங்காய் எண்ணெய் ஊற்றப்பட்டு, அவர் மீது வைக்கோலைப் போட்டு எரித்துள்ளனர் அந்த இரக்கமற்றவர்கள்.

ஒருவர் இக்னேசியசாக இருந்தாலும், இக்பாலாக இருந்தாலும், இராசசுந்தரமாக இருந்தாலும் சிங்களருக்-குப் பெரும் வேறுபாடு இல்லை. அவர் தமிழரா என்பது தான் முக்கியம் – அப்படியானால் அவரை - ஒரு தமிழரை –ஓர் இந்தியரை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது என்ற உயர் கொள்கையைச் சிங்களர்கள் செயவர்த்தனேயின் தலைமையில் கடைப் பிடித்து வந்துள்ளனர். இந்தியாவில் பிறந்த புத்தரின் சமயம் இலங்கையில் செழித்து வளர்ந்து அந்த இந்தியர்களின் இரத்தத்தையே உறிஞ்சிக் குடிப்பது இருக்கிறதே அது தான் உலக அதிசயம் என்பது! பிறந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களை வதைப்பதில் பெருமை காணும் பவுத்தமே! உன் பெருமையே பெருமை! புத்தம் சரணம் கச்சாமி!

**கற்பழிப்பு**

1. இராமசாமி பிள்ளை என்பவரின் 6 பெண்களும் மதளை எனும் இடத்தில் 30 பேர் கொண்ட ஒரு கும்பலால் கற்பழிக்கப்பட்டனர்.

2. மனோன்மணி (இது எங்களுக்குச் சுந்தரம்பிள்ளை உருவாக்கிக் கொடுத்த நாடக இலக்கியப் பெயர்) எனும் பெண் 8 சிங்களர்களால் கற்பழிக்கப் பட்டாள். அவளது வீடும் சூறையாடப்பட்டது.

3. சன்சோனி குழுவின் முன் 20 முதல் 25 கற்பழிப்பு நிகழ்ச்சிகள் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டன. இதில் பலியானவர்கள் எல்லாம் ஒரு பாவமும் அறியாத தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பத்தினர் என்பதும், இந்தக் கொடுமைகளைச் செய்தவர்கள் பக்கத்-துக் கிராமங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் என்பதும் உண்மை. கொடுமை செய்தவர்கள் அடையாளம் காட்டப் பட்டு, அவர்களது பெயர்களும், முகவரிகளும் குறித்துக் கொடுக்கப்பட்டும் கூடப் போலீசார் அவர்களைக் கைது செய்யவில்லை. இப்படியாகவும் இன்னும் பலவாகவும் நடந்த 1979 நிகழ்ச்சிகளைத் தாண்டி 1981 ஆம் ஆண்டிற்கு வருகிறோம்.

## 8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது

**1981** மே 31 நள்ளிரவு — நாம் யாழ்ப்பாணம் நகருக்குள் நுழைகிறோம்; காணற்கரிய காட்சிகள்: நாகரிகமான ஒருநாட்டில் நடக்குமா? என்று கேட்கக் கூடிய அளவிலான அட்டகாசங்கள்;

"அலைந்து அலைந்து வீணே நீர்
அழிதல் அழகலவே"

என்று வள்ளலார் உலக மனிதர்களைப் பார்த்து, உருகுவது உண்டு.

யாழ்ப்பாணத்தை நினைக்கும் போதெல்லாம்.

"எரிந்து எரிந்து யாழ்நகரே!
எத்தனை நாள் வாழ்வாயோ"

என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

1977—க்குப் பின் மிகப் பெரிய இனக் கலவரமாகப் போலீசாரின் அட்டூழியத்தால் விளைந்ததாக முன்னைய கலவரங்களிலிருந்து மாறுபட்டு, 'தமிழரின் கலாசார அழிவாக' வெடித்தது 1981–ஆம்ஆண்டுக் கலவரம்.

**பின்னணி**

1981 ஜூன் மாதம் நடைபெறவிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் தனது கட்சியை வெற்றி பெற வைப்பதற்காக அவசர கால நிலைமையைப் பிரகடனப் படுத்தி 10 தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்று, அதன் வாயிலாகத் தமிழர்கள் அஞ்சி மிரளும்நிலைமையை உருவாக்கி யாழ்ப்பாணத் தேர்தலை நடத்தினார் ஜெயவர்த்தனே. அதன் விளைவு யாழ்ப்பாண நகரை அழித்தது என்றாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒவ்வோர் இடத்திலும் வெற்றி பெற்று நாடுமுழுவதிலுமாக 8 மாவட்ட அபிவிருத்தி சபைகளைக் கைப்பற்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கலவரத்தின் மோசமான விளைவுகள்**

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடப்பதற்கு முன்னால் கெடுபிடிகள் — இளைஞர்கள் கேள்வி கேட்பாரின்றிக் கைது செய்யப்படுவது — வைத்திருக்கும் இடம் கூடத் தெரியாமல் எங்கோ ஒரு கொட்டடியில் அடைத்துச் சித்திரவதை செய்யப்படுவது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்பது கூட உறவினர்களுக்கும், உரியவர்களுக்கும், சட்ட வல்லுநர்களுக்கும் கூடத் தெரியாமல் இருந்தது—தமிழ மக்களிடையே கடும் வேகத்தை எழுப்பியிருந்தது.

மே 31ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் ஒரு தேர்தல் கூட்டம் நடந்த போது ஏற்பட்ட சிறு தகராறில் ஒரு போலீஸ்காரர் சுடப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்; அவ்வளவுதான். போலீசாரின் அட்டகாசகங்கள் தலைதூக்கின. தலை விரித்து ஆடின.

நாச்சியார் கோவில் பகுதிகள் — கோபுரம் — சிற்பத்தேர் ஆகியவை எரிக்கப்பட்டன. பக்கத்தில் இருந்த வீடுகளில் பயங்கரக் கொள்ளை — தாக்குதல்கள் போலிசாரால், குண்டர்களால் நடத்தப்பட்டன.

"இப்படியும் ஒரு கொடுமை இனியும் நடக்கக் கூடாது ஐயா! எனது இத்தனை வருட வாழ்க்கையில் நான் இந்த அளவு பயங்கர நிகழ்ச்சிகளைக் கண்டதில்லை. எங்கே போவது?'' என்று ஒரு மூதாட்டி கண்ணீர் விட்டு அழுதார்.

**புத்தகக்கடை**

பூபாலசிங்கம் என்பவர் யாழ் நகரில் மூன்று இடங்களில் புத்தகக்கடை வைத்திருந்தார். மூன்று இடங்களிலும் போலீசார் திட்டமிட்டு அவற்றைத் தீக்கிரையாக்கினர். 5இலட்சம் ரூபாய் பெறுமான நூல்கள் அழிக்கப்பட்டன. யாழ்நகர் பேருந்து நிலையக் கடைகள் 1979 ஆம் ஆண்டிலும் எரிக்கப்பட்டன. யாழ் மாநகராட்சி மீண்டும் அவற்றைக் கட்டிக் கொடுத்திருந்தது. 1981மே 31 இல் அவை மீண்டும் எரிக்கப்பட்டன. வைத்திலிங்கம் அன் கம்பெனிக்குச் சொந்தமான தொழிற்சாலை எரிக்கப்பட்டது. ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமான மரங்கள் யாருக்கும் பயனின்றி எரிந்தது மட்டுமின்றி அந்த ஆலை இருந்ததற்கான அடையாளம் கூட இல்லாமல் போய்விட்டது.

## 9. இட்லரை விஞ்சிய செயவர்த்தனே!

1981 ஆம் ஆண்டுக் கலவரத்தில் ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து ஆளையே கடிப்பது போல வெறி கொண்டு கட்டுப்பாடின்றிக் காலித்தனம் செய்த போலீசார் தோதான குண்டர்களையும் கையில் வைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டையே தாக்கி எரித்துச் சிதைத்தனர். எம். பி. யும் அவர் மனைவியும் பின்புற மதில் மீது தாவி ஏறி, ஓடி ஒளிந்து தப்பிக்க நேர்ந்தது. எம். பி, வீட்டின்

முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பும், நண்பர் ஒருவரின் காரும் எரிக்கப்பட்டன. எம். பி. உயிர் தப்பிக்க ஓடிய போது அவர் சாரம் கட்டியிருந்தார். அவர் மனைவி கவுன் அணிந்திருந்தார். இந்தக்கோலத்தில் தான் அவர்கள் தப்பியோட நேர்ந்தது.

சட்டபூர்வமான மக்கள் பிரதிநிதி, சட்டப்பாது காவலர்களிடமிருந்தே தப்பித்து ஓடவேண்டிய அளவுக்கு நிலைமைகள் மோசமாகிவிட்டன. இது பற்றி அவர் பாராளுமன்றத்தில் பேசும் போது ''நான் இங்கு இப்போது நிற்பதே அதிசயம் தான், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவதற்கு இந்த அவைக்கு வாய்ப்பளிக்காமல், பரிதாபமான நிலையில் நிற்கிறேன். என் உடல் தான் எனக்குச் சொந்தம். நான் உடுத்தியுள்ள சட்டையும், வேட்டியும் இன்னொருவருக்குச் சொந்தம். தமிழ்மக்கள் இதிலிருந்து நல்லதொரு பாடம் படித்து விட்டார்கள். நல்லதொரு முடிவுக்கும் வந்து விட்டார்கள்''. என்று குறிப்பிட்டார்.

இவருக்கு நேர்ந்த துன்பம் பற்றிக் கேட்டு அவரது மாமனார் மாரடைப்பால் காலமானார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. அது முற்றிலும் எரியும் வரை ஒரு மணி நேரம் நின்று 40 குண்டர்கள் வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தனர். யாழ் மாநகராட்சி உறுப்பினர் அலோசியஸ் போலீஸ் விசாரணைக் குழுவிடம் இது குறித்துக் குறிப்பிட்டார்.

''அவர்கள் போலீஸ் ஜீப்பிலேயே அங்கு வந்திருந்தனர். அவர்கள் வந்த வாகனம், அணிந்திருந்த உடை ஆகியவற்றைக் கொண்டு, போலீசாரே என்பதைத் திடமாகக் கூறமுடியும்'' என்றார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அமைச்சர் ஒருவரும் பிரதி அமைச்சர்கள் சிலரும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்த போது தான் இவ்வளவு நிகழ்ச்சிகளும்

நடந்திருக்கின்றன. இதுபற்றிச் செயவர்த்தனேவுக்குத் தெரிவிக்கப்பட்டது அவர் பிரிகேடியர்வீரதுங்கா என்பவரைச் சிறப்பு விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார். அப்பாடா உயர் மட்டத்தளபதியே நேரில் வந்து விட்டதால் இனி எல்லாம் கட்டுக்குள் வந்து விடும் என்று தானே நீங்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடப் போகிறீர்கள்! நிறுத்துங்கள். இலங்கை அரசியல் வேறுபாடானது, விவகாரமானது!

வீரதுங்காவே வந்து விட்டார் என்றால் போலீசாரின் அட்டகாசம் இன்னும் விபரீதமாகப்போகிறது - விளைவுகள் மோசமாக இருக்கப் போகின்றன என்றுபொருள்.

**பொது நூலகம்**

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்குப் பாதுகாப்பாகத் தமிழே தெரியாத 400-க்கு மேற்பட்ட போலீசார்தென் இலங்கையிலிருந்து வந்திருந்தனர். அதே போலீசார் தான் யாழப்பாணத்தில் இருந்த பொது நூலகத்திற்குத் தீயிட்டனர்.

தமிழ் மக்களே! இந்தியப்புதல்வர்களே! இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்த போது இட்லரின் விமானப் படை பிரிட்டனின் மீது குண்டுகளை வீசச் சென்றது. அவர்கள் எந்தக்காரணம் கொண்டும் ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழகத்தை மட்டும் குண்டுவீசி அழிக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்தான் சர்வாதிகாரி இட்லர் — இதயமே இல்லாத இட்லர் கூடஅறிவு உலகத்தை அழிக்கக் கூடாது — ஒரு நாட்டின் பண்பாட்டுச் சின்னத்தைப் பாழ்படுத்தக் கூடாது என்று நினைத்தான்.

அதே போல, ஜெர்மனியில் உள்ள ஹைடில்பர்க் பல்கலைக்கழகத்தைமட்டும் விட்டுவிடும் படி பிரிட்டன் தன் விமானப்படையினருக்குச் சொல்லிவைத்தது. இதில் கூட ஒரு போர் அறம் இருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணம் பொதுநூலகம் 97,000 புத்தகங்களை அரிய கையெழுத்துச்

சுவடிகளைக்கொண்ட நூலகம் எரிக்கப்படுகிறது என்றால் செயவர்த்தனேக்கு இதயம் என்று ஏதாவது இருக்கிறதோ? எண்ணிப்பாருங்கள்!

அதிலும் போலீஸ் நிலையத்திலிருந்து 100கச தூரத்தில் தான் இந்த நூலகம் இருந்தது. பாதுகாப்புக்கு வந்திருந்த 400 சிங்களப் போலீசார் தான் இந்தச் சாதனையைச் செய்தவர்கள். அதிலும் தலைமைத் தளபதி வீரதுங்கா யாழ்ப்பாணத்தில் இருக்கும் போதே இப்படியொரு நிகழ்ச்சி.

அடடா! என்னநாடு! என்ன நாகரிகம்? இந்த நிலையில் பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம் தந்த வரிதான் நினைவுக்கு வருகிறது.

**" இந்தக் குப்பை கூளங்களின் தப்புத்தாளங்களை ஒப்புக் கொள்ள வேண்டுமோ?"**

நூலகம் எரிகின்றது என்ற செய்தி கிடைத்ததும் வண தாவிது அடிகள்—சுவாமி ஞானப் பிரகாசரின் மாணவர் ஒப்பியல் அறிஞர் — மாரடைப்பால் உயிரிழந்த காட்சியை மறக்க முடியாது. 97000 புத்தகங்களின் பெறுமதி அவருக்குத்தானே தெரியும்? புத்தி கெட்டவர்களுக்கா தெரியும் ?

**ஈழநாடு பத்திரிகை :**

கொழும்புக்கு வெளியே அச்சிடப்பட்டு வெளி வரும் ஒரே நாளிதழ் 'ஈழ நாடு' 23 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருந்தது. அதன் அச்சுப் பொறிகளுக்குக் கீழே டயர்களைவைத்து எரித்தனர். மிதி வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் அழிக்கப்பட்டன. காட்டுமிராண்டிகளும் கண்டு வெட்கப்படும் செயலில் சிங்களக் காடையர்கள் ஈடு பட்டனர்.

வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வேலிகளைத் தாண்டி, மதில்

மீது ஏறி, வீதியைக் கடந்து பறந்தனர். அவர்கள் ஒளிந்து கொண்டிருந்த குடிசைக் குள்ளிருந்து 'ஈழ நாட்டை'ப் பார்க்கிறார்கள். அந்தக் கொடுமையை எப்படிச் சொல்வது? நினைக்கவே முடியாத ஒன்றை மனிதன் கண்டு பிடித்த வெறும் சொற்களால் எப்படிக் கூறுவது? தமிழ் மகனே! உன் சொத்து—உன் அறிவுக்கு வித்து—எரிந்து கொண்டிருக்கிறது. இயக்குநர் சிவனாந்தனும் ஊழியர் ஒருவரும், தப்பிக்க வழியின்றி அங்கேயே மேல் மாடியில் குளியல் அறையில் ஒளிந்திருந்தனர். சுற்றிலும் நெருப்பு எரிந்ததால் அடுத்த நாள் காலையில் மயங்கிய நிலையில் தீக்காயங்களுடன் காப்பாற்றப் பட்டனர்.

1977-ஆம் ஆண்டில் உடைக்கப்பட்டுப் பின்னர் செப்பனிடப்பட்ட சிலைகள் 81-இல் மீண்டும் நொறுங்கின. வள்ளுவப் பெருமான் தலை பின்புறமாகச்சரிந்து ஒருகையிழந்து நின்றார். அவ்வையார் ஏடுதாங்கிய கையை இழந்து மூக்கறுபட்டுநின்றார் — உண்மை நூல்களே முற்றிலும் அழிந்தபிறகு—இந்தச்சிலை தாங்கிய கலைஏடு போனால் தான் என்ன? மருத்துவமனைக்கு முன் நின்ற மகாத்மாகாந்தி ஒருகாலை இழந்து உருக்குலைந்து நின்றார். எங்கள் தேசப்பிதாவே! ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீபட்ட அடி எங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது! யாழ்ப்பாணத்தில் உன் சிலைக்குச் சிங்களர் தந்த அடி ஈழத்தமிழருக்கு விடுதலைவாங்கிக்கொடுக்குமே! உனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அடியும் ஒன்றின் முடிவாக — மற்றொன்றின் விடிவாகத்தானே இருக்கும்! பார்ப் போம்!

இந்த நிலையில் 2-6-1981இல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது. ஊரடங்குச் சட்டமும் வந்தது. இந்தச் சட்டம், அவசரம் எல்லாம் எந்தச் சிங்களனையும் இம்மியும் பாதிப்பதில்லை. இது பற்றி வெரித்தாஸ் — மணிலா வானொலி கீழ்க்கண்டவாறு செய்தி அறிவித்தது.

''யூனிபாரம் அணியாத போலீஸ்காரர்கள் இரவு நேரங்களில் நகரைச் சூறையாடினர். யாழ்ப்பாணம் நூல்நிலையத்திற்குத் தீயிட்டனர் என்று யு.பி. செய்தி நிறுவனம் கூறுகிறது. போலீஸ்காரர்கள் முகாமைவிட்டு வெளியில் செல்லக்கூடாது என்று அரசு உத்தரவிட்டு இருப்பினும் அந்த உத்தரவு மதிக்கப்படவில்லை. இராணுவ வீரர்கள் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டிருப் பினும் பயனேதும் இல்லை.

இதுதான் இன்றைய நிலை. 1981-ஜூன் 4 ஆம் நாள் தமிழர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அன்று தான் தேர்தல். கைதாகிப் பின்னர் விடுதலையான அ. அமிர்தலிங்கம் செயவர்த்தனேயிடம் பேசிய போது ''அனைத்தும் தவறுதலாக நடந்து விட்டது. உங்களை உடனே விடுதலை செய்யும்படி நான் உத்தர விட்டேன். நடந்தவற்றுக்காக நான் வருந்துகிறேன்'' என்று செய-வர்த்தனே குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சிகளில் தீவிரமாக இருந்தவர்கள் சிரில் மாத்யூ, காமினி திசநாய்க்கா என்ற இரு அமைச்சர்களும் ஆவார்கள். 1983 திருவிளையாடல் களின் சிறப்பு நடிகர்களும் இவர்கள் தான்.

அனைத்துலக நீதிபதிகள் குழு (1981) யாழ்ப்பாணத்-தைப் பார்வையிட்டு இந்த அழிவுகளை எல்லாம் கண்டது. யாழ்ப்பாணத்திற்குப் பிற பகுதிகளில் இருந்து வந்த போலீசாரே கட்டுப்பாடின்றிக் கலகம்செய்தனர் என்பதை அரசே ஒப்புக் கொண்டது என்பதைச் சுட்டிக்காட்டியது இந்தக் குழு. இலங்கையில் உள்ள 'இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம், (MIRJE)' 1981 கலவரம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு ஏற்பாடு செய்து தன் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தது. 'பயங்கர நாட்கள் என்ற பெயரில் தன் அறிக்-கையை வெளியிட்டு எல்லாருக்கும் தந்தது. சனாதிபதி செயவர்த்தனேயிடம் தாங்கள் கண்டதை, உணர்ந்ததை ஒளிவு மறைவின்றி எடுத்து வைத்தது. அவர்கள் தந்த சில செய்திகள் நம் கவனத்துக்கு உரியவை.

அரசின் ஆயுதபலத்தின் முன்னால் யாழ்ப்பாண மக்கள் திகைத்து அனாதரவாக நின்றனர். தன்னுடைய தோட்டத்தில் குருவிகளை ஓட்டுவதற்காகப் பட்டாசு சுட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவரின் மீது பட்டாளம் பாய்ந்து சென்று தாக்கியது. மறுநாள் அவர் மரணமடைந் தார். தம் வீட்டுப்பிள்ளைகள்கைது செய்யப்பட்ட போது பாதிக்கப்பட்ட மக்கள் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்போனால் அவர்கள் தயவு கூடிய வார்த்தைகளில் தங்களுக்கு எதுவுமே தெரியாது எனக் கை விரிக்கின் றனர். டி. ஐ.ஜி.யே கூறுகிறார் தனக்கு இது பற்றி ஒன்று மே தெரியாது என்று. யாழ்ப்பாணத்தில் இம்முறை ஏற் பட்ட அழிவுகள் அந்தப் பிரதேசத்தின் கலாச்சாரத்தை என்றென்றும் அழிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியே யாகும். நூலகம் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட பொழுது போலீசார் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவர் கள் இறக்குமதி செய்யப்பட்ட காடையர்கள் உதவியுடன் அதைத்தாக்கி எரித்துக்கொண்டிருந்தார்கள் என்பது தான் பதில்.

இந்தக் குழு தந்தபுதிய செய்திகளோடு ஒரு முடிவுக்கு வருவோம் யாழ்ப்பாணத் தேர்தலுக்கு முன்பே நூற்றுக் கணக்கான காடையர்கள் குருநாகமலையில் இருந்து பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் ஏற்றி அனுப்பப் பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ரூ.100 வீதம் வழங்கப்பட்டது. தேர்தல் நடை பெறவிருந்த காலை நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மூத்த தேர்தல் அதிகாரி களின் பதவிகள் ரத்துச் செய்யப்பட்டு எஜமானர்களுக்கு விசுவாசமானவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். தேர்தல் தில்லு முல்லுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இவ்வளவு ஏற்பாடுகள் செய்தும் ஜெயவர்த்தனேயின் ஐக்கிய தேசிய கட்சி யாழ் மாவட்டத்தில் ஓர் இடத்திலும் வெற்றி பெற வில்லை. மக்கள் 'படுபயங்கரமான தாக்குதலுக்கும் அழி-வுக்கும் ஆளாகியிருந்தாலும் தேர்தலில் கட்டுப்பாடாக'

முறையாக, துணிச்சலாகக் கடமை யாற்றியிருக்கிறார்கள் என்பதை நினைத்து வியக்காமல் இருக்க முடியாது.

ஆறேழு இலங்கை எதிர்க்கட்சிகள் சேர்ந்து ஓர் அறிக்கை விட்டன. ''இனங்களுக்கு இடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான கோட்பாட்டின் அடிப்படையில் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வுகாணா விட்டால் 31—5—81 முதல் 8—7—81 வரை நடைபெற்ற வெறி-யாட்டங்கள் போன்றவை மீண்டும் நடைபெறமாட்டா என்பதற்கு உத்தரவாதம் இல்லை'' என்று அவர்கள் வலியுறுத்தினர்.

1981-க்குப் பின்னும் அரசியல் தீர்வு காணப்பட-வில்லை; வெறியாட்டங்கள் இன்னும் பெரிதாக இதுவரை நடந்த எல்லாவற்றையும் விடப் பெரிதாக நடந்ததை அடுத்துக் காண்போம்.

## 10. உலகம் கண்டிராத உச்சக்கட்ட இனப் படு கொலை!

**1981** ஆம் ஆண்டில் மே ஜூன் மாதங்களில் இவ்வளவு கலவரங்களும் கண்றாவிகளும் நடந்தும் அதில் தமிழ் மக்கள் உறுதியாக இருப்பதையும், தமிழர் விடு-தலைக் கூட்டணி தமிழ் மக்களை முழுமையாகப் பிரதி நிதிப்படுத்துவதையும் கண்ட பிறகாவது செயவர்த்தனே ஆட்சி கொஞ்சம் அறிவோடு சிந்தித்திருக்க வேண்டும். ஆனால் வெறியை நொடிக்கு நொடி வளர்த்துக் கொண்டு வரும் சிங்களத் தலைமை நெறியை நினைக்-காது. வளர்க்காது; நெறிப்படியும் நடக்காது. தமிழர்க்-குரிய நியாயமான உரிமைகளைப் பற்றி விரிவாக எடுத்-தியம்பியும் வெளிநாடுகளில் ஆதரவு திரட்டியும் வந்த எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கத்தின், மீது ஆளுங்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வந்தனர். அதனையொட்டிச் சில அமைச்சர்கள் நெவில் பெர்னாண்டோ போன்ற உறுப்பினர்கள் பேசிய இன

வெறிப் பேச்சுக்கள் சிங்களர்களை மீண்டும் எழுப்பி விட்டன. அவர்களது பேச்சுக்கள் அச்சிடப்பட்டு இலட்சக் கணக்கில் சிங்கள மக்களிடம் பரப்பப்பட்டன.

**இலங்கையை விட்டுத் தமிழர்களை விரட்ட வேண்டும்:**

கலகத்-தீ-மூண்டது. இந்தக் கலவரத்தில் புதுத்திருப்-பம் வந்தது. இதற்கு முன்னால் ஈழத்தமிழர்களே பெரும் பாலும் தாக்கப்பட்டனர். இம்முறை மலைத்தோட்டங்-களில் வாழும் இந்தியத்தமிழர்கள் கடுமையான தாக்கு தலுக்கு ஆளாயினர். 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் முடிவடைகிறது. அதைப் புதுப்பிக்கக் கூடாது என்பது தமிழர்களின் வேண்டுகோள். மீண்டும் ஒப்பந்த நாளை நீட்டித்துப்பல இலட்சம் தமிழர்களை இலங்கையை விட்டு விரட்ட வேண்டும் அவர்களாக வெளியேறா விட்டால் மிரட்டி-யாவது விரட்ட வேண்டும் என்ற அடிப்படையிலும் இந்தியத் தமிழர்கள் வதைபட்டனர்.

இத் தீ பரவுவதற்குப் பல புத்தபிட்சுகள் உதவி புரிந்-தார்கள். தென்னிலங்கையில் உள்ள காலி நகரில் (பொருத் தமாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள்) 50-க்கும் மேற் பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதிக-மான பாதிப்புக்குள்ளானோர் இசுலாமியத் தமிழர்கள் ஆவார்கள். இந்நிலையில் அவசர நிலைப்பிரகடனமும் ஊரடங்குச் சட்டமும் அமுலுக்கு வந்தன. இதற்கிடை யில் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுக் கடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டனர். மனைவியின் நகையை அடகு வைத்துவிட்டுப் பணத் துடன் வீடு திரும்பிய குணபாலசிங்கம் என்பவரை இராணுவம் வழி மறித்துப் பணத்தையும் பறித்துக் கொண்டு இராணுவ முகாமில் வைத்துச் சித்திரவதையும் செய்தது. கடைசியில் மூளை கலங்கி அவர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குக் கொடுமை கூத்தாடியது.

குட்டிமணி, ஜெகன் போன்றவர்கள் மீது வழக்குகளும், வாதங்களும், கொடுமைகளும், தீர்ப்புகளும் இந்தக் கால கட்டத்தில் மேலோங்கின. தண்ணீர் கேட்ட போது சிறுநீரைக் குடிக்கக்கொடுத்து, ஜெகனின் ஆண் குறியில் செம்புக் கம்பிகளை நுழைத்து உயிர்வதை செய்த காட்சிகளை நினைத்தும் பார்க்க முடியவில்லை.

தமிழ் இளைஞர்கள் மீது கற்பனைக் கெட்டாத சித்திரவதைகள் எல்லாம் பிரயோகிக்கப்பட்டன. (Every Unimaginable torture has been Inflicated to Tamil youth) என்று கொழும்பு நீதி மன்றமும் குறிப்பிட்டது.

**15-11-1982** — க்குப்பின் சிங்கள இராணுவத்தாரால் 6 கத்தோலிக்க மதகுருமார் ஆங்கிலிகன் பாதிரியார் ஒரு வர்மெதடிஸ்ட் பாதிரியார் ஒருவர் எனப்பலர் கைதுசெய்யப்பட்டனர். சிங்கள அடக்கு முறை மத குருமார்களிலிருந்து ஆசிரியர்களாகிய குருமார்களுக்கும் தாவியது. மலைவாழ் தமிழரான பல்கலைக்கழகப் பேராசிரியர் நித்தியானந்தன் அவர் மனைவி நிர்மலா மேலும் இரு டாக்டர்கள் ஆகியோர் சிறைப்படுத்தப்பட்டனர், விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்றும் பாதுகாப்பு அளித்தார்கள் காயம்பட்டு வரும்போது மருத்துவம் பார்த்தார்கள் என்றும் பல குற்றச்சாட்டுகள் அடிப்படையில் இவ்வளவு பேரும் சிறைக்குள் தள்ளப்பட்டனர். ஒரு பெண்மணி சிறைக்குள் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டார் என்ற வரலாற்றைச் சிங்கள செயவர்த்தனே அரசு எழுதத் தொடங்கியது. தமிழர்பகுதிகளில் இந்தக் கைதுகளை அடுத்துப்பல கண்டனங்கள்-கடை அடைப்புகள் எதிர்ப்புக் கூட்டங்கள் எழுந்தன.

வண. சிங்கராயர் போன்றவர்கள் சிறையிலேயே சித்திரவதைக்கு ஆளானார்கள். அவர்களின் வழக்கறிஞர் அவரை சந்தித்தபோது அடிவாங்கிய நிலையில் சரியாக எதையும் நினைவுபடுத்திக் கூடப் பார்க்கமுடியாத மனக்

குழப்ப நிலையில் அவர் காணப்பட்டார். மற்றவர்களை வழக்கறிஞர்கள் சந்திக்கக் கூட அனுமதி மறுக்கப்பட்டது

**கலகம் செய்தது போலீசார் கைதானோர் தமிழர்**

வவுனியா போன்ற இடங்களில் நடந்த அறப் போராட்டத்தில் போலீசார் புகுந்து கலகம் விளைத்துக் கிறித்துவ ஆலயத்தையும் தாக்கினர். ஆனால் இப்படிக் கலகம் விளைவித்ததாகத் தமிழர்கள் 7 பேரைக் கைது செய்து கடுமையான பிரிவுகளின் மீது வழக்கும் தொடர்ந் தனர். MIRJE எனும் நீதி, சமத்துவ இயக்கம் 15—12—82 இல் வவுனியாவில் கிறித்துவ ஆலயத்தில் வழிபாட்டின் போது இராணுவத்தார் புகுந்து தாக்கியதைக்கண்டித்தும் பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் சனாதிபதி செயவர்த்தனேவுக்கு முறையீடு களை அனுப்பியது இதில் கத்தோலிக்கப் பாதிரியார் ஆங்கிலிகன் பாதிரியார். ஒரு புத்தபிக்கு, இசுலாமிய மதகுரு, குடியிருப்புப் பிள்ளையார் கோவில் குருக்கள் ஆகியோர் சேர்ந்து கூட்டாகக் கையொப்பம் இட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. எதற்கும் செயவர்த்தனே அசைந்து கொடுக்கவில்லை.

தந்தை செல்வா அவர்களால் தொடங்கப் பெற்று 35 ஆண்டுகளாக இயங்கிவரும் சுதந்திரன் இதழ தடை செய்யப்பட்டது. இது தடை செய்யப்படுவது மூன்றாவது தடவையாகும்.

இது போன்ற பயங்கர அடக்கு முறைகளும் அட்ட காசங்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட போது தான் தமிழகம் கொதித்து எழுந்தது. இலங்கைத் தமிழர் பிரச் சனையில் தமிழகம ஒருங்கிணைந்து எழுந்தது. தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் முன்மொழிய எதிர்க் கட்சித் தலைவர் வழிமொழிய அனைவரும் முழுமனதாக ஆதரிக்க ஈழத்தமிழர் இன்னல்கண்டு கொதிப்பும் கண்ட னமும் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேறியது முதல்வர் தலைமையில் அனைத்துக் கட்சிக்குழு ஒன்று இந்தியப்

பிரதமரைச் சந்தித்துத் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியது

**உங்கள் கண்முன் நடந்தவை**

1983ஆம்ஆண்டு சூலை மாதம் 23ஆம் நாள் தொடங்கி இன்றுவரை இலங்கையில் நடந்துள்ள கலவரங்கள் உலக வரலாற்றில் தமிழின ஒழிப்பு என்ற புதுக்கதையில் உச்ச கட்டத்தையே காட்டி விட்டன. எந்த மனிதனுக்கும் இப்படியொரு ஈனமான நிலை இந்த உலகில் ஏற்படக் கூடாது.




**தமிழர்கள் ஆட்சி நடத்திய இலங்கைக்கு விசயன் என்பவன் சில முரடர்களுடன் கலிங்கத்தில் இருந்து (பீகார்) வருகிறான். அவனது சந்ததியினர் தான் சிங்களர்கள். இதை இலங்கை அரசே ஒரு தபால் முத்திரை மூலம் வெளியிட்டுள்ளது, அதை இந்தப் படத்தில் காணலாம்.**

**எதிரிக்குக்கூடவரக் கூடாது**

என் எதிரிக்கும் — ஏன் சிங்கள வெறியனுக்கும் கூட இந்த அழிவு வரக்கூடாது. விபத்து நடத்தால் கூடப் பதைபதைக்கும் எங்களுக்கு, விபரீதங்கள் உருவாகும் போதும் அதில் இப்படிக் கண்டதுண்டமாக வெட்டித் தள்ளப்படும் போதும் எப்படி மனம் பொறுக்கும்? ஏற்கனவே தமிழர்களை வெட்டி இறைச்சிக் கடை வைத்திருந்தவர்கள் தான் சிங்களர்கள். இதோ இதுகான் தமிழன் மாமிசம் விற்கும் கடை என்று பலகையே வைத்திருந்தவர்கள் தான். அன்றைக்கு நாம் கொதித்தோம் என்பது உண்மைதான். ஆனால் இன்றைக்குப் புயலில் அகப்பட்டுப் பல ஆடுகள் செத்தபோது இறைச்சிக்கடை கூடவைக்க முடியாமல் ஏகப்பட்ட மாமிசம் குவிந்து போவதைப் பார்த்துத் தவிப்பது போல நிலைமை ஆகி விட்டது.

**நம்கணக்காவது சரியாக இருக்கும்**

ஏறத்தாழ 4000 பேராவது கொல்லப்பட்டிருப்பார்கள் என்பது தான் உண்மை. அரசு கொடுக்கும் கணக்கு அபத்தக்கணக்காக இருக்கும் என்பது தானே நடைமுறை! கலவரப் பகுதிகளைப் பார்க்காமலேயே - பார்க்கும் அனுமதி பெறாமலேயே தான் தப்பி வருவதே பெரும்பாடு என்று இந்தியா வந்து சேர்ந்த அமிர்தலிங்கம் தரும கணக்கும் சரியாக இருக்காது. பாதிக்கப்பட்டு இங்கு ஓடி வந்தவர்களை நேரில் சந்தித்த நம்கணக்சாவது கொஞ்சம் சரியாக இருக்கும்.

இம்முறை இலங்கை முழுவதும் கலவரம் என்றாலும் திரிகோணமலை, மட்டக்களப்பு, நுவரேலியா என்று பல பகுதியில் கலவரங்கள் ஏற்பட்டாலும் கொழும்பு நகரமே முற்றிலும் பாதிக்கப்பட்டது. கொழும்பு நகரமே முற்றாக அழிந்துவிட்டது என்றும் கூறலாம். ஏனென்றால் சனாதிபதி செயவர்த்தனே குடியிருக்கும் கொழும்பு

அல்லவா? அவர் கையை மீறி நடந்த கலவரம் என்று கதை விட்டுக் கொண்டிருக்கிறாரே அந்தக் கொழும்பு அல்லவா?

கொழும்பு நகரம் பாதிக்கப்பட்டவிதம் அதன் அலங்கோலக் காட்சிகள், வரிசைவரிசையாக வருகிற சோகச் செய்திகள், தமிழகத்துக்கு வந்து சேர்வோரின் பரிதாபக் காட்சிகள் ஆகியவை 23-8-83 முதல் நமக்குத் தெளிவாகவே தெரியும். தாள்களைப் புரட்டியும், ஆட்களைப் பேட்டி கண்டும், நாள் கணக்கில் இந்தச் செய்திகளைப் பேசியும் தமிழகமே இந்த இனப்பாதிப்பினை முற்றாக அறிந்திருக்கிறது. எனவே அதே நிகழ்ச்சிகளை மீண்டும் இங்கே படம் பிடிக்காமல் ஓரளவு சுட்டிக் காட்டி விட்டுச் செல்வேன்.

**பண்பை இழந்த சிங்களர்கள்**

குடியிருக்கும் வீட்டில் கொள்ளை — கண் முன்னாலேயே வீடு எரிப்பு — பெற்றோர் முன்னிலையில் மகள் கற்பழிப்பு-குடும்பத்தார் முன்னிலையிலேயே மகன் சுடடுத் தள்ளப்படும் கொடுமை.

தண்ணீர் வேண்டும் என்று கேட்ட இராணுவத்தார்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்துகொடுத்தவர் கொஞ்ச நேரத்தில் தண்ணீர் குடித்த பாவிகளாலேயே சுடப்பட்டுச் சாகும் காட்சி — நன்றியறிதல் எனும் பண்பை இழந்த சிங்களர்கள் என்பதைநாடறியச்செய்யும் நிகழ்ச்சி.

மருத்துவமனையில் காலொடிந்து கையொடிந்து நோய்வாய்ப் பட்டு ப்படுத்துக் கிடக்கும் — பலநாள் படுத்துக் கிடக்கும் நோயாளிகளைக் கூடத் தாக்கியுள்ளனர். சில நோயாளிகள் வெறி கொண்டு வந்த சிங்களர்களின் காலில் விழுந்து கெஞ்சிக்கேட்டு உயிர்ப்பிச்சை வேண்டி நிற்கும்நிலை — வீட்டிலிருந்தாலும் எரிப்பு - வெட்டு குத்து - வெளியில் வந்தால் துப்பாக்கிச் சூடு — தப்பி

யோடி முகாம்களுக்கு வந்தால் அங்கு நடக்கும் கண்றாவி கள் சகிக்க முடியாதவை.



**இரும்பு நெஞ்சினரால் உயிருக்கு மன்றாடும் அரும்புகள்.**



**கொழும்பு நகரில் சூறையாடப்பட்ட தமிழரின் கடை (கடந்த மாதம் நடந்த கலவரத்தின் போது எடுத்தபடம்)**

பல நிலைகளிலும் பாதிக்கப்பட்ட தமிழர்களில் 75000க்கு மேற்பட்டவர்கள் அகதிகள்முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஒரு முகாமில் 12000 பேர் இருந்தால் அங்கு இரண்டு கழிப்பறைகள் இரண்டு தண்ணீர்க்குழாய்கள் - இவ்வளவு பேருக்கும் ஒரு போலீஸ்காரர் - சாலை முனையில் ரோந்து சுற்றும் நான்கைந்து இராணுவத்தினர் — அடடா! முகாம்களில் இவர்களை வைத்திருப்பதைவிட ஒரு வழியாகக் கடலில் தள்ளியிருக்கலாம்.

**அரும்புகள் என்ன செய்யும்?**

ஒவ்வொரு முகாமிலும் ஒவ்வொரு நாளும் 50 முதல் 100 குழந்தைகள் வரை செத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களே தாக்குப்பிடிக்க முடியாத போது அரும்புகள் சாகாமல் என்ன செய்யும்?

'முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து அந்தி பகலாய் நொந்து' பெறப்பட்ட குழந்தைகள் இப்படி அரைகுறை வாழ்வு பெறுவதை எண்ணி அழுவதா? 20 வயது இளைஞன் வளர்ந்து இனிமேல் அவன்தான் குடும்பத் தலைவன் என்று எண்ணி இறுமாந்து கிடக்கும் பெற்றோர்கள் குத்து வெட்டுகளால் தன் மகன குற்றுயிரும் குலையுயிருமாகத் துடித்துக் கிடப்பதைக் கண்டு விழும் நிலையை எண்ணுவதா?

வளர்ந்தாள் மகள்-மலர்ந்தாள் - மணந்தாள் - மணம் பூரிக்க வாழ்வாள் எனும் எதிர்பார்ப்போடு நின்ற இளம் பெண் தம் கண்முன்னாலேயே சிங்களக் காடையர்களால், இராணுவ வெறியர்களால் கற்பழிக்கப்பட்டு மார்பகம் அறுக்கப்பட்டுக் கண்ட துண்டமாக வெட்டபபடுவதைக் கண்ட பெற்றோர்கள் அடைந்த கொடுமையை எண்ணுவதா? இந்தக் கொடுமைகள் எப்படி உருவெடுத்தன?

யாழ்ப்பகுதியில் ஒரு விடுதியில் தங்கியிருந்த மாணவிகளை விசாரணை என்ற பெயரில் நிர்வாணப்படுத்தி, கூந்தலை அறுத்து எரிந்து கொண்டிருக்கும் சிகரெட் நுனிகளால், அவர்களின் மார்பகங்களைச் சுட்டுக் கற்பச்

சூறையாடிப்பின் உயிரையும் போக்கிய இராணுவவீரர்கள் செய்கைகள் அறிந்த மக்களை அழவைத்தன-பொங்கிய இளைஞர்களைச் செயற்பட வைத்தன. இந்த நிலையில் தான் 13 இராணுவ வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**விசா கேட்டு ஒரே நாளில் 1500 மனுக்கள்**

இச்செய்தி நாடெங்கும் பரவியது. இல்லை இல்லை பரப்பப் பட்டது. 13 பேரது உடலையும் அடக்கம் செய்ய, கொழும்பு நகருக்குக் கொண்டு வந்தனர். வரு முன்பே பரவலான அறிவிப்புக் கொடுத்து 10000 சிங்கள வெறியர்கள் திரண்டிருந்தனர். சவ அடக்கத்தின் போது சனாதிபதி செயவர்த்தனேயையும் பேசவிடவில்லை. பிரதமர் பிரேமதாசாவையும் பேச விடவில்லை. (அங்கு ஒருபிரதமர் இருக்கிறார் என்பதே உங்களுக்கு இப்போது தானே தெரிகிறது)? வெறியர் கூட்டம் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டது. தொடக்கம் அதுதான். இனித் தொடர் கதைதான். கொலை செய்யப்பட்டவர்களது பிணங்களைக் கூட எரிக்க விடாமல் அட்டகாசங்கள்; உறவினர்களோ, உரியவர்களோ. அருகில் நின்று கண்ணீர் விடக்கூட அருகதை அற்றுப் போனார்கள். இந்நிலையில் முகாமில் ஓடித் தஞ்சமடைந்தவர்கள் இந்தியாவுக்கு வந்துவிட வேண்டும் என்று துடிக்கிறார்கள். 5 நாட்களில் 2000 பேருக்கு விசா வழங்கப்பட்டுள்ளது. விசா வேண்டி ஒரே நாளில் மட்டும் 1500 விண்ணப்பங்கள் வந்து குவிந்திருக்கின்றன. இவர்களை எப்படியாவது விரட்ட வேண்டும் என்பது தானே சிங்களர்கள் திட்டம். அந்தத் திட்டம் கடுமையாக நடக்கிறது.

இப்போதைய கலவரத்தில் கொழும்பு நகரம் சிதைந்து கிடக்கிறது. அந்தக்காட்சிகளில் பல அனிதா பிரதாப் உதவியால் நம் கண்களில் பட்டன. அடக்கு முறைக்கு ஆளாகித் தந்திரமாக எடுத்தபடங்களே இப்படி என்றால் சுதந்தரமாகப் படம் எடுத்து அனுப்பியிருந்தால்...?

கொழும்பில் 20 பெரிய தொழிற்சாலைகள் நாசமாகி விட்டன. பல இலட்சம் பேர் வேலையிழந்தனர் பல ஆயிரக்கணக்கான சிங்களர்களும் வேலை இழந்து விட்டனர். பல கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற்சாலை அழிந்துபோன பின் அதன் உரிமையாளர் மனம் ஒடிந்து சாவிக்கொத்தையும் சிங்களர்களிடமே கொடுத்துத் தொழிற்சாலையே அழிந்து போனபிறகு அதைத்திறக்க ஒரு சாவிக்கொத்து தேவையில்லை அதையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு வந்தாரே அப்போது அவர் மனநிலை எப்படி இருந்திருக்கும்? ஆதரவற்ற நாதியற்ற தமிழினத்தில் பிறந்ததால் அல்லவா நமக்கு இந்தக்கதி என்றல்லவா நினைத்திருப்பார்? பெல்ஜியம், ஆஸ்திரியா போன்ற சிறுநாடுகளில் பிறந்திருந்தாலாவது யாராவது இந்தக்கொடுமையைத்தட்டிக் கேட்டிருப்பார்கள்-பெரிய நாட்டில், பெருமை பேசியே காலத்தை ஓட்டும் தமிழினத்தில் பிறந்ததால் அல்லவா இந்த இழப்பு?

**பேதைத் தமிழர்கள் பிழைக்க முடியுமா?**

இப்படிப்பட்ட அழிவுகள் நேர்ந்த பிறகு எந்த ஒரு தமிழனாவது இலங்கையில் பெரிய தொழில் செய்யமுன் வருவானா? துணிந்து முதலீடு செய்வானா? அந்தநாட்டு எம்.பி. யே கைலியைக்கட்டிக் கொண்டு ஓடி ஒளியும் போது சாதாரணக் குடிமகன் தெருவில் நடக்க முடியுமா? 5 கோடிக்கு அதிபர்களே தொழிலை இழக்கும் போது பெட்டிக்கடை வைத்திருக்கும் பேதைத் தமிழர்கள் பிழைக்கவா முடியும்?

''சிங்கள இராணுவத்தின் போக்கைக்கண்டு அதிர்ச்சி அடைந்தேன். நலிந்தவர்களுக்காகப் பாடுபடும் என்று பெயர் பெற்றிருந்த இலங்கை அதை இழந்து விட்டது'' என்று மேல்நாட்டுத் தூதரக அதிகாரி ஒருவர் மனம் வெதும்பிக் கூறியிருக்கிறார்.

## நம் கண்ணீரை நிறுத்தி விட்டார்கள்

ஏற்கனவே சிலரைத் தடுப்புக்காவல் சட்டம், பயங்கர வாதத் தடைச் சட்டம் அவசரநிலைப் பிரகடனம் என்ற வரிசையில் கைது செய்து சிறையில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் சித்திரவதை செயயப்பட்டது குறித்துத் தான் நாம் கவலை அடைந்து கொண்டிருந்தோம். உலகெங்கும் உள்ள தமிழர்கள் வெகுவாகக் கவலைப்படுகிறார்களே என்று இலங்கை இராணுவமும், போலீசாரும், சிங்கள வெறியர்களும் நமக்காகச் சிந்தித்து அந்தக் கவலையை ஒரேயடியாகப் போக்கி விட்டார்கள். அந்த வெளிக்கடைச் சிறையில் இருந்த 54 கைதிகளையும் அடித்தே கொன்று நம் கண்ணீரை நிறுத்தி விட்டார்கள். கவலையைப் போக்கி விட்டார்கள்.

'தண்டனைவரட்டும் அனுபவிப்போம்; சாவே தண்டனையாயிருந்தாலும் சிரித்துக் கொண்டே சாவோம். தூக்குக் கயிறா? துணிந்து முத்தமிடுவோம். இப்படி வீரமரணம் எய்துவதே எங்களுக்குப் புகழ் எங்கள் பின்னோர்க்கு ஒரு பெருமிதம் என்று எண்ணியவர்கள் தான் சிறைக் கொட்டடியில் வாழ்ந்தனர்.

ஆனால் என்ன கொடுமை? சட்டத்தின் பிடியிலிருந்து நழுவிச் சிறைச்சாலையின் உயர்ந்த மதில்களுக்கு எந்த மதிப்பும் இல்லையென்பதை நிலைநாட்டி, கொட்டடி, பூட்டு, சங்கிலி, கட்டுக்காவல் என்னும் நிலைகளையெல்லாம் தாண்டி, தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த தமிழ்ப் பெருமக்கள் எல்லாம் சிறைச்சாலையிலேயே அடித்துக் கொல்லப் பட்டிருக்கின்றனர். முதலில் 37 பேர் — அடுத்து 17 பேர் — எந்த நாட்டிலாவது இந்த அக்கிரமம் நடந்தது உண்டா? காலையிலும்; மாலையிலும் ஆங்கில இதழ்களைக் கையில்தாங்கி அனைத்துலக நடவடிக்கைகளை அக்கறையோடு படித்துணரும் அறிஞர் பெருமக்களே! எண்ணிச்சொல்லுங்கள்!

**பலநாள் சித்திரவதைக்குப் பின்**

காந்திய இயக்கத் தலைவர் டாக்டர் இராசசுந்தரம் போன்றோர் உயிரிழந்தனர். 'காந்தியே! (மகாத்மா காந்தியைச் சொல்கிறேன்) உன் பெயரில் இயக்கம் கண்டு தொண்டுச்செய்த தலைவர்களுக்கு உன் போலவே முடிவும் ஒத்திருக்கிறதே என்ன செய்வது?

ஜெகன், குட்டிமணி போன்ற இளைஞர் தலைவர்களும் இந்தச் சிறையில் தான் கொல்லப்பட்டனர். இவர்களும் உடனே செத்து விடவில்லை. கையில் விலங்குகளோடு. பலநாள் சித்திரவதைகளோடு கையில் கிடைத்த மேசை நாற்காலிக் கால்களைப் பிடுங்கி முடிகிற வரை போராடியிருக்கின்றனர். அரைமணிநேரமாவது அந்தப் போராட்டம் நீடித்திருக்கும் ஆனாலும் நிராயுத பாணிகளைக் கொல்லும் நீசத்தனம் மிகுந்தவர்கள் ஆயுதங்களோடு வந்து கொலை செய்திருக்கின்றனர். போலீசாரும் இராணுவமும் கதவுகளைத் திறந்து விட்டு வழி வகை செய்துள்ளனர் குட்டிமணியின் கொலை உலக முக்கியத்துவம் வாய்ந்தது. குட்டிமணி, ஜெகன் இருவரையும் இழுத்து வந்து முழங்காலில் நிறுத்தினார்கள்.

**கண்களைப் பூட்சுகாலில் போட்டு மிதித்தனர்**

குட்டிமணியின் நாக்கைப் பிடித்து இழுத்து ஒரு சிங்கள வெறியன்' அறுத்தெடுத்தான். நாக்கில் இருந்து கொட்டிய இரத்தத்தைக் கையில் பிடித்துக் குடித்தான். 'ஒரு விடுதலைப்புலியின் இரத்தத்தைக்குடித்து விட்டேன்' என்று கொக்கரித்தான். அதுமட்டுமா! குட்டிமணிஜெகன் இருவரது கண்களும் தோண்டப்பட்டன. குட்டிமணியின் கண்களைப் பூட்சுக்காலில் போட்டுத் 'தருக்! தருக்! என்று மிதித்தனர். அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம். இந்தக்கண்களைத்தானே குட்டிமணி கண் தெரியாத தமிழ் இளைஞன் ஒருவனுக்குத் தானம் செய்யச் சொல்லியிருந்தான்; இந்தக் கண்களால்தானே எதிர்காலத் தமிழ் ஈழத்தை எதிரிலிருந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டுச் சூளுரைத்தான்.

ஆனாலும் குட்டிமணி! உன்கண்கள் உலக வரலாற்றின் கண்களுக்குக்காவியங்கள்; இனப்படுகொலைகளில் சிந்தப்பட்ட இரத்தமெல்லாம் சேர்ந்து தேங்கிய குளங்கள். உலகில் ஒரு கடைசித் தமிழன் இருக்கும் வரை அவனைப் பார்த்து ஊக்கமூட்டும் ஒளி உருவங்கள்! கொடுங்கோலன் என்று எவன் முளைத்தாலும் அவனைச் சுட்டெரிக்கும் அனற்பிழம்புகள்.

இத்தகைய உச்சக்கட்டக் கொடுமைகளுடன் இன்னும் ஓராயிரம் பக்கங்களில் தரப்பட வேண்டிய கொலைச் செய்திகள் உள்ளன. எத்தனை சொல்லி என்ன பயன்? கேட்டுக்கேட்டு மயங்குகிறோம் — படித்துப் படித்து வருந்துகிறோம்.

**வேலை வாங்கிக் கொடுத்த அமைச்சருக்கு 24 கத்திக்குத்து**

சிங்கள வெறியர்கள் முன்னாள் அமைச்சர் ஒருவரையும் விடவில்லை. குமாரசூரியர் எனும் அமைச்சரை (அவர் தமிழர்) ஒரு சிங்கள வெறியன் 24 தடவை கத்தியால் குத்தியிருக்கிறான். இவ்வளவுக்கும் அந்த வெறியனின் மகனுக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுத்தவரே இந்த அமைச்சர் தான். அதற்கான நன்றியை 24 கத்திக்குத்துக் காணிக்கையாக அளித்திருக்கிறான் அவன். இந்த அமைச்சர் தான் சிரிமாவோ ஆட்சியில் அமைச்சராக இருந்த தமிழர். தமிழர்களுக்கு எதிராகச் சிரிமாவோ ஆட்சி சதி செய்தும், சமர்புரிந்தும், தலை அறுத்தும் வினைபுரிந்த போதெல்லாம் அருகில் அமர்ந்து ஆலவட்டம் வீசிக்கொண்டு தலையாட்டிக் கொண்டிருந்தவர். சிரிமாவோ ஆட்சியில் தலையாட்டம்; செயவர்த்தனே ஆட்சியில் 24 கத்திக்குத்து.

இப்போது செயவர்த்தனே ஆட்சியில் குமாரசூரியர்கள் மூன்றுபேர்! தொண்டமான் ராஜதுரை தேவநாயகம் எனும் மூன்று அமைச்சர்கள் உள்ளனர். சிங்கள வெறியர்கள் இந்தத் தமிழ அமைச்சர்களுக்கு எதிர்

காலத்தில் என்ன காணிக்கை வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை

**காதுகுத்தலே காட்டிக் கொடுத்தது**

தமிழ்நாட்டு மக்கள் தம் பிள்ளைகளுக்கு எல்லாம் காது குத்தும் பழக்கம் உண்டு. நகையே போடாத ஆண்களுக்கும் காது குத்திவிடுவார்கள். இதை நாலாம் பேருக்குத் தெரியாமல் குத்தமாட்டார்கள்; நாடறிய அதற்கொரு காதணி விழா வேறு! மாமன், மைத்துனன் எல்லாம் நகை செய்து கொண்டு வந்து போட வேண்டும் என்னும் வரவுகள்! மொய்கள்! விருந்துகள்! ஒரு காது குத்தலுக்கே இவ்வளவு பெரிய விழாவா? இதில் என்னைப் போன்ற பேச்சாளர்களின் வாழ்த்துரைகள் வேறு வானைப்பிளக்கும்! காது வளர்க! வாழ்க! என்று வாழ்த்தி முடிப்போம்.

அருமைத்தமிழர்களே! அருமைத்தமிழர்களே! இலங்கை வாழ் தமிழர்கள் உயிர் விட்டதற்கு அடையாளம் காட்டியவை இந்தக் காது குத்தல்கள்தான். காது குத்தியவர்கள் எல்லாம் கச்சிதமாக அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுக் காதை — அல்ல கழுத்தையே இழந்திருக்கிறார்கள். பலியான தமிழர்களின் சார்பில் ஒரு சூளுரைப்போம். ஆண்களுக்காவது காதுகுத்தும் வேலையை அறவே நிறுத்தி வைப்போம்.

இந்நிலையில்தமிழகம்கொதித்தது. வரலாறு காணாத அளவுக்கு ஒரு முடிவான கொதிப்பு. ஆளுங்கட்சியின் கடையடைப்பு — துக்கம் கொண்டாடல், கறுப்புச்சட்டை அணிதல்நிகழ்ச்சி-எதிர்க்கட்சித் தலைவர்கள் எம். எல்.ஏ. பதவிகளை உதறியது — சனார்த்தனத்தின் வேகம் — மதுரை ஆதீனம் உத்திராட்சமாலைகளைக் தூக்கி எறியும் துடிப்பு — நெடுமாறனின் தியாகப்பயணம்—

நடைப்பிணங்களாக

இவ்வளவுக்கும் இடையில் நம் பிரதமர் இந்திரா காந்தி ஒருகோடிரூபாய் உதவ முன்வந்திருக்கிறார். முதல்

வர் எம்.ஜி.ஆர். பல இலட்சக்கணக்கான ரூபாய்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறார். நாம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவப் போகிறோம் என்ற திருப்தியை உருவாக்கி விட்டோம். ஆனால் உதவி அந்த அனாதைகளுக்குப் போய்ச் சேருமா? யாரிடம் கொடுக்கப்போகிறோம்? உதவி செய்ய முயன்ற செஞ்சிலுவைச்சங்கம் விரட்டப்பட்டிருக்கிறது. அப்படியானால் செயவர்த்தனே கையிலேயே கொடுத்து இந்த உதவிகளைச் செய்யப் போகிறோமா? உதவிகள் கட்டாயம் இலங்கையில் பயன்படுத்தப்படும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகப் பகிர்ந்தளிக்கப்படும்! ஆம்! தொழிற்சாலைகள் அழிந்ததால் வேலை இல்லாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கான சிங்களர்களுக்கு மட்டுமே இது பயன்படும். நம் பிரதமரும், தமிழ் மக்களின் முதல்வரும் இப்படித்தான் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு உதவ வேண்டும்! செயவர்த்தனே சனாதிபதியாகவும், அவர் மைத்துனர் இராணுவத் தளபதியாகவும், தம்பி சிறப்புத் தூதுவராகவும் இருந்து ஒரு குடும்பப் பாசத்தோடு தமிழ்மக்களை ஒரேயடியாக அணைத்துக்கொண்டிருக்கும் வேளையில் எந்த ஒரு சிறு உதவியும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போய்ச் சேரவே சேராது என்பதை உறுதியாகக் கூறி விட முடியும்.

சூலை 23 முதல் 20-8-83 வரை ஒரு மாத காலமாக நாமும் கத்துகிறோம்; கதறுகிறோம். கொழும்பு, அமைதியாகி விட்டதாம்; அதுவும் மயான அமைதியில் இருக்கிறதாம் தமிழர்கள் உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையே இல்லாமல் நடைப் பிணங்களாக நலிந்து கொண்டிருக்கிறார்கள்,

**அடுத்த தாக்குதலுக்கு ஒய்வெடுக்கிறார்களோ?**

4000 பேரைக்காவு கொடுத்து, ஓர் இலட்சம் பேரை அகதிகளாக்கி, பல ஆயிரக்கணக்கானபேரை நாட்டை விட்டு நாடு ஓடச்செய்து, விடுதலை வீரர்களையும் சமுதாயத் தொண்டர்களையும் தலையறுத்து முடித்த

இராணுவம்சற்றுஓய்வெடுக்கிறது அவர்கள் அடுத்த தாக்குதலுக்கு முன் அவசரமாக ஓய்வெடுக்கிறார்களோ?

நாம் அடுத்த தாக்குதலுக்கு முன் வற்றிவிட்ட கண்ணீரைஊற வைக்க வேண்டாமா? மீண்டும கண்ணீர் விட வேண்டாமா? தொண்டையில் சோடா ஊற்றி வைத்துக் கொண்டால் தானே மறுபடி கதற முடியும். இப்படியே போனால் இதற்கென்ன முடிவு? என்னதான் முடிவு?

## 11. என்னதான் முடிவு?

முடிவு என்ன என்று கேட்பீர்கள். எப்படியும் ஒரு முடிவுக்கு வந்துதானே தீரவேண்டும். அனிதா பிரதாப் என்ற இளம் பெண் - ஓர் ஆங்கிலப் பத்திரிகையின் சென்னைச் செய்தியாளர். இலங்கைக் கலவரங்கள் நொடிக்கு நொடி கூடிக்கொண்டிருந்தபோது செய்தி சேகரிக்க இவர் துணிச்சலாகக் கொழும்பு சென்றார்.

உணர்ச்சி வசப்படாமல் செய்தி சேகரிக்க வேண்டிய இவரே விக்கி விக்கி அழுதிருக்கிறார். ஓர் அகதி முகாமுக்குச் சென்ற அவர் அதை விவரிக்கிறார்.

''அங்கே கண்டகாட்சிகள் ... அம்மம்மா ... நெஞ்சே பிளந்துவிடும் போலிருந்தது, உடலுறுப்பை இழந்தவர்கள் ... காயம் பட்டவர்கள் ... குழந்தைகளை இழந்த தாய்மார்கள்.''

**தமிழர் — சிங்களர் இனிச் சேர்ந்து வாழ முடியாது**

தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு அவர் இலங்கையில் கண்டகாட்சிகள், சேகரித்த செய்திகள் மூலம் தான் உணர்வதை நமக்குச் சொல்லியிருக்கிறார்.

''என் சொந்தக்கருத்து 'இனிமேல் இலங்கையில் தமிழர்களும் சிங்களர்களும் சேர்ந்து வாழவே முடியாது என்பதுதான். இதை அனுபவப் பூர்வமாக நான் உணர்ந்தேன்''. இவர் இப்படிச் சொல்லி விட்டார்.

1977 ஆம் ஆண்டுக் கலவரங்கள் முடிந்த பிறகு தமிழ்க் குடும்பத்தாரோடு நட்புப் பாராட்டிப் பழகிவந்த எல்வின் செயசிங்க எனும் சிங்களப் பெண்மணி உணர்ந்து கூறியவை நம் கவனத்துக்கு உரியவை.




தமிழ் ஈழத்தைக் காட்டும் வரை படம்

"தனி நாடு கோரிக்கையை நான் ஆதரிப்பவள் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஏற்படுத்தப்பட்ட பயங்கரமான சேதங்களையும், தமிழ்ப் பெண்கள் ஏராளமானோர் கற்பழிக்கப்பட்டதையும் நேரடியாகக் கண்ட பின்னர் இந்த நாட்டில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், கவுரவமாகவும் வாழக் கூடிய இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

பிரதமர் (இன்றைய சனாதிபதி செயவர்த்தனே) எவ்வளவு தான் அந்தரங்க சுத்தியாக உதவ முன் வந்தாலும் காலத்துக்குக் காலம் தென்னிலங்கையில் எழும் இன வெறிக் கொடுமையிலிருந்து தமிழ் மக்களை அவர்களால் காப்பாற்றி விட முடியாது" என்கிறார்.

**முடிவு என்ன**

செயவர்த்தனே தமிழ் மக்களைக் காப்பாற்றவில்லை என்பதும் தமிழர்கள் பாதுகாப்பாகவும் கவுரமாகவும் வாழவும் வாய்ப்பில்லை என்பதும் தெளிவாகி விட்டன. பின் என்ன முடிவு? தமிழ் ஈழம் அமைத்துத் தனித்து வாழ்வது ஒன்று தான் வழி. இன்று உலகம் இந்த உண்மையை ஒப்புக் கொள்கிறது.

1948இல் இலங்கை விடுதலை பெற்றகாலத்திலிருந்து தந்தை செல்வா (தமிழர் தலைவர்) தலைமையில் தொடர்ந்து அமைதிவழியில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைக்காகப் போராடினர். அது கிட்டாத போது சுயாட்சியோடு கூடிய கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்துப் போராடினர். இம்முயற்சிகள் பயனளிக்காமல் போயின. சிங்கள அரசோ புதுப் புதுச் சட்டங்களைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பறிக்க முற்பட்டது. அவ்வப்போது தமிழர் மீது ஒடுக்கு முறைகளையும் கட்டவிழ்த்து விட்டது.

**வரலாறு தெரியாத மடையர்கள்**

தமிழ் ஈழம் எனும் சிந்தனையும் தேவையும் வேறு வழியே இல்லாத சூழ்நிலையில் தான் எழுந்தன என்பதை உலகம் உணரவேண்டும், 'இதுவில்லங்கமான காரியம் தான்; ஆனாலும் வேறு வழியில்லை' என்று தந்தை செல்வா குறிப்பிட்டார். தமிழர்கள் சிங்கள அரசுடன் ஒத்துழைக்கவில்லை என்றோ சிங்கள மக்களுடன் கலந்து வாழ விரும்பவில்லை என்றோ யாரேனும் பழிபோட நினைத்தால் அவர்கள் வரலாறு தெரியாத மடையர்கள் என்று தான் கூற வேண்டும்.

1956க்குப்பின் தொடர்ந்து வந்த கலவரங்களையும், தமிழர்களுக்கு நேர்ந்த அழிவையும் முன்னர் கண்டோம். விடுதலை பெற்ற இலங்கையில் 1948 முதல் 1976 வரை தொடர்ந்து 28 ஆண்டுகள் உரிமைகளை வலியுறுத்தி, வலியுறுத்திப் பார்த்து ஓய்ந்து போன பிறகுதான் தமிழர் களுக்குத் தமிழ் ஈழச் சிந்தனையே பிறந்தது விடுதலைப்-புலிகள், அவர்களால் விளைந்த வன்முறை என்ப தெல்லாம் 1972-க்குப் பின்னால் தான் என்பதையும் கவனிக்க வேண்டும். புதிய உரிமைகளைப் பெற முடிய வில்லை-உள்ள உரிமைகளும் பறிக்கப்படுகின்றன என்ற நிலையில் தான் தமிழ் ஈழக் கோரிக்கை எழுகிறது.

**'தமிழ் ஈழம்' பிரகடனம்**

14-5-1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை எனும் இடத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முதல் தேசிய மாநாடு நடை பெற்றது. அதில்தான் தந்தை செல்வா தலைமையில் தமிழ் ஈழம் பிரகடனப்படுத்தப் பட்டது. இந்தத் தீர்மானம் எழுவதற்கான காரணங்-களை அவர்கள் தெளிவாக எடுத்து வைத்தார்கள். அவற்றைக் கொண்டு தமிழ் ஈழக் கோரிக்கையின் நியாயத்தை வேறு வழியில்லாத, நிலையை உணரலாம்.

1619 இல் போர்த்துக்கீசியர் படையெடுத்து வெற்றி காணும் வரை சிங்கள அரசும், தமிழ் அரசும் தனித்தனி யாகவே நிலைத்திருந்தன.

அதலை பிறகும் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் படையெடுப்புக்கள் நிகழ்ந்து 1833 ஆம் ஆண்டில் தான் சிங்களரும் தமிழரும் ஒரே இலங்கை ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டனர். இலங்கை விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த்தலைவர்கள் பலர் முன்னணியில் நின்று வெகுவாகப் பாடுபட்டனர்.

**வாக்குரிமைப் பறிப்பு**

ஆங்கிலேயர் பிரியும் போது தமிழ் இனத்தை வெறுங் குடிமக்களாக விட்டு விட்டுப் பெரும்பான்மை பலம் உள்ள சிங்களர்களிடம் இலங்கை அரசு முழுவதுமே ஒப்படைத்துச் சென்றனர். அதன் பின் பல்வேறு முறைகளில் தொடர்ந்து வந்த சிங்கள அரசு அனைத்துமே தமிழர்களை ஒடுக்கி வந்து உள்ளன. அவை பற்றி முன்னரே குறிப்பிட்டிருந்தாலும் மீண்டும் நினைவு படுத்திக் கொள்வோம்.

தமிழ் மக்களின் வாக்குரிமையைப்பறித்துப் பாராளு மன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைத்தது.

தமிழ நிலம் எனப்படும் பகுதியில் முறையாகவும் திட்டமிட்டும் சிங்களர் பலரைக் குடியேற்றித் தமிழ் நிலம் எனும் தனித்தன்மையை மங்கச் செய்தது.

சிங்களமே ஒரே ஆட்சி மொழி என ஆக்கித் தமிழுக்கான நியாயமான வாய்ப்புகளையும் ஒழித்தது.

அரசியல் சட்டப்படி, புத்தமே அரசாங்க மதம் என ஆக்கி, இந்து, இசுலாமிய, கிறித்தவ சமயங்களை இரண்டாம் தரமாக்கியது.

**தமிழ்நாட்டின் தொடர்பைத் துண்டிக்க ...**

வேலைவாய்ப்பு, கல்வி, நில ஒதுக்கீடு போன்றவற்றில் தமிழர்க்குள்ள விகிதாசாரப் பங்குகளையும் பிடுங்கிக் கொண்டு பெருமளவில் ஒடுக்கியது.

தமிழர்கள் தென்னிந்தியாவுடன் கலாச்சாரத் தொடர்பு கொள்ள விடாமல் தடுத்தும், கலாச்சார அமைப்புக்களை அழித்தும், தமிழ நாட்டுத் தொடர்புகளை இயன்றவரை துண்டித்தது.

1956, 1958, 1961, 1974, 1977 ஆகிய ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்களில் தமிழர்கள் ஒடுக்கப்பட்டமை ஒழிக்கப்பட்ட கொடுமை.

தமிழ் இளைஞர்களைக் கைது செய்து, கொடுமைப் படுத்தி, வழக்குமன்றம் வராமலேயே பலகாலம் மறைத்து வைத்துப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இவ்வளவுக்கும் இடையில் தமிழர்கள் பங்கு வகிக்கும் அரசியல் கட்சிகள் உரிமைகளைப் பெறுவதற்காக அரசாங்கத்துடன் ஒத்துழைத்தும் பாராளுமன்ற சனநாயக உரிமைகளின்படி அவ்வப்போது தங்கள் மறுப்புக்களைத் தெரிவித்தும், தமிழர்களுக்கான அரசியல் உரிமைகள் சிலவற்றையாவது பெற்றுவிட வேண்டும் எனும் துடிப்புடன் தொடர்ந்து வந்த பிரதமர்களுடன் எல்லாம் தமிழர்கட்சிகள் ஒப்பந்தங்கள் செய்தும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துப் பார்த்தன.

9 அம்சக் கோரிக்கை

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் கட்சி முன்னைய அரசியல் சட்டத்தின் 29-ஆம் பிரிவின்படி சிறுபான்மையான தமிழர் மீது பெரும்பான்மைச் சிங்களர் ஆதிக்கம். செலுத்தாமலிருக்கும்படிப் பல முறை எடுததுக் கூறியும் தடுத்து நின்றும் பயனில்லாமல் 1972 ஆம் ஆண்டின் குடியரசுச் சட்டப்படி இந்த உறுதியையும் இழக்க நேர்ந்தது இலங்கைஅரசின் எல்லைக்குள்ளும் கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்கிய சுயாட்சித் தமிழ் அரசை அனுமதிக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி தந்த கோரிக்கை அதுபற்றிய பேச்சுவார்த்தை கூட இல்லாமல் முற்றாக மறுக்கப் பட்டது தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்கான விதிகளைத் தெளிவுபடுத்துமாறு ஒன்பது அம்சக்கோரிக்கை ஒன்றை

7-4-1971 தமிழர் அரசியல் கட்சிகளும் இப்போது ஆட்சி செலுத்தும் ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து அளித்தன. இவையும் அன்றைய அரசால் தூக்கி எறியப்பட்டன.

1956-இல் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிச் சிறப்பு உபயோகச் சட்டங்களில் உள்ள வாய்ப்புக்களையாவது அரசியல் சட்டத்தில் சேர்க்குமாறு எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டு வந்ததிருத்தம் மறுக்கப்பட்டது. 1972 மே மாதத்தில் நிறைவேறிய இலங்கைக் குடியரசு அரசியல் சட்டத்தை மறுத்துத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆறு அம்சக் கோரிக்கை ஒன்றை அன்றையப் பிரதமரிடம் கொடுத்தது. தமிழ் இனத்தின் நியாயமான விருப்பங்களை நிறைவு செய்யுமாறும் அரசியல் சட்டத்தில் தக்க திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்க மூன்று மாத கால அவகாசம் காட்டிப் பொறுத்திருப்பதாகவும் முன்னணி கூறியது. அப்படியும் அரசு செவிசாய்த்து எந்த மாறுதலும் செய்யவில்லை. என்றால் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்குத் தமிழர் முன்னணி அரசை எதிர்த்து அகிம்சை வழியிலான நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டி வரும் என்றும் அறிவித்தது.

இலங்கையில் ஒற்றுமையான ஒரே அரசின் கீழ் வாழ்வதற்கு ஊறு நேராமல் தமிழர் தம் உரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்படவேண்டும் எனும் கடைசி முயற்சியும் சிரிமாவோ அரசினால் புறக்கணிக்கப்பட்டது. இத்தகைய கோரிக்கைகளை முன் வைத்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பின்னால் தமிழ் மக்கள் அனைவரும் இருக்கின்றனர் என்பதை அரசுக்கு உணர்த்தவும் தந்தை செல்வா ஒருவாய்ப்பை உருவாக்கினார்.

**தனிநாடு கோரிக்கை எழக்காரணம்**

தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி மீண்டும் இடைத்தேர்தலில் தான் வென்று காட்டுவதாகச் சூளுரைத்தார். அப்போதாவது தமிழ் மக்களின் வேண்டுகோளை அரசு கவனித்து ஆவன செய்யும் என்று

நினைத்தார். ஆனால் அரசாங்கமோ காங்கேசன் துறைத் தொகுதி மக்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்காமல் 2ஆண்டுகள் கண்ணை மூடிக் கொண்டது.

6-2-1975இல் நடைபெற்ற இடைத் தேர்தலில் இலங்கை அரசியல் சட்டத்தின் அலங்கோலத்துக்கு அத்-தொகுதி மக்கள் அடிகொடுத்தது மட்டு மில்லாமல் சுதந்தரமான இறையாண்மையும் சமயச்சார்பற்றசமத்துவமும் உள்ள தமிழ் ஈழத்தை அமைக்கலாம் எனத்தந்தை செல்வாவிற்கு உரிமையும் அளித்தனர்.

இந்த நிலையில் தான் 1976ஆம் ஆண்டு மாநாட்டில் தமிழ் ஈழம் பிரகடனப் படுத்தப்பட்டது. அதிலும் இலங்கையில் தமிழினம் உயிரோடும், பாதுகாப்போடும், தன்மானத் தோடும் வாழ்வதற்கு இந்த அறிவிப்பு தவிர்க்க முடியாததாகி விட்டது. பலநாள் கொடுமைகள், உரிமை-கள் பாதிப்பு, வாழ்க்கைக்கும் அடிப்படை வசதிக்கும் கூட உத்தரவாதமின்மை ஆகியவைதான் தமிழர்களைத் தனி நாட்டுக் கோரிக்கை நோக்கித்தள்ளி விட்டன என்பதை அனைவரும். உணர்வது கடமை.

## 12. வெறும் பேச்சால் எதுவும் விளையாது

தமிழ் ஈழம் அமைந்தால்தான் தமிழர்கள் இலங்கை மண்ணில்—தங்களுக்குரிய தமிழ் ஈழத்தில் வாழ முடியும் என்று 1976-இல் எண்ணினர் இதையே தேர்தல் கோட்பாடாகக் கொண்டு 18பேர் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிகண்டனர். தமிழர்களை எல்லா வகையிலும புறக் கணித்த சிரிமாவோவும் அவர் கட்சியும் படுதோல்வி அடைந்தனர்.

எழுந்தது செயவர்த்தனே ஆட்சி; முன்னைய அரசுகளின் நிலையை உணர்ந்து இவர் செயல்படுவார் என்று

எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் 1977, 1979, 1981, 1983 இனக் கலவரங்கள் கொடுங்கோலின் உச்சத்துக்கு எடுத்துக் காட்டாகி விட்டன. இட்லர் இலங்கையிலும் பிறப்பான் என்பதைச் செயவர்த்தனேயின் வடிவில் காண்கிறோம். இந்நிலையில் அவரது வாதங்கள் சிலவற்றைக் கண்டு ஒரு முடிவு செய்வோம்.

**செயவர்த்தனே வாக்குறுதி**

1) தமிழர்கள் இராணுவத்தில் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பதையும் நெடுநாளாகத் தமிழர்கள் இராணுவத்தில் சேர்க்கப்படவில்லை என்பதையும் செயவர்த்தனே ஒப்புக்கொள்கிறார். அதே நேரத்தில் தமிழர்கள் பிரிவினை வாதத்தைக் கைவிட்டால் இராணுவத்தில் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்றும் கூறுகிறார். ஏதோ தமிழ்ஈழம் கேட்டதால்தான் இராணுவத்தில் சேர்க்கப்படவில்லை என்பது போல் பேசுகிறார். இது எப்போது? 1976க்கும் பின் என்றால் அவரது வாதம் சரிதான். பிரிவினை பற்றியோ, தமிழ் ஈழம் பற்றியோ தமிழர்கள் கனவிலும் நினைக்காத காலத்தில் தமிழர்கள் இராணுவத்தில் உரிய வாய்ப்பைப் பெற்றார்களா? 1948 முதல் 1976 வரையிலுமே அவர்கள் திட்டமிட்டு இராணுவத்தில் சேர்க்கப்படாமலேயே ஒதுக்கப் பட்டார்களே அது ஏன்? (புள்ளி விவரம் ஏற்கெனவே தரப்பட்டுள்ளது) இந்த ஒதுக்கலுக்கும் பிரிவினை வாதத்துக்கும் என்ன தொடர்பு?

**அள்ளிக் கொடுத்து விடப்போகிறாரா ?**

2. பேச்சு வார்த்தை நடத்தியே பிரச்சனைகளைத் தீர்த்து விடலாம் என்று செயவர்த்தனே கருதுகிறார். தமிழர் விடுதலை முன்னணி பிரிவினையைக் கைவிட்டால் தான் பேசவே முடியும் என்கிறார். தமிழர் விடுதலை முன்னணி இதற்குமுன் 20தடவைக்கு மேல் பேச்சு வார்த்தை நடத்தியதே? அவற்றில் ஏன் எந்தமுடிவும் ஏற்படவில்லை?

பேச்சுவார்த்தையால் பயன் எதுவும் ஏற்படாது என்று அமிர்தலிங்கம் கூறுவது அதனால்தானே.

இதுவரை பேச்சு வார்த்தையால் பயன் எதுவும் விளையாத போது இப்போது தமிழ் ஈழக்கோரிக்கை-யைக் கைவிட்டு விட்டுப் பேச்சு வார்த்தை நடத்தினால் செயவர்த்தனே எதையும் அள்ளிக் கொடுத்து விடப் போகிறாரா?

இன்னொரு வினா?

1976-இல் தமிழ் ஈழம் கேட்குமுன் பல பேச்சு வார்த்-தைகள் நடந்தனவே! சேனநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் ஒன்று உருவாகியது. சிங்களர்கள் அதை எதிர்த்தார்கள் என்று அதைக்கை விடவில்லையா? பின்னர் பண்டாரநாயகா செல்வநாயகம் ஒப்பந்தம் ஒன்று ஏற்-பட்டதே. அதன் விளைவு என்ன? அந்த ஒப்பந்தம் நிறைவேறாமல் குறுக்கே விழுந்து குழப்பம் செய்தது யார்? இன்று ஜனநாயக வேடம் போடும் இந்தச் செயவர்த்தனே தானே!

**பேச்சுவார்த்தை - புண்ணுக்கு மருந்தாகாது**

பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து அன்று சிங்கள இன வெறியர்களை ஒன்று திரட்டி எதிர்ப்புக் குரலோடு கண்டிப்பாதயாத்திரை நடத்தியவரே இந்தச் செயவர்த்தனே தான். ஏற்பட்ட ஒப்பந்தத்தையே செயலிழக்கச்செய்த செயவர்த்தனே இப்போது பேசிக்கிழித்து விடுவாரா? பேசுவதின் வாயிலாக ஒப்பந்தம் எதுவும் செய்தாலும் இவர் அதைச்செயல்படுத்துவாரா? அல்லது சிரிமாவோ கட்சி பாதயாத்திரை நடத்தினால் கைவிட்டு விடுவாரா? இந்த உண்மை உலகுக்குத் தெரிந்தாக வேண்டும்.

எனவே பேச்சு வார்த்தை, வட்டமேசை, நீளமான பெஞ்சு, சாய்வு நாற்காலி எல்லாம் கண்துடைப்பே தவிர தமிழர்களின் புண்ணுக்கு மருந்தாகவும் ஆகாது —

கண்ணுக்கு விருந்தாகவும் ஆகாது. எனவே தமிழ் ஈழம் அமைவதொன்றே தீர்வாகும்.

இலங்கை அரசு நீதியற்றது. தனது நடவடிக்கைகள் சட்ட ரீதியானது தானா என்று தான் அரசு கவலைப் படுகிறதே தவிர நீதியைப் பற்றியோ மனித உரிமை பற்றியோ அது கவலைப்படவில்லை என்று Mirje (நீதி சமத்துவ இயக்கம்) கூறுகிறது.

மலைத் தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்களைத் தாக்கி உயிருக்கும் உடைமைக்கும் அழிவு விளைத்தவர்கள் ஆளும் கட்சிக் குண்டர்களும் காவலர்களுமேயாவர். இத்தனை வன்முறைகளும், தீ வைப்பு, கொலை, கற்பழிப்பு போன்ற நிகழ்ச்சிகளும் இலங்கை அரசே திட்டமிட்டு நிகழ்த்திய கொடிய வன் முறைநடவடிக்கையாகும் என்று இன்றைய கலவரத்துக்கு முந்திய கலவரம் பற்றி இலங்கை சென்று வந்த எம். கல்யாணசுந்தரம். எம்.பி. கூறியிருந்தார்

1983-ஆம் ஆண்டுக் கலவரத்தையும்,பார்த்த பிறகு அரசே முன்னின்று தமிழர்களை ஒடுக்குவது உண்மையாகி விட்ட பிறகு 'தமிழ் ஈழம்' தானே அதற்குத் தீர்வாக இருக்க முடியும்.

**83 - க்குத் தமிழ் ஈழம்தான் முடிவு**

1981 ஆம் ஆண்டைத் தனது ஜனநாயகத்தின் 50 ஆவது நினைவு ஆண்டாகக் கொண்டாட இலங்கை அரசு எண்ணி இருந்ததாகவும், 1981 இல் நடந்த கலவரங்கள் சிங்களரும், தமிழரும் இணைய முடியாத அளவுக்கு மோசமடைய வைத்துள்ள ஆண்டாக மாறி விட்டது என்றும் 'லண்டன் பைனான்சியல் டைம்ஸ்' (London Financial Times) பத்திரிகை குறிப்பிட்டது. 1981-க்கு இந்த முடிவு என்றால் 1983 க்குத் 'தமிழ் ஈழம்' தானே முடிவு! 1981 கலவரங்கள் குறித்து விசாரணை செய்த அனைத்துலக நீதிவான்கள்குழு (international Commission of Jurists) தமிழ் இளைஞர்களின் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று வழி கூறியுள்ளது:

(1) தகுதி அடிப்படையில் தமிழ் இளைஞர்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் உரிய வாய்ப்பு அளிப்பது.

(2) பாதுகாப்புப் படைகளை அவ்வப்போது தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடும் வன்முறைகளை அறவே தடுப்பது,

(3) சிறீலங்காவில் வடபகுதியில் உள்ள தமிழ் மக்களுக்குப் போதுமான சுயாட்சி உரிமை அளிப்பது ஆகிய மூன்றும் சிறந்த வழிகள் என்று பரிந்துரைத்தது;

அரசு எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தமிழ் இளைஞர்கள் ஒடுக்கப் பட்டனர் — பாதுகாப்புப் படைகளின் பயங்கர வாதத்தை அண்மையில் பார்த்து விட்டோம்—சுயாட்சி உரிமையிலிருந்து 'தமிழ் ஈழம்' நோக்கித் தமிழ்மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

புகழ் பெற்றபிரிட்டிஷ் இதழான 'கார் டியன்' இதழில் மார்ட்டின் ஊலாகாட் என்பவர் இலங்கைநிலை பற்றிக் கருத்துத் தெரிவித்து உள்ளார்.

'தமிழர்கள் அவர்கள் தொடர்பான விவகாரங்களை அவர்களே நடத்திக் கொள்ளும் அதிகார அமைப்பு வேண்டும் (There must be a frame work which allows Tamils to run their own affairs) என்கிறார். இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**வெறும் பேச்சால் எதுவும் விளையாது**

தமிழர்கள் பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணாவிட்டால் 1983 கலவரம் இன்னும் தொடரும். அழிவும் அதிகமாகும். 'இனச் சண்டையில் வெற்றி யாருக்குமே இல்லை' என்ற உண்மை தெளிவாகி விடும். செயவர்த்தனே எத்தனை பாசாங்கு செய்தாலும் அவர் இராணுவத்தின் பின்னால் நிற்பவர்தான்; இராணுவத்தையே கட்டுப்படுத்த முடியவில்லை என்பவர் தான்; தமிழர்களுக்கு நன்மை செய்தால் தான்தான் முதல்

பணியாக நேரிடும் என்று கூறிச் சிங்கள வெறியர்களின் தாக்கு தலைக்கண்டு அஞ்சுபவர் தான்; ஊட்டிவிட்ட வெறி அவரையே ஒரு நாள் தாக்கப் போகிறது என்ற 'ஞானோ-தயம்' உள்ளவர் தான். எனவே அவர் தமிழர்களுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை.

தமிழர்களே தங்களுக்கான தீர்வைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது தான். முற்றாக விடுதலை பெற்றுத் தமிழ் ஈழம் கண்டு தங்களை வாழ்வித்துக் கொள்வதைத் தவிர வேறுவழியே இல்லை. 1983 உச்சகட்டக்கலவரங்-களை உணர்ந்த எந்த ஒரு மனிதனும் இந்த முடிவுக்குத் தான் வருவான். ஜனநாயக மரபுகளுக்கு மாறுபாடு இல்லாமல் ஓர் அரசியல் கட்சி தன் இன மக்களின் வரலாறும் வாழ்வும் தெரிந்து கொண்ட பிறகு அமைத்துக் கொண்ட கொள்கை தான் 'தமிழ் ஈழம்' இவர்களாவது மிதவாதிகள். இது வரை பேசிப்பேசி, பாராளு மன்றத்திலும், வெளி மேடையிலும் வெளி நாட்டாருடன் பேசிப் பேசிச் சோர்வுற்றவர்கள், வெறும் பேச்சால் எதுவும் விளையாது என்பவர்கள் தான் விடுதலைப் புலிகள்,

## 13. விடுதலைப் புலிகளின் எழுச்சி

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமான முறையில் ஆயுதப் போர் புரிந்தாலன்றி விடுதலை பெற முடியாது என்று எத்தனையோ பேர் பல குழுக்களாகப் பிரிந்து பாடுபட்டதை நாம் அறிவோம். ஈழத் தமிழ் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் ஓர் அமைப்பாகச் சேர்ந்து பாடுபட்டுவருகிறார்கள். இந்திய வீரர்களுடைய முறை எப்படியிருந்தாலும் அவர்களது தியாகத்துக்கு நாம் தலைவணங்குவது போலவே ஈழத் தமிழ் விடுதலைப் போராளிகளின் உணர்வைப் பாராட்டு கிறோம். அவர்களது நடவடிக்கைகள் பற்றி இந்திய மற்றும் வெளிநாட்டுச் செய்தி இதழ்களும் இலங்கை

அரசும் மற்றும் உலக அமைப்புகள் சிலவும் கொடுத்திருக்கும் செய்திகளைத் தொகுத்துப் பார்ப்போம்.

**அமைதிப் போராட்டத்தின் தோல்வி**

1948-இல் இலங்கைக்குத்தான் சுதந்தரம் கிடைத்தது- ஈழத்தமிழ் மக்களுக்கல்ல. சகல விதமான சமாதான வழிகளிலும் தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளைப் கேட்டுப் பார்த்தனர். ஊர்வலமா-உண்ணாவிரதமா — விளக்கக் கூட்டமாக — அமைதிப் பிரசாரமா - பாராளுமன்றப் பேச்சா - உடன்படிக்கையா - ஒப்பந்தமா - பேச்சு வார்த்தையா - எந்த வழியில் தான் கேட்கவில்லை? விடையோ — பொய்யான வாக்குறுதிகளும் அநியாயமான அடக்கு முறைகளும் தான்.

**அரசாங்கத்தின் அடக்கு முறைகள்**

அமைதியையும் தர்மத்தையும் போதித்த புத்தனின் வழி வந்தவர்கள் என்று பெருமை பேசும் சிங்கள அரசினர் — கூட்டுச் சேராக் கொள்கைகளுக்குக் கொடி பிடிப்பதாக உலக அரங்கில் உரத்து முழங்கும் அரசினர் உண்மையில் இலங்கையில் என்ன செய்கின்றனர்? தமிழினத்தின் தாய்நிலத்தில் சிங்கள ஆயுதப் படைகளின் முற்றுகை - ஏதுமறியா மக்கள் மீது காவல்துறை கட்ட-விழ்த்து விடும் காட்டு மிராண்டித்தனமான வன்முறை - தமிழரின் அரசியல் போராட்ட சுதந்தரத்தையே அடி-யோடு குழிதோண்டிப் புதைக்கவரும் அநீதிச் சட்டங்கள் என்று கொடுங்கோன்மை கோலோச்சுகிறது. திட்டமிட்ட இனப்படுகொலைகள்: சூறையாடல்கள், கற்பழிப்புகள் இவை தான் அவர்களது உதவிப்பணிகள், உயிர் வாழுகின்ற உரிமையே தமிழர்களுக்கு இல்லையென்ற நிலைமை ஏற்பட்டால் அவர்கள் உரிமைக்குப் போராட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் இனக்-கலவரங்கள் தமிழர்க்கும் சிங்களர்க்கும் நடந்ததாக யாரும் தவறாக எண்ணி விடக்கூடாது. சிங்கள அரசின்

திட்டமிட்ட தூண்டுதலால் அவ்வப்பொழுது காவல் துறை இராணுவம் சிங்களக் குண்டர்கள் இவர்களால் இவை நடத்தப்படுகின்றன. சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றையே இவர்கள் பாதுகாப்பதாகப் பிரசாரம் செய்து விட்டு அவர்களையே எல்லாவற்றையும் செய்யச் சொல்லி அதைக் கண்டும் காணாமல் இருப்பதே சிங்கள அரசின்பாணி தனி நாட்டைத் தவிர வேறு வழியில்லை. சேர்ந்து வாழ்வதற்குத் தமிழர் தயாரென்றாலும் சமமாக நடத்தச் சிங்கள அரசு தயாராக இல்லை. தமிழர் உயிரோடு வாழவே முடியாத நிலையில் பிரிவினை தான் தீர்வு. இதையே அறிவிப்பாக வைத்து 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தமிழர் அனைவரும் ஏற்றுக் கொண்டு வாக்களித்து வெற்றி பெறச் செய்தது மக்களின் எண்ணத்தைக் காட்டுகிறது.

அன்பு வழியில் மக்கள் சக்தியை அணி திரட்டி அரசாங்கத்திடம் உரிமை கேட்கும் முயற்சி பலனளிக்காமல் போனது கண்டு வெதும்பிய இளைஞர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தித் தனித்தமிழ் ஈழம் அடைவதை நோக்கமாகக் கொண்டனர்.

**தீவிர இயக்கத்தின் தொடக்கம்**

வேலை வாய்ப்பின்மை, கல்வி வாய்ப்பின்மை, அன்னிய மொழித்திணிப்பு, அரசுப்படைகளின் அடக்குமுறை இவற்றுக்குப் பலியான தமிழ் இளைஞர்கள் புதிய வழி காணத் துடித்தனர். பேனாவும், புத்தகமும் ஏந்த வேண்டியோர் துப்பாக்கியும் வெடிகுண்டும் ஏந்திப் புறப்பட்டு விட்டனர்

போலி உணர்ச்சிகாரணமாகப் போர்க்களம் புகவில்லை. கற்பனை அரசியல் பேசிக் காடுகளில் அலையவுமில்லை. அவர்கள் பயரங்கரவாதிகளோ, பாதகர்களோ, நாசக்காரர்களோ அல்லர். தன்மானம் காக்க, தமிழினத்தை மீட்க, பொன்னான எதிர்காலம் காணப் புரட்சிவழி தவிர வேறு வழியில்லை என்பதைக் காலம்

காட்டியது. தட்டிப் பார்த்த தமிழருக்கு மக்களாட்சிக கதவு திறக்கவில்லை. கேட்டுப் பார்த்த தமிழருக்குத் தேவையானவை கொடுக்கப்படவில்லை. தேவையற்ற கொலை, கொள்ளை கற்பழிப்புத்தான் பரிசாகக் கிடைத்தன. நமக்கு உரிமையானதை வேறொருவன் மறைத்து வைத்திருக்கும் போது நாம் தட்டிப் பறித்து எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற கடைசிக் கட்டத்தில் தான் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்தது. இவர்களது பிறப்புக்கு நோக்கம் வேறு. எனினும் முன்னுதாரணங்கள் அந்த நாட்டிலேயே உண்டு 1971இல் மார்க்சிச நோக்கங் கொண்ட இளைஞர்கள் சிலர் ஒரு புரட்சிக்கு வித்திட்டனர்.

இவர்கள் அனைவரும் பல்வேறு வகையில் விரக்தி அடைந்த சிங்கள இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது தமிழ் இளைஞர்கள் எவரும் இதில் பங்கு பெறவில்லை. இரண்டாவது கருத்து, இந்தப் புரட்சி இயக்கம் அரசையே கவிழப்பதற்குச் சதிசெய்தது மறைமுகமான சதியும், ஆட்சிக் கவிழ்ப்புமே அவர்கள் நோக்கங்கள். ஆனால் தமிழ் இளைஞர்கள் சதியில் மனம் வைக்கவில்லை. தங்கள் விடுதலையில் மனம் வைத்தனர் இதுபற்றி ''வீக்என்ட்'' (Week end) எனும் இதழ் குறிப்பிடுவது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும்.

''கல்வி கற்றும் தொழில் பெறாது விரக்தியுற்ற இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலும் உள்ளனர். எனினும் அவர்களுள் எவரும் 1971 புரட்சிச் சதியில் தொடர்பு கொள்ளவில்லை. அவர்கள் ஏன் கலந்துகொள்ளவில்லை? இப்புரட்சியில் தம்மை இணைத்துக் கொள்ளத் தயாரான இளைஞர் எவரும் அங்கு இருக்கவில்லையா? இருந்தார்கள். ஆனால் வேறொரு இலட்சியத்தின் பின்னே அணி திரண்டு நின்றதால் புரட்சிச் சதியில் அவர்கள் தங்களை இணைத்துக் கொள்ளவில்லை சுதந்தரம் என்ற மந்திரச்சொல்லின் அணியில் அவர்கள் திரண்டு நின்றனர்.

இந்த இளைஞர்களைப் பற்றிய இந்தக் கருத்தை முன் வைத்ததும் பலர் கேட்கக் கூடும்! இளைஞர்கள் இந்தப் போக்கில் இறங்கியிருக்க வேண்டாமே! முறைப் படியான அரசியல் கட்சிகளின் மூலம் தீர்வு காணலாமே என்று. அந்த நாட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆளுங் கட்சியோடு இணைந்து நின்று விடுகிறது. தமிழரசுக்கட்சியோ விடுதலைக் கூட்டணியோ சாத்வீகமான எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்து விட்டன. ஒன்றும் நடக்கவில்லை. இந்தப் போக்குகளில் முற்றிலும் நம்பிக்கை இழந்த பிறகு தான் இளைஞர் களின் சிந்தனைவேறாக அமைகிறது.

இந்த இடத்தில் ஐ. நா. அவைக்குத் தெரிவித்துத் தமிழ் ஈழம் அடையலாமெனக் கூறுபவர்கள் உண்டு. ஐ. நா. அவை மனித உரிமைகள் மீறப்படுவதைத்தான் கண்டிக்க முடியுமே தவிர நேரடித் தலையீடு என்பது அதற்குச் சிரமமானது இந்தியா வங்காள தேசத்தில் தலையிட்டது போல ஒரு நாடு எதுவும் செய்யலாம். ஐ. நா. அவையின் சர்வதேசப்படை கூட இலங்கைக் கலவரத்தைத் தற்காலிக மாகத்தான் நிறுத்தமுடியுமே தவிர, நிரந்தரத் தீர்வை யோ தனி நாட்டையோ பெற்றுத் தர முடியாது. ஐ. நா அவை எந்த ஒருநாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் நேரடியாகத்தலையிட்டுச்சுதந்தரம் பெற்றுத்தந்ததில்லை கியூபா வியட்னாம், அல்ஜிரியா, அங்கோலா, மொசாம்பிக் சிம்பாப்வே, நிகரகுவா போன்ற நாடுகளில் அண்மையில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் ஐ. நா. படை களின் தலையீடின்றி அந்தந்த நாட்டு மக்களின் ஒன்று பட்ட ஆயுதப்புரட்சிப் போராட்டத்தால் வெற்றி கண்டவையே என்று கருதியே அந்த இளைஞர்கள் திட்ட மிட்ட ஆயுதப்புரட்சிக்கு வழிகண்டு வருகின்றனர். எனவே மக்களை அணி திரட்டி மக்கள் சக்தியாலே ஒரு புரட்சியை ஏற்படுத்தக்கட்டுப்பாடான ஓர் அமைப்புத் தேவைப்பட்டது.

தமிழகத்தின் மொழிப் போரில் முன்னின்று சாதனை நிகழ்த்திய இளைய தலைமுறையின் தியாகத்தை யாரும் மறக்கவோ, மறைக்கவோ இல்லை—மறுக்கவோ முடியாது. அது போலத் தான் இலங்கையின் தமிழ் மாணவர் பேரவை ஈழத்தமிழ் இளைஞர்களைக் கூட்டி ஓரணியாகத்திரட்டி ஈழத்தார் இன்னல் தீரச்செய்யவேண்டியவற்றைச் சிந்தித்தது. 1972இல் தமிழ் மாணவர் பேரவையின் தீவிரமான உள்ளங்களே 'தமிழ் ஈழவிடுதலை இயக்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தன. சிவகுமாரன், தங்கதுரை சத்திய சீலன் பிரபாகரன் முகுந்தன். திசை விரசிங்கம் ஆகியோர் இதன் முன்னணித் தலைவர்களாய் இருந்தனர்.

1974 உலகத் தமிழ் மாநாட்டில் புகுந்து படுகொலைகள் புரிந்தார்களே — பெண்களை ஓட ஓட விரட்டினார்களே அந்தச்சோக நிகழ்ச்சிக்குக் காரணமான ஒரு காவல் துறை அதிகாரியைப் பழிவாங்க முயன்று. நேரடிக்களத்தில் காவல்துறை சுற்றி வளைத்த பொழுது தப்ப முடியாமல் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட வீரமறவன் சிவகுமாரன். பெண்களும் கூட மரபை மீறி இடுகாடு சென்று அஞ்சலி செலுத்தும் அளவுக்குத் தனது தியாக வாழ்வை முடித்துக் கொண்டான். நமது இந்திய நாட்டின் இளம் தியாகி பகத்சிங்கைப் போலச் சிவகுமாரன் புகழ் பெற்றான்.

இந்தக் கால கட்டத்தில் புதியதமிழ்ப்புலிகள் என்னும் பெயரில் செயல்பட்ட இளைஞர்கள் 1976இல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (Liberation Tigers or Tamil Ealam) என்னும் அமைப்பில் ஒன்று திரண்டனர். பிரபாகரன் இதன் தலைமைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். முகுந்தன் என்ற உமாமகேசுவரன் தலைமையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்னும் அமைப்பு செயல்பட்டுவருகிறது. இந்திய விடுதலைக்காக இந்திய தேசியப் படையை I. N. A. அமைத்துப்பாடுபட்ட வெற்றி வீரர்

நேதாஜியை நினைவு படுத்தும் செயல் திறன் கொண்ட இளைஞர்கள் இவர்கள். தணியாத நாட்டுப்பற்றும் நகர்ப் புற இராணுவக் கொரில்லாத் தாக்குமுறைத் திட்டமும் கொண்டவர்களாகப் புலிகள் செயல்பட்டு வருகின்றனர்.

**நோக்கங்கள்**

சிங்களர்களின் அடக்குமுறைக் கொடுங்கோலாட்சியின் கையில் இருந்து தமிழ்த் தேசிய இனத்துக்கு அரசியல் விடுதலை பெற்றுத் தரவேண்டும் என்பதே புலிகளின் முதன்மை எண்ணம்.

சமூக ஏற்றத் தாழ்வுகளையும் பொருளாதார முரண்பாடுகளையும் வைத்துக் கொண்டு விடுதலை மட்டும் பெற்றுவிட்டால் போதும் என்பது பயனற்றது என்று வலியுறுத்தும் புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தமிழ்த் தொழிலாளர் விவசாயிகளின் சமூகப் பொருளியல் வளத்துக்கு வழிகோலும் புரட்சித் திட்டத்தையும் தமது நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

## 14. நெருப்புக் குழந்தைகள்

மக்களைத் திரட்டி ஓர் ஆயுதப் புரட்சியை நடத்த வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம் ஒரு சிலர் மட்டும் ஆயுதம் ஏந்திக் கொண்டு போராடுவது தேசிய விடுதலைக்கோ, புரட்சிக்கோ முழுப் பயனைத் தராது என்பதை அறிந்தே கட்டுப்பாடான இயக்கமாக வளரும் புலிகள்' மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். உயிரிழப்பும், பொருளிழப்பும் ஏற்படுகிறது சிங்களர்களால். சிங்களர் நம்மைக் கொடுமைப்படுத்தக் காரணம் புலிகள் தான் என்று தமிழரை நினைக்க வைக்க அரசு செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை மாறாக மக்களின் மகத்தான ஆதரவு பெருகி வருகிறது

**நெஞ்சில் நஞ்சுடையோருக்கு விளங்காது**

புலிகளைப் பயங்கர வாதிகள் என்று சொல்லுகிறார்கள். யார்? சிங்களரும் சிங்கள அரசும்! அப்பாவித்தமிழர்களை அடித்தும், சுட்டும், வெட்டியும், தீயில்போட்டும் கொல்லுகிற அரசு—தமிழ்த் தாய்க் குலத்தைக் கற்பழித்துக் களிப்படையும் அரசு, தமிழ் நூலகத்தை எரித்தும், தமிழ் இதழ் அலுவலகங்களை நொறுக்கியும் கோவில்களைக் கொளுத்தியும் விளையாடும் அரசு-தமிழ்க் கடைகளில் கொள்ளையடித்தும், தமிழ்ப்பயணிகளிடம் வழிப்பறி செய்தும், இளைஞர்களைச் சிறைவைத்தும் சித்திரவதை செய்தும் சிரித்து மகிழ்கின்ற அரசு, உரிமைக்குரல் கொடுத்த கல்வியாளர்களையும் மதகுருமாரையும் சிறையில் சித்திரவதை செய்து எக்காள மிடுகின்ற அரசு, குடியிருக்க விடாமலும் தாய் மொழியை வளர விடாமலும், கல்வி கற்கவிடாமலும் சொத்துத் தேட விடாமலும் தொடர்ந்து தடைக்கற்கள் எழுப்பி இன்று உயிர் வாழவே விடாமல் தமிழர்களை ஓலமிட வைத்துப் பார்த்து மகிழ்கின்ற வெறிபிடித்த சிங்கள அரசு சொல்லுகிறது இவர்களும் பயங்கரவாதிகள்' என்று. யார் பயங்கர வாதிகள்' என்பது நெஞ்சுடையோர்க்கும் நெஞ்சில் ஈரமுடையோருக்கும் தான் விளங்குமே தவிர நெஞ்சில் நஞ்சுடையோருக்கு விளங்கப் போவதில்லை

**நடவடிக்கைகள்**

1978 ஆம் ஆண்டு இலங்கை 'வீரகேசரி' நாளிதழில் புலிகள் ஒரு விளம்பரம் வெளியிட்டனர். உலகத்தமிழ் மாநாட்டுக் கொலைகளுக்குக் காரணமான யாழ்ப்பாண மாநகராட்சித் தலைவர், காவல் அதிகாரிகள் தமிழரைக் காட்டிக் கொடுத்துப் பெயர் வாங்கி வந்த சிலர், முதலியோர் கொல்லப்பட்டது புலிகளால் தான் என்று அச்செய்தி கூறியது. எந்த விதமான கொள்ளை முயற்சியும் தாங்கள் செய்யவில்லை என்றும் புலிகள் தெரிவித்திருந்தனர் மக்களைத் திரட்டி ஆயுதப் போராட்டம் நடத்து

வதைத் தவிரத் தனிப்பட்ட யாரையும் 'கொல்லுவது தங்கள் இயக்கத்தின் கொள்கையல்ல என்றாலும் தமிழ் மக்களது உயிர், உடமை, கற்பு இவற்றுக்குத் தீங்கு விளைவித்தவர்களுக்குத் தண்டனை அளிப்பது தவிர்க்க முடியாதது என்று புலிகள் கருதுகின்றனர். ஒரு வீட்டுக்குள் சில வெறியர்கள் புகுந்து ஆண்களைக் கொன்று விட்டுப் பெண்களைக் கற்பழித்துப் பொருள்களைக் கொள்ளையடித்தால் பக்கத்து வீட்டுக்காரர்கள் சும்மா இருந்து விடலாம். ஆனால் பாதிக்கப்பட்ட வீட்டினரின் உறவினன் வெளியில் இருந்து வந்து இதைப் பார்த்தால் தன்னால் இயன்றமட்டும் போராடத்தானே செய்வான்.

இதைத்தான் புலிகள் செய்கின்றனர். 'லண்டன்-டைம்ஸ்' இதழ் தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டதாகவும் இதற்குப்பழி தீர்க்கத் துடித்த தமிழ்ப்புலிகள் 13 இராணுவத்தினரைக் கொன்றதாகவும் இந்த ஆண்டின் இப்போதைய கலவரத்துக்கான காரணங்களை விளக்கியுள்ளது.

1978 செப்டம்பர் 7 ஆம் நாள் சிங்கள மொழிக்கும். புத்தசமயத்துக்கும் முதலிடமளித்துக்கொண்டுவரப்பட்ட சட்டம் தமிழர்களின் நலத்துக்கே வெடிவைப்பதாக இருந்ததால் தமிழினத்தின் எதிர்ப்பைக்காட்ட இலங்கைவிமான போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான (Air Lanka) ஆவ்ரோ விமானம் ஒன்று கொழும்பு விமான நிலையத்தில் நேரவெடிகுண்டு (Time bomb) வைத்துத் தகர்க்கப்பட்டது. புலிகள் இயக்கம் இச்செயலால்நாடுகளின் கவனத்தைக் கவர்ந்தது.

**கொடுமைக்காரர்களா?**

புலிகள் தாக்குவதால் இராணுவத்தினர் கோபம் கொண்டதாகவும் அதனால் தான் கட்டுப் பாடற்ற கலகம் விளைந்தது என்றும் சிங்களச் சிறுமதியினர் கூறுகின்றனரே! 1972 க்கு முன்னால் ஏற்பட்ட கலவரங்கள் எல்லாம் புலிகள் தோன்றும் முன்னால் ஏற்பட்டவை

தானே! அப்போது யார் காரணம்? தமிழர்கள் அமைதியான முறையில் எடுத்து வைத்த நியாயமான கோரிக்கைகள் அளிக்கப் படாமல் வன்முறையைத் தானே பரிசாகப் பெற்றனர். அதனால்தானே இளைஞர்கள் பொங்கியெழுந்தனர். சிங்கள அரசு சிங்களர் நடுவிலும் தமிழர்கள் நடுவிலும், உலக அரங்கிலும் புலிகள் பற்றிய தவறான கருத்துகளைப் பரப்பி வந்தாலும் புலிகளது நடவடிக்கைகளில் உள்ள ஒழுங்கும் கட்டுப்பாடும், நேர்மையும் நமக்கு வியப்பைத் தருகின்றன. புலிகள் இதுவரை சிங்களப் பொது மக்களுக்கோ, பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ, அவர்கள் சொத்துக்கோ எந்தக் கேடும் விளைவித்ததில்லை. விடுதலைப் புலிகள் மதக் கலவரங்களையும் தீர்த்து வைத்ததுடன், தொழிலாளர்களின் ஊதியப் பணத்தைச் சுரண்டி வந்த இடைத்தரகர்களின் சுரண்டல்களைத் தடுத்தனர். சமூகவிரோதச் செயல்களைத் தடுத்தனர் என்று செய்தித் தாள்கள் கூறுகின்றன என்பதுதான் உண்மை. பிரான்சு, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் இவர்கள் தஞ்சமடைந்து செயல்பட்டபோதும் எங்கும் சிறு துன்பம் ஏற்படுத்தியதில்லை.

**தமிழகம் தஞ்சமளிக்குமா?**

வங்காள தேசத்து முக்திவாகினியினருக்கு மேற்கு வங்காளம் அடைக்கலமளித்தது போலத் தமிழகத்தைத் தங்கள் தாயகமாகப் புலிகள் கருதுகின்றனர். இனத்தால், பண்பாட்டால் ஒன்றுபட்ட தமிழகம் தமக்கு அரசியல் தஞ்சமளித்து ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு உண்டு. அந்தத் தமிழ்க் குழந்தைகளுக்கு வெளிநாடுகள் எல்லாம் வரவேற்பளிக்கையில் தாயான நம் தமிழகம் ஏன் அன்பு காட்டத் தயங்க வேண்டும்? தாய்க்குத் தானே அது உரிமை! அவள் கடமையும் அதுதானே! அரவிந்தரும் பாரதியும் பிரெஞ்சு எல்லைக்குள் தஞ்சம் புகுந்து புதுவையில இருந்து பாடி-

னால - எழுதினால அது புரட்சிக்கீதம. இந்திய விடு-தலைக்கு அவர்கள் செய்தது தியாகம் என்றால் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் இருந்து கொண்டு 'தமிழ் ஈழம்' அமைய முயல்வது மட்டும் குற்றமாகுமா?

**உலக நாடுகளின் ஆதரவு தேவை**

கூட்டுச் சேரா நாடுகளின் ஏழாவது மாநாடு டெல்லியில் இந்த ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொழுது புலிகள் ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். அதில் தங்களது போராட்டம் அமைப்பிலும் நோக்கத்திலும் பாலஸ்தீனப் போராட்டத்துக்கும் நமீபியாப் போராட்டத்துக்கும் நிக-ரானது என்றும் உலக நாடுகளின் தலைவர்கள் தமக்கு ஆதரவுதர வேண்டுகிறோம் என்றும் மனிதாபிமானத்தின் பேராலும் இலங்கை அரசின் இனப்படு கொலைகளைக் கண்டித்து ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற உதவவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

அநீதியையும அடக்குமுறையையும் எதிர்த்துப் போ-ராடி வரும் புலிகளின் நோக்கம் போற்றத்தக்கது. ஒடுக்கப் படும் ஓர் இனத்தின் உயர்வுக்காகப் போராடும் அவர்களது தியாக எண்ணம் வரவேற்கத்தக்கது. எவ-ராலும் அணைக்க முடியாத விடுதலை வேள்வியில் தோன்றிய நெருப்புக் குழந்தைகளாகத் திகழும் புலிகள் தங்களது இளமை வாழ்வை, இன்பங்களைத் துறந்து 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற குறிக்கோளுடன் போரிட்டு வருகின்றனர். அவர்களது தியாகத்துக்குத் தலைவணங்குவதைத் தவிர நம்மால் வேறு என்ன செய்ய முடியும்?

அதிலும் சொத்துச்சுகங்களோடு, வசதி வாய்ப்புக்களோடு வயிறார உண்டு வாயார ஏப்பம் விட்டு நாளை ஓட்டிக் கொண்டிருக்கும் நமக்கு அவர்களது தியாகத்தையும் உண்மையான நோக்கத்தையும் புரிந்து போற்ற முடியும் என்றால் நல்லது. போற்ற முடியவில்லையா? எல்லாம் தெரிந்ததுபோல எகத்தாளம் பேசி ஏளனம் செய்வதையாவது நிறுத்திக் கொள்ளலாம் அல்லவா?

# 15. இந்தியத் தமிழர்களின் இக்கட்டான நிலை

இலங்கையில் இருக்கும் தமிழர்களை ஈழத் தமிழர் என்றும், இந்தியத் தமிழர் என்றும் இசுலாமியத் தமிழர் என்றும் பலவகையாகப் பிரித்துப் பேசுகிறோம்; யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்புபோன்றதமிழ்ப் பகுதிகள் தொடர்ந்து தமிழ் அரசின் கீழ இருந்து வந்த தமிழர் பகுதிகளாகும்.

இன்றும் தமிழ ஈழம் கேட்பவர்கள் லடக்கு, கிழக்கு மாகாணங்களையே மையமாகக் கொண்டு உரிமை கோர வேண்டியுள்ளது; அப்பகுதிகள்தான் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ்ப்பகுதிகள், அவை தான் தமிழ் நிலங்கள், எனவே தமிழ் நிலம் எல்லை, வரையறைக்குட்பட்டுத் தனி நாடு ஆகவேண்டும் என்றுதான் கோர முடியுமே தவிரக்கொழும்பு,கண்டி,நாவலப்பட்டிபோன்ற இடங்களிலும் அதிகமான தமிழர்கள் வசிக்கிறார்கள் என்பதைக் கொண்டு அவற்றைத் தமிழ் ஈழம் என்ற தனிநாட்டுக்குள் கொண்டு வர முடியாது.

ஆனால் தமிழ் ஈழம் அமைந்த பின் அனைத்துத் தமிழர்களும் ஒருங்கிணைந்து வாழ ஏற்பாடு செய்து கொள்ள முடியும். மொழி, கல்வி, வேலை வாய்ப்பு மற்றுமுள்ள உரிமைகள் யாவும் முற்றாகக் கிடைக்கும் போது எந்தத் தமிழனும் பாதுகாப்போடு வாழ முடியும்.

**உரிமை பறிபோகாது**

எல்லாத் தமிழர்களும் தமிழ் ஈழத்துக்குள் வாழ முடியாவிட்டாலோ வாழவிரும்பாவிட்டாலோ கொழும்பு, கண்டி, நுவரேலியா ஆகிய பகுதிகளிலும் மலையகப் பகுதிகளிலும் வாழும் உரிமைகள் பறிபோகா வண்ணம் இலங்கை அரசு செயல் படவேண்டிய கட்டாயத்தினை உருவாக்க முடியும்.

இதனை மனத்திற்கொண்டு தமிழர்கள் — இந்தியத் தமிழர்கள் பிரச்சனையை அணுகவேண்டும், தமிழ்நாட்டில் நான் வாழ்வதால் தமிழும், ஆங்கிலமும் தெரிந்தவனாக இருக்கிறேன், நானே டெல்லிப் பகுதியில் புகை வண்டியில் போனாலோ, வேறு இடங்களுக்குப் போனாலோ ஆங்கிலத்தில் பேசினால் யாரும் பதில் சொல்லமாட்டேன் என்கிறார்கள்.

ஆங்கிலம் தெரிந்தவர்களே தெரியாதது போல் நடிக்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டு இந்தியன், வடநாட்டு இந்தியன் என்று நான் பிரித்துப் பேசத் தொடங்கினால் ஒருமைப்பாட்டுக்கு இது ஊறுவிளைவிக்கும் என்று உடனே சொல்லிவிடுகிறோம் நமக்கொரு நியாயம் இலங்கைக்கொரு நியாயம் இல்லை. நீதி உலகமெங்கும் ஒரே வகைதான். சட்டம் தான் மாறுபடும். எனவே ஈழத் தமிழரிடமிருந்து இந்தியத் தமிழர்களைப் பிரித்துப் பார்க்காமல் மலையகப் பகுதியில் வாழும் தமிழர்களின் இன்றைய நிலை என்ன என்பதை வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கவேண்டும்.

இந்தியத் தமிழர் பற்றிச் சிலர் பேசும் போது "பிழைக்கப் போன இவர்களுக்கு ஏன் புரட்சியும் போராட்டமும்? பேசாமல் இருந்துவிட்டு வரவேண்டியது தானே" என்கிறார்கள். இதனை மனத்திற்கொண்டு நாம் செய்திகளைக் காணலாம்.

இலங்கையில் உள்ள தமிழர்களில் பூர்வீகத் தமிழர்கள் எனப்படுபவர்கள் 26 இலட்சம் ஆகும். இந்தியத் தமிழர்கள் 12 இலட்சம் பேராகும்.

பூர்வீகத் தமிழர்களில் யாழ்ப்பாணம் பகுதியில் வாழ்பவர்கள் 18 இலட்சம். பிற பகுதிகளில் வாழ்பவர்கள் 8 இலட்சம். நாவலப்பட்டியில் யாழ்ப்பாணத் தமிழர்களின் கடைகளாகப் பார்த்துத் தாக்கப்பட்ட செயல் ஒரு காலத்தில் நடந்ததை ஏற்கனவே கூறி உள்ளேன், இந்தியத் தமிழர்களில் வியாபாரம், தொழில் என்று ஈடுபட்டு உள்

ளோர் கொழும்பு, வெள்ளவத்தை, நீர் கொழும்பு, கண்டி, நுவரேலியா போன்ற பகுதிகளில் உள்ளனர். மற்றபடி தேயிலைத் தோட்டங்களில் வாழ்ந்து தான் உண்டு, தன் தொழில் உண்டு குச்சுவீடும், குருவிக் கூடும் உண்டு என்று காலந்தள்ளும் இந்தியத் தமிழர்கள் அனைவரும் மலையகத்தில் வாழும் தமிழர்கள் தான்.

1977 — க்குப் பின் செயவர்த்தனே காலத்தில் தான் கலவரங்களின் தாக்குதல்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பல இந்தியத் தமிழர்கள் யாழ், வவுனியா போன்ற பகுதிகளில் குடியேறி உள்ளனர். ஏறத்தாழ 80000 பேராவது இத்தகைய இடமாற்றத்தை அமைத்துக் கொண்டு ஈழத்தமிழர்களோடு இணைந்து விட்டனர்.

இந்தியத் தமிழர்கள் வாழும் இலங்கையில் எவ்வளவு காலமாக வாழத் தொடங்கினர் என்பது வினா. குறைந்தது 150 ஆண்டுகளுக்கு முந்தி 300 ஆண்டுகளுக்குள்ளாக இவர்கள் இலங்கைக்குச் சென்றவர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. எப்படியும் 1833க்கு முந்தியே இந்தியத் தமிழர்கள் இலங்கையில் 'வாழத் தொடங்கினர். இந்தியத் தமிழர்கள் எவரும் தாங்களாகவே விரும்பி அந்த நாட்டுக்குப் போகவில்லை' ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் தோட்டங்களில் வேலை செய்வதற்கு உழைப்பாளிகள் தேவைப்பட்டனர். அங்கிருந்த சிங்களச் சோம்பேறிகள் தேயிலைத் தோட்டங்களில் உழைக்க முன் வந்திருந்தால் இந்தக் குடியேற்றங்கள் அன்றே நின்றிருக்கும். அட்டைக் கடிக்கும் கொசுக் கடிக்கும்ஆளாகித் துயருற்ற தமிழினம் இன்று சிங்களர்களின் கடிக்கும் கொலை வெறிக்கும் ஆளாகி இரத்தம் சிந்த வேண்டி வந்து விட்டது தான் கொடுமை.

இலங்கைத் தீவில் மையமாக விளங்கும் மலையகம் சிங்களப் பகுதியில் உள்ளது. இதில் தேயிலை, ரப்பர் ஆகியவற்றை ஆங்கிலேயர் பயிரிடத் தொடங்கினர். அதற்கேற்பப் பாடுபடும் கூலிகளாகச் சிங்களர்கள் அமைய

வில்லை. கடின உழைப்பும் நன்னடத்தையும் கொண்ட கூலிகளாகச் சிங்களர்கள் அமைவார்கள் எனும் நம்பிக்கையே ஆங்கிலேயர்களுக்கு வரவில்லை. அதே நேரத்தில் தமிழ் ஈழப் பகுதியில் இருந்த தமிழர்கள் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற நாகரிக நிலைகளில் பெருங் கவனம் செலுத்தியதால் தோட்டப் பகுதிகளில் வேலைக்குப் போக ஒப்புக் கொள்ளவில்லை.

**ஆசைகாட்டி அழைத்துச் சென்றனர்**

எனவே தமிழ்நாட்டில், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து 1821 இல் தொடர்ந்து, பல ஆயிரக் கணக்கான ஏழைத் தமிழர்களை ஆங்கிலேயர் ஆசை காட்டி அழைத்துச் சென்றனர். ஆனால் அழைத்துச் செல்லப்பட்ட தமிழருக்கு அங்கே எந்த வசதியுமில்லை. சரியாக உணவு கிடைக்கவில்லை. கூலி கிடைக்கவில்லை. மருத்துவ வசதி அறவே இல்லை, கல்வி வாய்ப்புகளில்லை ஓலைக்குடிசை கூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை. ஆனால் நாள்தோறும் பன்னிரண்டுமணி நேரத்திற்கு மேல் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். பல நூற்றுவர் நோயால் மடியலாயினர்.

அவர்கள் உழைப்பால் ஆங்கில முதலாளிகளுக்குச் செல்வம் குவிந்தது. இலங்கைப் பொருளியல் 60% தேயிலை ரப்பர் ஆகியவற்றையே சார்ந்திருந்தது. ஆனால் இச் செல்வத்தை ஈட்டித்தந்த உழைப்பாளரோ சொல்லொணாத் துயரில் உழலலாயினர். 170 ஆண்டுகள் ஓடி மறைந்தும் அவர்களின் துயர்கள் பெருகினவேயன்றி மலர்ச்சி எதுவும் ஏற்படவில்லை.

தாயகத் தமிழர்களே! கொஞ்சம் சிந்தியுங்கள்! ஆசை காட்டப் பட்டால் யாரும் கடல் கடந்து போகத் தான் செய்வார்கள்! எடுத்துக்காட்டு வேண்டுமா? இப்போது நம் நாட்டில் பலர் 15,000. 20,000 என்று பணத்தைச் செலவழித்துத் துபாய்க்குச் செல்ல முயன்று கொண்டிருப்

பது உங்களுக்குத் தெரியுமே! அங்கு வளம் கொட்டிக் கிடக்கிறது என்ற நப்பாசை ஊட்டப்பட்டது தானே இந்த முயற்சிக்குக் காரணம்?

20-ஆம் நூற்றாண்டில் வாழும் உங்களுக்கு இந்த நிலை என்றால் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாமரத்-தமிழர்கள் 'இலங்கை ஒரு சொர்க்கம்' என்ற வருணனையில் மயங்காமல் இருந்திருக்க முடியாதே? இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் தமிழர்களின் பரிதாப நிலைமையை ஒரு படமாக எடுத்திருக்கிறார் செர்மன் அம்மையார் ஒருவர். அந்தப் படத்துக்கு அவர் இட்ட தலைப்பு, 'சொர்க்கத்திலிருந்து துரத்தப் பட்டவர்கள், (சிறீலங்கா தமிழ்ச் சிறுபான்மையினர்) (BANISHED FROM PARADISE)

இந்திய மக்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு அழைத்-துச் செல்லப் படுவதை அப்போதைய இந்திய அரசு (ஆங்கிலேயர்களால் ஆளப்பட்ட இந்திய அரசு) அனு-மதிக்க மறுத்தது அது மட்டுமல்ல, இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழர்களுக்கான அடிப்-படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத நாடுகளுக்கு இந்தியர்கள் சென்று குடியேறுவதைத் தடுக்க 1837 ஆம ஆண்டு ஒருதடைச்சட்டத்தை இந்திய அரசு கொண்டு வந்தது.

ஆனால் இலங்கை அரசும் அதன் தலைவர்களும் இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளிகள் வந்தா-லொழிய இலங்கைத் தோட்டத் தொழில் வளர்ச்சி அடையாது என்பதனை உணர்ந்து பல தூதுக்குழுக்களை அனுப்பி இலங்கைக்குத் தமிழ்த் தோட்டத் தொழிலாளிகளை அனுப்புமாறு இந்திய அரசைவற்புறுத்தியிருக்-கிறார்கள். 1937 ஆம் ஆண்டில் இலங்கைச் சட்ட மன்றத்தில் (State Council) இலங்கையில் குடியேறத் தமிழ்த் தொழிலாளர்களை அனுமதிக்குமாறு இந்திய அரசை வேண்டிக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு குடியேறுகிற தமிழ்த் தொழிலாளிகளுக்கு இந்திய அரசு குறிப்பிடும் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்கும் சட்டங்களை இலங்கை அரசும் அவ்வப் போது நிறைவேற்றி வந்துள்ளது. இலங்கை வர இசைபவர்களுக்கு நல்ல வேலை, கைநிறையச்சம்பளம், குடியிருக்க வீடு, கல்வி, மருத்துவ வசதிகள் எல்லாம் உண்டு என ஆசை காட்டப்பட்டது.

இதற்காகஇலங்கைக்குடியேற்றஆணையாளர் ஒருவர் அமர்த்தப்பட்டார். இவ்வளவு சொல்லி விட்டால் போதுமே. உடனே ஆட்களைத் திரட்டிட நம் ஊரில் தான் கண்காணிகள் கிடைப்பார்களே! இப்படி ஆசை காட்டாமல் - இலங்கை வர விரும்பும் இந்தியத் தமிழர் களுக்குக் குத்தும், வெட்டும், பரிசாகத் தரப்படும் - பெண் கள் மானத்தை மட்டும் கொடுத்தால் போதும், மற்ற-வற்றை வைத்துக்கொள்ளலாம். ஆண்கள் வைத்திருக்-கும் கடைகளும், பிற தொழிற்சாலைகளும் நெருப்பு வைக்கப் பட்டுத் தரைமட்டம் ஆக்கப்படுமென்று எவ-ராவது அன்றே சொல்லியிருந்தர்ல், சொன்னவன் உயிரை விட்டிருப்பான்; ஆனால் ஆசை காட்டி மோசம் செய்து நம்பிக்கைத் துரோகம் செய்ததாக அல்லவா ஆகிவிட்டது.

## 16. இலங்கையில் இனி வாழ முடியாது

**ம**லையகப் பகுதிகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலோருக்கு வெளியுலகந் தெரியாது. ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதி சம்பளம் வாங்குவார்கள். அது வரை பக்கத்துப் பகுதிகளில் உள்ள எல்லாக் கடைகளி லும் கடன் வாங்கி வைத்திருப்பார்கள். சம்பளத் தொகை யைக் கொடுத்துவிட்டு மறுபடி கடன் வாங்க வேண்டியது தான் நிலை.

கல்வி நிலையிலோ தொடக்கக் கல்விக்குக் கூடச் சரியான வசதிகள் தரப்பட வில்லை. S.S.C. H S.C.

போன்ற படிப்புகளுக்குக் கூடத் தோட்டத் தொழிலாளர்கள் வாய்ப்புப் பெறவில்லை. பல்கலைக் கழகக் கல்வி அவர்களை எட்டிப் பார்த்தது கூடக்கிடையாது. எடுத்துக் காட்டாக ஒரு தோட்டப் பகுதியைச் சொல்லலாம். அந்த ஊரில் ௪00 பேர் குடியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கூடப் பல்கலைக்கழகக் கல்வி பெறவில்லை. H.S.C. படித்தவர் ஒருவர் S.S.C. படித்தவர்கள் ஐந்து பேர்கள் (தாயகம் திரும்பிய ஒருவர் தந்த விவரம்) என்றைக்கும் அறியாதவர்களாகவே, அப்பாவிகளாகவே, கொத்தடிமைகளாகவே வாழ்ந்த மலையகத் தமிழர்கள் பலவகையிலும் ஏமாற்றப் பட்டார்கள்.

தொழிலாளர்கள் என்றால் கண்காணிகளின் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் அடங்கி வாழும் ஆமைகளாகத் தானே இருந்திருக்க வேண்டும்? இந்த இலட்சணத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கென்று அமைந்த தொழிற் சங்கங்கள் கூட நன்மைகளுக்காகப் போராடவில்லை. தமிழ்த் தொழிலாளர்களின் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோதும்போலீசார் மூர்க்கத்தனமாகத் தாக்கிய போதும் கூடத் தொழிற்சங்க ரீதியாகப் போராட எந்தத் தொழிற்சங்கங்களும் முன்வரவில்லை.

1980-ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ரூ. 70 (எழுபது) ஊதிய உயர்வு வழங்கப் பட்டது, ஆனால், என்ன விந்தை! தமிழர்களாகிய தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் இந்த ஊதிய உயர்வு, இல்லை. (மாண்பு மிகு தொண்டமான் அவர்கள் அமைச்சரவையில் இருக்கிறார் என்பதையும் பல இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் தன்னிகரற்ற பிரதிநிதி அவர் தான் என்பதையும் கவனத்தில் வைக்கவும்)

**சுதந்தர இலங்கையின் சூரியக் குஞ்சுகள்**

வரவர இன்னும் நிலைமை மோசமாகிக் கொண்டே வருகின்றது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதத்தில்

26 நாள் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது சட்டமாகும். ஆனால், சுதந்திர இலங்கையின் சூரியக் குஞ்சுகள் புதிய சட்டம் இயற்றி, அதன்படித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதத்தில் 18 நாட்கள் தான் வேலைதரப்பட்டது.

சிரிமாவோ காலத்தில் கூட மலையகத் தமிழர்கள் இவ்வளவு மோசமான தாக்குதலுக்கும் உயிரிழப்புக்கும் ஆளாகவில்லை. ஆனால் செயவர்த்தனே காலத்தில் 1977, 1981. 1982, 1983 என்று அடுத்தடுத்து அடிவிழுந்து கொண்டிருக்கிறது, இந்தத் தொடர் தாக்குதலுக்குக்கூட 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தமே அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

**உரிமை இழப்பும் ஒப்பந்தங்களும்**

1948 ஆம் ஆண்டிலேயே வாக்குரிமையும், குடியுரிமையும் பறிக்கப்பட்டதால் 10 இலட்சம் இந்தியத் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆனார்கள். இதன் விளைவை முன்பே குறிப்பிட்டுள்ளேன். எடுத்துக்காட்டைத் துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் 1947ஆம் ஆண்டில் நுவரேலியாத் தொகுதியில் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை 15,014, வாக்குரிமை பறிக்கப்பட்டபின் 1950இல் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை: 319 (வெறும் முந்நூற்றுப் பத்தொன்பது)

பாதிப்பு பளிச்சென விளங்கி இருக்கும். இத்தகைய சட்டம் கொண்டுவந்த சண்டாளர்களே செயவர்த்தனேயையும் உள்ளடக்கிய ஐக்கியதேசியக் கட்சியினர்தான். சிரிமாவோ ஆட்சிக் காலத்தில் 1964—இல் சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது. (இது பற்றிய இந்தியநிலைமையைப் பின்னர் அலசுவோம்) அந்த நேரத்தில்

| | |
|---|---|
| இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை; | 9, 75000 |
| இலங்கைக் குடியுரிமை பெற்றவர்கள் | 2,84,000 |
| குடியுரிமை இல்லாதவர்கள் | 6, 91, 000 |

இவர்களில் இரண்டேகால் இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை அளிக்க இலங்கை அரசு ஒப்புக் கொண்டது. ஒப்பந்தப்படி ஏறத்தாழ மூன்றரை இலட்சம் பேர் இந்தியா திரும்பினார்கள். ஆனால் இலங்கை அரசோ ஒப்புக் கொண்டபடி மிகப்பலருக்குக் குடியுரிமை வழங்காமல் விட்டு விட்டது.

**இலங்கை வாழ்வே வேண்டாம்**

இந்நிலையில் 31-10-1981 அன்று இந்தஒப்பந்தம் முடிவு அடைவதால் இந்த நேரத்தில் ஒரு கலவரத்தை உண்டாக்கி அதனால் பீதியையும் அச்சத்தையும், குலை நடுக்கத்தையும் உண்டாக்கி விட்டால் இந்தியத்தமிழர்கள் தாமாகவே இலங்கையை விட்டு வெளியேறி விடுவார்கள் என்று சிங்கள வெறியரசு கருதியது. அதனாலேயே கலவரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன. ஏற்கனவே தீட்டிய திட்டத்திற்கு 13 இராணுவ வீரர்கள் சுடப்பட்டதை முன்னுரையாக அமைத்துக் கொண்டார்கள் அவ்வளவு தான்!

இன்று நிலை என்ன?

90% இந்தியத் தமிழர்கள் இந்தியாவுக்குத் திரும்பி விடவே நினைக்கிறார்கள். அகதி முகாமில் உள்ள அனைவரும் இனி இலங்கை வாழ்வே வேண்டாம், உயிர் பிழைத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்து விசாவுக்கு விண்ணப்பிக்கிறார்கள். இந்தியாவிற்குள், உயிர் பிழைத்து ஓடிவந்தவர்களோ, இனி எந்தக்காரணத்தை முன்னிட்டும் இலங்கையில் கால் வைக்க மாட்டோம் என்று கூறி உள்ளார்கள். அங்கு நான்கைந்து தலை முறைகளாக வேரூன்றி நின்ற இந்தியத் தமிழர்களுக்கே இந்தக் கதி நேர்ந்துள்ளது. இது போக, ஏற்கனவே இலங்கைக் குடியுரிமை பெற்றவர்கள் கூட நிர்ப்பந்தம் காரணமாக அதனைத் திரும்ப ஒப்படைத்து விட்டு இந்தியாவுக்குத் திரும்பும் நிலை உள்ளது.

**உலக வங்கி எச்சரிக்கை**

கொழும்பில் உள்ள அரசு அலுவலகம் தமிழர் ஒருவருக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் அனுப்பியுள்ளது.

''இலங்கைக் குடியுரிமை வேண்டாமென்று திரும்ப ஒப்படைக்கும் தங்கள் விண்ணப்பம் ஏற்கப் படுகிறது.

(Your request for the withdrawl of your application for ceylon citizenship is allowed)

இனிவாழவே முடியாத சூழ்நிலை இந்தியத் தமிழர்-களுக்கு ஏற்பட்டுவிட்டது. திறமையும், வணிக நுட்பமும் படைத்த தமிழர்களை வெளியேற்றினால் இலங்கையின் எதிர்காலம் பாழ்படும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. உலகவங்கி எச்சரித்தால் என்ன? உள்ளூர்ப் பங்கிகளுக்கு'ஏகபோக' உணர்வு வந்து விட்ட பிறகு எவன் எப்படிப் போனால் என்ன?

இந்தியத் தமிழர்களின் — மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வோடு நாற்பதாண்டு காலமாக ஒன்றியிருப்பவர் தொண்டமான். 1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு சேர்ந்து இருந்துவிட்டு ஓராண்டு கழித்து அமைச்சர் பதவி அழைப்பை ஏற்றுச் செயவர்த்தனே ஆட்சியில் தாவிவிழுந்தவர் தான் இவர். இவர் கட்சிக்குப் பெயரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். இவர் அமைச்சராகக் கொலு வீற்றிருக்கும் இவ்வேளையில் தான் 4000 தமிழர்கள் அதிலும் குறிப்பாக இந்தியத் தமிழர்கள் கொல்லப்பட்டு உள்ளனர்.

**இராவணன் கதை திரும்புகிறது**

ஒரு காலத்தில் ஜி ஜி பொன்னம்பலமும் ஐக்கியதேசிய கட்சியுடன் சேர்ந்து கொண்டு திட்டமும், சட்டமும் தயாரித்துத்தான் இந்தியத் தமிழர்களின் குடியுரிமை-யைப் பறிப்பதில் முன்நின்றார். இப்போது தொண்டைமான் மலையகத் தமிழர்களின் தலைவராக இருக்கும்

போது தான் தமிழர்களின் வாழ்வையே பறித்துள்ளார்கள். தொண்டமான் கண் முன்னாலேயே இந்த நிலைமை என்றால் ...?

இலங்கை வரலாற்றில் எத்கனை காலமானாலும் சில இயல்புகள் மாறாமலேயே இருக்கின்றன. அன்று இராவணன் அவையில் ஒரு வீடணன் — தன் இனத்தின் அழிவுக்குத் தன் பதவி ஆசை காரணமாக இருந்தது என்று தெரிந்து கொள்ளாத வீடணன்! தன் இனத்தாரின் சாவுக்கு வழியமைத்துக் கொடுத்து, துப்புச் சொன்னவனே வீடணன்தான்! இன்றும் அந்தக் காட்சிகள் மாற வில்லையே!

ஆனாலும் ஜி. ஜி. பொன்னம்பலம் தன்னலத்தால் அப்படிச் செய்தாலும் தந்தை செல்வா எதிர்த்து வெளியேறினார். இன்று வரை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழர்களைக் கைவிடவில்லை, தங்கள் எம். பி. பதவிகளைப் பறி கொடுத்தாலும் இக்கட்சியினர், 80000 இந்தியத் தமிழர்களை வவுனியாவிலும் யாழ்ப்பாணமாவட்டத்திலும் குடியமர்த்தித் தங்களோடு இணைத்துக் கொண்டனர்.

**வானொலியில் விளம்பரம் செய்த நகை மாளிகை எங்கே?**

இன்றைய இந்தியத் தமிழர்களின் நிலை என்ன? அவர்கள் கொழும்பில் வியாபாரம் செய்ய முடியாது வானொலியில் நெடுங்காலமாகப் பெயர் சொல்லிக் கொண்டிருந்த நகை மாளிகைகள், துணிக்கடைகள் தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தமிழர்கள் நடத்த முடியாது. நாவலப் பட்டியில் உள்ள 118 கடைகளில் 116 தமிழர்கடைகள் நொறுக்கப்பட்டன. இதன் பிறகுமா தமிழன் வியாபாரம் செய்யப்போகிறான்? இவ்வளவு நெஞ்சை உருக்கும் படு கொலைகளுக்குப் பின்னாலுமா மலையகத்தமிழர்கள் இன்னும் தேயிலைக் கொழுந்தைக் கிள்ளிக் கொண்டிருக்கப் போகிறார்கள்? தங்கள் குழந்தை

களின் தலைகள் தங்கள் முன்னாலேயே சிங்கள வெறியர் கள்ளால் கிள்ளி எறியப்பட்ட பிறகுமா?

இப்போது இந்தியத் தமிழர்கள் முன் உள்ளவை இரண்டே வழிகள் தான். ஒன்று, ஈழத் தமிழர் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளுக்குச் சென்று குடியிருப்பு களை அமைத்துக் கொண்டு அவர்களோடு ஒன்றி விடுவது. அல்லது இந்தியாவுக்கு அதாவது தமிழகத்துக்குத் திரும்பி வந்துவிடுவது.

இப்போது, தமிழகத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்த இலங்கைத் தமிழர் நிலை என்ன? மண்டபம் முகாம் போன்ற இடங்களில் நமது உள்ளூர்த் தமிழர்களும் அதிகாரிகளும் தாயகம் திரும்பியோரிடம் செய்கின்ற சுரண்டல் இருக்கிறதே அது பெரிய கொடுமை. பங்கீட்டுக் கடைகளில் 1 கிலோவுக்கு முக்கால் கிலோ அளந்து விடுவது — எந்த வேலை நடக்க வேண்டுமானாலும் சில்லரை தள்ள வேண்டிய நிலை-தரப்படுகின்ற உதவித் தொகைகளும் முழுமையாகக் கிடைக்காமல் மூளியாகக் கிடைப்பது-இந்தத் துன்பங்களை இவர்கள் பெரிதும் அனுபவிக்கிறார்கள். மக்கள் உரிமைக்கழகத்தைச் சார்ந்த பி.வி. பக்தவச்சலம் போன்றோர் ஒரு குழு அமைத்து விசாரித்துப் பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். விரைவில் அந்த அறிக்கையைப் படித்து வேறு உண்மை-களையும் வெளிக் கொணர்வோம்.

**கண்ணதாசனின் பாடல்**

அண்மையில் திருச்சி விமான நிலையத்தார் சுங்கச் சோதனை என்ற பெயரில் உயிர் தப்பி வந்த இலங்கைத் தமிழர்க்குத் தந்த தொல்லைகளை நாம் அறிவோம்.

இந்த நேரத்தில் தமிழகத்துக்குத் திரும்பிவரும் தமிழர் களை எண்ணிக் கலங்க வேண்டியிருக்கிறது சொல்ல வேண்டாம் என்று நினைத்தாலும் வேறு வழியில்லை. தப்பியோடி வந்த தமிழர்களே! உங்களுக்குத்தெரியுமா?

இது வரை இந்தியாவுக்கு வந்து சேர்ந்த இலங்கைத் தமிழர்களில் கால்வாசிப் பேர் (25%) ஓராண்டு காலத்திற்குள் மாண்டு போய் விட்டார்கள் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?

இது வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவது போலிருக்கும்! ஆனாலும் நான் என்ன செய்வது? மொத்தத்தில் 'சிவகங்கைச் சீமை' திரைப்படத்தில் கண்ணதாசன் எழுதி வரலட்சுமி பாடிய உருக்கமான வரிகளைத்தான் காணிக்கையாக்கிட முடியும்.

"சிறகொடிந்ததோ? கழுகு வென்றதோ?
சிதறி ஓடி வந்தாயோ?
தேம்பும் நெஞ்சமே ஆறவில்லையோ
பதறி வாடி நொந்தாயோ?
அன்னையின் நாடும் மன்னவா வீடும்
அடிமையாவதே நீதியோ?
ஆற்றுவாரில்லை; தேற்ற ஆளில்லை;
அலைவதே எங்கள் சாதியோ?

ஊமைத்துரை தப்பி ஓடி வந்த போது இந்தப் பாட்டு; வாய்பேச முடியாத ஊமைகளாய் இலங்கைத் தமிழர் ஓடிவரும் போது எங்கள் வரவேற்புப் பாட்டு இதுதான்.

## 17. ஐ நா. அவையில் தமிழரின் குரல்

எந்த ஒரு தேசியப் பிரச்சனையும உலக அரங்கின் கவனத்துக்கு வரவேண்டும். அப்போதுதான் அதன் நிறை குறைகளும் தெரியும். கோரிக்கைகளில் உள்ள நியாயங்களும் புரியும். அந்த வகையில் 1976 முதல் எழுப்பப்பட்டு வரும் தமிழ் ஈழம் எனும் கோரிக்கை உலகநாடுகளின் கவனத்தை எவ்வாறு கவர்ந்திருக்கிறது என்பதைக் காண்பதும், உலக நாடுகள் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்வதில் ஈழத்தமிழர்கள் எத்தகைய முயற்சி

களில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை உணர்வதும் நமக்கு ஒரு தெளிவைத்தரும்.

**வெளிநாட்டினரின் உதவிகள்**

அண்மையில் நடந்த கலவரங்களுக்குப் பின்னால் இது வரை அதிக அக்கறை காட்டாத சில நாடுகள் கூடத் தாங்களாகவே முன்வந்து உதவிட உறுதி கூறியுள்ளன. ஆஸ்திரேலியா நாட்டினர் தங்கள் நிலையைத் தெளிவு படுத்தினர். தங்கள் நாட்டுக்குடியுரிமை கோரி எத்தனை இலங்கைத் தமிழர் விண்ணப்பித்தாலும் ஏற்று ஆவன செய்வதாகத் திறந்த மனத்தோடு அந்நாடு கூறியுள்ளது.

மேலும் மோரிசியசு நாட்டின் பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஐ.நா. அவையில் எழுப்புவதாக உறுதி கூறியுள்ளார். மேலும் இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்து இலங்கை அரசுடன் பேசி ஏற்றுக்கொள்ளச்செய்ய முயற்சி மேற்கொள்வதாக-வும் கூறியுள்ளார். இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர் களுக்கு ஒரு நிவாரண நிதியையும் மோரிசியசு அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

இந்நிலையில், 'தமிழ்ஈழம்' தனிநாட்டுக் கோரிக்கை குறித்து இலங்கைத் தமிழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், அதற்கு ஏற்பட்ட ஆதரவு நிலைகளை யும் காண்பது மிக முக்கியமாகும்.

1977 பொதுத் தேர்தலில் 19க்கு 18பேர் 'தமிழ்ஈழம்' கோரிக்கையை முன் வைத்து வெற்றி பெற்றனர். மக்கள் கைகாட்டி விட்டார்கள் என்பது இயக்கத்தினருக்குப் புதிய தெம்பைத் தந்தது. வெளிநாடுகளில் ஆதரவு திரட்டுவதற்குப் பலரும் முயன்றனர். இன்னும் விடாப்-பிடியாகச் செயலாற்றி வருகின்றனர். இவர்களது முயற்சி களுக்குள் வழக்கறிஞர், சட்டவல்லுநர், கிருட்டிணா வைகுந்தவாசன் செய்த செயல் உலகையே வியப்பில் விட்டது.

**எவராலும் சாதிக்க முடியாதது**

வைகுந்த வாசன் இலண்டனில் வாழும் ஈழத்தமிழர். ஆப்பிரிக்காவில் உள்ள ஜாம்பியா நாட்டில் ஏழு ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாகவும், பின்பு அங்கேயே உயர் நீதிமன்றப் பதிவாளராகவும் பணியாற்றியவர். இலங்கை உயர்நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். இவர் 'தமிழீழம் பிரச்சனை பற்றி ஐ நா. அவையில் பேசத்திட்டமிட்டார்' ஒரு நாடே இல்லைஎனும் நிலையில் அந்த நாட்டின் சார்பில் எவரும் ஐ. நா. அவையில் நுழையவே முடியாது என்ற நிலையில் இவர்தன் மதிநுட்பத்தாலும் துணிவாலும் செய்த செயல் மிகப்பெரியது அவ்வளவு எளிதாக எவராலும் சாதிக்க முடியாதது.

பன்னாட்டு வானொலி, தொலைக் காட்சிகளும் இந்த அதிசய நிகழ்ச்சியை ஒலி-ஒளி பரப்பின. அமெரிக்காவின் நியூயார்க்கிலிருந்து வரும் "INDIA ABROAD" எனும் இதழில் கூப்பர் என்பவர் இதனைச் சுவையாக விவரித்திருக்கிறார். இலண்டன் பி. பி. சி. வானொலி இதனை மிகச்சிறப்பாக வெளியுலகுக்கு அறிவித்தது.

ஐ நா. அவையில் பல நாடுகளின் அதிபர்கள், பிரதமர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் உள்ளிட்ட 2000 பிரதிநிதிகள் கூடுவார்கள். எனினும் எல்லாரும் ஒருவருக்கொருவர் பழகிய முகமாக இருக்க முடிவதில்லை.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஐ.நா. அவையில் பேசிட முடியும் என வைகுந்தவாசன் நினைத்தார். இவரும் தான் அங்கு பேச வேண்டும் என்று நினைக்காமல் முதலில் திரு. அமிர்தலிங்கம் ஐ. நா அவையில் பேச வேண்டும் என்றுதான் முயற்சிமேற் கொண்டார்.

**அரபு நாடுகளின் ஆதரவால்**

பாலஸ்தீன் விடுதலை இயக்கத்தின் தலைவரான

யாசர் அராபத் எந்த வகையான அதிகாரப்பூர்வமான அனுமதியும் பெறா விட்டாலும், அரபு நாடுகளின் ஆதரவு இருந்த காரணத்தால் பாலஸ்தீன மக்களின் சார்பில் ஐ.நா. வில் பேச அவர் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அமிர்தலிங்கம் பேசலாம் என்பதற்கு முயற்சி செய்யக் கூட நமது இந்தியப் பிரதிநிதி சி.வி. நரசிம்மன் போன்றோர் முன்வரவில்லை. இந்த நிலையில்தான் வைகுந்தவாசன் தானே நேரடி முயற்சியில் இறங்கினார்.

ஐ.நா. அவைக்குப் பார்வையாளராகச் சென்று 1978 செப்டம்பர் மாதம் முழுவதும் கவனித்தார். ஐ.நா. பொதுச்சபைச் செயலகத்தின் முக்கிய நுழை வாயிலைக் கடந்து செல்வது தான் கடினம். கெடுபிடி அதிகம். ஆனால் பொதுச் சபைக்கூட்டம் நடக்கும் போது பல மொழி பேசும் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் தடபுடலான உடைகளில் அவசரமாக உள்ளே நுழைவதும், வெளியே வருவதும் வழக்கமாக இருக்கும். அவர்கள் ஒவ்வொருவரின் அடையாள அட்டைகளை முறையாகவும் கடுமையாகவும் சரிபார்ப்பதில் பாதுகாப்பு அதிகாரிகள் அதிகம் அக்கறை காட்டுவதில்லை.

**துணிச்சல்மிக்க வைகுந்த வாசன்**

இதை நன்கறிந்து கையில் ஒரு சிறுபெட்டி, வேகமான நடை, அவசரமாக இருக்கையில் போய் உட்கார வேண்டும் எனும் ஒரு பரபரப்பான நிலை இந்தப் போக்கில் வைகுந்த வாசன் ஐ.நா. அவையில் பல நாட்கள் உட்கார்ந்து கவனித்தார்.

5-10-1978 ஆம் நாள் பகல் உணவு வேளை நெருங்கு முன் பொதுச் சபையில் சைப்ரஸ் நாட்டு அதிபர் பேசினார். அதன் பிறகு சூரிநம் நாட்டுப் பிரதமர் பேசினார். அடுத்து இலங்கைப் பிரதிநிதி பேச வேண்டும். பொதுச் சபைத் தலைவர் இலங்கை வெளி விவகார அமைச்சரைப் பேச அழைத்தவுடன் வைகுந்தவாசன் எழுந்து சென்று வேகமாகப் பேசத் தொடங்கி விட்டார்

இந்நிலையிலும் இலங்கையின் உண்மையான வெளி விவகார அமைச்சர் எழுந்து செல்லவில்லை, வைகுந்த-வாசன் பேசத் தொடங்கினார்.

தமிழ் ஈழநாடு என்று கூறியதுமே அவையில் பரபரப்பு ஏற்பட்டது. பேசுபவர் ஏதோ புதிராக இருக்-கிறார் என்று நினைத்ததும் ஓர் ஊழியர் ஒலிபெருக்கி இயங்குவதைத் தடை செய்தார். இதற்குள் ஒருநிமிடம் ஓடிவிட்டது. வைகுந்தவாசன் சளைக்கவில்லை. தொடர்ந்து பேசினார். மேலும் ஒரு நிமிடம். இதற்குள் பாதுகாப்பு அதிகாரிகள் மேடையை நோக்கிப் பாய்ந்தனர். அவர்கள் வந்து இவரைக் கைப்பற்றி அப்புறப்-படுத்துவதற்குள் இரண்டாவது நிமிடம் ஓடிவிட்டது. அதற்குள்தான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டார் அவர் வேலை முடிந்துவிட்டது. ஓர் இலட்சியத்தைச்செயல் படுத்துவதற்காக இவர் எடுத்துக் கொண்ட முயற்சி நம்மை வியக்கவைக்கிறது. நாம் இப்படிச் செய்ய-முடியுமா என்று எண்ணி நம்மை வெட்கப்பட வைக்-கிறது.

**பாலஸ்தீன இயக்கம் போல் உருவெடுக்கும்**

அவர் பேச்சின் தமிழாக்கம் இது தான்.

''சபைத் தலைவர் அவர்களே! உலகத் தலைவர்களே! தமிழ் ஈழம் போன்ற ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்-களின் நாடுகள், உலகநாடுகளின் உச்ச சபையான இங்கு எங்கள் குறைகளைக் கூறாமல் வேறு எங்கு சொல்வது? தயவு செய்து என்னை ஒரு நிமிடம் பேச அனுமதியுங்-கள். (அவை நிமிர்ந்து பார்க்கிறது) என் பெயர் கிருஷ்ணா இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே-யுள்ள 25 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 'தமிழ் ஈழம்' நாட்டில் இருந்து பிரதிநிதியாக வந்துள்ளேன். இலங்கை அரசு சிறுபான்மை இனத்தோரைத் துன்புறுத்தி ஒடுக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

(ஊழியர்கள் பரபரப்பு அடைந்து ஒலிபெருக்கி இயங்காமல் செய்கின்றனர்.) தனி நாடாக வாழ்வதற்கு எங்களுக்குள்ள உரிமையை நாங்கள் உபயோகித்து அறிவித்து உள்ளோம். தமிழர் பிரச்சனை இந்தியப் பகுதியின் அமைதியை அச்சுறுத்திக் கொண்டு உள்ளது. உலகத் தலைவர்களாகிய நீங்கள் இதில் தலையிட்டுத்தீர்வு காணாவிட்டால், எங்கள் பிரச்சனையும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் போல் சைப்ரஸ் போராட்டம் போல உருவெடுக்கும் ...... (பாதுகாப்பு அதிகாரிகள் ஆளுக்கொரு பக்கமாக நின்று அவரைத் தள்ளிக் கொண்டு போகின்றனர்.)

இவ்வளவும் இலங்கை வெளி விவகார அமைச்சர் தன் இருகையை விட்டு எழுவதற்குள் செய்து முடித்து விட்டார்.

இவர் இந்த அளவோடு நிற்கவில்லை. பிரான்சு, நார்வே, ஜெர்மனி, முதலிய நாடுகளுக்கும் சென்று ஆதரவு திரட்டினார். இயன்றவரை அங்குள்ள அனைவரையும் சந்தித்தார். அங்குள்ள செய்தித் தாள்கள் அக்டோபர் 1979 வாக்கில் ஒரு வாரம் தமிழ் ஈழம்' பிரச்சனைக்கு முதன்மை கொடுத்துத் தலைப்புச் செய்திகள் வெளியிட்டன தலையங்கங்கள் தீட்டின. எதிர்பாராமல் 'நாடற்ற தமிழர்' என்ற முறையில் ஜாவா மரியா எனும் நார்வே நாட்டுப் பெண் இலங்கை அரசால் திருப்பி அனுப்பப் பட்டிருந்தார். மீன்பட்டுக்கள் தயாரிக்கும் தொழிலில் அமர்த்தப்பட்டு இருந்த பலரை வெளியேற்றியதால் பல பிரச்சனைகள் எழுந்தன.

**நார்வே அரசின் கவனம்**

அந்தப் பெண்ணுக்காகப் பல கல்லூரி மாணவ—மாணவியர் நார்வே நாட்டுக் கொடியைக் கையில் தாங்கிக் கண்டன ஊர்வலம் நடத்தினர் இந்த நேரத்தில் வைகுந்தவாசன் அங்குள்ள பலரையும் சந்தித்துத் தமிழர்கள் ஒடுக்கப்படுகின்ற கொடுமைகளை விரிவாகச்

சொன்னார். சிறீலங்கா அரசுக்கு உதவியாக நார்வே அரசு கொடுத்த 35இலட்சம் பவுண்டும் தமிழர் எவருக்கும் தரப்படாமல், அம்பண்டோடாவில் உள்ள சிங்களர்களுக்கு மட்டுமே கிடைக்கும்படி செய்ததை எடுத்துக் காட்டினார். நார்வே அரசு அதிகாரிகள் அன்றிலிருந்து இலங்கை விவகாரங்களை உன்னிப்பாகக் கவனித்து வரு-கின்றனர்.

## 18. வெளிநாட்டு ஆதரவு

பிரான்சு நாட்டில் பாரிசில் பல உதவிகளைச் செய் கின்றனர், 6 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் 'லிமாண்டே' (Le Monde) எனும் பிரெஞ்சு இதழ் தமிழ் ஈழக் கோரிக்கையை மிகச் சிறப்பாக எடுத்து வைத்தது. 1500க்கு மேற்பட்ட ஈழத் தமிழர்களும் பாரிசில் இருப்-பதால் அவர்கள் முன்னின்று பாடுபடுகின்றனர்.

முன்பு காரைக்கால், புதுச்சேரிப்பகுதியில் வாழ்ந்து இப்போது பாரிசில் வாழும் 1000க்கு மேற்பட்டவர்களும் தமிழ் ஈழப்பிரச்சனையில் ஆர்வமாக உள்ளனர் மேற்கு ஜெர்மனியில் உள்ள பிராங்க்பர்ட், போன், ஹம்பர்க் நகரங்களிலும் ஆதரவு காட்டப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் இலண்டனில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு 198?இல் 'சுதந்தரத் தமிழீழம்' எனும் தீர்மானத்தை நிறைவேற்றிப் பிரகடனப்படுத்-தியது.

8000 சதுரக்கல் பரப்பில் வாழும் 35இலட்சம் சிறுபான்மை ஈழத்தமிழர்கள் இலங்கையில் 109இலட்சம் பெரும்பான்மைச் சிங்களப் பௌத்தர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள் என்ற செய்தியிலிருந்து தொடங்கி எல்லா வகையான அடக்குமுறைகள், இனக் கலவரங்கள், சேர்ந்து வாழ முடியாத சூழநிலைகள் ஆகியவை அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## உலகத் தமிழர்க்கு அழைப்பு

1982-ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழீழம் உதயமாகும் என அறிவித்து அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை ஏற்று உதவுமாறு உலகெங்கணும் உள்ள ஆறுகோடித் தமிழர்களுக்கு அழைப்பும் அறை கூவலும் விடப்பட்டுள்ளது.

இவை அத்தனைக்கும் சிகரமாக விளங்குவது அமெரிக்காவில் உள்ள மாசசூசட்ஸ் மாநிலச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். அமெரிக்கக் குடியரசுத் தலைவரையும் நாடாளுமன்றத்தையும் 'தமிழ்ஈழம்' அமைக்க உதவுமாறு கோரி அந்தத் தீர்மானம் 1981-ஆம் ஆண்டில் ஒரு முகமாக நிறைவேறியது. அதன் முழு வடிவத்தையும், படித்துத் தெரிந்து கொண்டால்தான் கோரிக்கையில் உள்ள நியாயம் நமக்குப் புரியும். நாம் எப்படித் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் எனும் விவரமும் புரியும். நாம் (6 கோடித் தமிழர்கள்) தீர்மானம் செய்ய வேண்டும் எனும் துணிச்சலும் பிறக்கும்.

**ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி குடியரசுத் தலைவரையும் நாடாளு மன்றத்தையும் கோரி மாசசூசட்ஸ் குடியரசு மாநிலச் சட்ட மன்றத்தில் 1981 - ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

இந்துக்கள், முகமதியர்கள், கிறித்தவர்கள் ஆக 30 இலட்சம் ஈழத் தமிழர்கள் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினராக இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு 100இலட்சம் சிங்களர்கள் — அவர்களில் பெரும்பான்மையினர் பௌத்தர்கள் • பெரும்பான்மையினராக உள்ளனர்.

தமிழர்கள் — சிங்களர்கள் என்ற தனிப்பட்ட இரு ராஜ்யங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைத் தமக்கே

உரிய இயல்பின்படி கவனியாது (அலட்சியப்படுத்தி விட்டு) காலனி ஆதிக்க நிர்வாக ஒருமைக்காக, ஒரே அரசாக ஆங்கிலேயர்கள் உருவாக்குகிறவரையில் பண்டை நாளிலிருந்து, தமக்கேயுரிய தனித் தன்மை வாய்ந்த மொழிகள், மதங்கள், பண்பாடுகள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலப்பகுதிகளைக் கொண்ட இரு அரசுகள் (தமிழ் அரசு-சிங்கள அரசு) இயங்கி வந்தன.

எதிர்பார்த்த படியே 1948-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் தீவைவிட்டு வெளியேறும்போது இரு விருப்பமற்ற (ஒன்றையொன்று விரும்பாத) அரசுகளும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் விடப்பட்டன. பெரும்பான்மை கொண்ட சிங்கள இனம் மக்களாட்சி நெறிகளைப் பாழ்படுத்திவிட்டுத் தமிழ்ப் பேசும் மக்களின் புதிய எசமானர்களாக மாறி விட்டார்கள்.

**நூறு ஆண்டுகளுக்கு முன்பே வந்த தமிழர்கள்**

மற்ற இலங்கை வாழ்மக்கள் பெற்றிருந்தது போலவே எல்லா உரிமைகளையும் சுதந்தரத்துக்கு முன்பு அனுபவித்து வந்த 10இலட்சம் தேயிலை இரப்பர்த் தோட்டத் தமிழர்கள் வாக்குரிமையற்றவர்களாக்கப்பட்டு நாட்டுக்குரிமையற்றவர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டார்கள்.

எங்கும் பரவியிருந்ததுபோல் தோற்றமளித்த ஆங்கிலேயத் தோட்ட முதலாளிகள் நூற்றுக்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்னர் அழைத்து வந்த இந்தியர்களின் சந்ததியினர்தாம் தோட்டத்தொழிலாள(ர்) தமிழர்கள். எனவே அவர்கள் பெரும் பாலும் இலங்கைத் தமிழர்கள் தாம். அவர்களுக்கும் அவர்கள் முன்னோார் நாடான இந்தியாவுக்கும் எவ்வித உறவோ தொடர்போ கிடையா. இப்படியிருந்தும் கூட, 1964-ஆம் ஆண்டு மனிதத் தன்மையற்ற இரக்கமற்றவகையில், அந்தத் தமிழர்களைக் கட்டாயமாக நாடு கடத்த முடிவுசெய்தது சிங்கள அரசு. தாங்கள் பிறந்த நாட்டை விட்டு வெளியேறும் படி ஆணை பிறப்பித்தது.

## புதிய சட்டம்

கல்வி - வேலைவாய்ப்பு-மதம் - அரசியல் - பொருளாதார வளர்ச்சி-வாணிபம ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழர்களைப் புறக்கணித்து இனவெறிகொண்ட-இன வேறுபாடு காட்டும் குற்றச் செயல்களை, அடுத்தடுத்து வந்த சிங்கள அரசுகள் செய்தன.

எவ்விதத் தூண்டுதலுமன்றி இராணுவம் காவல் துறை ஆகியவற்றைக் கொண்டு, அவ்வப்போது சிங்கள அரசு தமிழர்கள் மீது வன்முறையை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி அடிமைப்படுத்த முனைந்தனர்.

நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மைத் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமல் அவர்களது ஒத்துழைப்பைப் பெறாமல் ஒரு தலையாகப் புத்த மதம்-சிங்கள மொழி ஆகியவற்றுக்கு முதலிடம் தரும் வகையில் 1972-ஆம் ஆண்டில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது

1977-ஆம் ஆண்டு, மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழீழத்திலுள்ள 19 இடங்களில் 18 இடங்களைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பெற்றது.

தனியரசுரிமை பெற்ற தமிழீழத்தை அமைக்கவே, அப்படிப்பட்டதொரு தெளிவான தீர்ப்பை ஈழத்தமிழர்கள் வழங்கினர்.

## அறவழியில் விடுதலைப்போர்

1972-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்துக்குப் பதிலாக 1978-ஆம் ஆண்டு உருவாக்கிய அரசியலமைப்புச் சட்டத்திலும் தமிழ் மக்களுக்கு எவ்விதப் பங்கும் இல்லை.

அவர்கள் மீதும், அவர்கள் நாடு (நிலப்பரப்பு) மீதும் சட்ட விரோதமாகத் திணிக்கப்பட்ட இரண்டு அரசியலமைப்புச் சட்டங்களையும் ஈழத்தமிழர்கள் எதிர்த்தனர். அறவழிக் கிளர்ச்சிகள் மூலம் தங்களது சுயநிர்ணய உரிமையையும், தன்னரசுரிமையையும் வற்புறுத்தினர்.

தமது இராணுவப் படைகள், பாதுகாப்புப் படைகள் ஆகியவற்றைக் கொண்டு, தமிழீழப் பகுதியை ஆக்கிரமிப்புச்செய்து, தமிழர்கள் மீது வன்முறையை ஏவிவிட்டுத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தனியரசுரிமையையும் மறுத்தது இலங்கையின் சிங்கள அரசு.

தனி அரசு உரிமை பெற்ற தமிழ் அரசு அமைத்திட 1977 ஆம் ஆண்டு, மேமாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெளிவான தீர்ப்பைப் பெற்றுவிட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மகாத்மா காந்தி, மறைந்த தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் போதித்துக் கடைப்பிடித்து வந்த அறவழி முறைகளில் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

**சுயநிர்ணய உரிமை**

இந்த உண்மைகளைக் (நிலைமைகளை) கருத்திற் கொண்டு, தனி அரசு உரிமை பெற்றதமிழீழம் அமைத்திட நடைபெறும் விடுதலைப் போராட்டததுக்கு ஆதரவு நல்குமாறும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வெளிப்படையாக அங்கீகாரம் செய்யுமாறும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரையும் நாடாளுமன்றத்தையும் வேண்டிக்கொள்வதென மாசசூசட்ஸ் பிரதிநிதிகள் சபை இதன் மூலம் தீர்மானிக்கிறது.

இந்தத் தீர்மான நகல்களை அமெரிக்க ஐக்கிய நாடுகள் குடியரசுத் தலைவர், நாடாளுமன்ற ஒவ்வொரு பிரிவின் அவைத் தலைவர், உறுப்பினர்கள், அயல் (வெளி விவகார) துறை அமைச்சர் உலக வங்கி இயக்குநர், மற்றும் ஐக்கிய நாடுகள் சபைச்செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பது என்றும், மேலும் தீர்மானம் செயயப்படுகிறது" இந்த நாடாளுமன்றம் இந்த அளவோடு நிற்கவில்லை. தமிழினப் படுகொலையில் ஈடுபடும் சிறீலங்காவுடன் அனைத்து நாடுகளும் பொருளாதார உறவுகளை அகற்றிக் கொள்ளவேண்டும் என்றே மறுபடியும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

''காமன் வெல்த் நாடுகள் சிங்கள மக்களின் நலனைப் பேணவோ அல்லது ஈழத்தில் வாழும் தமிழருடைய உரிமைகளைப் பறித்துப் பாரபட்சம் காட்டும் எந்த ஒரு கட்சிக்கும் உதவியளிக்கவோ கூடாது என்று மாசசூசெட்சு நாடாளுமன்றம் விரும்புகிறது'' என்று 9. 6. 1983இல் ஒருதீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

**பிரதமர் இந்திராவே நீதிபதி**

இத்தகைய நிலைகளில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்களை உணர்ந்து, 'தமிழ் ஈழம்' அமைவதே சரியான தீர்வாகும் என்பதை ஏற்றுத் தங்களால் ஆன உதவிகளையும், ஆதரவு நிலைகளையும் நிதியாக, சட்டமன்றத் தீர்மான-மாக, செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளாகத் தந்து செயல்படுத்தி வருகின்றனர்.

உண்மையில் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உடனடியாக முடிவெடுக்க வேண்டியது எந்தநாடு? முடிவெடுக்க வேண்டிய முதல் மனிதர் யார்? எவர் முடிவு செய்தால் அது இறுதித் தீர்ப்பாக அமையும்?

ஆம்; இந்தியா முடிவெடுக்க வேண்டும்.

பிரதமர் இந்திராதான் தீர்ப்பு எழுத வேண்டும்.

# 19. இந்தியாவின் அணுகுமுறை

இதுவரை ஈழநாட்டு வரலாறு, சிங்களர்கள் தமிழர்களைத் தொடர்ந்து அழித்து வரும் போக்கு, தொடர்ந்து ஏற்பட்ட இனப்படுகொலைகள், இந்நிலை-யில் இதற்கொரு தீர்வாகக் கருதப்படும் தமிழ்ஈழக் கோரிக்கை, அதில் தீவிரவாதிகள், மிதவாதிகள் நிலை-மை, இந்தியத் தமிழர் சிக்கல்கள், வெளிநாட்டு ஆதரவு முயற்சிகள் ஆகியவற்றைப் பார்த்தோம்.

உண்மையில் ஈழத்தமிழர்களின் சிக்கல்கள் தீர்ந்து இனிமேல் எந்த இனப்படுகொலையும் நேராமல் தவிர்க்கப்பட வேண்டுமானால் அதற்குஇரண்டுவழிகள் உண்டு. ஒன்று உலகநாடுகள் இதில் கவனம் செலுத்தித் தங்கள் தெளிவான கருத்து, முறையான தலையீட்டால் தீர்வு காண்பது. மற்றொன்று பிரதமர் இந்திராஅம்மையார் இதில் முழுக்கவனம் செலுத்தி உடனடியாகத் தீர்வு காண்பது. இதில் பின்னதே வலிமையானது; உறுதியானது.

இப்போது நாம் இந்தியாவில் இருக்கிறோம். இலங்கைத் தமிழர் இன்னல் தீரும் என்ற எதிர்பார்ப்போடு டெல்லியை வலம் வருகிறோம்.

**பிற நாடுகளைப் பற்றி**

இந்தியா கடந்த காலங்களில் வேறு சில நாடுகளில் இனப் பிரச்சனை ஏற்பட்ட போது என்ன கருத்தைத் தெரிவித்தது? எப்படிச் செயலாற்றியது என்பதைக் காண வேண்டும்.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாக அமைந்துள்ள பக்டூனிஸ்தானில் சில பிரச்சனைகள் எழுந்தன. எல்லைப்புற மாநிலம் என்று பெயர்பெற்ற இப்பகுதியில் பட்டாணியர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். அவ்வேளையில் எல்லைக் காந்தி என்ற சிறப்புப்பெயர் பெற்றவரும் மகாத்மாகாந்தியின் தோழருமான கான்அப்துல் கபார் கான் இருபது ஆண்டு காலத்துக்கு மேல் அந்த நாட்டின் சிறையில் வைக்கப் பெற்றார். அவர் விடுவிக்கப்பட்ட பிறகு அவரை இந்தியாவிற்கு அழைத்து வந்து இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத் தலைநகர்களிலும் அவருக்கு வரவேற்புக் கொடுத்தார்கள்.

**இந்திரா முழக்கம்**

இந்தியாவிலிருந்து அவருக்குப் பலகோடி ரூபாய் மதிப்புள்ள நிதி திரட்டிக் கொடுக்கப்பட்டது. அது மட்டு

மின்றி எல்லைக்காந்தியின்,பக்டூனிஸ்தான்' கோரிக்கைக்கு முழு ஆதரவு கொடுத்து முழங்கினார் நம் பிரதமர். இந்தியாவிற்கு நேர் எதிராக எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சனையில் இந்தவகையில் தலையிட்டோம்.

அந்த நாட்டினுள்ளே உள்ள பக்டூனிஸ்தானை ஆதரிப்பதன் மூலம் பாகிஸ்தானின் கோபத்தையும், எரிச்சலையும் பெற்றோம். எனினும் 'இது மனிதாபிமானக் கண்ணோட்டம்' என்று சொல்லி நாமே தெளிவு படுத்திக்கொண்டோம். (கடந்த 26-8-1983 இல் கூட எல்லைக் காந்தி மோசமாக நடத்தப் பட்டுள்ளார் - நமது பிரதமர் கவலை தெரிவித்துள்ளார்.)

**வங்காள தேசம் பிரியக்காரணம்**

அடுத்து, நம் பேச்சில் அடிக்கடி அடிபடுகின்ற பங்களாதேஷ் எனப்படும், வங்கதேசப்பிரச்சனை. பாகிஸ்தானின் மற்றொரு பகுதியாகிய வங்கதேசத்தில் புரட்சி வெடித்தது. மக்கள் அடக்குமுறையிலிருந்து விடுதலை வேண்டி எழுந்தார்கள்.

பாகிஸ்தான் இராணுவம் அவர்களைக் கொடுமைப் படுத்தியது. இனப்படுகொலைகள் (GENOCIDE) தலை விரித்தாடின. கொடுமை தாங்க முடியாமல் தனிநாடு கோரினார்கள். முஜிபுர் ரஹிமான் தலைமையில் புரட்சிப் படை அமைந்தது. புரட்சி அரசும் அமைக்கப்பட்டது. இது உள்நாட்டுப் பிரச்சனை என்று இந்தியா ஒதுங்கியிருக்கவில்லை.

இரண்டு வகையில் செயலாற்றியது. ஒன்று உலக நாடுகளுக்கெல்லாம் தன் தூதர்களை இந்தியா அனுப்பி ஆதரவு திரட்டியது. பிரதமர் இந்திராவே இலண்டன் வாசிங்டன், பாரீஸ், மாஸ்கோவிற்கெல்லாம் போனார். பலநாட்டுத்தலைவர்களை எல்லாம் சந்தித்து இத்தகைய இனப் படுகொலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமெனக் கோரினார்.

**இலங்கையைப்போல் எந்த நாட்டிலும் நடக்கவில்லை :**

அங்கு பலர் படுகொலை செய்யப்பட்டார்கள், பல பெண்களின் கற்பு சூறையாடப்பட்டது. (இலங்கையைப் போலச் சிறைச்சாலையில் யாரையும் கொல்லவில்லை — வாயில் பெட்ரோலை ஊற்றித் தீ வைக்கவில்லை — கோவில்களை இடித்துத் தரைமட்டமாக்கவில்லை)

வங்க தேசப் புரட்சி அரசு அழைப்புவிட்டது. நம் பிரதமர் ஒரு நிமிடமும் யோசிக்காமல் நமது படைகளை அனுப்பவேண்டி வந்தது. (மேற்கு வங்க முதலமைச்சர் சித்தார்த்தசங்கர்ரேயின் சீற்றமும் காரணமாக இருக்கலாம்-இது அடுத்த கட்டுரையில் இடம்பெறும்)

பாகிஸ்தானின் இராணுவத்தை முறியடித்து, வங்க தேச விடுதலையை வாங்கித் தந்தவரே பிரதமர் இந்திராகாந்திதான், இந்தியாவின் இந்த வெற்றி கண்டு நாம் உள்ளபடியே பூரிப்படைந்தோம். 'வங்க தேசம்' பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சனை என்று இந்தியா ஒதுங்கிக் கொள்ளவில்லையே ஏன்?

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்**

பாலஸ்தீனப் பிரச்சனைக்கு வருவோம். பாலஸ்தீன மக்களின் சொந்த மண்ணை யூதர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இஸ்ரேல் நாட்டை உருவாக்கினார்கள். நாடற்றுச் சிதறிக் கிடக்கும் பாலஸ்தீன மக்கள் தங்கள் தாயகத்தை மீட்கும் போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோன்றியது.

இந்தவிடுதலை இயக்கத்தைச் சட்டபூர்வமான அரசியல் இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான அரசியல், பொருளாதார, மானசீக உதவிகளை அளிக்க வேண்டும். பாலஸ்தீன விடுதலைக்கான தொண்டர்களைத் திரட்டும் நிலையங்களைத் திறக்கவேண்டும்; பிலிப்பைன்ஸ் நாட்டுத் தென் பகுதி-

யிலும் மிண்டனோ, கழு போன்ற தீவுகளிலும் சிறு-பான்மையினராக வாழும் 36 இலட்சம் முஸ்லிம் பெரு-மக்கள் கொடுமைப் படுத்தப் படுவதைக் கண்டிப்பதோடு, அந்த நாட்டுக்கு ஒரு தூதுக் குழுவையும் அனுப்பவேண்டு மென்று சிலர், தீவிரமான திட்டங்களைத் தீட்டினர். லிபியாவின் இரட்டைத் தலைநகர்களில் ஒன்றான பெங்காஸியில் கூடிய உலக இசுலாமிய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள் மாநாடு தான் இந்தத்திட்டத்தைத் தீட்டியது.

**இந்திரா வரவேற்பு**

அவர்கள் இன மக்களுக்காக அவர்கள் (பல நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள்) திட்டம் தீட்டு கின்றனர். இந்தியாவும் பாலஸ்தீனப் பிரச்சனையில் தன் பங்கை மிக அருமையாகச் செய்துள்ளது. பாலஸ்தீனத்தை அங்கீகரித்து அதன்தலைவர் யாசர் அராபத் டெல்லிக்கு வரும் போது விமான நிலையத்திலேயே சென்று வரவேற்றுத் தன் ஆதரவை வெளிப்படுத்தியது.

எங்கேயோ இருக்கும் பாலஸ்தீன விடுதலைக்கு இந்தியா குரல் கொடுக்கிறது. பிரதமர் இந்திரா வரவேற்பளிக்கிறார்.

இவை மட்டுமல்ல; இனவெறிக்கே பெயர் பெற்ற தென் ஆப்பிரிக்கப் பிரச்சனையில் இந்தியாவின் அணுகு முறை என்ன என்று பார்க்க வேண்டும். தென் ஆப்பிரிக்-காவில் கருநிறம் படைத்த காரணத்துக்காகவே நீக்ரோக்கள் பழிக்கப்பட்டனர் - ஒதுக்கப் பட்டனர். அது மட்டு மல்ல, அங்கு வாழும் இந்தியர்கள் இனக்கொடுமைக்கு ஆளானார்கள். இந்த நிலையில் இந்தியா சிலிர்த்-தெழுந்தது. இந்தியர்களுக்கு ஓர் இழுக்கா என்று கொதித்தது.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளோடு எல்லாம் தொடர்பு கொண்டு ஒன்று திரட்டி ஐ. நா. அவையில் இந்தப் பிரச்சனையை எழுப்பியது. அனைவரது கருத்துகளை

யும் திரட்டியது. தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தி ஐ. நா. அவையிலிருந்தே தென் ஆப்பிரிக்காவை நீக்கி வைத்த பெருமை இந்தியாவுக்குத்தான் உண்டு. அதுமட்டு மின்றி உலகத்திலேயே இந்தியாவால் முற்றிலும் ஒதுக்கி வைக்கப் பட்ட நாடு தென் ஆப்பிரிக்கா தான். நமக்கு வழங்கப்படும் இந்தியக் கடவுச் சீட்டில் (INDIAN PASS PORT) தென் ஆப்பிரிக்கா மட்டும் நீக்கப்பட்டிருப்பதை அனைவரும் காணலாம்.

ஏன் இவ்வளவும்? இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடித்து இந்தியர்களை ஒதுக்கியது என்பதற்காகத் தான்.

அறிவாளிகளே! கொஞ்சம் சிந்தியுங்கள். பக்டுனிஸ் தான், வங்கதேசம், பாலஸ்தீனம், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளின் பிரச்சனையில் இந்தியா தீவிரமாகத் தலையிட்டிருக்கிறது. இப்படித் தலையிடலாமா? அவர் களுக்குத் தோன்றிய சிக்கல்கள் அவரவர் உள்நாட்டுப் பிரச்சனை அல்லவா? அவை உள்நாட்டுப் பிரச்சனை என்று சொல்லி ஏன் இந்தியா ஒதுங்கிக் கொள்ளவில்லை?

ஒரே காரணம் தான்-அநீதியும் அக்கிரமமும் எங்கெல் லாம் தலை தூக்குகின்றனவோ அங்கெல்லாம் இந்தியா நீதிக்காக வாதாடும் — போராடும் — மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் தண்டிக்கும்; இதுதான் இந்தியா வின் அணுகுமுறை.

**உள்நாட்டு அணுகுமுறை.**

இந்தியாவின் அணுகுமுறை உள் நாட்டைப் பொறுத்தவரை எப்படி உள்ளது என்று பார்க்க வேண்டும்.

காஷ்மீரைப் பொறுத்தவரையில் பிரச்சனைகளில் நேரடியாகத் தலையிட்டு உடனடியாகக் கருத்துத் தெரி- விக்கவோ, தீர்வு நோக்கி நகரவோ நம் பிரதமரால் இயலாது எனும் சூழ்நிலை உருவாகியுள்ளது. காஷ்மீர் பிரச்சனைகள் பற்றிப் பேசும் போது சிந்தித்து இறங்க வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது.

அசாம் பிரச்சனையோ பெரிதாக வளர்ந்து விட்டது. ஒரு கோடிப்பேருக்கு மேல் வங்க தேச அகதிகள் அசாமுக்குள் நுழைந்து ஆக்கிரமிப்புச் செய்து அதனால் பெரிய பிரச்சனையே உருவாகி விட்டது என்கிறார்கள்.

**திணறல் :**

அங்குத் தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் திணறும் நிலை ஏற்பட்டு விட்டது.

வங்கதேச மக்களை வரவிடாமல் தடுக்க முள்வேலி அமைக்கலாமா என்று மத்திய அரசு சிந்திக்கிறது.

பிரதமர் அசாமின் பிரச்சனையை அவ்வளவு எளிதாகப் பேசித் தீர்த்துவிட முடியும் என்ற அளவுக்குச் சூழ்நிலைகள் இல்லை என்பதை நாம் அறிவோம்.

அடுத்தது பஞ்சாப் நிலவரம். மிகப்பெரிய காவல் துறை அதிகாரிகளைக் கொன்றவர்களைக் கூடக் கைது செய்ய முடியாமல் ஒரு தேக்கம்.

**மிகுந்த கவனத்துடன் :**

பொற்கோவிலுக்குள் ஒளிந்து கொண்டிருப்பவர்களை வெளியே கொண்டு வர முடியாத ஒரு சூழ்நிலை. இதற்கிடையில் காலிஸ்தான் கோரிக்கை வேறு. பிரதமர் மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டிய நெருக்கடி. சீக்கிய மக்கள் எப்படிக் கொதித்தெழுவார்களோ என்று சொல்ல முடியாத ஓர் அச்சச் சூழ்நிலையும் உண்டாகியுள்ளது.

இம்முறை இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழ்நாடு கொதிப்படைந்த அளவு ஒரு காலத்திலும் நடந்ததில்லை.

ஒவ்வொரு தமிழனும் இதைப் பற்றியே பேசுகிறான். ஊர்வலமோ, உண்ணாநோன்போ, பொதுக் கூட்டமோ ஏதாவதொன்றில் பங்கு கொண்டு தனி ஈடுபாட்டைக் காட்டிக் கொண்டிருக்கின்றான். தமிழக வரலாற்றில்

இப்படியொரு முழுமையான தோய்வு ஏற்பட்டதில்லை. இந்த ஒருமுகமான முயற்சியும், நம் ஓங்கிய குரலும், பிரதமர் இந்திரா அவர்களைப் பயபபடச் செய்திருக்குமா? பஞ்சாப், அசாம் குறித்துப் பிரதமர் அச்சம் கொண்டிருக்கக் கூடும் என்பதே நம் கருத்து.

**கவலை—கண்டனம்**

இலங்கையில் இவ்வளவு படுகொலைகள் நடந்துள்ளன. வீட்டில் நெருப்பு வைக்கப்பட்ட நிலையில் ஆடையிலும் தீப்பற்றி, அதைக் களைந்து விட்டு வெளியே ஓடி வரும் போது இராணுவம் இழுத்துப் போய்க் கற்பழிக்கும் கொடுமைகள் எத்தனை! இவ்வளவுககும் பின்னால், இந்தியர்கள் தங்கள் சொத்து, சுகம், மனைவி மக்கள் அனைத்தையும் இழந்ததற்கும் பின்னால் பிரதமர் தன் கவலையைத்தான் வெளியிட்டிருக்கிறாரே தவிரக் கண்டனத்தை வெளியிடவில்லையே!

அவர் அப்படிக் கண்டனம் தெரிவிக்காதது தவறு என்பதால் தானே குமரி அனந்தன் கூட 'இந்திராவின் கொடும்பாவி'யை எரிக்கும் போராட்டத்தில் இறங்க நேர்ந்தது. பிரதமர் இப்படி நடந்து கொண்டதால் சிங்கள வெறியர்களுக்கு ஊக்கம் பற்றிவிட்டது. அவர்களே சொல்லித்தான் அடித்திருக்கிறார்கள் — 'இந்தியா எங்களை ஒன்றும் கேட்காது என்று சில சிங்கள வெறியர்கள் சொல்லிக் காட்டியே குத்திக் கொன்றிருக்கிறார்கள். சிங்கள வெறியர்கள் குத்திக கொன்றதை விட எங்கள் பிரதமர் எங்கள் இதயத்தைக் குத்திக் கொன்றதைத்தான் எங்களால் சகிக்க முடியவில்லை.

'The most unkindest cut of all' என்று எங்கேயோ படித்தது நினைவுக்கு வருகிறது. இந்த இலக்கிய வரிக்கு எங்களுக்கு இபபோது தான் பொருள் புரிகிறது.

உண்மையில் பிரதமர் மட்டும் சூலை 23 அல்லது 24 ஆம் தேதியே ''இலங்கையில் நடைபெறும் படுகொலை' யை வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கை அரசு

உடனடியாக வன்முறைகளில் இறங்குவதை நிறுத்த வேண்டுகிறோம். அப்படியும் மீறி இந்தியத் தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் மானத்திற்கும் கேடு வருமானால் இந்தியா நேரடி நடவடிக்கையில் இறங்குவது தவிர்க்கமுடியாதது. இந்தியத் தமிழர்களைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்றால் இந்தியா பதிலடி கொடுக்கத் தயங்காது" என்று மட்டும் சொல்லியிருந்திருப்பாரானால் — மனந்திறந்து சொல்கிறேன் — பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் உயிர் தப்பியிருப்பார்கள் — தாய்க்குலம் தன் மானத்தையும் உயிரையும் இழந்திருக்காது. நிலைமைகள் எவ்வளவோ மாறிப் போயிருக்கும் ஆனால் பிரதமர் கண்டனம் கூடத் தெரிவிக்கவில்லையே 'கவலை' தானே தெரிவித்திருக்கிறார்.

பாஞ்சாலியைத் துச்சாதனன் தெருவில் இழுத்துக் கொண்டு போகும் போது ஊர் மக்களெல்லாம் பார்த்துக் கவலைப்பட்டார்கள். கண்ணீர் விட்டார்கள், புலம்பினார்கள்; என்ன பயன்? பாஞ்சாலிக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தீர்க்க இந்தக் கவலையும், கண்ணீரும் உதவினவா! இல்லையே! 'அவையில் துகிலுரியப்பட்டாளே! பாஞ்சாலி!

இப்படி மக்கள் நடந்திருக்கக் கூடாது; எவனாவது தலையிட்டுத் துச்சாதனனைத் தடுத்திருக்க வேண்டும்; தட்டிக் கேட்டிருக்க வேண்டும். பாஞ்சாலியை விடுவித்து அவளை அவளது அந்தப்புரத்தில் கொண்டு போய்ச் சேர்த்திருக்கவேண்டும் என்று தானே பாரதி விரும்பினான்.

'ஊரவர் தம் கீழ்மை உரைக்குந் திறனாமோ!
வீரமிலா நாய்கள்!

பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ!
என்பவை பாரதியாரின் வரிகள்.

இப்போது கேட்கிறேன்; நமது பிரதமரின் கவலை உயிரை விட்டுக்கொண்டிருந்த இந்தியத் தமிழர்களுக்குப்

பயன்படுமா? பயன்பட்டதா? இந்தியப் பிரதமர் ''கவலை'' என்று சொல்லுவதற்கே ''கண்டனம்'' என்று தான் பொருள் என்கிறார்கள், நான் படித்த தமிழில் எனக்கு இதுவரை இப்படியொரு பொருள் இருப்பது தெரியவில்லை. வைகுந்தவாசன் வரவேற்பு நிகழ்ச்சியில் பாரதிதாசன் வரிகளைச் சொல்லி வீரத்தோடு பேசிய காங்கிரஸ் காரர்களை நான் அறிவேன். அவர்களாவது கவலையும் கண்டனமும் ஒரே பொருளைத் தான் குறிக்கின்றன என்று நெஞ்சாரச் சொல்வார்களா?

**பிரதமர் பயந்தவரா?**

நமது பிரதமர் மிகவும் துணிச்சல்காரர் என்பதை ஆயிரம் மேடையில் சொல்லமுடியும். நாம்படைஎடுப்பதின் மூலம் தான் பிரச்சனை திரமுடியும் என்றால் பிரதமர் இந்திரா அதற்குத் தயக்கம் காட்டக் கூடியவர் அல்ல என்பதை நாடே அறியும். இந்தக்கருத்தில் நான் நூற்றுக்கு நூறு உடன்பாடானவன். வெறும் ஒன்றரைக் கோடி மக்கள் தொகையைக் கொண்ட இலங்கை அரசுக்கு 70 கோடி மக்களைக் கொண்ட இந்தியா பயப்பட வேண்டுமா என்பதுதான் கேள்வி. நம் தோழர்கள் சொல்வது போல அமெரிக்கா பிறகு போரில் இறங்கும் என்று பிரதமர் பயப்படுகிறாரா? அமெரிக்கா இறங்கினால் ரஷ்யா பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கும் என்று அவர் கருதுகிறாரா? இல்லை; அறவே இல்லை.

இந்தப் பயம் நம் பிரதமர்க்கு இருக்குமானால் அவர் இனி ஒரு காலத்திலும் போரில் இறங்கப் போவதில்லை. இலங்கை அரசை அச்சுறுத்தி வழிக்குக் கொண்டுவரப் போவதில்லை. ஏன்? நம் இராணுவத்தை உள்நாட்டுச் சிக்கல்களுக்கு அனுப்பிவைப்பதைத் தவிரப் போர்களுக்கு அனுப்பப் போவதில்லை. மொத்தத்தில் நமது இராணுவம் இனித் 'துருப்பு' என்ற பெயரோடு விளங்காது, துருப்

பிடித்ததாகத் தான் விளங்கும். கட்டிப்போடப்பட்ட படைக்குதிரைகளைச் சென்னைக் கடற்கரையில் அன்றாடம் கொஞ்சநேரம் காலார ஓட விடுகிறார்களே அது போல அவ்வப்போது நமது இராணுவம் சில மாநிலங்களுக்குப்போய்த்திரும்பி வரும் அவ்வளவுதான்.

உண்மையில்நம் பிரதமர் இப்படியே தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரா? நான் நம்பவில்லை. அப்படியானால் அவர் அணுகுமுறைதான் என்ன?

தமிழர்கள் தானே! இதற்காகப் போய் இராவணுத்தின் ஆற்றலை வீணாக்க வேண்டுமா என்று நினைக்கிறாரா?

முப்புறமும் கடலை எல்லையாகக் கொண்டுள்ள தமிழர்களின் பிரச்சனையாக — இந்தியத்தமிழர்களின் பிரச்சனை உருவானபோது கூட நம்கப்பற்படை உறுமிக் கூடப் பார்க்கவில்லை; இருமிக்கூடக் காட்டவில்லை என்றால் ...?

அறிவுடையோர் சிந்தித்து விடைகாணட்டும்.

## 20. இலங்கைப் பிரச்சனையும் இந்தியாவின் பிரதமர்களும்

நம் நாட்டின் ஒவ்வொரு பிரதமரும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளை எப்படி அணுகினார்கள் என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் நமக்கு ஒரு தெளிவு பிறக்கும். நேரு பெருமகனார் பிரதமராக இருக்கும் வரையில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுக்கு எந்தக்கொடுமையும் நிகழ்ந்ததில்லை என்று நிமிர்ந்து நின்று கூற வேண்டும்.

### நேருவிடம் வாலாட்ட முடியவில்லை

1948-ஆம் ஆண்டு தோட்டத் தமிழர்கள் — இந்தியத் தமிழர்களின் குடியுரிமையைப்பறித்து நாடற்றவர்க

ளாக்கிய இலங்கைச்சிங்கள அரசு அவர்களை இந்தியாவிற்கு அனுப்பிவிட எண்ணி இந்தியாவை அணுகிய போது அன்றையப் பிரதமர் நேரு அத்தகைய போக்கை வன்மையாகக் கண்டித்தார் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். நேரு உயிருடன் இருக்கும் வரையில் இலங்கை அரசு வாலாட்டாதவாறு பார்த்துக் கொண்டார். அவர் காலத்தில் நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவுக்கு வலிந்து அனுப்பப்படவில்லை என்பதையும் நாம் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இதே அணுகுமுறையைத் தான் சீன அதிபர் சூஎன்லாய் கடைப் பிடித்ததாகச் சொல்வார்கள். தான் பொறுப் பேற்றவுடன் சீனர்கள் மிக அதிகமாக வாழும் பெரிய நாடுகளுக்குத் தானே நேரில் சென்றும், தூதுவர்கள் வாயிலாகவும் அந்தந்த நாட்டு அதிபர்களுடன் சில ஒப்பந்தங்களைச் செய்ததுடன் அதனைக் கண்டிப்பாகவும் தெரிவித்திருந்தார். அந்தந்த நாட்டில் வாழும் சீனர்களுக்குத் தேவையான, நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும் என்றும், அனைவருக்கும் அந்தந்த நாட்டுக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் எந்தக் காரணம் கொண்டும் சீனர்களைச் சீனாவுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்து அருமையான ஏற்பாடுகளைச் செயதார். அதனால் தான் மலேசியாநாடு சீனர்கள் மேலாதிக்கம் பெற்ற நாடாக விளங்குகிறது. சிங்கப்பூர் நாடு 'லீகுவான் யூ' எனும் சீனரைத் தலைவராகக் கொண்டு சிறந்து விளங்குகின்றது.

நேரு காலத்தில் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாகவில்லையே தவிர நாடற்றவர்கள் எனும் நிலையைச் சட்டப்பூர்வமாகப் பெற்று விட்டார்கள். இதையும் தகர்த்து அன்றே அவர்கள் இலங்கைக் குடியுரிமை பெறுமாறு செய்திருந்தால் இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

இது நிற்க, நேருவுக்குப் பின் வந்த இலால்பகதூர் சாஸ்திரி தான் இந்தியத் தமிழர்களின் இக்கட்டான நிலைக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர். 1964-இல் ஏற்பட்ட சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம்தான் 6இலட்சம் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிட அனுமதி வழங்கியது. தாங்களாக வந்தவர்கள், தள்ளப்பட்டு வந்தவர்கள் போகத் தங்கிவிடலாமே என்று நினைத்த தமிழர்கள் தான் இன்று தாறுமாறாக விரட்டப் பட்டவர்கள்.

இலங்கையில் இனியும் இருக்கத்தகுதியற்றவர்கள் என்று சாஸ்திரி தந்த பட்டயப்படி இலங்கையில் என்ன - இந்த உலகத்திலேயே இருக்கத் தகுதியற்றவர்கள் என்று சிங்கள வெறி அரசு முடிவெடுக்கும் அளவுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் இந்தத்தமிழர்கள் தான். ஆனால் அதே நேரத்தில் இலங்கை அரசு, தான் ஒப்புக்கொண்டபடி மூன்றேமுக்கால் இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கியதா என்றால் அது தான் இல்லை.

இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களே அதையும் திரும்ப ஒப்படைத்து விட்டு ஓடி வரும் நிலை தான் நாம்கண்ட மிச்சம். ஒப்பந்தம் இப்படி இலட்சணம் கெட்ட முறையில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

**கச்சத்தீவைத் தானம் கொடுத்த இந்திரா**

அடுத்து வருபவர் பிரதமர் இந்திரா. கச்சத்தீவு பிரச்சனை இப்போது தான் வருகிறது. 1955 ஆம் ஆண்டிலேயே இலங்கை அரசு திடீரென்று தன் கடற்படை வீரர்களுக்குப் பயிற்சிதரும் இடமாகக் கச்சத்தீவைத் தேர்ந்தெடுத்தது. இந்திய அரசு அந்த முடிவைக் கண்டித்தது. 1956 இல் மீண்டும் இலங்கை அரசு கச்சத்தீவில் கடற்படையை இறக்கியது இந்தமுடிவை இந்திய நாடாளுமன்றத்தில் பலரும் கண்டித்தார்கள். கச்சத்தீவு உடமை பற்றி இறுதி முடிவு எடுக்கும்வரை இலங்கை அரசு

எடுக்கும் எல்லா முடிவுகளும் ஒத்தி போடப்பட வேண்டு மென்று இந்திய அரசு வலியுறுத்தியது. இலங்கை அரசும் உடனே ஒப்புக்கொண்டது.

நேரு காலத்தில் கச்சத்தீவு பறிபோகவில்லை; இலங்கை அரசின் கப்பற்படை கச்சத்தீவில் இறங்கிவெறும் பயிற்சி பெறக்கூட அனுமதிக்கப்படவில்லை. ஆனால் 1974 ஆம் ஆண்டில் நம் பிரதமர் இந்திரா திடீரென்று கச்சத்தீவை இலங்கை அரசிடம் தூக்கிக் கொடுத்து விட்டார். ஏன் இந்த அவசரம்? என்ன அப்படி உடனடித் தேவை? இலங்கை அரசுடன் நட்புப் பாராட்ட வேண்டும்; அதற்கு ஏதாவதொரு அன்புக் காணிக்கை வேண்டாமா? இருக்-கவே இருக்கிறது இளிச்ச வாய்த் தமிழர்களின் அருகில் இருக்கும் கச்சத்தீவு; பிரதமர் கொடுத்து விட்டார். கச்-சத்தீவு பறிபோய்விட்டது. கச்சத்தீவில் வழக்கமாக ஒரு திருவிழா நடைபெறும். அப்போது இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் பலர் அங்கு செல்வார்கள், பழகி மகிழ்வார்கள்.

ஆனால் 23-3-1974இல் அப்படி விழா நடந்தபோது எந்த வகை முன்னறிவிப்புமின்றி இலங்கை இராணுவம் கச்சத்தீவில் வந்து இறங்கியது—அதிகாரம் செய்தது. இதற்கு இந்திய அரசு எந்தவித எதிர்ப்பும் காட்ட-வில்லை.

**விலா எலும்பை முறிக்கிறது.**

இன்று இராமேசுவரம் மீனவர்கள் மழைக்கும் புய-லுக்கும் அஞ்சி ஒதுங்கினாலும் கச்சத்தீவு இராணுவம் விலா எலும்பை முறிக்கிறது,

இந்தியாவோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறிச் செயற்படுகிறது இலங்கை அரசு. இந்தியாவிற்குச் சொந்தமான கச்சத் தீவை இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் ஒப்பந்தம் செய்து தனதாக்கிக் கொண்ட இலங்கை அரசு கடந்த சில ஆண்டுகளாக

அந்தக் கச்சத்தீவு ஒப்பந்தத்திலுள்ள இந்தியாவின் நலன்கள் குறிக்கும் விதிகளை மீறி வருகிறது. கச்சத்தீவு ஒப்பந்தத்தில் 5-ஆவது விதி "இந்திய மீனவர்களுக்கும், யாத்ரீகர்களுக்கும் கச்சத்தீவுக்கு வருகை தருவதற்கான உரிமை கிடைக்கும்" என்று கூறுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த விதியை முற்றாக மீறி வருகிறது இலங்கை அரசு. பாதுகாடபின்மை என்றும், காலரா நோய் என்றுப ஆண்டுச்கொருகாரணத்தைக்கூறிஇந்தியப் பயணிகளைக் கச்சத்தீவுக்குவழிபாட்டுக்குச்செல்லவிடாது தடுத்து வருகிறது இலங்கை அரசு. அத்துடன் அதே ஒப்பந்தத்தில்"சிறீலங்காவனதும் இந்தியாவினதும்கப்பல் வழிவழி மரபாக அனுபவித்து வந்த, அடுத்தவர் அதிகாரத்தில் உள்ள நீாப்பகுதியில் மிதக்கும உரிமையைப் பெறம" என்ற 6ஆவது விதியையும் சிங்கள அரசு முற்றாக மீறி வருகிறது. இநதியப் பகுதிக் கடலுக்குள் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கடலில் வைத்துத் தாக்குவதும் பிடித்துச் செல்வதும் அவர்கள் பிடித்த மீன்களையும், வலைகளையும் அபகரித்துச் செல்வதும் வழமையான நிகழ்ச்சியாகி விட்டன.

இன்னும் நமது முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் இருக்கிறார். அவர் பங்கு என்ன என்று நாம் கூறுவதை விடப் பிரதமர் இந்திராவே கூறியிருப்பதைச் சொன்னால் தான் பொருத்தமாக இருக்கும். சிறீலங்காவின் தற்போதைய அரசுடன் நட்பாக இருக்கவேண்டுமென்பதற்காக, ஜனதா அரசாங்கம் வழிமாறிச் செல்கிறது என்று 1979 - இல் இந்திரா அம்மையார் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இப்படி நேருவுக்கு அடுத்த ஒவ்வொருவரும் அவரவர் பங்குக்கு இலங்கை அரசுடன் இணக்கம் காட்டி ஒப்பந்தம் செய்து, தானம் கொடுத்து, நட்புப் பாராட்டியதன் மொத்த விளைவுதான் தமிழர்கள் இன்று மொத்து வாங்குவது.

**பிற அமைச்சர்கள்**

இந்நிலையில் இந்திய அரசின் இன்றைய அமைச்சர்கள், நம பிரச்சனைகளோடு தொடர்பு உடைய அமைச்சர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தமிழர்களின் பரிதாபநிலைமை பளிச்சென்று தெரிந்துவிடும். முதலில் நம் இராணுவ அமைச்சரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக நாம் என்ன நினைப்போம்! தமிழர்களுக்கு உயிர்ப்பிரச்சனைகள் எழுந்து இந்தியா தலையிட்டால் பிழைக்கலாம் என்ற எதிர் பார்ப்பும் வளர்ந்து சீதை, இராமன் வருவான் என்று திசைகளை அளந்தது போல், இந்திய இராணுவம் வந்து எப்படியும் காப்பாற்றும் என்று இந்தியத் தமிழர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடி ஒளிந்தபோது நம் இந்திய இராணுவம் இதைப் பற்றிக் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. அடடா! நம் தமிழ நாட்டுக்காரர் ஒருவர் இந்த நேரத்தில் இராணுவ அமைச்சராக இருந்தால் ... என்று நாம் கனவு காணவேண்டியதாகிவிட்டது.

எல்லாம் சரி; பயன்? விளைவு? இராமன் (வெங்கட்ராமன்) இலங்கைப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே? நம் சீதை கற்பிழக்கும் போது கனைத்துக் கூடக் காட்டவில்லையே!

அடுத்து இந்திய வெளி விவகார அமைச்சர் ரகீம் அவர்களைக் குறிப்பிட வேண்டும். ஜெனிவாவில் நடந்த மனித உரிமைகள் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டார்.

**வாயைத் திறக்கவில்லையே**

ஆனால் இலங்கைப் படுகொலை பற்றி — மனித உரிமைகள் இப்படிப் பறிக்கப்படக்கூடாது என்ற பொதுத்தன்மையிலாவது கண்டித்திருக்க வேண்டாமா-வாயைத் திறக்க வில்லையே!

அடுத்தது மிகச்சிறப்பாக்க் குறிப்பிட வேண்டிய நமது வெளி விவகார அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் நம் பக்கத்து ஊர்க்காரர் தான். இவர் இலங்கைக்குச் சென்ற நேரம் சரியான நேரம். இவரது இலங்கைப் பயணம் சிங்களர்களைப் பயமுறுத்தியது. எனினும் எந்தப் பயனும் விளைவிக்காமல் போய்விட்டது, இவரது நிலைபற்றி நான் சொல்வதைவிட ஜான்கென்னடி சொல்வதைத் தான் மேற்கோள் காட்ட வேண்டும். ஜான் கென்னடி என்றால் அமெரிக்காவின் பழைய அதிபரா என்று கருதி ஏமாறவேண்டாம். இலங்கையைச் சுற்றிப் பார்க்கப்போய் இரவு பகலாக ஓடிஓடி ஒளிந்து பட்டினி கிடந்து அடிவாங்கி, உதைவாங்கி, இலங்கை முழுவதையும் பயணச் செலவு இல்லாமலேயே நன்றாகவே சுற்றிப் பார்த்து (?) உயிர்தப்பி வந்து சேர்ந்த ஜான்கென்னடி இவர். இளையான்குடிப் பகுதியைச் சேர்ந்த இவர் கூற்றையே உங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

''நரசிம்மராவ் வந்த போது கொழும்பு நகரமே பற்றி எரிந்து கொண்டிருந்தது; எங்கு பார்த்தாலும் புகை மண்டலமாக இருந்தது.

நரசிம்மராவ் வருகையை ஒட்டிச்சிங்களர்கள் மத்தியில் பயம் ஏற்பட்டது. இந்திய இராணுவம் வந்துவிடும் என்று கருதினார்கள். இதனால் அமைதியானார்கள்; ஆனால் மறுநாள் நரசிம்மராவ் கொடுத்த செய்தி பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்ததும். சிங்களர்கள் மறுபடியும் கலவரத்தில் ஈடுபட்டனர் (மாலை முரசு 27-8 83)

29-7-83—இல் அங்குசென்ற நரசிம்மராவின் அணுகுமுறை தெளிவாக இருந்திருந்தால் தொடர்ந்து கலவரம் நடை பெறாமல் சில ஆயிரம் தமிழர்களாவது உயிர் பிழைத்திருப்பார்கள்.

**தூதரகம்**

இலங்கையில் உள்ள இந்தியத் தூதராக ஒரு தமிழர் இருக்க வேண்டும் என்று பலரும் வேண்டுகோள் விடுத்

திருக்கிறார்கள் ஒரு தமிழர் இருந்திருந்தால் இலங்கைத் தமிழர்களுக்குப்பலவகையிலும்உதவியிருக்கமுடியும்என்று சிலர் சொல்கிறார்கள். இப்போது உள்ள தூதர் இயன்ற வரை துணை செய்பவராகத் தான் இருந்தார் என்றும் சொல்கிறார்கள். நான் இந்த ஆராய்ச்சியில் இறங்க வில்லை.

தோட்டத்தில் வாழ்ந்து சிங்களர்களால் துரத்தப் பட்டு அகதி முகாம்களில் அடைக்க(லம்) பெற்று எப்படி யாவது இந்தியாவிற்கு வர விரும்பி விசாவிற்கு விண்ணப் பித்த போது படிப்பறிவில்லாத அந்தப் பாமரத் தமிழர் களின் விசா விண்ணப்பங்களை நிரப்பித் தரக்கூட நம் தூதரக ஊழியர்கள் முன்வரவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

**அகதிகள் உதவி**

பர்மாவில் இருந்து ஆயிரமாயிரம் தமிழர்கள் அகதி களாக வந்து சேர்ந்தனர். இப்போது இலங்கையில் இருந்து பல இலட்சம் அகதிகள் வந்து சேர்ந்து விட் டனர். நம் இந்தியா அகதிகளுக்கு உதவுவதில் எப்படி நடந்து கொள்கிறது? இதுகுறித்து ஓர் ஆங்கில இதழில் வந்த செய்தியை அப்படியே தந்தால் தமிழர்கள் நிலை தெரிந்து விடும். தானாக ஓடி வந்த திபெத் அகதிகளுக்குப் பணம் கொடுப்பதில் இந்திய அரசு முதலிடம் வழங்கி உள்ளது. அடுத்து வந்த வங்க தேச அகதிகளுக்கு உதவு வதில் இரண்டாம் இடம் தந்து உள்ளது. 'அகதிகள் அஞ்சல் வில்லை' (ஸ்டாம்ப்) என்று நம்மிடம் ஐந்து காசு அதிகம் வசூலித்த காலத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

தமிழ் அகதிகளுக்கு உதவுவதில் இந்தியா மூன்றாவது இடத்தை அளித்துள்ளது. மூன்றாவது இடத்தையாவது அளித்ததே என்று நாம் பெருமைப்படலாம். நல்ல வேளையாக வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அகதி களாக இந்தியாவிற்குள் வரவில்லை. வந்திருந்தால் கடைசி இடம் நமக்குக் கட்டாயம் கிடைத்திருக்கும்.

**ஐ.நா. அவையின் பங்கு**

ஐ. நா. அவையின் பங்கு என்ன? அதற்கு எந்த அளவிற்கு அதிகாரம் உண்டு என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். ஐ.நா. அவை இதில் தீர்வுகாண முடியாவிட்டாலும் அவையில் உள்ள ஒரு சில நாடுகள் நினைத்தால் குரல் எழுப்பவும் எச்சரிக்கவும், கண்டிக்கவும் முடியும். தமிழ் ஈழம் போன்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்று வாதிக்கவும் முடியும். இந்த நோக்கோடு இந்தியாவின் அணுகு முறைகளைப்பார்க்க வேண்டும்.

காஷ்மீர் பிரச்சனை இந்தியாவால் ஐ.நா. அவைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பாலஸ்தீனப் பிரச்சனை, சைடரஸ் பிரச்சனை ஈரான்-ஈராக் பிரச்சனை, ஆகியவையும் ஐ. நா. அவைக்கு வந்துள்ளன.

காங்கிரஸ் கட்சியின் அறிக்கை ஒன்று, ஐ. நா. அவை எந்தப் பிரச்சனைக்கும் தீர்வுகண்டதில்லை என்று கூறுகிறது.

**ஆண்டிகள் மடமா?**

அப்படிப்பார்த்தால் ஐ. நா. அவையே 'ஆண்டிகள் மடம் தான்' என்று பொருள்படும். பேசிப் பொழுது போக்குவதைத் தவிர வேறு வேலை எதுவும் அதற்கில்லை என்று பொருள்.

இந்த நிலையில் தென்ஆப்பிரிக்காவை எதிர்த்து ஐ. நா. வில் வாதாடி ஐ. நா. அவையிலிருந்தே தென் ஆப்பிரிக்காவை வெளியேற்றிய பெருமை இந்தியாவுக்கு உண்டு என்கிறோம். இது பெருமை இல்லையா? இதுவும் வெட்டி வேலைதானா? மற்றொரு விவாதம், இலங்கைப் பிரச்சனை வல்லரசுகளின் பகடைக்காயாக மாறிவிடும் என்றும் இலங்கைத் தமழர்களும் இந்திய அரசும் ஐ.நா. வாசலில் மடிப்பிச்சை ஏந்தி நிற்கும் பரிதாபநிலை ஏற்பட்டு விடும் என்றும் வாதிடப் படுகிறது.

அப்படியானால் எந்தப் பிரச்சனை ஐ. நா.வுக்குள் வந்தாலும் பிரச்சனையைக்கொண்டுசெல்பவர்கள் ஐ.நா.

வாசலில் மடிப்பிச்சை ஏந்தி நிற்க வேண்டி வரும் என்பது தான் உண்மையா?

1947-இல் காஷ்மீர் பிரச்சனையை இந்தியா ஐ. நா. அவைக்குக் கொண்டு சென்றதே அன்றிலிருந்து இந்தியா ஐ நா. வாசலை விட்டுத் திருப்பி வரவில்லையா? மடிப் பிச்சை ஏந்திக் கொண்டுதான் நிற்கிறதா? கொண்டு சென்ற நேரு இந்தியாவைப் பிச்சை எடுக்கவிட்டு விட்டாரா? சிந்தித்து விடைகாணுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.

இவ்வளவும் சிந்தித்த பிறகு நாம் நினைக்கிறோம்- ஐ.நா.வுக்கும் போகாமல், இந்தியாவும் தலையிடாமல் செயவர்த்தனே தீர்த்து விடுவார் என்று ஒதுக்கினால் ஏற்கனவே நாலாயிரம் பேரைத் தீர்த்திருக்கிற செயவர்த்தனே மிச்சமுள்ள தமிழர்களையும ஒரேயடி-யாகத் தீர்த்துப் பிரச்சனையே எழாதவாறு செய்து விடுவார். இந்நிலையில் எல்லோரும் கைவிட்டுவிட்டால் விடுதலைப்புலிகள் எடுக்கும் முடிவுதானே எதிர்காலத் தீர்ப்பாக இருக்க முடியும்?

**உள்நாட்டுப் பிரச்சனையா?**

இலங்கைத் தமிழர் பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்றும், அதில் நாம் தலையிடக்கூடாது என்றும் கூறி, இப்போது நாம் நம் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ள நினைக்கிறோம். பட்டுக்கொள்ளாமல் தப்பிப் பதற்கும், தான் செய்கின்ற எல்லாச் செயல்களுக்கும், ஏதாவதொரு சாக்குப் போக்குச் சொல்வதற்கும், மக்களாட்சி நமக்குப் பல சொற்களைக் கற்றுக் கொடுத் திருக்கிறது. அதுபற்றி விரித்துரைத்தால் எத்தனையோ நடைமுறைக் கதைகளைச் சொல்ல முடியும். அவற்றை விட்டு இலங்கைத் தமிழர் பிரச்சனையிலேயே நிற்போம்.

பக்டூணிஸ்தான் பிரச்சனைக்கு ஆதரவும், எல்லை யில்லாத உதவியும் செய்தோமே, அது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிட்டதாகாதா? வங்க

தேசப் பிரச்சனையில் பொங்கி எழுந்து போர் புரிந்தோமே அது நமது பிரச்சனையா ? இல்லையே. பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சனை தானே! பாலஸ்தீனப் பிரச்சனைக்கு நாம் ஆதரவு தருவதும், அராபத்தை வரவேற்று உபசரிப்பதும், ஒரு நாட்டு அதிபர் போலவே நடத்துவதும் உள்நாட்டுப் பிரச்சனையா ? தென் ஆப்பிரிக்காவைக் கண்டித்து ஐ.நா. அவையில் பேசி நடவடிக்கை எடுத்து வெளியேற்றக் காரணமாக இருந்தோமே? உள்நாட்டுப் பிரச்சனை என்று ஒதுங்கி விட்டோமா?

அப்போதெல்லாம் நமக்குச் சர்வதேசக் கண்ணோட்டம்; அநீதி எங்கு நிகழ்ந்தாலும் சுட்டிக்காட்டும் நீதிப்பார்வை— மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு கூடிய அணுகுமுறை (**Humanitarian Point of view**) இருந்தது.

ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சனை மட்டும் உள் நாட்டுப் பிரச்சனையா? இதை வாதத்திற்காக ஒப்புக் கொள்வோம். இப்படிப் பார்த்தால் நேருதான் தெளிவான கொள்கையைக் கடைபிடித்தார்எனலாம் இலங்கையில் வாழும் இந்தியத்தமிழர் பிரச்சனை அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனையென்றால் சிரிமாவோவுடன் ஒப்பந்தம்செய்து கொள்ளச் சாஸ்திரிக்கு என்ன உரிமை வந்தது?ஒப்பந்தம் செய்து6இலட்சம் தமிழர்களை அழைத்துக் கொள்ள உடன்பட்டதேன்? அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனை என்று விட்டுவிடாமல் இந்திய நாட்டுக்குத் தொடர்பும், உரிமையும் உள்ள பிரச்சனைதான் என்று கருதியதுதானே ஒப்பந்தம் செய்யக் காரணமாக இருந்தது?

முன்னைய பிரதமர் அப்படிச் செய்த பிறகு அதே தமிழர்கள் தொடர்பாக இப்போது பிரச்சனை தோன்றி உயிர்க்கொலைகள் நிகழும்போது இன்றைய பிரதமர் தலையிடுவது நியாயமா — இல்லையா என்பதை அறிவுடையோர் சிந்தித்து முடிவு காணட்டும், இல்லை அது

உள்நாட்டுப் பிரச்சனைதான் என்று நம்பிரதமர் உறுதியாகக் கருதுவாரேயானால் சாஸ்திரி செய்து கொண்ட ஒப்பந்தம் முற்றிலும் தவறானது என்பதையாவது நாட்டுக்குத் தெளிவு படுத்தினால் போதும்.

போகட்டும் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பிரச்சனை தான் உள்நாட்டுப் பிரச்சனை(வாதத்திற்காக ஒப்புக் கொள்வது) ; இலங்கை சென்ற சுற்றுலாப் பயணிகள் பலர் உயிரை விட்டிருக்கிறார்களே, தமிழகத்திலிருந்து சென்ற தனபதி இலங்கையில் கொலை செய்யப்பட்டாரே அதுவும் அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனைதானா? அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகள் ஒருசிலரைநாம் கொன்று விட்டால் அமெரிக்கா அது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சனை என்று ஒதுங்கிக் கொள்ளுமா? தமிழ்நாட்டி-லிருந்து சென்ற இந்தியப் பயணிகள் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பிறகும் நாம் வெறும் 'கவலை' தான் அடையமுடியுமா?

இது எப்படி நியாயமான அணுகுமுறையாகும்?

பிரதமராக இருக்கும் இந்நிலையில் இந்திரா அம்மையார் இலங்கைத் தமிழர் பிரச்சனையை எப்படி அணுகுகிறார் என்பதை அனைவரும் அறிவோம். அவர் கடைப் பிடித்து வருகிற பொறுமையையும், நிதானத்தையும் அனைவரும் பாராட்டுகிறார்கள். மக்களிடம் பிரச்சனையை எடுத்து வைக்காமலும் வாய் அளவிலாவது ஒரு மிரட்டலைச் செய்யாமலும் மவுனம் சாதிப்பதே பெருமையான செயல் என்று தமிழக, இந்திய ஆளுங் கட்சியினர் ஒருமுகமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த போது இலங்கைப் பிரச்சனையில் அவர் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று இன்றைய பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார். வைகுந்தவாசனுக்கு 27—8—1979 (சரி

யாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னால்) பிரதமர் எழுதிய மடலின் கருத்தைத் தருகிறேன்.

''ஜனதா அரசாங்கம் சிறீலங்காவின் தற்போதைய அரசுடன் (இதே ஜெயவர்த்தனே அரசுதான்) நட்பாக இருப்பதற்காக முறையில்லாத வழியில் செல்கிறது. சிறீலங்காவில் தமிழர்படுகின்ற துன்பங்களை ஒரு பிரச்சனையாக எடுத்துப்பேசவாவது அவர்கள் முன் வருவார்களா என்று நான் சந்தேகப்படுகின்றேன். இப்போது எங்கள் அனைவரது கவனமும் வர இருக்கும் பொதுத் தேர்தலிலேயே இருக்கிறது. எனினும் இயலுமானால் இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஏதாவதொரு வழியில் பொதுமக்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் முயல்வேன்''

இந்த மடலில் தொனிக்கும் நம் பிரதமரின் குரலுக்கும் இப்போதைய குரலுக்கும் வேறுபாடு இருக்கிறதா இல்லையா என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

## 21. இந்திராவின் தீர்ப்பு

**தமிழ் ஈழத்துக்கு உதவினால்...!**

தமிழ் ஈழ விடுதலைக்கு உதவினால் அவர்கள் பின்னர் தமிழ் நாட்டுடன்தான் சேர்வார்கள். தமிழ்நாடே புதுத் தெம்பு அடைந்து தானும் தனிநாடாக முயற்சி செய்யும். அது பிறகு பெரிய தலைவலியாகி விடும் என்று சிலர் கருதுகிறார்கள்; பிரதமரும் அப்படிக் கருதக் கூடும்.

**த**ன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால் — மருமகள் வந்தபிறகு மகன் தனிக்குடித்தனம் போக விரும்பினால் என்ன செய்வது என்று கவலைப்பட்டு மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதையே நிறுத்தி வைக்கும் தாயின் சிந்தனைபோல இருக்கிறது இது.

**வெறுவிளைவிக்கும் குரல் அல்ல**

சேர்ந்து வாழவே முடியாத நிலையில் 'தமிழ் ஈழம்' தான் தீர்வாகக் கருதப்படுகிறது. ஆனால் தமிழர்களாகிய

எங்களுக்கு இந்தியாவில் என்ன குறை? பேச்சுச் சுதந்தரம், எழுத்துச் சுதந்தரம் உரிமையோடு உலாவச் சுதந்தரம் எல்லாம் உண்டு. இந்தியனாக மாநில அரசிலும், மத்திய அரசிலும் பதவி பெறவும், மதிப்புப் பெறவும் சம உரிமை உண்டு. மேலும் எந்தப் பகைவராலும் எவராலும் கொடுமைப்படுத்தப் படவில்லையே? அவ்வப்போது சில இனங்களுக்குள் எழும் பிரச்சனைகள், தமிழ் நாட்டுக்குரிய ஒதுக்கீடுகள் இன்னும் அதிமாக வேண்டும் என்ற கருத்துகள், சண்டைகள் தவிர வேறு சிந்தனைகளில் இப்போதுள்ள தமிழர்கள் ஈடுபடவில்லையே? அதற்குத் தேவையும் இல்லையே! இந்தியாவை ஒரு பலமிக்க நாடாக வளர்த்துக் கொண்டு, தங்களுக்குள்ள உரிமைகளையும் சலுகைகளையும் முறையாகப் பெற்று நிறைவாக வாழவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு தமிழ்க்குடிமகனின் கருத்தாகவும் இருக்கிறது மத்திய அரசு எங்களை இன்னின்ன வகையில் புறக்கணிக்கிறது என்பது ஒவ்வொரு மாநிலத்தவரின் குரலாக இருக்குமேதவிரக் கொடுமைப்படுத்துகிறது என்று எங்காவது குரல் எழும்புமா? இல்லையே! பரூக், என். டி. ஆர்... ஹெக்டே, சோதிபாசு குரலாக அது இருக்குமே. தவிர அது ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் குரல் அல்லவே! நீங்கள் எங்களைச் சரியாக மதிப்பதில்லை என்போமே தவிர, எங்களை மிதிக்கிறீர்கள் என்று சொல்லமாட்டோமே! எங்கள் உண்மையான தேவைகளைக் கருத்தில் கொள்ள மறுக்கிறீர்கள் என்று உரிமையுடன் சண்டை போடுவோமே தவிர எங்களை வெறுக்கிறீர்கள் என்று சொல்லமாட்டோமே!

நாங்களே 'தமிழ்நாடு தனி நாடு' எனும் சிந்தனையைக் கைவிட்டு நெடுநாளாகி விட்டபின் நீங்கள் சிந்திக்க வேண்டுமா? தமிழ் ஈழப் பிரச்சனை சரியா தவறா என்று மட்டும் சிந்தித்து அதற்காகக் கருத்துத் தெரிவித்து ஆதரவு தேடுவதே முறை.

**அணி சேரா நாடுகள்**

அணி சேரா நாடுகளுக்கு இந்தியா தலைமை வகிக்கிறது. இலங்கை அதில் அங்கம் வகிக்கிறது. உலகின் மூன்றாவது அணி என்று உருவாகி விட்ட பிறகு அந்த அவைக்குள் இணைந்திருக்கும்உங்கள் தோழமை நாட்டுக்கு இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ரகசியமாகவாவது சொல்லக்கூடாதா? அண்டை நாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் ஏழுபேர் டெல்லியில் கூடிப்பேசினார்களே? இலங்கையும் அதில் இடம் பெற்றிருந்ததே! கொஞ்சம் தெளிவாகவே பிரச்சனையை எடுத்துச் சொல்லியிருக்கக் கூடாதா? கொஞ்சம் இடித்து உரைத்திருக்கக் கூடாதோ?

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விருந்து சாப்பிட்டு விட்டு இலங்கைக்குப் போன கையோடு சிங்களர்கள் விழுந்து விழுந்து தமிழர்களை அடிக்கிறார்களே! கொல்கிறார்களே? இதுதான் அணி சேர்ந்ததின் பலனா?

**பரிசுக்காகவா !**

எங்களுக்கு என்ன இருக்கிறது என்று தான் கேட்போமே தவிர, உங்களுக்கு அதில் உயர்ந்த வாய்ப்பு இருக்கிறது என்று உறுதியாகக் கூறுவோம். சமாதானத்துக்கான உலகப்பரிசு ஒன்று உங்களுக்காகக் காத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிக் கிடைத்தால் இந்தியன் எனும் முறையில் எனக்கும் பெருமைதான்.

கொழும்பில் உள்ள காலிவீதி தான் மிகப்பெரியது; பெயர் பெற்றது; அது தமிழர்களைக் கண்டதுண்டமாக வெட்டிக் காலி செய்யும் வீதி என்று ஒரு பொருள் இருப்பது எங்களுக்கு இப்போது தான் தெரிகிறது. நீங்கள் பரிசுவாங்கும் போது அந்தக் காலி வீதியில் உலவுவதற்கு ஒரு தமிழன் கூட உயிரோடு இல்லாமல் போய் விடுவான் போலிருக்கிறதே?

**எங்கள் எதிர்பார்ப்பு**

எங்கள் ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், அவற்றைத் தொடங்கி வைத்தும் முடித்து வைத்தும் நாங்கள் காட்டும் உருக்கங்கள், ஒவ்வொருகட்சியின் மூலமாகவும் எடுத்து வைக்கும் முழக்கங்கள், நியாயங்கள், சுவரெல்லாம் கறுப்பாக்கி நாங்கள் ஒட்டிய சுவரொட்டிகள், நாட்டில் உள்ள குப்பைகளையும். காகிதங்களையும் கிழிந்த துணிகளையும் திரட்டி நாங்கள் செய்த செயவர்த்தனே கொடும்பாவிகள், அவை நெருப்பிடப்பட்ட போது எழுந்த தீப்பிழம்புகள் எல்லாம் எதற்காக? தியாகப்பயணங்கள் பதவித்துறப்புகள் எல்லாம் எதற்காக? நீங்கள் வாய் திறந்து கண்டனம் தெரிவித்து, இனிமேலாவது தமிழர்கள் காப்பாற்றப் படுவார்கள் எனும் உத்தரவாதம் கிடைத்து விடாதா என்பதற்காகத் தானே! நாங்கள் இலங்கைக்குப் போக முடியுமா? ஒருவர்படகுகளை ஏற்பாடு செய்யவும், மற்றொருவர் படகுகளை ஒளித்து வைக்கவுமாக நாங்கள் 'கண்ணாமூச்சி' விளையாடிக் கொண்டு இருக்கும் போது நாங்கள் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற முடியுமா? சர்வவல்லமைபடைத்தசக்தி நீங்கள்! நீங்கள் நினைத்தால் நாங்கள் வாழ்வோம்; நீங்கள் மறுத்தால் நாங்கள் சாவோம். இது தான் எங்கள் எதிர்பார்ப்பு.

**பார்த்தசாரதி பயணம்**

பாரதத்தின் பார்த்தசாரதி இராமரின் மறுபிறப்பு. நினைத்ததை முடித்தவன் - அநீதியை அழித்தவன் - ஆட்டம் போட்டவர்களைச் சாம்பலாக்கியவன். ஆனால் உங்கள் தூதுவர் பார்த்தசாரதி தமிழகத் தலைவர்களின் கருத்துக் களைக் கேட்டு அறிந்து கொண்டவர், ஈழத் தமிழ்த் தலைவர்களுடனும், தோட்டத் தொழிலாளர் தலைவர் களுடனும் பேசித் தெளிவு அமைத்துக் கொண்டவர். எனவே பார்த்தசாரதி மீது எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. பயணம் வெற்றி அடையும் என்றே நம்பு கிறேன்? நீங்கள் செய்த செயல்களிலேயே எங்களுக்கு

மிகவும் பிடித்தது, பார்த்தசாரதியைத் தேர்ந்தெடுத்தது தான். மகிழ்கிறோம்; பாராட்டுகிறோம்.

**பிரதமர் பேச்சு**

இலங்கை வரலாற்றினை நமது நாடாளு மன்றத்திலேயே பிரதமர் எடுத்துக் கூறியுள்ளார். சிங்களர்கள் விசயன் என்ற வடிவில் 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் குடியேறிவர்கள் தான் என்றும் அதற்கு முன் தமிழர்கள் அங்கே வாழ்ந்த பூர்வீகக்குடிகள் என்றும், சிங்களர்கள் தான் குடியேறியவர்கள் என்றும் நம் பிரதமர் வரலாற்றுரைகளை எடுத்துச் சொல்லியிருப்பது மகிழ்வைத் தருகிறது.

அவருக்கு எல்லாம் தெரியும்; 2500 ஆண்டிலிருந்து இன்று வரை தெரியும். ஆனால் இட்லரைக் கண்டிப்பதில் காலந்தாழ்த்தலாமா என்பது தான்எங்கள் கேள்வி.

உலக அளவில் பிழைப்பதற்காகப்பல்வேறு இனங்கள் குடியேறியிருக்கின்றன. வெகு அண்மைக் காலத்தில் அமெரிக்காவில் குடியேறிய யூத இனத்தவர், இன்று அமெரிக்க அரசியலை நிர்ணயிக்குமளவிற்குச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கின்றனர். சிங்கப்பூர், மலேசியாவில் குடியேறிய சீனர்கள் அங்கு முழு உரிமை பெற்றவர்களாக வாழ்கின்றனர். மூதாதையர்களின் குடியேற்றத்தைக் காரணமாகக் கொண்டு உலகில் குடியுரிமை அற்றவர்களாக வாழ்பவர்கள் தமிழர்கள் மட்டுமே. மேலும் செர்மனியில் குடியேறித் தொழில் வியாபார மையங்களைக் கைப்பற்றிச் சுரண்டும் இனமாக விளங்கிய யூதர்களைக் காட்டுமிராண்டித் தனமாகக் கொன்று குவித்த போது உலகமே இட்லரைக் கண்டித்தது.

ஆனால் ஈழத்தில் குடியேறித் தம் உழைப்பை விற்றுப் பிழைத்து. சுரண்டலுக்குள்ளான இனமாக வாழ்ந்து வரும் தோட்டத் தமிழர்களை இட்லரைவிடக்கொடுமைப்

படுத்தும் செயவர்த்தனே அரசை டெல்லி அரசு கண்டிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் வேண்டாமா? இந்திய இராணுவத்தை அனுப்புங்கள் என்றோ சர்வதேசப் படையை அங்கே இறக்குங்கள் என்றோ நான் சொல்லப் போவதில்லை. பிரதமர் இந்திரா அவர்களே நீங்கள் ஒரு முடிவு எடுங்கள் என்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன். நீங்கள் முடிவு செய்து விட்டால் இலங்கை அமளி 'கப் சிப்' என்று ஆகிவிடும். இலங்கை இராணுவம் வாலைச் சுருட்டிக்கொண்டு வாளா இருக்கும், தமிழர்கள் நம்பிக்கை அடைவார்கள். நீங்கள் நினைப்பது தான் முக்கியமே தவிர மற்ற எல்லாம் இரண்டாம் நிலை தான். வெளிச்சம் வேண்டும்... வெளிச்சம் வேண்டும் என்று நான் ஏன் கத்த வேண்டும். உங்கள் கை சொடுக்கியைத் (SWITCH) தொட வேண்டும். எங்கள் பிரச்சனை உங்கள் நெஞ்சைத் தொட வேண்டும். வெளிச்சம் தானாக வரும்.

**இறுதியாக**

பிரதமர் செய்கை சரியானது தான்; அவர் கடைப் பிடித்து வரும் நிதானம் மிகமிகச் சரி என்று அவரது கட்சி கருதுகிறது — பாராட்டுகிறது.

நாங்கள் பிரச்சனைகளை வாதபூர்வமாக உங்கள் முன் வைத்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சி அறிக்கை பிரதமரின் அணுகுமுறையை நியாயப்படுத்துகிறது. அவர்களது அறிக்கையிலிருந்து இரண்டு பகுதிகளை எடுத்துக் காட்டி மக்களாகிய உங்கள் தீர்ப்புக்கு விட்டு ஒதுங்குகிறேன்.

1) ''படை எடுப்பதின் மூலமோ அல்லது ஐ. நா. சபைக்கு இந்தப் பிரச்சனையைக் கொண்டு செல்வதின் மூலமோ விரைவாகத் தீர்க்கப்படவேண்டிய தமிழர்களின் வாழ்வுப் பிரச்சனையைச் சர்வதேச சிக்கல்களில் ஆழ்த்தி விட விரும்பவில்லை.

2) பாலஸ்தீன 'மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள சர்வ தேச அங்கீகாரத்தைப் போல—இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கும் உலக நாடுகளின் ஆதரவைப் பெறவேண்டும் என்பது தான் மத்திய அரசின் விருப்பம்.

மீண்டும் நினைவூட்டுகிறேன்—

''பிரச்சனையைச் சர்வதேசச் சிக்கல்களில் ஆழ்த்தி விட விரும்பவில்லை.

'உலக நாடுகளின் ஆதரவைப் பெற வேண்டும்,

இந்த அணுகுமுறை எனக்கு விளங்கவில்லை. உங்களுக்கு? இது முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றுகிறது. உங்களுக்கு எப்படி?

## 22. பழம் பெருமை பேசிப் பயனில்லை.

தமிழர்களாகிய நாம் கொதித்துத்தான் போயிருக்கிறோம். இதுவரை இல்லாத அளவுக்குச் சூடேறிப் போயிருக்கிறது. ஆனால் நம் குதிப்பும், கொதிப்பும் தரப்போகும் பயன் பெரிதாகஇராது - இருக்கவில்லை. தமிழக அரசு — நம் சார்புத் தமிழக அரசு களத்தில் நேரில் இறங்காதவரை நம் முயற்சிகளால் எந்தப்பயனும் இருக்காது.

விடுதலைப்புலிகளாகிய பிரபாகரனுக்கும் முகுந்தனுக்கும் சென்னை நகரச்சாலையில் நடந்த சண்டையையே பெரிது படுத்தாமல் பொதுஇட ஒழுங்கீனம் **(Public Nuisance)** என்று ஒரு சிறு தண்டம் விதித்துவிட்டிருக்கலாம். இவ்வளவு பெரிதுபடுத்தியிருக்க வேண்டாம். அவர்கள் யார்? அவர்களது இலட்சியம் என்ன என்பதைப் பற்றி அரசு சற்றுச் சிந்தனை செய்திருக்கலாம். தமிழீழ விடுதலைக்காகத் திட்டமிட்டுப் போரிட வேண்டிய அந்தக்காளைகள் தமிழகக் காவல் நிலையங்களில்

கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு அவர்களை வீணாக்கிக் கொண்டிருந்தோம் நாம். அவர்கள் சென்னைச் சிறையின் கம்பிகளை எண்ணிக் கொண்டிருந்தார்களே! இது தேவைதானா? சிந்தியுங்கள்.

**உலகத்தமிழ் மாநாடா-உள்ளூர்த்தமிழ் மாநாடா?**

உலகத்தமிழ் மாநாடு நடத்தித் தமிழை வளர்க்க நினைக்கிறோம். உலகத்தின் பிற பாகங்களில் இருக்கும் தமிழர்கள் முற்றாக ஒழிந்து போன பிறகு நாம் நடத்தப் போவது உலகத்தமிழ்மாநாடாக இருக்குமா? உள்ளூர்த் தமிழ் மாநாடாகத் தானே இருக்க முடியும்.

உலகெங்கும் இருக்கும் தமிழர்கள் இல்லாமல் தமிழ் எங்கே இருக்குப்? மலாக்காச் செட்டியார்களைப் போல் தமிழினம் அடையாளம் தெரியாமல் அல்லவா கூட்டத் தோடு கரைந்து போய் விடும்! உலகத் தமிழர் மாநாடு என்று நடத்த வேண்டுமென்றால் யாரைப்பிடிப்பது-எந்தத் தமிழர் உயிரோடு இருக்கப் போகிறார்? ஈழத்தில் நடந்த தமிழ் மாநாட்டின் போது கொலை செய்யப்பட்ட 9 தமிழர்களுக்காக அடுத்த மாநாடு ஓர் இரங்கல் தீர்-மானமாவது நிறை வேற்றக் கூடாதா?

**காவிரியில் தள்ளியிருக்கக்கூடாதா?**

ஈழத் தமிழர் படுகொலைகள் பற்றி நடந்த கண் காட்சியையே கடைசி இரண்டு நாள் (பிரதமர் வரும் நேரம்) தடை செய்து வைத்தது தமிழக அரசு. நம் தமிழர் பட்ட துன்பங்களைத் தமிழகத் தமிழர் அறிந்து கொள்ளக் கூடாதா? அதற்கும் ஒரு திரையா?

ஒரு காலத்தில் கரிகாலன் பன்னிரண்டாயிரம் சிங்களர் களைக் கைது செய்து கொண்டு வந்து காவிரிக்குக் கரை யமைக்கும் பணியில் ஈடுபடுத்தினான். இப்போதுள்ள நிலைமைப்படி கரிகாலன் அந்தப் பன்னிரண்டாயிரம் சிங்களர்களையும் காவிரிவெள்ளத்துக்குள் தள்ளிவிட்டிருக் கக் கூடாதா என்றல்லவா நினைக்க வேண்டியிருக்கிறது.

**கடாரம் வென்றவனுக்குக் கடலில் செல்ல ஒருபடகு இல்லையா?**

இராசராசனும் இராசேந்திர சோழனும் கங்கை வென்றார்களாம்; கடாரம் வென்றார்களாம் (மலேசியா வில் உள்ள Kedah மாநிலம்) அதிலும் சோழர்களின் கப்பற்படை இந்தோனேசியக் கடற்கொள்ளைக்காரர் களைத் தண்டிக்கப் புறப்பட்டுப் போனதாம். தமிழர் களிடத்தும் கப்பற்படை இருந்தது என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாக இருக்கிறது. தியாகப்படை போவதற்கு ஒரு படகுப்படை கூட இல்லாமல் வக்கற்றுப் போன நமக்கு என்ன பழம்பெருமை வேண்டிக்கிடக் கிறது?

வடநாட்டில் யாரோ தமிழர் வீரத்தைப் பழித்து விட்டார்களாம். செங்குட்டுவனுக்குச் சீற்றம் பிறந்து விட்டது. 'அருந்தமிழ் ஆற்றல் காணட்டும் அவர்கள்' என்று வஞ்சினம் கூறிப் படை எடுத்து விட்டான். சென்றான்;வென்றான்; கனகவிசயர் தலையில் கல்லெடுத் துக் கொண்டு திரும்பினான். அதே செங்குட்டுவன் வீரக் காட்சியை நம்மால் உலகத் தமிழ் மாநாட்டில் பத்து இலட்சம் மக்கள் காண ஊர்வலத்தில் கொண்டுவர முடிந்ததா? அந்த அலங்கார வண்டியை அடுத்த ஆளுக் குத் தெரியாமல் அடைத்துவைத்து விட்டோமே! செங்குட்டுவன் வீரத்துக்கு இது பெருமை என்று சொல்லி விடமுடியுமா?

**உரிமைப்போர்**

தமிழக அரசு என்பது தேவையான போது மத்திய அரசோடு நெருங்கி நின்று செயலாற்ற வேண்டும். தேவையான போது மத்திய அரசோடு சண்டை போட வேண்டும். உளந்திறந்து சொல்கிறேன். இலங்கையில் நடந்த இன்றைய இனக்கலவரத்தின் போது நம் முதலமைச்சர் பெரிதும் கொதிப்படைந்து பிரதமர் இந்திராவுடன் சண்டை பிடித்திருக்க வேண்டும். கண்டனம்

தெரிவிக்கவும், செயவர்த்தனே அரசை மிரட்டவும் பிரதமர் முன்வரும்வரை ஓய்ந்திருக்கக்கூடாது.

வங்கதேசச் சிக்கல் வந்த போது மேற்கு வங்காள முதல்வர் சித்தார்த்த சங்கர்ரே கொதிப்படைந்தார். பிரதமரை வேண்டினார். தூண்டினார்; இறுதியில் அறை கூவலே விட்டார். "மத்திய அரசு உடனே தலையிட்டு ஆவனசெய்யத் தவறினால் தானே தன் கை வசமுள்ள போலீசாரையும், தன் மாநிலத்தில் உள்ள இராணுவத்தையும் அனுப்பி வங்கமக்களைக் காக்கப் போகிறேன்" என்று சொல்லியிருந்தார்; குமுறினார்; மத்திய அரசை மிரட்டினார் விளைவு என்ன? பிரதமர் இந்திரா தன் முழு பலத்துடன் போரில் குதித்தாரா இல்லையா?

**பஞ்சாபியர்**

இலண்டனில் 1981 வாக்கில் இனக்கலவரம் நடந்தது. அங்குள்ள பஞ்சாபியர்கள் சிலர் அந்தக்கலவரத்தில் பாதிக்கப்பட்டனர். அவ்வளவு தான்! இந்தியாவின் பஞ்சாபில் உள்ள முதல்வருக்குக் கோபம் பிறந்து விட்டது. டெல்லிக்கு விரைந்தார். பிரதமரைப் பார்த்து அனுமதி வாங்கிக்கொண்டார் அந்தப் பஞ்சாப் முதலமைச்சர்; இலண்டன் சென்று, நிலைமையைப்பார்வையிட்டு வந்து நம் பிரதமரிடம் ஓர் அறிக்கையையே கொடுத்தார். தன் இனமக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றவுடன் பஞ்சாப் முதலமைச்சருக்குஅவ்வளவு வேகம்-ஆனால் நம்நிலைஎன்ன?

அங்கே தாடிபற்றி எரிகிறது-இங்கே நாம் பீடிக்கு நெருப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே குடம் குடமாக இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது-மலை மலையாகத் தமிழர் பிணங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. 10 வயது, 12 வயதுப் பெண்கள் கோரமான முறைகளில் கற்பழிக்கப்பட்டு அவர்களில் சிலர் யாழ்ப்பாண அகதிகள் முகாம்களில் உட்கார்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே

மத்திய அரசும், மாநில அரசும் கட்டிப்பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் மாறிமாறிப் பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

**சட்டமன்றம்**

இலங்கைக் கலவரம் குறித்தும், வன்முறைகள் குறித் தும் ஆந்திரச் சட்டமன்றம் கண்டனத் தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. கேரளச் சட்டமன்றம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது அவர்கள் சகோதர இனம் என்பதற்காகவாவது அனுதாபம் காட்டி மனி- தாபிமானக் கண்ணோட்டத்தோடாவது தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் நம் இனத்தார்- கள்—தமிழ் இனத்தார்கள்—நம் சட்டமன்றத்தைக் கூட்டி நம் ஒரு முகமான கருத்தைத் தெரிவிக்க நமக்கு இன்னும் தைரியம் வரவில்லை. ஒரு வேளை இப்படியும் இருக்க- லாம்.

1981ஆம் ஆண்டிலும் தான் தீர்மானம் போட்டோம் என்ன நடந்து விட்டது? இப்போதும் தீர்மானம் போட்டு என்ன ஆகிவிடப் போகிறது என்று இருந்து இருக்க- லாம். அப்படியிருந்தால் 'வெறும் தீர்மானங்களால் பய னில்லை. வேறு வகையில் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டும்' என்று முதலமைச்சர் நினைக்கிறார் என்று பொருள். இப்படி நான் நினைப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்குமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**காலத்தின் கட்டாயம் தமிழ் ஈழம்**

ஒரு கண்டனத் தீர்மானத்துக்கே நாம் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் போது நாம்தானா தமிழ் ஈழக் கோரிக்கையை எடுத்து விளக்கித் தீர்மானம் போட்டு விடப் போகிறோம். சிங்களர்களும் தமிழர்களும் சேர்ந்து வாழவே முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்ட பிறகு ஏன்? சிங்களத் தலைவர்களும் தமிழர் தலைவர்களும் சேர்ந்துபேசக்கூடமுடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்ட

பிறகு 'தமிழ் ஈழம்' காலத்தின் கட்டாயமாகத் தான் ஆகி விட்டது. அமெரிக்கக் குடியரசில் ஒரு மாநிலச் சட்ட மன்றமாக இருப்பது மாசசூசெட்ஸ், அந்த மாநிலசட்டமன்றம் சிங்கள இனவெறித் தாக்குதலைக் கண்டித்தும், தமிழர்கள் தனிநாடு அமைத்தே ஆக வேண்டும்; அப்போது தான் மனித உரிமைகள் காக்கப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. யாரோ அமெரிக்கர்கள் - இரத்தபாசம் இல்லாத அமெரிக்கர்கள் 'தமிழ் ஈழம்' வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கும் ஐ. நா. அவைச் செயலாளருக்கும் அனுப்புகிறார்கள். இரத்த சம்பந்தம் இருப்பதாகக் கருதப்படும் நாம் இப்படியொரு சிந்தனைக்கு என்றாவது வந்ததுண்டா? மாசசூசெட்ஸ் மாநிலத்துக்கு வந்த துணிச்சல் நமக்கு வருமா? வரவேண்டாமா?

**நாம் செய்திருக்க வேண்டியது**

தொழிலாளர்கள் சில கோரிக்கைகள் வைக்கிறார்கள் —தொழிற்சங்கத் தலைவர்கள் அவற்றை நிர்வாகத்திடம் எடுத்துச் செல்கிறார்கள். நிர்வாகம் எதையாவது சொல்லி ஏதாவது செய்து தொழிலாளிகளை அமைதிப் படுத்த வேண்டும். அதை விட்டுக் கோரிக்கைகளை எடுத்துச் செல்ல வேண்டிய தொழிற்சங்கத் தலைவர்கள் நிர்வாகத்திடம் போகாமலும் சண்டை போடாமலும்தாங்களேமுன்நின்றுதொழிலாளிகளைச்சமாதானப் படுத்துவார்கள் என்றால்—

நிர்வாகம் இப்படித் தான் இருக்கும். இதற்கு மேல் அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்று தொழிற் சங்கத் தலைவர்களே சொன்னால்—

இப்படியொரு தொழிற் சங்கம் தேவை தானா? It is the management to convince the workers not the representatives

இந்திய இராணுவத்தை அனுப்புவதா வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டியது இந்திய அரசு — நாமல்ல. இந்திய இராணுவத்தை அனுப்பத் தேவையில்லை என்று மத்திய அரசு சொல்லட்டுமே — மத்திய அரசை வற்புறுத்த வேண்டியதல்லவா நம் கடமை! அதை விட்டுவிட்டு நாமே இராணுவத்தை அனுப்பத் தேவையில்லை என்று வக்காலத்து வாங்கலாமா? இது தேவைதானா? இது கூடப் போகட்டும். இதைவிடப் பெரிய கொடுமை அமிர்தலிங்கத்தை வம்புக்கிழுப்பது.

அமிர்தலிங்கம் தங்கள் பிரச்சனைக்கு உதவிகேட்டு வந்திருப்பவர் - இந்தியா ஏதாவதொரு துணை செய்து விடாதா என்று எதிர்பார்ப்பவர். தமிழக அரசும் பிற கட்சித் தலைவர்களும் தங்களுக்காகப் பேசமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு வந்திருப்பவர் – உதவி கோரி வந்து இருக்கும் அவர் பிரதமர் இந்திராகாந்தியின் அணுகுமுறையில் ஆயிரமே தவறிருந்தாலும் அவரால் சுட்டிக்காட்ட முடியுமா? அமிர்தலிங்கம் இவற்றை வெளிக்காட்டிக் கொள்ள முடியுமா? அவர் பிரதமர் மீது நம்பிக்கை வைத்துத் தான் ஆகவேண்டும். இராணுவத்தை அனுப்ப வேண்டாம் என்று அமிர்தலிங்கம் சொல்லிவிட்டார் என்று ஒரு சுவரொட்டியைப்போட்டு நாம் மகிழ்ச்சியடையத்தான் வேண்டுமா?

**பிணங்களை அடுக்கவா இராணுவம்**

''இனிமேல் இராணுவம் எதற்கு? விழுந்து கிடக்கின்ற பிணங்களைப் பொறுக்கி, அடுக்கி இறுதிச் சடங்குகளைச் செய்யவா?'' என்று கேட்டாரே அமிர்தலிங்கம் அது நமக்கு மறந்து போய்விட்டதா?

நம் முதல்வர் 26-7-83இல் பிரதமருக்கு ஒரு தந்தி அனுப்பினார். வெளிக்கடைச்சிறையில் 35 பேர் கொல்லப் பட்ட பின் இந்தத் தந்தி செல்கிறது. உலகத்தில் இல்லாத உச்ச கட்டக்கொடுமை நடந்த பிறகு நம் முதல்வர் அனுப்பும் தந்தி இது. அதில் முதலமைச்சர்,

'பிரதமர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார். இந்தப் பிரச்சனையை ஐ.நா. அவையில் எழுப்ப வேண்டுமென்று முதல்வர் பிரதமரைக் கேட்டிருக்கிறார். இதற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பதில் கொடுத்து விட்டது. ஐ.நா. அவையில் இந்தப் பிரச்சனையை எழுப்பிப்பயனில்லை. என்று காங்கிரஸ் கூறுகிறது பிரதமர் எதைக்கேட்கப் போகிறார்? முதல்வரின் தந்தி வாசகத்தையா? காங்கிரஸ் கட்சி அறிக்கையின் அடக்கவுரையையா?

## 5 கோடிமந்தைகளில் 5000 செத்தால் என்ன?

ஏதோ தமிழர்கள் உணர்ச்சியற்றிருக்கும் நேரத்தில் ஓர் உந்து சக்தியாக இருக்கட்டுமே என்று நெடுமாறன் ஒரு தியாகப்பயணத்தை மேற் கொண்டார். இதில் எல்லாக்கட்சியினரும் இருந்ததை நடுநிலையோடு என்னால் சொல்ல முடியும். திருப்பூர்த் தனித் தமிழியக்கத்தோழர்களைக்கூட நடுவில் பார்த்தேன். நல்லநோக்கம்! இதற்காக அவர் ஒருபயணம் போனால்...சாப்பாடு போட்டவர்களை மிரட்டி, தங்க இடம் கொடுத்தவர்களைத் தடுத்து, படகு விடத்துணிந்த மீனவர்களையும், உரிமையாளர்களையும் கண்டித்து, படகுகளையே அப்புறப்படுத்தி வைத்திருக்கிறோம். இது எந்த வகையைச் சேர்ந்தது?

நெடுமாறன் இதை வைத்து அரசியலில் பெரிய மனிதர் ஆகிவிடுவாரா ? ஆட்சியினர் செல்வாக்கையே வீழ்த்தி விடுவாரா ? அப்படி ஓர் ஆராய்ச்சிக்கு இடம் ஏது ? அதுவும் இந்த நேரத்திலா?

ஊர் தீப்பற்றி எரிகிறதே என்று சிலர் வீட்டிலிருந்த குடத்தைக் கொண்டு வந்து தண்ணீரோடு கொடுக்கிறார்கள். வாங்கி வாங்கிக் கூரையில் ஊற்ற வேண்டிய ஒருவன் குடத்தையே ''கபளீகரம்'' செய்துவிடுவது இருக்கிறதே அதுபோல இருக்கிறது நம் செயல்!

ஐ.நா.வில் பிரச்சனையை எழுப்புவதானாலும் சரி, செயவர்த்தனேயை நெருக்கிப் பிடிக்க வேண்டுமானாலும் சரிஅதை நம் பிரதமர்தான் செய்ய வேண்டும். இதுகூடச் சரியான தீர்வாகாது என்று கருதினால்தமிழீழவிடுதலைப் போராளிகள் அவர்கள் மிதவாதிகளாக இருந்தாலும் சரி, தீவிரவாதிகளாக இருந்தாலும்சரி, தமிழ் நாட்டில் களம் அமைத்துப் பாடுபட உதவுங்கள் — ஒத்துழையுங்கள் — மத்திய அரசுக்குத் தலையாட்டாதீர்கள்.

அது நம் தன்மானத்துக்கும், தனித் தன்மைக்கும் இழுக்கு. தமிழ் ஈழப் பிரிவினையை நாங்கள் ஆதரிக்க வில்லை என்று பிரதமர் இந்திரா சொன்னால் உடனே நீங்களும் 'ஆமாம், ஆமாம்' எனக்கும் அப்படித்தான் என்று தான் கூற வேண்டுமா? இராணுவத்தை அனுப்பத் தேவையில்லை என்று நரசிம்மராவ் சொன்னால் நீங்களும் அதையேதான்சொல்லவேண்டுமா? தென் ஆப்பிரிக்காவை ஐ. நா. விலிருந்து விலக்கியது போல இலங்கையையும் விலக்க வேண்டுமென்று ஐ. நா. வில் போராட இந்திய அரசைத் தூண்டுங்கள்.

வங்கத்து ரேயை, பஞ்சாபின் பழைய முதல்வரை, ஏன் இன்றைய என். டி. ஆரைப் போல மத்திய அரசைத் தூண்டவும், திறனாய்வு செய்யவும், நெருக்கவும் துணிவு பெறுங்கள்.

## 23. சங்கே முழங்கு !

இவைபோக நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டி- யவை பல. தாயகம் திரும்பிய தமிழர்கள் தங்கியுள்ள முகாம்களுக்கெல்லாம் தக்கவர்களை அனுப்பி உண்மை நிலையைக் கண்டறிந்து உதவச் செய்யுங்கள் ஏன் எங்களைப் போன்ற முப்பது நாற்பது பேரை ஓர் ஆண்டுக்கு அயலிடைப் பணியில் (on lien) வந்தனர்.

அமர்த்தி முகாம்களில் வந்து சேரும் தமிழர்களுக்கு உரிய வாய்ப்புகளைப் பெற்றுத்தரவும், அவர்களது வாழ்வுக்கான நிலையான ஏற்பாடுகளைச் செய்யவும் நீங்கள் முனைந்தால் நடக்கா்தா?

**வேலை கொடுங்கள் :**

உலகத்தமிழ் மாநாட்டுக்கு ஒரு கோடி ஒதுக்கினோம். மாநாட்டை ஒட்டி மதுரையை அழகுபடுத்த 10 கோடி ஒதுக்கினோம். அந்த நேரத்தில் போடப்பட்ட சாலைகளைப் பற்றித்தான் முன்னாள் துணை மேயர் (ஆளுங்கட்சிக்காரரர்) அழகாகச் சொல்லியிருக்கிறார்.

'நமது மாநகராட்சிச் சாலைகளில் உள்ள பள்ளங்களில் சிங்களர்களையே போட்டுப் புதைக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார். பெருமையாகப் பல கோடி ஒதுக்கி அதைக் காண்ட்ராக்டர்கள் தின்று விட்டுப் போவதை விட உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவந்திருக்கிறார்களே இலங்கைத் தமிழர்கள் அவர்களுக்கு உடனடி உதவி தேவை. தமிழ் நாட்டில் ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் ஈழ மாணவ – மாணவியரை உடனே சேர்க்கக்கூறி ஆணை பிறப்பியுங்கள் சான்றிதழ்கள் கூட இல்லாதவர்களை ஒரு தேர்வு வைத்துத் தெரிந்து சேர்க்கலாம். ஒவ்வொரு கல்லூரியிலும் ஐந்தாறு பேருக்காவது வேலை வாய்ப்பளிக்கலாம். ஏதாவதொரு வேலை தரப்பட்டால் ஆயிரம் பேருக்காவது வாய்ப்புக் கிடைக்கும்.

அதே நேரத்தில் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டு வேலை வாய்ப்பளிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் விடும் போக்குகளை உடனே தடுத்து நிறுத்துங்கள். எடுத்துக்காட்டுக்கு ஒன்று சொல்ல வேண்டும்.

வேளாண்மைப் பண்ணைக் கழகத்தைத் தமிழக அரசு தோற்றுவித்தது. அதில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளாக வந்தோர் பணியாற்றி

ஏறத்தாழ 800 குடும்பங்கள் இதனால் பிழைத்து வந்தன. ஆனால் தொடர்ந்து ஏற்படும் இழப்புக் காரணமாக இப்பண்ணைகளை மூடிவிட அரசு முயன்றது. இழப்பு ஏற்படுவதற்குக் காரணம் நிர்வாக ஊழலே என்றும், புதுநிர்வாகம் பொறுப் பேற்றால் சிறப்பாக நடத்தலாம் என்றும் மக்கள் போராடினார்கள். விளைவு; மக்களை மத்திய சிறையில் அடைத்து விட்டுப் பண்ணைகளை இழுத்து மூடியது தான். அங்குப் பணியாற்றிய நிர்வாக ஊழியர்கள் இழப்பீட்டுத் தொகையும் பெற்றனர். வேறு துறைகளில் வேலைக்கும் அமர்த்தப்பட்டனர். ஆனால் அப்பாவிகளான அகதிமக்கள் மட்டும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டனர். எப்படியாவது பிழைத்துக் கொள்ளுமாறு அரசு அறிவிப்புச் செய்து விட்டது. இப்போது வருகின்ற தமிழர்களுக்கும் இப்படித்தான் நேருமா? அரசு கவனிக்க வேண்டும்.

**ஊசலாடும் ஈழத்தமிழர்**

ஈழத்தில் வாழும் எந் தமிழர் எதிர்காலம் இப்போது செயவர்த்தனேயின் கையில் ஊசலாடுவது உண்மைநிலை

ஊசலாடுவது என்றால் நல்ல முடிவும் நேரலாம் என்று ஒரு பொருள் உண்டு. ஆனால் செயவர்த்தனே தமிழர்களுக்கு வெறுங்கையைக் காட்டியே சமாளித்து விடலாம் என்று பார்த்தசாரதியிடம் தெரிவித்துவிட்ட பிறகும் தமிழர்களுக்கான எதிர்கால நல்வாழ்வுக்கு ஏதாவது நல்ல அறிகுறி தோன்றும் என இனியும் எதிர் பார்க்க முடியுமா?

1944-ஆம் ஆண்டிலேயே, இலங்கைவிடுதலை பெறுவதற்கு முன்னமேயே சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி எனும் தீர்மானத்தைக் கொண்டு வந்து தமிழினத்திற்கு எதிராக வெறியைத் தூண்டிவிட்டவரே இந்தச் செயவர்த்தனேதான். குத்துச் சண்டை வீரரான செயவர்த்தனேயின் கொள்கை என்ன தெரியுமா? அவரே சொன்னதாக உள்ள

கருத்து, முகத்தில் குறிவைப்பது போல் பாசாங்கு செய்து, வயிற்றில் அடிக்க வேண்டும் என்பது தான் (To aim at the face but to hit at the stomach) எனவே தமிழர்களின் வயிற்றில் அடிக்கப் போகும் செயவர்த்தனே தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணப் போவதில்லை; அவர் காண விரும்பினாலும் 'சிரில்'களும் 'காமினி'களும் அவரை விடப்போவதில்லை.

**பிரதமர் முடிவை நாடே எதிர்பார்க்கிறது**

எனவே நம் பிரதமர் தான் இதற்குத்தீர்வு கண்டாக வேண்டும். தமிழக அரசும், நம் முதல்வரும் எந்த அளவுக்கு நம் பிரதமரை நெருக்குகிறார்களோ அந்த அளவுக்குத் தான் டெல்லியின்வேகம் இருக்கும். பார்த்த சாரதியின் முயற்சி அருமை; ஆனால் முடிவு நன்றாக இல்லையே? செயவர்த்தனே கைவிரித்த பின்பு, பிரதமர் என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதை நாடே எதிர் பார்த்து நிற்கிறது.

பொதுவாகப் பார்த்தசாரதி தூது போய்த் திரும்பி வந்தால் 'பாரதம்' போரில் இறங்குவது தான் பழைய கதை. பிரதமர் ஒரு முடிவு மேற்கொண்டே ஆகவேண்டும். அந்த முடிவை எடுப்பதில் தெளிவும், வேகமும், தமிழர் பிரச்சனைக்குத் தீர்வும் வந்தாக வேண்டும். அதற்கு நம் மாநில முதல்வர் ஆர்த்தெழவேண்டும். ஐந்து கோடித் தமிழர்களும் அப்போது தான் அவர் பின்னால் அணிவகுத்து நிற்பார்கள்.

**எங்கள் எதிரி செயவர்த்தனே தான்**

எங்களுக்கு எதிரி இலங்கையின் செயவர்த்தனே. எங்கள் எதிர்ப்பும் கொதிப்பும் அவரை நோக்கியே இருக்கும். அதற்கு மாறாக எங்கள் பிரதமரை வேகப்படுத்தவும், எங்கள் முதல்வரை நெருக்கவுமான தேவையில்லாத முயற்சிகளில் இப்போதுள்ள தமிழர் உணர்ச்சிகளை மடைமாற்றம் செய்து விடாதீர்கள். தமிழக முதல்வரின் பெருமையை நிலைநாட்டும் புரட்சி விளையத்தான் வேண்டும்.

அது பகையை விரட்டும் பயனுள்ள புரட்சியாக இருக்கட்டும், நமக்குள்ளே பொருதி வலிவிழந்து போகும் உள்நாட்டுப்போராக ஆகிவிடவேண்டாம்.

தமிழர்களே! உங்களது இப்போதைய உணர்ச்சி மங்கிவிடக் கூடாது. மங்கவிடவும் கூடாது;கலவரம் தான் ஓய்ந்து விட்டதே என்று கருதி அரட்டை அடிக்கவும், அசட்டைசெய்யவும் அடுத்ததில் கவனம் செலுத்தவும் தொடங்கி விடாதீர்கள்.

1981இல் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி விட்டு நாம் அயர்ந்து போய் இருந்தோம். 1983இல் படுகொலையைப்பார்க்க நேர்ந்தது.

1983 - இலும் இவ்வளவு குருதிச், சேற்றினை - குன்றெனக் குவியும் பிணமலையை - முறிந்த அரும்புகளின் மூளி வாழ்வை - நிறை குடும்பப் பெண்கள் நிர்வாணக் காட்சிகளை - அரிய ஆண்களின் அடுக்கடுக்கான சாவைக்கண்ட பிறகும் நமக்கு இன்னும் தெளிவு வரவில்லை என்றால்...

**பச்சோந்தி இனமாகிவிடும்**

தமிழினம் என்ற பெயரில் உலகில் எதுவும் எங்கும் இருக்கப்போவதில்லை. அப்படியே இருந்தாலும் பதவிக்காகவும் சுகத்துக்காகவும் பல்லிளித்துக் கிடக்கும் பச்சோந்தி இனமாகத்தான் இருக்கும். உலகத்தமிழர்களை எல்லாம் உயிரோடு எரித்த பிறகு, நடைப்பிணமாக நாயினும் கேடு கெட்ட இனமாக உலவும் உள்ளூர் இனமாகத்தான் அது இருக்கும். சாவு எல்லோருக்கும் வரும்; ஆனால் கேவலச் சாவும் கேலிக்குரிய வாழ்வும் இனி நமக்கு வேண்டாம்.

**சங்கு முழங்கட்டும்**

**ஒன்றே செய்யவும் அதையும்**
**நன்றே செய்யவும் அதையும்**
**இன்றே செய்யவும் உங்களுக்கு**
**இறுதி அழைப்பு விடுகிறேன்!**

மாஜினி தன்வீரர்களை நோக்கிச் சொன்னான்:

''எழுந்திருங்கள் ! இப்பொழுதே எழுந்திருங்கள் ! நாளை இன்னும் தடைகள் அதிகமாகிவிடும்'' Rise! oh! Rise! Rise Today! Tomorrow the obstacles will be greater.

இதைத்தான் உங்களுக்கும் சொல்லவிரும்புகிறேன். 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என்பது உண்மையானால் 'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம்; நிஜம்' எனச் சங்கை முழக்குங்கள்! அப்படியும் எதுவும் நடக்க முடியவில்லையானால், எவனாவது தமிழினம் பழையது, தொன்மையானது, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றியது என்று கதை விட்டுக் கொண்டிருந்தானானால் அவன் நாக்கை அறுத்து நாய்க்கு எறியுங்கள்! அதாவது என்றைக்காவது ஒருநாள் தன் நன்றியை வெளிக்காட்டும்.

**முடிவுரை**

இதுவரை இலங்கை வரலாறும் ஈழத்தமிழர்களின் பிரச்சனையும் மிக விரிவாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளன, இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இந்தியாவின் அணுகுமுறையில் உள்ள நெளிவு, சுளிவுகளையும் குற்றம் குறைகளையும் சுட்டியிருக்கிறேன். பார்த்த சாரதி பயணமும் முயற்சியும் குறித்துப் பாராட்டியிருக்கிறேன்.

**நான் எந்தக் கட்சியும் இல்லை**

இந்திய அரசு நாம் எதிர் பார்த்தபடி செயலாற்றவில்லை எனும் ஆதங்கத்தை நான் வெளிப்படுத்தத் தவறவில்லை. பொதுவாக நம் நாட்டில் எவராவது ஒரு கருத்தைச் சொல்லிவிட்டால் அதைக் கொண்டே அவனை ஒரு கட்சியில் சேர்த்துவிடுவது வழக்கம். என்ன சொல்கிறான்; அதில் உள்ள நியாயம் எது, பொருத்தம் எது என்று பார்க்காமல் எப்படியாவது அவனை ஒருபக்கம் தள்ளிவிட்டால் போதும் என்ற நடுநிலை உணர்வற்ற நாடு இது. இந்நிலையில் ஒன்றை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். நான் எந்த ஒரு கட்சி-

யிலும் உறுப்பினன் அல்லன். ஆனால் சில கட்சித் தலைவர்கள், கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலரோடு நட்பும், தொடர்பும் உடையவன். எல்லாக் கட்சியிலும் எனக்குப் பிடித்த பலர் உண்டு. எனவே ஈழத்தமிழர் சிக்கல் குறித்து எழுதப்பட்ட எதுவும் பிறர் கருத்தின் எதிரொலி அன்று. ஒரு தேசிய இனத்தின் முழு வரலாற்றையும் அந்த இனம் பட்ட துன்பத்தையும் அதற்குச் சரியான தீர்வாக அமைவது எது என்னும் கருத்தையும் படித்துத் தெளிந்து சிந்தித்து உணர்ந்தபின் எழுதப்பட்டது இக்கட்டுரை.

**மொழியால் தமிழன் நாட்டால் இந்தியன்**

நான் மொழியால் தமிழன்; நாட்டால் இந்தியன் என்ற தெளிவான வரையறையை வைத்துக் கொண்டிருப்பவன். அரசியல் விஞ்ஞானத்தைக் (Political Science) கல்லூரிப் பாடமாகச் சொல்லிக் கொடுக்கிறோம். தற்கால அரசுகள் (Modern Goevrnments) ஒரு பாடமாகவே உள்ளது. இவ்வளவையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஒரு கல்லூரியின் முதல்வர் என்ற முறையில் நான் அரசியல் சிந்தனை (தேர்தல் சிந்தனையல்ல) யுடையவன். நாடு எப்படியிருக்க வேண்டும் என்று கூற வேண்டிய உரிமையும் எனக்கு உண்டு; கடமையும் உண்டு. விருப்பு வெறுப்பின்றி நம் கடமைகளைச் சுட்டிக் காட்டியாக வேண்டும். அந்த நாள் புலவர்கள் அரசியல் சிந்தனையுடன் மன்னர்களுக்கு அறிவுரை சொன்னார்கள்: வழியும் காட்டினார்கள் இந்த நாளில் உலகியலறிவும், உண்மைத் தமிழ் நெஞ்சும், உலகளாவிய தமிழ் இன உணர்வும் படைத்த நாங்கள் தமிழர் கடமையைச் சுட்டத்தான் வேண்டும். ஆனால் இவை அறிவுரைகள் அல்ல; அன்புரைகள்; அழிந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழினத்தின் சார்பில் ஐந்து கோடித் தமிழர்களைத் தட்டி எழுப்பும் மறவுரை.

வெல்க தமிழினம்! மலர்க தமிழீழம்!

---

## கட்டுரைகளைப் பாராட்டி வந்த மடல்கள்

தமிழரை இழிவு படுத்திய இலங்கை அரசைப் பழித்து 'செந்நீர்க் கடலில் ஈழத்தமிழன்' என்னும் அரிய கட்டுரைத் தொடரைப் படைத்திருக்கும் பேராசிரியர் தமிழ்க்குடி-மகன் இலங்கைத் தமிழர் நடத்தும் போராட்ட உண்மை களை அப்பட்டமாக எடுத்துரைக்கின்றதை 'மாலை முரசில்' படித்துப் பரவசமுறாத தமிழ் நெஞ்சம் ஏதும் இல்லை. இனப் பிரச்சனை, வர்க்கப் போராட்டம், அரசியல் சித்தாந்தங்கள், அண்டை நாடுகளில் நடந்துள்ள எழுச்சிகளுடன் தமிழ் ஈழ விடுதலை உணர்வை ஒப்பிடு தல் இவை அனைத்தும் தமிழ்க் குடிமகனது எளிய இனிய தமிழ் நடையில் விறுவிறுப்பாக அமைந்து படிக்கின்றவர் மனத்தை ஈர்க்கின்றன.

— மதுரை ஆதீனகர்த்தர்.

உலகமெல்லாம் தமிழன் வாழ்ந்து கொண்டிருக் கிறான். நமக்குப் பக்கத்தில் 18மைல் தொலைவில் இருக்கிற ஈழத்தில் நம் உறவினர்கள் பலர் படுகிற கொடுமைகள், சிங்கள அரசின் சித்திரவதைகள், இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழன் எப்படிப் படிப்படியாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறான்' என்பதைத் தெரியாத தமிழர்கள் நிறைய; அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உங்கள் கட்டுரை பயன்படுமே தவிரத் தூங்குகிற தமிழனை எழுப்புமா? உண்மையாகத் தூங் கினாலாவது எழுப்பலாம்; தூங்குவது போல் நடிப்ப வனை எப்படி எழுப்ப முடியும்?

போயும் போயும் இவர்களுக்குப் போய் எழுதிக் கொண்டிருக்கிறீர்களே! இந்த வெட்டி வேலையை விட்டு விட்டு வேறு வேலை இருந்தால் பாருங்கள்!

— அம்பிகா, திண்டுக்கல்.

இன்னலுறும் ஈழத்தமிழனின் நிலைபற்றிய அ
கட்டுரைத் தொடரைத் தொடர்ந்து படித்தேன். ஒ
வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொண்ட மன
நிறைவு. "சமுதாயம் விரும்புவதைத் தருவதைக் காட்டிலும் சமுதாயத்திற்கு எது தேவையோ ;அதனைத் தருபவன் தான் அறிஞன்." இதை மனத்திற் கொண்டு சிறப்பாகவே செய்துள்ளீர்கள். இறுதியாகத் தாங்கள் முழக்கிய சங்கொலி என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

— புலவர்—மு. இராசரத்தினம் 'தாமரைக்குளம்'.

தமிழினம் காக்கத் தக்க நேரத்தில் தகுதியானவர் தந்த தமிழுணர்வு தலைவணங்கத் தக்கது.

— கவிஞர் ம.முத்தரசு, தளவாய்புரம்.

தங்கள் கட்டுரைத் தொடர் ஈழத்தின் உண்மை வரலாற்றைத் தகுந்த ஆதாரத்துடன் எம்மை விளக்கம் பெறச் செய்கிறது. மொத்தத்தில் அது கல்நெஞ்சையும் கரைக்கும் கண்ணீர்க் காவியம் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

— பேரா. பா. செ. சின்னப்பாண்டியன்; உசிலை.

மேற்கு நாடுகளில் ஏற்பட்ட பல சமுதாயப் புரட்சிகளுக்கும் மாற்றங்களுக்கும் சிந்தனைவாதிகளும் தத்துவ மேதைகளுமே அடிப்படைக் காரணங்களாக, தூண்டுகோலாக விளங்கியிருக்கிறார்கள். ஆனால் கீழ்த்திசை நாடுகளில் அரசியல் ஆதிக்கத்தின் விளைவால் சிந்தனைவாதிகள் சுதந்திரமாகத் தங்களது கருத்துக்களை வெளியிடும்வாய்ப்பை இழந்துபட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இலங்கைவாழ் தமிழர்களின் இன்னல்கள் கண்டு மனம் பதைத்து, சிந்தனைக் கணைகளை எடுத்தேவி, அறிவுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தங்கள் பணி போற்றுதற்குரியது.

— பேரா. அ. கணபதி. மேலூர்.



ிய
ரு

ற்